திருநாவுக்கரசர்.

—ஆறுமுக முதலியார் (சரவண)

# திருநாவுக்கரசர்

சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்

பேராசிரியர்
சரவண. ஆறுமுக முதலியார்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்
1970

முதற்பதிப்பு: மார்ச்சு 1970

சொர்ணம்மாள் சொற்பொழிவு—வரிசை 7

அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

# பொருளடக்கம்

முன்னுரை v

திருநாவுக்கரசர் ஒரு முன்னோடி 1

தேவாரங்கண்ட திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாறு 31

திருநாவுக்கரசர் தேவாரத்திறன் 88

# முன்னுரை

அரசினர் கல்வித்துறையில் கலைக்கல்லூரிகளில் புகுநிலை, இளங்கலை, இளம் அறிவியல் நிலை, முதுகலை நிலை வகுப்புக்களிலும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், 1961இல், ஓய்வு பெற்ற பின்னர் நாளிது வரை பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில் இளங்கலை, முதுகலை வகுப்புக்களுக்கு இந்தியப் பண்பாட்டுப் பயிற்சியிலும், சென்ற நாற்பது ஆண்டுகளாகப் பேராசிரியனாகவும், பின்னர் முதல்வனாகவும் பணி செய்து வந்துள்ள என் படிப்பறிவும், கற்பித்தலறிவும், பட்டறிவும், புகட்டியுள்ள பாடமும், உறுதியான குறிக்கோள் ஒன்றும் இருக்குமானால், அது இதுவே. பொதுவாக நாட்டுமக்களும், சிறப்பாகப் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் மாணாக்கர்களும் பிறரும், நாட்டில் நல்ல குடிமக்களாக நிலவ வேண்டுமானால், ஒவ்வொருவரும், ஊனும், உயிரும், உணர்வும் ஒன்றித்து முழு மனிதனாக ஆக்கியுள்ள முழு வளர்ச்சியை எய்தி, மக்கள் மாக்களாக இல்லாமல், மக்களாக, படித்தவர்கள், தடித்தவர்களாக இல்லாமல் படிந்தவர்களாகப் பண்பட்டவர்களாக ஆகவேண்டும். இதற்கு அடிப்படை வீட்டுச் சூழ்நிலையிலேயே குழவிப்பருவத்திலேயே போடப்பட்டுப் பின் அதன் மேல்நிலைகள் கல்விக் கூடங்களிலும், பின்னர் வாழ்க்கைத் துறைகளிலும் வளர்ந்து முற்றுப் பெற வேண்டும்.—(harmonious development of the physical or conativc aspect, emotional including spiritual and moral aspects and intelluctual or mental or cognitive aspects of the individual). இப்படிப்பட்ட ஒரு நிலை பல்கலைக் கழகங்களிலும் நிலவ வேண்டுமானால், அதற்கேற்ற ஒரு சூழ்நிலையை இவற்றை உருவாக்குபவர் ஏற்படுத்த வேண்டும். கல்வி கற்பிக்கும் பணியோடு, உடல் ஓம்பும் இயக்கங்களோடு, உயிர் ஓம்பும் இயக்கங்களையும் இவர்கள்

வகுக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் பயிலுபவர்க்கு, நம் நாட்டு அற இயல், சமய இயல், மெய்யுணர்வியல், பண்பாட்டியல், கலையியல், இலக்கியவியல் முதலிய மனித இயல் ஒழுங்குகளின் அடிப்படைக் கொள்கைகள் கற்பிக்கப்பட வேண்டும். பட்டம் பெறத் தேர்வுகளுக்கு என்று இவற்றைக் கற்பிக்க வேண்டியதில்லை. வாழ்க்கைத் தேர்வுக்கென வகுத்து அவர்கள் நாட்டத்தை இதில் செலுத்தினாற் போதும். இவை பற்றிய பன்னாட்டு, ஒப்பிட்டுப் பார்க்கும் அடிப்படைத் திட்டம் ஒன்றும் இயலுமேல் வகுக்கலாம்

இப்படிப்பட்ட உயிருள்ள திட்டம் ஒன்று இக்காலத்து நம் நாட்டுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றும். உக்கி, மக்கி, உளுத்துப் போயிருக்கும் நம் சமுதாயத்தைப் பிடித்திருக்கும் நோய்க்கு இது ஒரு மருந்தாகலாம். விருந்துமாகலாம்.

இவற்றையெல்லாம் மனத்துட்கொண்டே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர், "சொல்லின் செல்வர்" பேராசிரியர் டாக்டர். இரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் நிறுவியுள்ள சொர்ணம்மாள் தமிழ்ச் சொற்பொழிவுத் திட்டத்தின் கீழ் 1967 ஆம் ஆண்டுச் சொற்பொழிவு ஆற்ற என்னை அழைத்த போது, யான் எண்ணித் துணிந்து, செந்தமிழும் சிவமும் இணைந்த தேவாரத் திருமுறை பாடிய முதல்வரும், முன்னோடியுமான திருநாவுக்கரசரைப் பற்றிச் சிறப்பாகப் பல்கலைக் கழக மாணாக்கர்க்குப் பேசினால், எழுதினால், எடுத்துக் காட்டினால் உறுபயன் விளையலாம் என்று நம்பி, எனக்கும் நன்மை விளையும் என்று கருதி, தமிழ் இலக்கியத்தில் சமயக் கிளர்ச்சிக் காலத்தையும் அதில் திருநாவுக்கரசர் பெறும் இடத்தையும் இக்காலச் சூழ்நிலைக் கோணத்தில் வைத்துக் காட்டிப் பேச முன் வந்தேன்.

பேராசிரியர் 'சொல்லின் செல்வர்' அவர்கள் என் ஆசிரியப் பெருந்தகையாவார்கள். நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை மாணாக்கனாக அவர் அடிக்கீழ் படிந்தவன். 1933 முதற்கொண்டு அவர்கள் காலம்

வரையில் பல்லாற்ருலும் ஒல்லும் வாய் எல்லாம், ஓவாது உதவி என்னை ஊக்கியவர்கள். அவர்கள் நிறுவிய திட்டத்தின் கீழ் இச் சொற் பொழிவுகளை நான் ஆற்றுவதை ஒரு பெரும் பேருக, என் வாழ்நாளில் மிகச் சிறந்த ஒரு செயலாகக் கருதுகிறேன்.

திருநாவுக்கரசரைப் பல துறைகளில் ஒரு முன்னேடியாக முதல் நாள் (19-1-67) சொற்பொழிவில் காட்டி, அந்த அடிப்படையில், பின்னணியில், இரண்டாம் நாள் சொற்பொழிவில் (20-1-67) தொடர்ந்து அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அகப்புறச் சான்றுகளுடன், சேக்கிழார் பெருமானை அடியொற்றிக் காட்டி, மூன்ரும் நாள் (21-1-67) அவர்தம் தேவாரத் தீஞ்சுவைப் பனுவல்களின் பன்முகத்திறப்பாங்கை எடுத்துக்காட்டுகளுடன் ஆய்வு செய்து முடித்துக் காட்டினேன். முதல்நாள் முத்தமிழ் வித்தகர் பண்டிதமணி, பேராசிரியர். லெ. ப கரு. இராமநாதன் செட்டியாரவர்களும், இரண்டாம் மூன்ரும் நாட்களில் பேராசிரியர். கோ. சுப்பிரமணியப் பிள்ளையவர்களும் தலைமை தாங்கிப் பேரவையைச் சிறப்பித்தார்கள்.

என்னையும் ஒரு பொருட்டாக மதித்து பல்கலைக் கழகத்தில் இச் சொற்பொழிவாற்றும் வாய்ப்பினை எனக்கு நல்கிய அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், பதிவாளர், ஆட்சிக் குழுவினர் ஆகியோருக்கும் பிறருக்கும் என் உளமார்ந்த நன்றி உரித்தாகும். இதை நூலாக வெளியிட முன் வந்த அவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

முப்பிரிவுகளாக, முச்சொற்பொழிவுகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் இந்நூல் பொதுவாகத் தமிழ் மக்களையும் சிறப்பாக மாணக்கர்களையும் தூண்டி விடும், நினைக்கச் செய்யும் என்னும் நம்பிக்கை உடையேன்.

பழனி,
13-4-67.

ச. ஆறுமுக முதலியார்.

**The Period of Religious Revival in Tamil Literature and the Part played by Tirunavukkarasar in it.**

**தமிழ் இலக்கியத்தில் சமயக்கிளர்ச்சிக் காலமும் அதில் திருநாவுக்கரசர் பெறும் இடமும்.**

### முதற் பிரிவு

## திருநாவுக்கரசர் ஒரு முன்னோடி (Pioneer)

தமிழ் இலக்கிய வரலாற்றில், தமிழ் நாட்டுச் சமய வரலாற்றில், ஏறக்குறைய கி. பி. 600 முதல் 900 வரை நிலவிய பல்லவப் பேரரசுக் காலம் ஒரு சிறந்த எல்லைக் கல்லாக (Mile stone) விளங்குகிறது இதைச் சமயக் கிளர்ச்சிக் காலம் என்றே கூறி விடலாம்.

**கடைச் சங்க காலச் சமய நிலை**

பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளை [1] அவர்களும் அவரைப் பின்பற்றிப் பிறரும், இக் காலத்தை இங்ஙனமே விளக்கியுள்ளனர். கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் நிலவிய பல சமயங்களும் சமயப் பொறையுடன் (Religious tolerance) ஒன்றொன்றுக்கொன்று பழகி, மெய்யுணர்வு, சமய உணர்வு முதலியவற்றை ஒப்பிட்டுப் படித்து, உயர்ந்தது போற்றும் (Comparative study of religions & philosophy) பண்பும்[2] முடியுடை வேந்தர்களின் பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் பெற்று, வன்முறைப் போட்டியின்றி, நன்முறைப் போட்டியில் இவை வளர்ந்து வந்தன. சிறப்பாகச் சைவ, வைணவ, புத்த, சமண சமயங்கள் வேற்றுமையும் வன்செயலும் அற்று, ஒற்றுமையும், இன்

1. Tamil Literature—M.S. Purnalingam Pillai—
Pages 154 et seq.
2. *மணிமேகலை—காதை* 27

செயலும் உற்று, பக்கத்தே பக்கத்தே தழைத்தோங்கிய பெருமையைப் பெற்றிருந்தன. இச்சூழ்நிலை நாட்டுப் புறத்தில் மட்டுமின்றிப் பூம்புகார், காஞ்சி, வஞ்சி, உறந்தை போன்ற பெருந்தலைநகரங்களிலும், துறைமுக நகர் களிலும், அங்குமிங்குமன்றி, எங்கும் நிலவி வந்தது. முருகன்,[3] சிவபெருமான், திருமால், இந்திரன், பலதேவன், கண்ணபிரான், அருகன், புத்தன் முதலிய பல்சமயக் கடவுளர்க்குக் கோயில்களும், திருமடங்களும் அடுத்தடுத்து எடுத்திருந்த செய்தி சிலப்பதிகாரத்திலிருந்து நன்கு தெரிய வருகிறது. அக்காலத் தமிழ் நாட்டு மூவேந்தரும், சமயப் பொறையுடையோராய், இந்நிலையங்களை வேற்றுமையின்றி, ஒற்றுமையுடனேயே ஓம்பிவந்தனர். சங்க காலத்தில் பௌத்த சமணப்புலவர்கள் தமிழுக்கும் தத்தம் சமயங்களுக் கும் ஒருங்கே தொண்டாற்றி வந்ததை தமிழ் உலகம் நன் கறியும்.

**களப்பிரர் இடையாட்சிக்காலமாகிய இருண்ட காலம்.**

சங்கத்திறுதிக் காலமாகிய கி. பி. மூன்றும் நூற்றாண் டின் முற்பகுதி அல்லது கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிக் காலத்திற்குப் பிறகு தமிழ் நாட்டு வரலாற்றை ஒரு இருள் கப்பிக் கொண்டு கிடக்கின்றது. களப்பிரர்கள் இடையாட்சிக் காலமாகிய (Kalabra-inter regnum) கி. பி. 250 முதல் கி. பி. 600 வரை இவ்விருண்ட காலம் தொடர்கிறது. இக்காலத்தில் இவர் கள் தமிழ் நாட்டின் மொழி, கலை, நாகரிகம் என்பவற்றை இயன்ற வரையில் அழித்தும் சிதைத்தும்விட்டனர். தமிழ்ச் சங்கமும் அழிவுற்றது தமிழ் வேந்தர்களான பாண்டியரைப் போரில் வென்று அவர்கள் நாட்டையும் கைப்பற்றி அர

3. i. சிலப்பதிகாரம்—காதை 5 வரிகள் 169—181.
   ii. ,, காதை 14 வரிகள் 7—14
   iii. ,, காதை 9 வரிகள் 60—
   iv. ,, காதை 9 வரிகள் 9—13
4. A History of Tamil Literature—250-600 A.D. Pandarattar.

சாண்டனார் என்றும், பாண்டியன் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியின் அறச் செயல்கள் அழிவுற்றன என்றும்[5] வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறும் ஒரு சான்றே இதற்குச் சாலும் தமிழகத்தின் வட பகுதியாகிய தொண்டை நாடும் நடுநாடும் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் இடையில் பல்லவர்[6] ஆட்சிக்குட்பட்டன நடுநாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையிலுள்ள சோழநாடும் களப்பிரர் ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று. ஆகவே, இக்காலப் பகுதியில் தமிழ்நாடு முழுவதும் வேற்றரசர் இருவர் ஆட்சிக்குள்ளாகிவிட்டது. இவ்விருவருக்கும் தாய் மொழி தமிழ்[7] மொழியன்று. ஆட்சி மொழியாகப் பாகத மொழியை ஆக்கியிருந்தனர் களப்பிரர் காலத்தில் பாலி மொழியும் அரசாங்கத்தாரின் பேராதரவைப் பெற்றிருந்தது.

**இருண்ட காலத்தில் தொண்டை நடு நாடுகளில் சமய நிலை**

கி. பி. மூன்றும் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தமிழகத்தின் வடபகுதிகளாகிய தொண்டை நாட்டிலும், நடுநாட்டிலும் செப்பேடுகள் பிராகிருத மொழியிலும், ஆறும் நூற்றாண்டுஇறுதிவரையில் வடமொழியிலும், பல்லவப் பேரரசுக்காலமாகிய கி. பி. 600-900 வரை வட மொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் வரையப் பெற்றுள்ளன. எனவே, கி. பி. 600ஐ அடுத்த காலப்பகுதியில் தமிழ் மொழி தளர்ச்சியும், வடமொழி பாகத பாலிமொழிகளின் வளர்ச்சியும் நிகழ்ந்துள்ளன. பல்லவர்[8] கி. பி. 300-600 வரை பாகதத்தைய அரசாங்க மொழியாகக்கொண்டு, வடமொழியையும் பெரிதும் ஆதரித்து வந்தனர்.

காஞ்சிமாநகரில் அரசாங்க ஆதரவில் ஒரு பெரிய [9]வடமொழிக் கல்லூரி பல்கலைக்கழகம் போல் விளங்கிக் கொண்

5. Epigraphia Indica—Vol. XVII No 16
6. i. The Pallavas by J. Dubreiul. P. 10
   ii. Soical Life under the Pallavas—Dr. C. Minakshi P. 6.
7 & 8 A History of Tamil Literature 250 - 600 A. D. Pandarattar P. 14—22.

டிருந்தது. கடம்பர்குல முதல்வன் (கி. பி. 345-370) மயூர சர்மன் தன் ஆசிரியர் வீரசர்மருடன் இக்கல்லூரியிற் கல்வி பயில வந்தான். பௌத்தப் பல்கலைக் கழகமாகிய நலாந்தா வில் கல்வி பயின்று பின் அதன் தலைவராகத் திகழ்ந்த தர்ம பாலர் கச்சித்திருப்பதியைச் சேர்ந்தவரும் திக்நாதருடைய மாணுக்கருமாகிய தர்மபாலர்[10] ஆவர். இனி, தொண்டை மண்டலத்தில் சோழசிங்கபுரத்தை அடுத்த கடிகாசலம், புதுச்சேரி நாட்டை அடுத்துள்ள வாகூர்[11] ஆகிய ஊர் களில், நந்திவர்மப் பல்லவ மல்லன் காலத்தில் வெட்டிய திருவல்லத்துக் கல்வெட்டிலிருந்தும், திருபதுங்கவர்மன் காலத்திய வாகூர்ச் செப்பேட்டிலிருந்தும், இவ்வூர்களில் வடமொழிக் கல்லூரிகள் சிறந்து விளங்கிய சீர்மை புலப்படு கின்றது. இவற்றை கி. பி. 4ஆம், 5ஆம் நூற்றுண்டுகளி லேயே இம்மன்னர்களுக்கு முற்போந்த பல்லவ மன்னர்கள் நிறுவி, இம்மன்னர்கள் பெரிதும் ஓம்பியிருக்கலாம். வட மொழிக் கலைகள் பலவும் கற்பிக்கப்பெற்று, மாணுக்கர்க்கு உண்டியும், உடையும், உறையுளும் நன்கொடையாகத் தரப் பெற்று ஆசிரிய மாணுக்கர் ஒருங்குறை கல்லூரியாகத் (Residential) திகழ்ந்திருக்கின்றன இவை. வாகூர்க்[12] கல் லூரி ஆண்டுச் செலவிற்கு அந்நாட்டு மூன்றூர்கள் இறை யிலியாக வழங்கப்பெற்றிருந்தன. வடபுலமக்கள், வட மொழிச் செல்வாக்குப் பெற்ற காஞ்சி மாநகரை மட்டும் நன்கு அறிந்திருந்ததால், பரதகண்ட ஏழு புண்ணிய நகரங் களில் ஒன்ருக அதை விதந்து கூறியவர்கள், தென் தமி ழகத்திற் சிறந்திருந்த மதுரை மாநகரை அவ்வரிசையில் வைத்து எண்ணவில்லை. காளிதாசரும் காஞ்சிநகரை அவ் வேழு நகரங்களுள் ஒன்ருக விதந்து கூறி வைத்தனரே ஒழிய மதுரையைச் சேர்க்கவில்லை. வைதிகர், சைவர்,

9 i. Epigrhphia Indica—Vol. VIII—P.P. 24—36.
ii. do Carnatica Vol. III—P. 200
iii. Indiaa Antiquary—Vol. XXV—P. 27
10. Administration and Social Life of the Pallavas— Dr. C. Minakshi P. 225.
11. do I bid P.P. 197—199]
12. Epigraphia Indica—Vol. XVIII—No. 2.

வைணவர், சமணர், பௌத்தர் ஆகிய சமயவாதிகளும் காஞ்சிமாநகரில் நிலவியிருந்த வடமொழிக் கல்லூரியில், தத்தம் சமய, அளவை நூற்களையும், பிற வடமொழி நூல்களையும் பயின்று வந்திருந்தலாற் போலும், கி பி ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசரும் "கல்வியிற் கரையிலாத காஞ்சிநகர்" என்று இந்நகரைத் தம் கச்சிமேற்றளித் தேவாரப் பதிக எட்டாம் பாடலிற் போற்றுவாராயினர். இரண்டாம் சிம்மவர்மப் பல்லவ மன்னன் காலத்தில் (கி. பி. 458ல்) பாடலிபுரத்தில் (இற்றை நாள் திருப்பாதிரிப் புலியூர்) இருந்த ஓர் அமண் பள்ளியில் 'லோகவிபாகம்' என்ற திகம்பர நூல் படி ஒன்றை எடுத்தனர் என்னும் செய்தி அந்நூலிற் குறிக்கப் பெற்றிருப்பதையும், கி. பி. 5ஆம் நூற்றாண்டில் வடமொழி, பாகத மொழிகளிற் புலமையெய்தியிருந்த சிம்மசூரி, சர்வநந்தி என்ற இரு அறிஞர் அவ்வமண் பள்ளியில் தங்கி இம்மொழிகளைப் பலர்க்கும் கற்பித்து வந்தனர் என்ற செய்தியையும் டாக்டர் மீனாட்சி அம்மையார் தம் நூலுள் (பக்கம் 227-230) கூறுகின்றனர். ஆர். கோபாலன் (The pallavas- பக்கம் 158) சிம்மவிஷ்ணு என்ற பல்லவ மன்னன் காலத்தில் (கி. பி. ஆறாம் நூற்றாண்டு) அவைக்களப் புலவராக வடமொழிப் பாரவிப்புலவர் விளங்கினதாகக் கூறியுள்ளார். தமிழக வடபகுதியில் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிடையில் பல்லவ மன்னர் காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு வடமொழிப் பயிற்சியைப் பரப்பி வந்த செய்தியையும் இவர் கூறுகின்றார் (பக்கம் 157). இம்மொழி வல்லுநர்களையே இம்மன்னர்கள் போற்றி வந்தனர் என்றும், நாட்டு மொழியாகிய தமிழ் மொழி வளர்ச்சியில் இவர்கள் ஈடுபடவில்லை என்றும் இவற்றால் அறிந்து கொள்ளலாம். இதனால் சிறந்த தமிழ் நூல்கள் தமிழக வடபகுதியில் இக்காலத்தில் எழவில்லை என்றும் கூறலாம்.

இனி, இக்கால அளவில், தமிழகத்தின் தென் பகுதியாகிய பாண்டி நாட்டிலும் களப்பிரர் ஆட்சியில் கடைத் தமிழ்ச் சங்கம் மறைந்த காலத்தில், தமிழ் மொழி

போற்றிப் புரப்பார் அற்றுத் தளர்ச்சியுற்றிருந்தது. பௌத்த சமயத்தினராகிய களப்பிரர் ஆதரவில பௌத்த சமய நூல்கள் தோன்றுவனவாயின. இவையும் தமிழிலன்றிப் பாலி மொழியிலேயே எழுதப்பெற்றன. சோழர் தம் பழைய தலைநகராகிய "அறந்துஞ்சும் உறந்தையில்" (உறையூர்) பிறந்துவளர்ந்த புத்ததத்தன் இருமுறை ஈழநாடு போந்து பௌத்த நூல்களைப் பயின்று, சோழநாடு மீண்டு, அபிதம்மாவதாரம், விநய விநிச்சியம் என்ற இரு பௌத்த சமய நூல்களை எழுதி வெளியிட்டனன்[13]. முதல் நூலைக் காவிரிப்பூம் பட்டின கண்ணதாசன் நிறுவிய பௌத்தப் பள்ளியில்தான் தங்கியிருந்த காலத்துச் சுமதி என்ற மாணவன் விருப்பிற்கிணங்க எழுதி முடித்ததாகத் தத்தனார் கூறுகின்றார்[14]. களப்பிரமன்னன் அச்சுதவிக்கந்தன் காலத்துத் தொடங்கிய விநயவிநிச்சியத்தை, சோணாட்டுப் பூதமங்கலத்தில் வேணுதாசன்[15] பள்ளியில் மாணாக்கரும் புத்தபிக்குகளும் சுருங்கிய காலத்தில் கற்றுணரும் நிலையில் எழுதித் தாம் முடித்ததாகவும் இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார். மேற்போந்தவற்றால களப்பிரரது ஆட்சியில் சோழநாடும் சேர்ந்திருந்தது என்றும், பௌத்தமும் பாலியும் அவர்களது போற்றுதலுக்குகந்தனவாயிருந்தன என்றும் அறியலாம். இன்னும், கந்தவம்சம்[16] என்ற பௌத்த நூல், தமிழ் நாட்டில் அக்காலத்துப் பௌத்த சமய குரவர்பதின்மர் பல நூல்கள் யாத்தனர் என்றும், காஞ்சிமாநகரில் மட்டும் வேறு இருபது பௌத்த அறிஞர் பாலிமொழியில் பல பௌத்த சமய

**இருண்ட காலத்தில் பாண்டிய, சோழ நாடுகளில் சமய நிலை.**

---

13. Dr. S. Krishnaswami Aiyangar commemoration Volume P. P. 242 & 244.
14. (i) Ibid P. 243.
    (ii) History of the Tamils P. T. Srinivasa Aiyangar P. P. 527 – 29.
15. Ibid—P.P. 529—30.
16. Dr. S. Krishnaswami Aiyangar Commemoration Volume P. 244
17. Ibid — P. 245.

நூல்கள் யாத்தனர் என்றும் கூறுகின்றது. பாலிமொழி முதல் இலக்கணம் வகுத்த சாச்சாயனரும் தமிழ்நாட்டவரே.[17] எனவே கடைச்சங்க இறுதி நாட்கள் முதல் ஏறக்குறைய கி. பி. 600 வரை களப்பிரர் இடையாட்சி காலத்திலும், பல்லவர் காலத்திலும் தமிழகத்தில் பாலி, பாகத வடமொழிகளாகிய அயல்மொழிகளும், பௌத்தம் சமணமாகிய புறச்சமயங்களும் ஏற்றமும் தோற்றமும் பெற்றிருந்தன என்றும், தமிழ்மொழிக்கு ஆதரவும் வளர்ச்சியும் இல்லாமற் போயினவென்றும், இக்காலப் பகுதி தமிழ் மொழிக்கு ஒரு இருண்ட காலமாகவே இருந்து வந்தது என்றும், ஒருவாறு அறியலாகும். இவ் விருண்ட காலத்துட்டானும், சில பல தமிழ் நூல்களும் தோன்றாமலில்லை. இருப்பினும், இவை அரச ஆதரவின்றித் தாமாகவே தோன்றினவாதலின், இதை இருண்ட காலமென்றே தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர் குறித்துப் போகாநிற்பர்.

**சமயக் கிளர்ச்சிக் காலம் (கி. பி. 600—900)**

இத்தகைய தொரு சூழ்நிலையிலும் பின்னணியிலுமே தமிழ் இலக்கிய வரலாற்றின் மற்றொரு பகுதி தொடங்குகின்றது. ஏறக்குறைய கி. பி. 600 முதல் 900 வரை பல்லவப் பேரரசர் காலமாகிய பகுதியை இவ்வடுத்த பகுதியாகக் கொள்ளலாம். இதைத் தமிழிலக்கிய வரலாற்றில் சமயக் கிளர்ச்சிக் காலம் என்று குறிப்பர். சமயம் என்னும் சொல் ஈண்டு உள்நாட்டுச் சமயங்களாகிய சைவ, வைணவ சமயங்களையே சிறப்பாகக் குறிக்கும்

இச் சமயக் கிளர்ச்சிக் காலத்தில் சமண பௌத்த சமயங்கள், கடைச் சங்க காலத்தில் சைவ வைணவ சமயங்களோடு பிணக்கமின்றி, இணக்கமாயும் வன்முறையின்றி நன்முறையிலும் வாழ்ந்த சமயங்கள், திசைமாறி, சைவ வைணவ சமயங்கள் மீது மேற்சென்று, அடக்கி, ஒடுக்கி வாழ, பல்லவப் பேரரசுக் காலத்தில் தொடங்கிவிட்டன. தமிழ்நாடு முழுவதும், தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு, கொங்குநாடு, பாண்டி நாட்டுப் பகுதிகள் எங்கும் இவை பரவி, பல்லவ பாண்டிய மன்னர்களையும் தம் சமயத்

துக்கு இழுத்துச் செல்வாக்கை வளர்த்துக்கொண்டன. கி பி. ஏழாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மகேந்திரவர்மப் பேரரசரும் (600—300), அந் நூற்றாண்டுப் பிற்பகுதியில் நெடுமாறனாகிய பாண்டிய மன்னரும் (670—710), தம் சைவ சமயத்தை நீத்துச் சமண சமயத்தை மேற்கொண்டனர். குடிமக்களும் அவ்வாறே சமணத்தைப் பின்பற்றத் தலைப்பட்டனர். இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில்தான் திருநாவுக்கரசரும் அவர் ஒத்த காலத்தினராகிய திருஞான சம்பந்தரும் இவர்களுக்குப் பிறகு சுந்தரமூர்த்தி நாயனாரும் மாணிக்கவாசகரும் (ஒன்பதாம் நூற்றாண்டின் முன், பிற் பகுதிகளில்) தோன்றியருளினர். வைணவ சமயத்தில் ஏறக்குறைய இம் மூன்று நூற்றாண்டுக் கால எல்லையில், ஆழ்வார்கள் பன்னிருவரும் தோன்றியருளினர் இவர்கள் முறையே தத்தம் சமயக் கிளர்ச்சியிலும் வளர்ச்சியிலும் ஈடுபட்டுச் சமயத் தொண்டாற்றித் தம் சமயங்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்ததோடு வைச—வைணவத் தோத்திரப் பாக்களாகிய தேவாரத் திருமுறைகளையும் (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமாகிய) அருளிச் செயல்களையும் ஆக்கித் தந்து இச் சமயங்களை உய்வித்தனர். பக்திமார்க்கமாகிய பயிரை இப் பாடல்களால் தழைக்கச் செய்தனர். இவற்றினடியாக முத்தி மார்க்கத்தில் மக்களை ஈடுபடுத்தினர். சிவபெருமான் திருக்கோயில்கள், திருமால் திருக்கோயில்கள் தோறும் சென்று அவற்றின்மேல் சிந்தையும் செவியும் உருக்கி, வந்த இருவினைக்கு மாமருந்தாகிய இப் பாடல்களைப் பெருக்கி இறையன்பு வெள்ளம் ஊற்றுப் பெருக்கெடுத்தோடி மக்களை உய்விக்கும் சமயத்தொண்டில் திளைத்தனர். மகேந்திரவர்மன், நெடுமாறன் அனைய மன்னரையும் மீட்டும் சைவத்துக்குத் திருப்பிச் சிவநெறியிலும், சிவத்தொண்டிலும் செலுத்தினர் நடுநாட்டில் திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி நாயனாரும், சோழநாட்டில் திருஞான சம்பந்தரும், பாண்டி நாட்டில் மாணிக்கவாசகரும் தோன்றித் தமிழ்நாடு முழுவதிலும் தமிழ்நாட்டிற் கப்பால் இந்திய நாடு முழுவதிலும், கடல் கடந்து ஈழத்திலும் சிவநெறியைப் பரப்பினர். இதுபோன்றே பெரியாழ்வார், ஆண்டாள்,

நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய நால்வரும் பாண்டி நாட்டிலும், முதலாழ்வார்களாகிய பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார், பேயாழ்வார்களும். திருமழிசையாழ்வாரும் தொண்டைநாட்டிலும், திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார்கள் சோழநாட்டிலும், குலசேகர ஆழ்வார் சேரநாட்டிலுமாகத் தமிழ்நாடெங்கும், தமிழ்நாட்டிற்கப்பால் இந்திய நாடு முழுவதிலும் திருமால் நெறியைப் பரப்பினர். எனவே, இக் காலத்தில தமிழ் நாட்டுச் சைவ, வைணவ சமயங்கள் கிளர்ச்சியுற்றதோடு, தமிழ் இலக்கியத்திற்கு விலை மதிக்க வொண்ணாச் செல்வங் களாகிய ஏழு தேவாரத் திருமுறைகளும்—திருவாசக திருக் கோவையாரும், திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகளும் பத்தாம் பதினோராம் சைவத் திருமுறைகளும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் கிடைத்தன.

இவ்வடிப்படைச் சூழ்நிலையை மனத்துட்கொண்டு, திருநாவுக்கரசர் இக் காலத்தில் முதல்வராய்த் தோன்றி ஆற்றிய சமயத் தொண்டை ஆராய்வோம். இவ்வாராய்ச்சி யில் திருநாவுக்கரசர் ஒரு முன்னோடியாகப் (Pioneer) பல துறைகளில் விளங்கிய பான்மையை முதற்கண் கருது வோம். இம் முதல்வரைப்பற்றி, இவர்தம் கருத்துக்கள், கொள்கைகள், சித்தாந்த நுட்பங்கள். சைவத்தொண்டு, இலக்கியத்தொண்டு முதலியவற்றை நுண்மாண் நுழை புலத்தால் நுணுகி ஆராய்ந்து ஆறுமுக நாவலர், முத்துத் தம்பிப்பிள்ளை, கா.சு. (எம். எல்.) பிள்ளை, சீனிவாசப்பிள்ளை, சிவஞானம் பிள்ளை, சிவக்கவிமணி, பூர்ணலிங்கம் பிள்ளை, கோ. சுப்பிரமணியப் பிள்ளை, செங்கல்வராயப்பிள்ளை, பண்டிதமணி, மறைமலை அடிகள், ஆறுமுகத் தம்பிரான், திரு. வி. க. போன்ற நாவலரும் பாவலரும் வெளியிட் டுள்ளனர்.

இனி, முதற்கண் திருநாவுக்கரசர் எவ்வாறு சைவ சமய ஆசிரியர்களுக்கு முன்னோடியாக, தொண்டர்தம்

தூசிப்படை முன்னணியாளராக, சைவ உலகத்துக்கே, தந்தையாக, 'அப்பராக', விளங்கினா என்பதை, அவர் முன்னோடியாகச் சென்று அருளியுள்ள சில புதுப் புரட்சிக் கொள்கைகளை முன்வைத்து நோக்கி மதிப்பிட்டு, பின் அவர்தம் வாழ்க்கை வரலாற்றை அகப்புறச் சான்றுகளுடன் திருத்தொண்டர் (பெரிய) புராணத்தை அடியொற்றிச் சுருக்கமாகக் கண்டு, அதன்பின் அவர்தம் தெய்வத் தேவாரத் திருமுறைப் பாடலின் பாக்கடலுட்புக்குத் திளைத்துக் காணும் சில உண்மைகளையும் உணர்வோம்.

**திருநாவுக்கரசர் திருவுருவத் தோற்றப் பொலிவு**

தாம் சமயக்கிளர்ச்சி செய்து பிறருக்கு வழிகாட்டிய, முன்னோடியாகிய திருநாவுக்கரசப் பெருந்தகையின் நேரான திருவுருவப் படங்களும், ஓவியங்களும் இல்லை யெனினும், சேக்கிழார் இப் பெருந்தகை தன் திருவுருவத் தோற்றப் பொலிவைத் தம் மனக்கண் கொண்டு சொல்லோவியமாகப் பாடியமைத்துள்ள காவியப் பகுதிகளிலிருந்து ஒருவாறு இவர் தோற்றப் பொலிவினை உய்த்துணரலாம். மாதவச் சிவஞானயோகிகளும், இவற்றை உட்கொண்டே இவர் திருவுருவை நமக்குக் காஞ்சிப் புராணத்தில் கவினுறத் தீட்டித் தந்துள்ளார்.

"இடையறுப் பேரன்பும், மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்திண்
படையறுத் திருக்கரமும், சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்,
நடையறுப் பெருந்துறவும், வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையறுச் செவ்வாயும், சிவவேடப்
பொலிவழகும், துதித்து வாழ்வாம்"

என்று, வணங்குவாரை வாழ்விக்கும் அவர்தம் திருவுருவத் தோற்றப் பொலிவுப் பாடலில் இவ்வோவியத்தைக் கண்டு களிக்கலாம். இவ்வோவியப் படைப்புக்குக் கருவாயிருந்தனவென்று கீழ்க்காணும் திருத்தொண்டர் புராணத் திருப்பாடல்களைக் கொள்ளலாம் :—

**(1) திருவதிகை மீளும் வெற்றித் தமிழீசர் காட்சி.**

"தூயவெண் ணீறு துதைந்த பொன்மேனியும், தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவரு சிந்தையும், நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும், பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும், உடையார் புகுந்தனர் வீதியுள்ளே".

**(2) தில்லையில் ஆடும்கழல்புரி அமுதத்திருநடங்காணும் காட்சி.**

கையுந் தலைமிசைப் புனையஞ்சலியன,
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன, கரணங் களுமுடன்
உருகும் பரிவின, பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழும், முன்பெழுதரும்,
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்.

**(3) திருவாரூர் திருவீதிப் பணிசெய்து வணங்கிச் செல்லும் காட்சி.**

"மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும்,
மதுர வாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்,
செம்பொற் றாளே
சார்வான திருமனமும், உழவாரத் தனிப்படையும்,
தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணித்தேத்திப்
பரவிச் செல்வார்."

இனி, சைவ சமய குரவர்கள் எல்லோருமே, சமயத் தொண்டை வற்புறுத்தி வந்திருக்கின்றனர். ஆனால் திருநாவுக்கரசரோ, "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற குறிக்கோளைச் செயலாற்றுப் படுத்தும்போது, தாமே தம் திருமேனி உழைப்பினால், உழவாரப் படையாளியாக, திருத்தொண்டின், அடையாளமாம் உழவாரப் படையைக் கையிற்றாங்கித் தாம் செல்லும் திருப்பதிகளில், திருக்கோயிற் சூழல், வலம் வரு வழிகள், திருக்குளம், திருமதில் ஆகியவற்றுள் கிடக்கும் குப்பை கூளங்கள், முட்கள், புதர்கள், புல்பூண்டுகள், செடி கொடிகள் முதலியவற்றை அகற்றித் தூய்மை செய்யும்

**பணிசெய்தலே கடமை எனக் கொண்டவர்**

மெய்த்தொண்டினை, மன, மொழித் தொண்டுகளோடு ஆற்றிவந்தனர். தம்மைச் சூழ்ந்து பெருந்திரளாய் வந்து கொண்டிருக்கும் அடியார்களுக்கும், உள்ளூர் அன்பர்களுக்கும், வருங்காலத் தலைமுறையார்களனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாய், முன்மாதிரியாய், பின்பற்றுதற்குரிய பெருந்தொண்டர் தலைவராய், இப்பெருந்தகையார் பணியாற்றினர். சமயத்தொண்டிலும், கோயில் திருப்பணித் தொண்டிலும் ஈடுபட்டிருக்கும் அனைவரும் இத்தொண்டு மனப்பான்மையால் பிடித்துந்தப்பெறவேண்டும். கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், உயர்நிலைப் பள்ளிகள், சமுதாய மக்கள் பணி மன்றங்கள் முதலிய நிறுவனங்கள், இவற்றிற் பயிலும் பயிற்றும், பணியாற்றும் மாணுக்கர், ஆசிரியர், பிறர்களுக்கு மக்கள் தொண்டு, சேரித்துப்புரவு, கிராமங்களில் உடல் உழைப்பு நல்கி, சாலை அமைத்தல், வீடுகள் கட்டுவதற்குதவல், இரவுப் பள்ளிகள் நடத்திப் படிக்காதோரிடைப் படிப்பறிவைப் பரப்பல் போன்ற பணியாற்றும் வாய்ப்புக் களைச் செய்துதர முன்வருகின்றன. பெரும்பாலும் இப் பணிகள் ஏட்டளவில் அல்லது விழாவாக அலுவலர்களுக்கு நடத்திக்காட்டுதல் போன்ற சடங்களவில், செய்தித் தாள்கள், விளம்பரங்கள், அறிக்கைகளில், புகைப்பட விளக்கங்களில், புள்ளி விவரங்களில், இடம்பெறும் அளவு மட்டில், பெயருக்கும் போலிப்புகழுக்கும் கருவிகளாக இவற்றைப் பயன்படுத்தும் குறுகிய நோக்களவில் பெரும் பாலும் நின்றுவிடுகின்றன. இவற்றால் பெரிதான பயன் எதுவும் விளைந்துவிடவும் இல்லை. இவர்கள் எல்லோருக்கும், இத்தொண்டுகளால் குறியெதிர்ப்பைக் கருதாது, பணி செய்வது, கடமையாற்றுவதற்காகவே, பணிக்காகவே, என்ற திருநாவுக்கரசர் மனப்பான்மை ஒரு சிறந்த முன் மாதிரியாகக் கொள்ளற்பாலது. அவர் ஒரு வழிகாட்டு வீரராகவும் முன்னேடியாகவும் கொள்ளற்பாலர்.

இன்னும் பார்ப்போம். மொகஞ்சதரோ காலம் முதற் கொண்டு, வேதகால முதற்கொண்டு தமிழகத்தில் சிறந்து வந்திருந்த சைவ சமயம், கடைச் சங்க காலத்தில், கவினுற

விளங்கியிருந்த சைவசமயம், இருண்ட காலத்தில், தளர்ச்சி யுற்றிருந்தது. பல்லவப் பேரரசில் முதல் மன்னனாகிய மகேந்திரவர்மனும், பாண்டியன் நெடுமாறனும் சைவத்தைத் துறந்து சமணத்தைப் பற்றி நின்றனர். இச் சூழ்நிலையில் திருநாவுக்கரசர் தோன்றி. தாமும் சமண சமயத்தைப் பின்பற்றி யிருந்ததை விட்டொழித்து, சைவத் திருநெறிக்கே மீட்டும் வந்து, அதன் பெருமையை நிலைநாட்டினர். மகேந்திரவர்மனையும் சைவத்துக்குத் திருப்பினர்.

**சைவ சமயத்தைப் பண்டைப் பெருநிலைக்கு மீட்ட முன்னோடி**

சைவத்தின்மேற் சமயமில்லை, அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேற்றெய்வமில்லையென்று நிறுவியும், சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியெம்மானின் இறைமையை நிலைநிறுத்தியும், சிறந்த அரசர், சைவசமயப் பெருமை நிறுவியவரில் காலத்தாலும் சீலத்தாலும் முன்னோடியாவர் என்ற உண்மையை, சமயக் கிளர்ச்சியில் இவர் பெறும் இடத்தை மதிப்பிடுபவர் உணரவேண்டும். எல்லையற்றுப் பரந்து கிடக்கும் கடற்பரப்பை அளவிட இயலாதவாறு போல, சைவ சமயத்தின் அருமையும், பெருமையும், அதன் பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும், சிவனும், சீவனும் இரண்டறக் கலந்து நிற்கும் சித்தாந்த முடிவாகிய மெய்யுணர்வுச் செம்மைச் சிறப்பும், அளந்தறியலாகாத் தன்மையன. கூவலுக்கும் குரைகடலுக்கும் உள்ள வேற்றுமையை வைத்துப் பார்த்தால், பிற சமயங்களுக்கும் சைவத்துக்கும் உள்ள வேற்றுமை ஒருவாறு விளங்கும் என இப்பெரியார் எடுத்துரைக்கின்றார்.

"கூவ லாமை குரைகட லாமையைக்
கூவ லோடொக்கு மோகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே",

என்ற உவமை வாயிலாக இதைப் புலப்படுத்துகின்றார்.

"விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்",

"யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னலால் தேவர்மற் றில்லையே",

என்று இச்சமயப் பரந்த நோக்கத்தைப் பாங்குடன் முதல் முதல் உலகுக்கு விதந்தோதியுணர்த்தினர்.

**தோத்திரம் பாடிய முதல்வர்** அடுத்து, பாட்டே அருச்சனையாம் என்பதற்கிணங்கப் போற்றிப் பாடல்கள், சிந்தைக்கும் செவிக்கும் இனியனவாய், வந்த இருவினைக்கு மாமருந்தாய் விளங்கும் தோத்திரப் பாடல்கள், இறை வழிபாட்டில், இறை, உயிர் ஒன்றித்து நுகரும் பேரின்பத்திளைப்புக்கு அடிகோலுவன. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பன. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் தன்மை வாய்ந்தன. புன்புலால் யாக்கை, புரைபுரை கனிய, என்பெலாம் உருக்கும் எழில் வாய்ந்தன. தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பன. இத்தகைய போற்றிப் பாடல்கள் உள்ளத் தூறும் கடவுள் அன்பை வளர்த்து இறையுணர்வில் ஈடுபடுத்தும் இயல்பு வாய்ந்தன. மன ஒருமைப்பாட்டை உருவாக்குவதில், உயிராவணமிருந்து உற்றுநோக்கி, உள்ளக்கிழியில் உருவெழுதி ஒன்றுபடும் யோகத்தில், இவை சிறந்தபடிகளாய் அமைவன. "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று இவரே கூறுமாப்போல், ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் எம்பெருமானைத் தமிழ் இசைப்பாடல் கொண்டே போற்றுவது, சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் சிவபுரத்திற்குச் செல்வார் என்றபடி, பொருளுணர்ந்து தாய்மொழியிலேயே பாடி, சமய அனுபவமும், பக்குவமும் எய்துவது என்னும் பேருண்மைகளைத் தமிழுலகுக்கு முதன் முதல் தம் தேவாரத்திருமுறைகளாற் காட்டி முன்னேடியாக விளங்கினர் திருநாவுக்கரசர். அதோடு, சிலப்பதிகார அரங்கேற்று காதையோடு மறைந்து கிடந்த தமிழிசையைத் தமது தேவாரத் தமிழ்ப் பண்களின் வழி, திருவிருத்தங்களின் வழி திருக்குறுந்

தொகைகளின் வழி, உயிர்ப்பூட்டி, சிவபெருமானின் திருச் செவிகளுக் கமுதமென இசைத்து, இசையால் திசை போயுள்ளார். சிலப்பதிகார வரிப்பாடல்களுக்கு அடுத்து, குரவைப் பாடல்களுக்கு அடுத்து, சிறந்த தமிழிசை வடிவங் களை வடித்துக் கொடுத்த முன்னோடிப் பெருமை திருநாவுக் கரசருக்கே உரியதாகும்.

மேலும் இக்காலத்துச் சிவபெருமான் திருக்கோயில் களில் இறைவழிபாடாற்றுவோர் தமிழில் அருச்சனை புரிவ தற்கு ஏற்ற போற்றித் திருத்தாண்டகங்களை இப் போதைக்கு அப்போதே வழங்கிச் சென்ற இப்பெருந் தகை யைத் தலையில் வைத்துக்கொண்டாட வேண்டாமா? "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" என்று தொடங் கும் திருக்கயிலாயப் போற்றித் திருத்தாண்டகப் பதிகமும், "எல்லாம் சிவனென நின்றாய் போற்றி" என்று தொடங்கும் திருவதிகை வீரட்டானப் போற்றித் திருத்தாண்டகப் பதிக மும் "கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி" என்று தொடங்கும் திருவாரூர் போற்றித் திருத்தாண்டகமும், இத் தமிழ் வழிபாட்டிற்குரிய ஏற்ற எடுத்துக்காட்டுக் களாகும். கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடு மணற் கேணியிற் சுரந்துநீர் பாயச்செய்யும் திருவாசக மருளிய பெருந்தகையாரும் தமிழாளியாரைப் பின்பற் றிப் போற்றித் திருவகவலைத் திருவாய் மலர்ந்தருள வில்லையா? ஒரு நாட்டினுடைய அல்லது சமயத்தினுடைய அல்லது தனிப்பட்ட ஆளினுடைய முழு வளர்ச் சியும், அவ்வவர் உட்கூறுகளின் ஒருங்கியைந்த வளர்ச் சியையே சார்ந்திருக்கிறது "அண்டத்திலும்" அதன் சாய லாகிய "பிண்டத்திலும்" அறிவு, இச்சை, செயல் என்ற முக்கூறுகள் Cognition or knowing, (Intellectual), emotion or feeling, (emotional moral & spiritual) and conation or willing (physical) தனித்தனி வளர்ந்து மூன்றும் ஒருங்கியைந்து ஒன்றித்து, முற்றுப்பெற்று வளர்ந்தால்தான் அண்டமோ பிண்டமோ முழுவளர்ச்சியுற்ற முழுநிலையில் மிளிரும். இது பற்றியே, மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலம்போல்

இயல், இசை, நாடகம் ஆகிய முக்கூறுகளினுல் முற்றுப் பெற்று முழுத்தமிழும், இம்மும்மைசால் இயல்புகளைப் போற்றி, ஓம்பி, முழுத்தமிழனை, முழுத்தமிழ் நாட்டை, உல கத்தை, முழுமுதற் கடவுளைப் பாதுகாத்து வந்திருக்கிறது. ஊன் உயிர் உணர்வுகளை ஒன்றித்து வாழ்வித்திருக்கிறது. இயலினுல் அறிவை, உணர்வை-இசையினுல் மன எழுச்சி, அறம், தெய்வ இயல் ஆகியவற்றை, உள்ளத்தை, அதாவது உயிரை, நாடகத்தினுல் செயலை அதாவது ஊனை ஓம்பி வந் திருக்கிறது. இவற்றுள் ஒன்று வளர்ந்து ஒன்று தளர்ந்தால முழுவாழ்க்கையில்லை; முடவாழ்க்கைதான். அறிவு மட்டும் முதிர்ந்து பிற இரண்டும் வெம்பிய பிஞ்சுகளாயிருந்தால் மண்டை வீங்கும் செயல் மட்டும் மிகுந்து பிற இரண்டும் தாழ்ந்தால், உடல் பெருக்கும்; தடிக்கும். உள்ளம் மட்டும் கிளர்ந்து, பிற இரண்டும் தளர்ந்தால், இதயம் வெடிக்கும். ஆதலால் மூன்றும் ஒத்து வளர வேண்டும். இருண்ட காலத் தமிழகத்தில் மண்டை பெருத்து, உடல் தடித்து நிற்க உள்ளம் சூம்பிற்று. இசைத்தமிழால் தெய்வ இயலும் அற நெறியும் உளப் பண்பாடும் வளரவில்லை. இசை தளர்ந் தது. இசை, வாழ்க்கையின் முழுத் தன்மையையும் முற்றுப் பெறச் செய்யும் கருவியாம். இறைவனே ஏழிசையாயும் இசைப் பயனுயும் இலங்குகின்றனன் என்ப. இசையில்லை யென்ருல், அதன் வழி இறையின்ப நிலை எங்ஙனம் நிலவும்? இசை அதிலும் தெய்வமணம் கமழும் இசை, பாடுவோரை யும், பாடப்படும் பொருளையும், கேட்போரையும் இசைவிக் கின்றது. இலக்கியத்தையும் இசையையும் சேர்க்கின்றது. பாட்டு, பண், தாளம் ஆகியவற்றையும் இன்னிசைக் கருவி களையும் இசைவிக்கின்றது. சொல்லையும் பொருளையும் சேர்ப்பிக்கின்றது. அறிவையும் செயலையும் ஒன்றுவிக் கின்றது. சிந்தையையும் செவியையும் சேர்ப்பிக்கின்றது. கேட்போர் பலரையும் கூட்டுவிக்கின்றது. காலத்தையும் இடத்தையும் கடக்கின்றது. இன்னேரன்ன இசைவுகள் கொண்டே தமிழில் இது இசை எனப் பெயர் தாங்கி நிற் கின்றது

கடைச்சங்க நாட்களில் இசையையும் இறையையும் இணைத்துப் பேணிய தமிழன்—நாகரிகத்தால், பண்பாட்டால் அறநெறியால், சமய அறிவால், மெய்யுணர்வுத் திறனால் உயர்ந்த தமிழன்—'தமிழோடு இசை பாடல் மறந்தறியாத் தமிழன்'-அடுத்த காலத்தில் தமிழிசையை மறக்க, மறுக்கத் தொடங்கினான். மறுக்கவே, மறக்கவே தன்னிலையிற்றாழ்ந்தான். மெலிந்தும், நலிந்தும் வந்த தமிழிசையும் அதன் வழித் தமிழ்ப் பண்பாடும் வீழ்ந்தன. இந்தப் படுகுழியிலிருந்து தமிழ் இசையை, தமிழ்த் தெய்வ நெறியை, தமிழ் நாகரிகத்தை, தமிழ்ப் பண்பாட்டை மீட்ட பெருமை திருநாவுக்கரசருக்குரியதன்றோ? இத்தகுதிகொண்டு இவரை ஒரு முன்னோடி என்று கூறுவதால் முரண்பாடு ஒன்றுமில்லையே!

தமிழின்னிசைத் தேவாரத் தோத்திரம் பாடி வழிகாட்டிய திருநாவுக்கரசர் தோத்திரத்தில் சாத்திரமும் காண வழி காட்டினார். இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு என்றதனால் இறைவன் புகழ்பாடும், தோத்திரிக்கும் இன்றியமையையைத் திருவள்ளுவர் குறித்துப் போந்தார். இறைவன் புகழை, இறைவன் திருவருட்டிறத்தை, இறைவன், எடுத்த அருவ, உருவத் திருக் கோயில்களை, உருவத் திருக்கோலத் திருமேனிகளை, இறைவனுக்கு எடுக்கும் அன்றாடப் பூசெய்களை (நித்திய) வழிபாட்டு முறைகளை, இறைவனுக்கு ஆண்டு இறுதியில், அவ்வப்போது வரும் பருவத் திருநாட்களில் எடுக்கும் சிறப்புத் (நைமித்திக) திருவிழாக்களை, இறைவன் உடுப்பனவற்றை, அணிவனவற்றை, செய்யும் திருவிளையாடல்களை, இறைவன் எழுந்தருளியிருக்கும் ஊர்களின் நீர்வள, நிலவள, குடிவள இயற்கைச் சிறப்புக்களை, உள்ளூர் வரலாறு, திருக்கோயில் வரலாறு, திருக்குள வரலாறு, கோயில் மரங்கள் வரலாறு, சிறப்புப் பூசனையாற்றி அருள்பெற்ற வரலாறு, சுருங்கக் கூறின் "மூர்த்தி தலம்

**தோத்திரத்தில் சாத்திரம் கண்ட பெருந்தகை**

தீர்த்தங்கள்'' ஆகியவற்றை இன்னிசையால் எடுத்தேத்தி இசைத்துப் பாடி, ஊனும் உயிரும் உருகும் தோத்திரப் பாடல்களில் ஆங்காங்கே சரியை, கிரியை, யோக, ஞான நன்னெறிக் கருத்துக்களை, கடவுள், உலகு, உயிர்த்தத்து வங்களை, கடவுள், உயிர், உலகத்தொடர்பு பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக் கருக்களை இடையிடையே பெய்து வைத்திருக்கின்றார் இவர். ''தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'' என்று திருவாலங்காட்டு ஈசனைத் திருத்தாண்ட கத்தில் போற்றிய இப்பெருமான், ''ஓர்த்துள்ளம் உள்ள துணரின் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு'' என்று சாத்திர இன்றியமையாமையை வள்ளுவர் உணர்த்தியருளியதைச் செயலிற் காட்டிய சிவப்பேராசிரியராவா ரன்றோ? எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல, இலக்கியத்தினின்று இலக் கணம் வகுப்பதுபோல, தோத்திரத்திலிருந்து சாத்திரத்தை வடித்துத் தருவதற்கு வழிகாட்டியாக, பிற்காலச் சிவஞான போதம், சிவஞானசித்தியார் முதலிய பதினான்கு சைவசித் தாந்த சாத்திரங்களும் தோன்றுவதற்குரிய கருவை, விதையை (nucleus) தோற்றுவித்த சாத்திர முன்னோடியாக வும் திருநாவுக்கரசர் திகழ்கின்றார். இதன் விவரங்களை மூன்றும் பிரிவில் விரித்துக் காணலாம்.

**சைவசித்தாந்தம் என்ற பெயரைச் சிவ தத்துவத்துக்களித்த பெரியார்.**

கட்டிபூசிக் கடுவருத்தும் முறையில், சாத்திரத்தைத் தோத்திரவாயிலாக ஊட்டிய இருவினை மருத்துவராகிய திரு நாவுக்கரசரே ''வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறம்,''சித்தாந்தமுத்தி முதலே'' என்றெல்லாம் பிற்காலத்தவர் சிவதத்துவத்திற்குச் சூட்டிய ''சித்தாந் தப்'' பெயருக்கும் அடிப்படை போட்டும், குறிப்பாக அப்பெயர் சூட்டியும் காட்டி யுள்ளார். இதற்கும் இவரையே முதல்வராகப் பின் வந்த தத்துவ, மெய்யுணர்வுப் பேராசிரியர்கள் எல்லாம் கொண் டுள்ளனர் என்று நாம் கொள்ளுவதாற் படுமிழுக்கொன்று மில்லை. திருக்கச்சியேகம்பத் திருத்தாண்டகப் பதிகங்களில்,

(1) வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணு ளோர்க்கும்
சேயவன்காண் நினைவார்க்குச் சித்தமாரத்
திருவடியே உள்கிநினைந் தெழுவாருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவன்என் எண்ணைத் தானே'' என்றும்,

(2) தண்கடமா முகத்தினாற்குத் தாதைகாண் தாழ்ந்தடியே வணங்குவார்க்குச் சிந்தைகாண் சிந்தாத சித்தத்தார்க்குச் சிவனவன்காண்.

என்ற தொடர்கள் சிந்திக்கும் சித்த அந்தத்திற்குப் பொருளாயிருப்பவன் என்ற சிவநெறித்தத்துவத்தை, சித்தாந்த முடிவைச் சுட்டிக் காட்டுவதாகக் கொள்ளலாம். சிவநெறிப் பொருளும் சிவநெறிப் பெயரும் இவரால் முதன் முதலாக விளக்கம் பெற்றன.

இனி,

"விரும்பு சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"

என்று தாயுமானவர் விதந்தோதும் சைவ நானெறிகளை வகுத்தவர் யார்? வாழ்ந்து பிற்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியவர் யார்? திருநாவுக்கரசரே!

**சைவ நானெறி முதல்வர்** தொண்டுநெறி (தாசமார்க்கம்) நன்மகன்மைநெறி (சற்புத்திரமார்க்கம்) தோழநெறி (சகமார்க்கம்) செந்நெறி (சன்மார்க்கம்) என்று வேறு நான்குமுறைகளிலும் முத்தி நெறியையும் வகுத்துச்செல்வர். இவ்விரு முறைகளிலும் அடிப்படையாகிய, சரியைநெறி, தொண்டுநெறிகள், கற்றோரும் மற்றோரும் பின்பற்றி முத்தியடையக்கூடிய எளிய செயல் முறை வழி. இதுவே அன்புநெறி அல்லது பக்தி நெறியாம். இவருக்கு ஞான அருள் செய்த குருவாகிய திலகவதியம்மையார் இவரைப் "பணிசெய்வீர்" என்று ஆற்றுப்படுத்தினர் அதைப் பின்பற்றியே, "என்கடன் பணி செய்துகிடப்பதே" என்று தொண்டுநெறியை நிறுவிக் காட்டினர். இதிலும் இவருடைய முந்திச் செயலாற்றும் (initiative) முன்னோடித்தன்மை புலப்படுகிறது.

**யாவர்க்கும் உய்வுண்டு என்னும் நம்பிக்கை மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டு.**

எல்லாமறிந்தவருமில்லை, ஏதுமறியாதவருமில்லை, முற்றிலும் கெட்டவன் என்பதுமில்லை என்பதுபோல், இவ்வுலக வாழ்க்கையில் நாம் முழுத்தோல்வியுற்றோம், இனி ஈடேறவழியில்லை என்ற கையறு நிலை எய்தி நம்பிக்கையை ஒருவரும் இழக்க வேண்டியதில்லை. இடுக்கணழிய வேண்டுவதில்லை. நம்பியே கைதொழுவேன் நான் என்றாங்கு இறைவனின் தடங்கருணைப் பெருங்கடலுள் ஒரு துளித்திவலையாவது கிடைக்கும். உய்யும் வழி உண்டு என்று சிவநெறி செல்வோருக்குத் திருநாவுக்கரசர் நம்பிக்கைக்குரல் கொடுப்பதிலும் முன்னோடியாயிருக்கின்றார். இசையால் திசைபோகிய, சிவ அன்பில் ஈடும் எடுப்புமற்ற இராவணனார், செருக்கினால் கயிலைமலை எடுக்கத் துணிந்தபோது அச்செருக்கடக்கி, அவருக்கும் அருளிய அருட்பெருக்கில் ஈடுபட்டு, அதுபோன்றே நம்மனோர்க்கும் அருளுவான் என்ற நம்பிக்கைச் செய்தியை, அறிவுரையைத் தம் பாடல்களால் நமக்குப் புலப்படுத்துகின்றார் இவர். தாம் பாடிய மூன்று திருமுறைத் தேவாரப்பதிகங்கள் ஒவ்வொன்றிலும் ஈற்றுப்பாடலில் இத்திறத்தை எடுத்தியம்பி உலகத்தவரை நல்வழிப்படுத்திய—அதையே குறிக்கோளாக மக்கட்கு வழங்கிய ஒப்புரவாளர் இவர். இன்னும் சில பதிகங்களின் பத்துப்பாடல்களிலும் (திருமறைக்காட்டுத் திருநேரிசை, திருஅவளிவணல்லூர், திருக்கயிலாயத் திருநேரிசைப் பதிகங்கள்) இச்செய்தியை அவர் விளம்பரப்படுத்தி, எடுத்துக்கூறி உலகினர் உய்வதற்கு நம்பிக்கை வழிகாட்டுகின்றார். இப்பெருந்தகை, எடுத்துக்காட்டும் இக்குறிப்பின் உட்கருத்தை இவர் வரலாறெழுதிய சேக்கிழாரும், "நாவுக்கரசு" என்ற வானொலி கேட்டபின் திருநாவுக்கரசர் கொண்ட உட்கோளாக,

" இத்தன்மை நிகழ்ந்துழி நாவின் மொழிக்கிறை
யாகிய அன்பரும் இந்நெடுநாள்
சித்தந்திகழ் தீவினை யேனடையும்
திருவோ விதென்று தெருண்டறியா

அத்தன்மைய னாய இராவணனுக்
கருளுங் கருணைத்திற மானவதன்
மெய்த்தன்மை யறிந்து துதிப்பதுவே
மேற்கொண்டு வணங்கினர் மெய்யுறவே"

என்று கூறுகின்றார்.

**விநாயக வழிபாட்டுக்கு முதன் முதலில் தோத்திர வழி எடுத்துப்பாடி அடிகோலியவர்.**

தமது தேவாரத் திருப்பாடல்களில் சிவபெருமானையே முற்ற முடிய பாடிப் பரவினராயினும், திருநாவுக்கரசர் முதன்முதலாக மூத்த பிள்ளையாரையும் போற்றிச் சில இடங்களில் பாடியிருக்கின்றார். நரசிம்மவர்ம பல்லவனுக்கும் பின் வந்த பரமேஸ்வரவர்மனுக்குப் படைத்தலைவராய் "வடபுலத்துத் தண்டு போய் வாதாபித்தொன்னகரம்" துகளாகச் சாளுக்கிய மன்னன் புலிகேசியை முறியடித்தபின்னர், பரஞ்சோதியார் தென்னகம் மீண்டு தம் ஊராகிய திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் என்ற பெயர் தாங்கி, சிவநெறிநின்று, சிவபெருமானுக்குக் கோயில் எடுத்து, முதன்முதல் வாதாபியிலிருந்து கொணர்ந்த மூத்த பிள்ளையாருக்கும் கோயில் எடுத்து, கணபதீச்சுரம் என்றே அக்கோயிலுக்குப் பெயரும் சூட்டினார் என்று வரலாறு பேசுகிறது. ஏழாம் நூற்றாண்டிலேயே முதன்முதல் விநாயகர் வழிபாடு தொடங்கலாயிற்று என்ற கருத்துக்கு இவ்வரலாற்றுச் செய்தி அரண் செய்கிறது. அக்காலத்தவராகிய திருஞானசம்பந்தரும்

"செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய,
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே"

என்று கணபதீச்சுரரைப் பரவும்போது, சிறுத்தொண்டர் பெருமையையும் சேர்த்துப் பரவினார். இக்காலத்தே விளங்கிய திருநாவுக்கரசர் மூத்த பிள்ளையாருக்கு முதன்முதல் தோத்திரமும் அமைத்து, இப்பிள்ளையார் வழிபாட்டைப் பரப்பியதோடு பிற்கால விநாயக புராணம் பிறக்கவும் அடிகோலி

ஞர். இப்பிள்ளையாரைப் பரவும்போது, இவர் இளவலாகிய முருகப் பெருமானையும் ஒரோவழி இணைத்துப்பாடிய பெருமையும் இவருக்குண்டு. ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்களைக் காண்போம்.

(1) வார ணன்கும ரன்வணங் குங்கழல்
பூரணன் - திருப்பூவணூர்த் திருக்குறுந்தொகை.

(2) ஐயன்காண் குமரன்காண் - (ஐயன் - அண்ணன் - மூத்த பிள்ளையார்) திருவாரூர்த்திருத்தாண்டகம்.

(3) கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்

(4) மூவிலைவேல் மூர்த்திகாண் முருகவேட் குத் தந்தைகாண்
தண்கடமா முகத்தினூர்க்குத் தாதைகாண்
- திருக்கச்சியேகம்பத் திருத்தாண்டகம்,

இதிலிருந்தே தமிழ்நாட்டில் விநாயகப் பெருமான் வழிபாடு தலை சிறந்து விளங்குகின்றது.

இனி, உலகம் தோன்றுதற்குக் காரணமாகிய, வெளியின்—ஆகாசத்தின் - தன்மாத்திரையாகிய ஓசையை 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்ற

**ஓசை-சொல்லும் பொருளும் - உலக முதற்காரணம் என்ற கொள்கைவெளியீடு**

தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சொல்லும் பொருளுமாகிய தத்துவத்தை ஒரு கொள்கையாகப் பல பட விளம்பரப் படுத்திப் பாடிய பெருமை ஆளுடைய அரசருக்கு உண்டு. பரிபாடலில் கருக்கொண்ட இவ்வோசை இயல், இவர் பாடல்களில் உருக்கொள்கிறது. இதையே ஓங்காரம் என்றும் இறைவனை அதன் உட்பொருள் என்றும் அடிக்கடி விதந்தோதுவர்.

இத்தத்துவத்தை, தமிழ் மொழி பயில்வாரும், அதன் வழிப் பலகலையும் பயிற்றுவிக்கும் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும், பாடங்களைப் பயிற்றுவிக்கும் கருவியாகத்

தாய்மொழியை ஏற்றுக் கற்பிக்கும் முறையில் போற்றிக் கொள்ளவேண்டும். "சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித் தூங்காதார் மனத்திருளை வாங்கா தானை" என்று பாடுவதில் உள்ள சொல்லையும் பொருளையும் இணைத்துப் பிணைத்துப் பார்த்தால்தான் உண்மை விளங்கும் என்ற தத்துவம் விளங்கவில்லையா? "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள் ளார்" என்று தானே இவரைப் பின்பற்றிப் பாடிய மணி வாசகப் பெருந்தகையின் அணிவாசகமும் அறுதியிட்டுக் கூறுகின்றது! இம்முறையிலும் வாகீசர் வழிகாட்டுகின்றார்.

இது போன்றே, இறையியலை, இவ்வுலக இயற்கை யியலில் கண்டு, சீவன்களிலேயே சிவத்தைத் தெளிந்து,

**இவ்வுலகிலேயே அவ்வுலகு.**

திருவையாற்றிலேயே திருக்கயிலைக் கோலத்தைக் கண்டு நம்மையும் காண வைக்கும் புதுநெறியில் புகுத்துகின்றார் அப்பர். சக்தியாய்ச் சிவமாய இறை யியல்பை உலகில் உயிரினங்களில் ஆண் பெண் வடிவங் களில் கண்டு அக்காட்சியில் நம்மனோரை ஈடுபடுத்தும் ஒப் பற்ற ஆற்றல் அப்பருக்கே உரியது. திருவையாற்றுக் கயிலைக் காட்சிப் பதிகத்தில் பத்துப் பாட்டிலும் இத்தத்து வத்தைக் காணலாம். திருஞானசம்பந்தரும் இவர் வழி நின்று இயற்கை பாதி இறை பாதியாகப் பலப்பல பதிகங் களிற் பாடிச் சென்றுள்ளார். "அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ, அன்புடைய மாமனும், மாமியும் நீ, ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ" என்ற அருமைத் திருப் பாடலில், நம் உலகத்திலேயே-மண்ணுலக வாழ்விலேயே- நல்ல வண்ணம் வாழலாம், இறையின்பத்தைக் காணலாம் என்னும் கொள்கை நிறுவப்பட்டிருத்தல் காண்க

சொல்லும் பொருளுமாகிய இறைவனைப் போற்றிய நாவுக்கரசர், செந்தமிழ்த் தீஞ்சுவைப் பாடல்களை இசை

**புது இலக்கியப் பாவின வடிவப் படைப்பாளர்**

யோடு இணைத்துப் பாடிய பெருமைக் குரியவராவதைப் பார்த்தோம். அதே பொழுதில் அவர் தமிழ்ப் பாவடிவங் களுக்கு அடிகோலித் தந்திருக்கிறார்.

தொல்காப்பியத்திலும் அதன்வழிவந்த சங்க கால மரபிலும், பல்லவப் பேரரசுக் காலமாகிய கி. பி. 600 வரை, நால் வகைப் பாக்களே தமிழ் மொழியில் நிலவிவந்தன.

"பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா வென்றாங்
காயிரு பாவினு ளடங்கு மென்ப."

"ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப,"

என்று ஒல்காப் புலமைத் தொல்காப்பியர் வகுத்தவாறு, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாக்களே நிலவி வந்தன. ஒன்பதாவது நூற்றாண்டு முதல் பாவினங்கள் கிளைக்கத் தொடங்கின. தாழிசை, துறை, விருத்தம் என்ற மூவினமும் ஒவ்வொரு பாவிலும் கிளைத்தன. இப்பாவினங் களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக, சங்க கால மரபிலிருந்து விலகிய புதிய பாவின வகைகளுக்கு அடிகோலினார் நாவரசர். பிற்காலப் பெருங்காப்பியங்களாகிய சிந்தாமணி விருத்தமெனும் ஒண்பாவிலுயர்ந்த கம்பன் காவியம், 'தெய்வமணக்கும் கவிகள்' எல்லாம் என்று சிறப்பிக்கப் பெற்றுத் தொண்டர் சீர் பரவி, திருநாவுக்கரசர் வரலாறும் வகுத்த சேக்கிழார் யாத்த பெரியபுராணம் ஆகியவற்றிற் பயிலும் விருத்தவகைகளுக்கும், காரிகை நடையாகிய கலித்துறைக்கும் வழிகாட்டிய வித்தகர் நாவுக்கரசர். இப் புதிய இலக்கியப் பாவின வடிவங்களைச் சேக்கிழாரும்

"உளங்கொள்திரு விருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்
களங்கொள்திரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது"

என்று தொகுத்துக் கூறுகின்றார். இவர் பாடிய திருவிருத் தம் பிற்கால யாப்பருங்கல நூலுடையார் காட்டும் கட்டளைக் கலித்துறைக்கு முன்னோடி. இவர் பாடிய திருநேரிசை— "கூவிளம், புளிமா, தேமா; கூவிளம் புளிமா தேமா" என்ற சீர்வாய்ப்பட்டு வரும் பாவாகும். அறுசீராய் ஒருவகையாய் அமைந்த இதனைப் பிற்கால ஆசிரிய விருத்தங்களில் ஒரு வகைக்கு அடிப்படை என்று கொள்ளலாமன்றோ?

திருத்தாண்டகம் அறுசீர், எண்சீர் அடிகளால் ஆயவை. அறுசீர்த்தாண்டகம் குறுந்தாண்டகமும் எண்சீர்த்தாண்டகம் நெடுந்தாண்டகமும் ஆகும். பன்னிரு பாட்டியலார்,

"மூவிரண்டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளரைப் புகழ்வன தாண்டகம், அவற்றுள்
அறுசீர்குறியது நெடியதெண் சீராம்"

என்று இதன் இலக்கணம் வகுத்தார். பல்காயனாரும்,

"அறுசீர், எண்சீர் அடிநான் கொத்தங்
கிறுவது தாண்டகம் இருமுச் சீரடி
குறியது நெடியது இருநாற் சீரே"

என்று இதனை விளக்குவர். இவை தாண்டகம் என்ற தனிப் பெயரில் வழங்கினும், பிற்காலத்தில் திருத்தக்க தேவரும், கம்பரும், சேக்கிழாரும் யாப்பருங்கலம் வகுத்த ஆசிரிய விருத்தமாகவே இவற்றை மாற்றியமைத்துக் கொண்டனர்.

இனி, இக்காப்பியப் புலவர்கள் கையாண்ட கலிவிருத்தம் என்ற மற்றொரு விருத்த வகைக்கு நாவுக்கரசரே அடிகோலினர். அவர் பாடிய திருக்குறுந்தொகையே பிற்கால யாப்பருங்கலக் கலிவிருத்தமாக மாறிற்று. எனவே, சிவஞானத்துக்குத் தந்தையார் — அப்பர் — பாவினத்துக்கும் தந்தையாகின்றார்.

**வடக்குத்தெற்கு- ஆரியம்-தமிழ்- ஒன்றிப்புப் பாலம் போட்டவர்.**

திருநாவுக்கரசரை முன்னோடியாகக் கருதக்கூடிய பல துறைகளைக் கண்ட நாம் இறுதியாக அவர் ஒரு சமய சமுதாய ஒன்றிப்பாக இந்திய நாட்டை ஒன்று படுத்திய வழியிலும் சைவ சமயத்தினருக்கும் பிறருக்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்ததை உணரலாம். வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு என்றும், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்

நாடு என்றும், தமிழ் இந்திய நாட்டு ஒன்றிப்பையும், தமிழ் அனைத்து உலக ஒன்றிப்பையும் பாரதியார் காட்டும் அளவுக்குத் திருநாவுக்கரசர் வழிகாட்டியுள்ளார். இந்த "ஒரு நாடு" "ஒரு உலக" மனப்பான்மையும் மரபும் முந்தைத் தமிழர் காட்டிய மரபேயாகும். அகர முதல எழுத்து; உலகு ஆதி பகவன் முதற்று, "உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்ற தமிழ் அனைத்துலக இணைப்பு வழி வள்ளுவர் தொட்டுக் காட்டியது ஆகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற இம்மரபு தொடர்ந்து வந்தது. கடைச்சங்க காலத்திலும், 'உலகம் உவப்ப' என்று நக்கீரர் காட்டிய உலகும் அதை ஒட்டித் தமிழ்நாட்டில் வடக்கிலிருந்து வந்த நான்குவேதம், ஆறு அங்கங்கள், வேதமுடிவாகிய உபநிடதங்கள், புராணம், இதிகாசம் முதலிய வடமொழிச் சமய வேதாந்தக் கருத்துக் களும், தத்துவங்களும், வழிபாட்டு முறைகளும், கடவுளரும், வாழ்க்கை முறைகளும், ஆகமங்களும், தமிழ் நாட்டில் உள்ளவற்றோடு இணைந்து பிணைந்துவிட்டன. கங்கையும் யமுனையும் பிரயாகையிற் கலந்து பின் கங்கைப் பேராறாக ஒரே ஆறாகக் கலந்து ஓடுவது போல, இந்த ஆரியத் தமிழ் நாகரிகப் பண்பாட்டுச் சமய ஆறுகள் கூடிக் கலந்துவிட்டன. தமிழ் நாட்டு ஐந்திணைக்கடவுளராகிய மாயோன்,சேயோன், கொற்றவை, வேந்தன், வருணன், சிவன், ஆகியோர், விஷ்ணு, சுப்பிரமணியன், உமை (காளி), இந்திரன், வருணன், ருத்திரன் முதலிய கடவுளரோடு கலந்துவிட்டனர். விந்திய மலைக்கு வடக்கிலிருந்த நாகரிகப் பண்பாடுகள் விந்திய மலைக்குத் தெற்கே அகத்தியர் கடந்து வந்ததிலிருந்தே கலந்துவிட்டன. ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்திதனினிது சீரியது என்று ஒன்றைச் செப்பரிதால், ஆரியம் வேத முடைத்து; தமிழ், திருவள்ளுவனார் ஓது குறட்பாவுடைத்து; வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத் தும், குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்; இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர், இயல்வாய்ப்ப, இருமொழியும் ஆன்றவரே தழீஇனார் என்றால் இவ்விரு

மொழியும் நிகர் என்னும் இதற்கையம் உளதோ என்னும் கொள்கை வலுப்பெற்றது. வடமொழிப் புலவரும், புரோகிதரும் தென்னாடு போந்து முடியுடைத் தமிழ் மன்னராலும், குறுநில மன்னராலும் போற்றிப் புரக்கப் பெற்றனர். இவர்களுக்கு இறையிலியாகவும் முற்றூட்டுக்களாகவும் நிலக்கொடை வழங்கினர் இப்புரவலர்கள். நான்மறை வல்லுநருக்கு வழங்கிய ஊர்கள் சதுர்வேதிமங்கலங்களாயின. வடமொழி நூல் வல்லவர் மன்னர்களுக்கு அமைச்சர்களாகவும் அறங்கூறுபவர்களாகவும் அமர்ந்திருந்தனர். கோயில்களிற் பூசெய்களும் செய்தனர். மாடலமறையோன், சேரப் பேரரசன் செங்குட்டுவனுக்குச் சமய அறிவும், அறவுரையும் ஊட்டினன் எனச் சிலப்பதிகாரம் செப்பும் சான்றை இதற்குக் காட்டலாம்.

(1) "மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள்
தண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க!
அகழ்கடல் ஞாலம் ஆள்வோய் வாழி!
இகழா தென்சொற் கேட்டல் வேண்டும்
வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை;

(2) "நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்"

இனி, இவ்வறவுரைகளைத் தலைமேற்கொண்டு செங்குட்டுவனும்,

(3) "நான்மறை மரபின் நயந்தெரி நாவின்
கேள்வி முடிந்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய முறையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி" னன்.

பரிபாடல், அவிர்சடை அந்தணர் அங்கி வேட்கும் ஆவுதி தரும் புகையைக் குறிப்பிடுகிறது. கீரந்தையார் இரண்டாம் பரிபாடலில் கூறும் 'அந்தணர் காணும் வரவு' என்பதற்குப்

பரிமேலழகர் "ஊன்கணுர்க்குப் படிமையினும், அந்தணர்க்கு வேள்வித் தீயினும், யோகிகட்கு உள்ளத்தினும், ஞானிகட்கு எவ்விடத்தும் வெளிப்படுதலாற் சுடர்வளப்பாடு கோடலை " அந்தணர் காணும் வரவு என்றும் கூறினர் " என்னும் விளக்கவுரையும் பிராமணர் வேள்விகள் செய்தல் தமிழ்நாட்டில் பரவியிருந்ததைக் காட்டுமன்றே ? குறிஞ்சிப் பாட்டு (225) அந்தி அந்தணர் அயர்தலைக் கூறுகின்றது. மதுரைக்காஞ்சியும் (656) " ஆதல் அந்தணர் வேதம் பாடி '' யதைக் கூறுகின்றது. **புறநானூற்றுக் கூற்றுக்கள் நால் வேதங்களும்' நால் வேதநெறியும் தமிழ் நாட்டில் பரவியிருந்ததைப் புலப்படுத்தும்.

பாண்டிய மன்னன் ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் வரகுணமகாராஜன் (765-815) வெளியிட்டருளிய வேள்விக்குடி சாசனத்தில் களப்பிரர் இடையாட்சிக் காலத்துக்கு முன், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாண்டியர் முன்னேனுகக் குறிக்கின்றது. இவன் பல வேள்விகளை வேட்டவனுகத் தெரிகிறது. நெட்டிமையாரும் இம்மன்னனைப் பார்த்து அவன் வேள்விகளைச் செய்து நட்ட யூபங்கள் (வேள்வித்தூண்கள்) மிகப் பல என்று வியந்து பாராட்டுகிறுர். அவன் பகைவென்ற போர்க்களங்கள் பலவா ? வேட்ட வேள்விக் களங்கள் பலவா ? எவை மிகப்பல என வினவுகிறுர்? இராசசூயத்தை வேட்டான் பெருநற்கிள்ளி சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் வேள்விகள் பல.

---

(1) சிலப்பதிகாரம் - நடுகற்காதை - வரிகள் 125 - 132.
(2) சிலப்பதிகாரம் - நடுகற்காதை - வரிகள் 176 - 178.
(3) சிலப்பதிகாரம் - நடுகற்காதை - வரிகள் 191 - 194.

** புறம் (1) 2 - 15 நால் வேத நெறிதிரியினும்.
(2) 93 - 7 அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
(3) 361 - 4 கேள்விமுற்றிய வேள்வி அந்தணர்
(4) 367 - 12 ஒன்று புரிந்தடங்கி இருபிறப்பாளர்
(5) 368 அவிர்சடை அந்தணர்
(6) 397 அறுதொழில் அந்தணர்.

ஆரியத்திருமணங்கள் எட்டும், களவு (ஐந்திணை) கற்பு, கைக்கிளை, பெருந் திணைத் திருமணங்களோடு ஒப்பிட்டுக் காட்டப் பெற்றன.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில், காமக்கூட்டம் கண்ணுங்காலை மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள் கந்தர்வ வழக்கம் என்மனார் புலவர் (தொல் பொருள் களவியல் - 1) நூற்பாவை நோக்குக.

இவ்வாறு இருக்கின்றது கடைச்சங்க காலத்தில் இவ் வடதென் இணைப்பு. இதனை அடுத்த, இருண்ட, களப்பிரர் காலத்துக்குப் பிறகு இவ்விணைப்பை உயிர்ப்பித்து, மீட்டு, மறந்த தமிழுலகுக்கு எடுத்துக்காட்டிய பெருமை திருநாவுக் கரசருக்கு உண்டு. சைவம், வைதிகசைவம் என்று இவர் குறிப்பர். எனவே, ஆரியத் தமிழ்ப்பாலம் போட்ட பெருமை இவருக்குண்டு. இம்முறை, நன்குகத் தழைத்துப் பூத்துக் காய்த்துப்பின் சிவஞான போதமாகப் பழுத்தது. இம்மெய் யுணர்வு நூலைப்பற்றி ஒரு பழைய வெண்பா வேதத்தை ஒரு தீஞ்சுவைப்பாற் பசுவாகவும், ஆகமங்களை அவ்வாவின் நறும்பாலாகவும், நால்வர் பாடிய நற்றமிழை பாலிற் றிரண்டுவந்த வெண்ணெயைக் காய்ச்சிய நெய்யாகவும், சிவஞான போதத்தை அந்நறு நெய்யின் சுவையாகவும் உருவகப்படுத்துவதிலிருந்து எவ்வளவில் இவ்வொன்றிப் புணர்ச்சி தமிழ்நாட்டுத் தத்துவ வாழ்க்கையில் உறைந் திருக்கிறது என்பது போதருகின்றது. இதன் விவரத்தைப் பின்னர் மூன்றும் பிரிவில் ஆராய்வோமாயினும், ஈண்டு ஓரிரண்டு சான்றுகள் தருதல் ஏற்புடைத்தாகும்.

திருமீயச்சூர் குறுந்தொகைப் பதிகத் தேவாரம் ஒன்றில் வரும் “ பஞ்சமந்திரம் ஓதும் பரமனூர் ” என்னும் திருவாக்கு எதைக் குறிக்கின்றது ? சிவபெருமானின் திருவைந் தெழுத்தைக் குறிக்கின்றதா ? அன்றி “ ஈசானஸ் ஸர்வ வித்யாநாம் ” எனத் தொடங்கும் ஐந்து மந்திரங்களால்

ஓதப்பெறும் முழுமுதலாகிய சிவபெருமானை, அப்பெருமான் வேதத் தெளிவாயுள்ளதாகக் கூறும் ஐந்து மந்திரங்களைக் குறிக்கின்றனவா? என்று ஆராயவேண்டும். ஆரியந்தமிழோ டிசையானவர் (திருக்கடம்பந்துறைத் திருக்குறுந்தொகை) ஆரியன்கண்டாய் தமிழன்கண்டாய், முத்தமிழும் நான் மறையும் ஆனான்கண்டாய் திருமறைக் காட்டுத் தாண்டகம்) " இணங்குபாகத்தர் ஆரண நான்மறை கணங்கள் சேர்கட லூரின் மயானத்தார் " திருக்கடவூர் மயானத் திருக்குறுந் தொகை) "அங்கமாறும், அருமறைநான்குடன், தங்கள் வேள்வியர் தாம் பயிலும் நகர், செங்கண்மாலிட மார்திரு வாஞ்சியம்" (திருவாஞ்சியத் திருக்குறுந்தொகை), "வானவன் காண், வானவர்க்கு மேலானான்காண், வட மொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும். ஆனவன் காண்" (திருச்சிவபுரத் திருத்தாண்டகம்), "ஒளிமிக அந்தணர் கள் எரி மூன்றோம்பும் உயர்புகழார் ஓமாம் புலியூர் மன்னும், தீதில் திருவடதளி எம் செல்வன்" (திருஓமாம்புலியூர்த் திருத் தாண்டகம்) என்றெல்லாம் அருளியுள்ளவை இவ்வடமொழி தென்மொழிப் பிணக்கத்தை விடுத்து, இரண்டையும் தொடுத்து ஒன்றித்து எடுத்து நிறுத்தி இணக்கத்தை ஏற் படுத்தும் நல்லெண்ணத்தாற்றானே !

## இரண்டாம் பிரிவு

# தேவாரங்கண்ட திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாறு.

வாழ்க்கை வரலாறு எழுதுகின்ற ஒரு வரலாற்ருசிரியர் அல்லது புலவர் தாம் வரலாறு எழுதப்புகும் தலைவரைப் பற்றிய சான்றுகள் உள்ள வரலாற்றுச் செய்திகளையும் சான்றுகள் அற்ற செவி வழி வரலாற்றுச் செய்திகளையும் (traditional) முதலிற்ரெகை செய்து, பின் வரலாற்று விவரங்களுக்கு ஏற்றபடி வகைசெய்து அடுக்கி, ஆராய்ந்து, தீர்மானித்து, பின் வரலாற்றுப்பகுதிகளாக உறுதிசெய்த பின்னரே எழுதிவைக்கவேண்டும். அப்பொழுது தான் அதை உலகம் வரலாற்று நூலாக ஏற்றுக்கொள்ளும். அது உண்மை வரலாற்றை உணர்த்திக்கொண்டு என்றும் நின்று நிலவும். இவ்வாறு அமையவில்லையேல், அதை உண்மை வரலாறு என்று எடுத்துக்கொள்ளாது கட்டுக் கதை எனத் தட்டிவிட்டுவிடுவார்கள். இம்முறையில சான்றுகளாக, பண்டைப் புதைபொருள் கட்டிட சான்று (Archaeological evidence), கல்வெட்டுச் செப்புப்பட்டயச் சான்று (Epigraphic evidence), பண்டைய நாணயச் சான்று (Numismatic evidence), அயல் நாட்டினர் கண்டு கேட்டுக் குறித்த அயல் நாட்டுக்குறிப்புச் சான்று (Foreign testimony), அவ்வக் காலத்து எழுந்த இலக்கியங்களிற் பொதிந்து கிடக்கும் வரலாற்றுக் குறிப்புகளாகிய இலக்கியச் சான்று (Literary evidene) போன்றவற்றை சிறந்தனவாக வரலாற்று ஆராய்ச்சி அறிஞர் கருதுவர். இவ்வனைத்தையும் மனத் துட்கொண்டே சேக்கிழார் பெருமானும் தம் திருத் தொண்டர் புராணத்தில் திருநாவுக்கரசர் வரலரறு வகுத் திருக்கின்ருர். புராணம் என்பது பழைய வரலாறு - வெறும்

கதையல்ல. திருநாவுக்கரசருக்கும் முற்போந்த, திருநாவுக்கரசர் காலத்து நிலவிய, திருநாவுக்கரசர் காலத்துக்கும், திருத்தொண்டைத்தொகை பாடிய சுந்தரருக்கும் இடைப் போந்த வரலாற்றுச் சான்றுகள் அனைத்தையும் உட்கொண்டே சேக்கிழாரால் திருநாவுக்கரசர் வரலாறு ஒரு சிறந்த அறிவியல் முறையில் (Scientific method) வரலாற்று முறையில் (Historical method) வரையப் பெற்றுள்ளது. இனி, இவற்றுக்கு மேல் திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறைகளிலேயே திருநாவுக்கரசருக்கு நிகழ்ந்தவற்றை அவரே குறித்துப் போகின்ற அகச் சான்றுகளும் (Internal evidenc) சேக்கிழாருக்குத் துணை புரிந்தன. திருநாவுக்கரசர் காலத்துக்கு முற்போந்த சிவனடியார்களாகத் திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்தும் பிறவற்றிலிருந்தும் அறிந்து எடுத்துக்காட்டக்கூடியவர்களாகிய 17 அடியார்கள் (கண்ணப்பர், கணம்புல்லர், அரிவாள் தாயர், நமிநந்தி அடிகள், தண்டியடிகள், கோச்செங்கணன், கூற்றுவநாயனர், புகழ்ச்சோழர், எறிபத்தர், புகழ்த்துணையார், காரைக்கால் அம்மையார், மூர்த்தி, ஐயடிகள் காடவர்கோன், சண்டேஸ்வரர், திருமூலர், சாக்கியர், அமர்நீதியார் என்பார்களுடைய) திருத்தொண்டு வரலாறுகள் திருநாவுக்கரசர் தேவாரங்களில் குறிக்கப்பெற்று அவர் வரலாற்றிலும் ஓர் இடம் பெற்றுவிட்டன.

திருநாவுக்கரசர் காலத்து உடன் வாழ்ந்திருந்த திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருகர், குங்கிலியக்கலயர், திருநீலநக்கர், நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், அப்பூதி அடிகள் ஆகியவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் இவர் வரலாற்றோடு மலரும் மணமும் போல், உடலும் உயிரும் போல், வேறு பிரித்துப் பார்க்க இயலாது ஒன்றி, இணைந்து, பிணைந்து விட்டன. இனி, திருநாவுக்கரசர் காலத்துக்கும், சுந்தரர் காலத்துக்கும் இடைப்பட்டவர்களாக, பூசலார், காரி, அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், சக்தியார், வாயிலார், முனையடுவார், இடங்கழியார், இயற்பகையார், நேசர், இளையான் குடிமாறர், மெய்ப்பொருள், திருநாளைப்போவார், ஏனாதி

நாதர், ஆனாயர், உருத்திரப் பசுபதியார், திருக்குறிப்புத் தொண்டர், மூர்க்கர், சிறப்புலியார், கணநாதர், திருநீலகண்டர் முதலியவர்களை ஒருவாறு கொள்ளலாம். சுந்தரர் காலத்தவராகச் சுந்தரர், சடையனார், இசைஞானியார், நரசிங்க முனையரையர், ஏயர்கோன் கலிக்காமர், மானக்கஞ்சாரர், பெருமிழலைக்குறும்பர், கோட்புலியார், கழற்சிங்கர், செருத்துணையார், சேரமான் பெருமாள், விறல்மிண்டர், சோமாசிமாறர் ஆகிய அடியார்களை ஒருவாறு கொள்ளலாம்.

இவ்வாறு தமக்கு முன்போந்த 63 தனி அடியார்களை வரலாற்றுக் கண்கொண்டே சேக்கிழார் பொதுவாகப் பெரியபுராணத்தை, சிறப்பாகத் திருநாவுக்கரசர் புராணத்தைப் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் வரலாற்றை இவர் வகுத்ததில், முற்காட்டிய சான்றுகளைத் திறம்படத் கையாண்டதை ஓரிரு சான்றுகள் காட்டி நிறுவிப் பின் திருநாவுக்கரசர் வரலாற்றுக்குள் புகுவாம்.

திருநாவுக்கரசர் ஏறக்குறைய 126 திருக்கோயில்களைப் பாடியுள்ளார். வைபபுத் தலங்களாக 60க்கு மேல் வந்துள்ளன. திருஞானசம்பந்தர் 219 திருக்கோயில்களைப் பாடியுள்ளார். இவர்கள் இருவரும் ஒருசேரப் பாடிய தலங்களும் இருக்கின்றன. அவற்றைக் கழித்துப் பார்த்தாலும் அக்காலத்தில் தமிழ்நாட்டில் சிவபெருமான் கோயில்கள முந்நூறுக்குக் குறையாமல் இருந்திருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு அப்பாலும், வடஇந்தியாவிலும், ஈழத்திலும் இவர்கள் பாடிய கோயில்களும் உள்ளன. இவற்றுள் திருநாவுக்கரசர் தமிழ்நாட்டிலும், வடஇந்தியாவிலும், ஈழத்திலும் நேரிற்சென்றும் மனத்தால் நினைத்தும் பாடிய திருப்பதிகளுக்கு அவர் செல்லும் பெருவழிகளை இடைப்பட்ட நாடுகளை, ஊர்களை, காடுகளை, மலைகளை, ஆறுகளை, பிற இயற்கைச் சூழல்களை, உள்ளூர் வரலாறுகளை, நிகழ்ச்சிகளை

"மூர்த்தி, தல, தீர்த்த" வரலாறுகளை, அங்கங்கு வழிபட்டு உய்ந்த தேவர்கள், அடியார்கள், விலங்குகள், பறவைகள், வரலாறுகளை, கோயில் கட்டியவர்களை, ஊர்ப்பெயர், கோயிற் பெயர், திருமடங்கள் கோயில் முதலில் தோன்றிய அங் குள்ள மரங்கள், சோலைகள் முதலியவற்றை, இன்னோரன்ன பிறவற்றை எல்லாம் திருநாவுக்கரசர் கண்டு கூறுமாறு அவர் தேவாரப்பாடல்களிலிருந்து வாங்கிக்கொண்டதோடு, தாமும் கூடியவரையில் அங்குச் சென்று கண்டே, கேட்டே வரலாருகப் பாடியுள்ளார் என்றே அறிஞர்கள் கருதுகின் றனர். அவர் சோழநாட்டு அக்கால முதல் அமைச்சரா யிருந்தபடியால் நேரிலேயே சென்று காண்பதற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்றிருத்தல் கூடும். திருநாவுக் கரசர் காலத்து இருந்த நாட்டு நிலைகளைத் தாம் கண்டு கேட்டவற்றோடு ஒப்பிட்டு ஏற்புடையனவற்றை அமைத்தே சேக்கிழார் வரலாறு பாடியுள்ளார்.

இங்ஙனம் பார்க்கும்போது, திருக்கோயிலகள், திரு நாவுக்கரசர் காலத்து அவர் பெயரால் நிறுவியுள்ள திங்களூர் திருநாவுக்கரசர் மடம், திருப்பூந்துருத்தியில் அவர் எடுத்த மடம், திருப்புகலூர், பாடலிபுரம், திருவதிகை, திருவாரூர், திருவீழிமிழலை, திருநல்லூர் முதலிய இடங் களில் இருந்த மடங்கள் இவற்றையெல்லாம் கண்கூடாகக் கண்டே சேக்கிழார் எழுதினர். திருநாவுக்கரசர் காலத்துக் குப் பின்னும் சோழப் பேரரசர் காலத்தும் (தம்காலம் வரை யில்) சேக்கிழார் கண்டு வைத்த கோயில்கள், திருமடங்கள், திருநாவுக்கரசர் உள்ளிட்ட தேவார ஆசிரியர்கள் திருமேனி களைத் திருக்கோயில்களில் எழுந்தருளுவித்த மன்னர்கள் திருத்தொண்டு, திருநாவுக்கரசர், பிறர் தேவாரத்திருப் பதிகங்களைத் திருக்கோயில்களில் விண்ணப்பிக்கச் செய்த செயல்கள், இவற்றிற்கு ஏற்பாடு செய்திருந்த நிபந்தங்கள் படித் தாங்கள் இறையிலியாக விட்டிருந்த நிலங்கள், முற் றூட்டாக விடுத்த ஊர்கள், இவர்களுக்கு எடுத்த திரு விழாக்கள், இவர்கள் பெயரை ஒட்டி மக்களுக்கு வைக்கப் பட்ட பெயர்கள், தெருப் பெயர்கள் முதலிய பல திரு

நாவுக்கரசரைப் பற்றிய, திருநாவுக்கரசருக்குப் பிற் போந்த செய்திகள் அனைத்தையும் இவர் நேரிற் கண்டறிந்தே எழுதினார். இப்பிற்காலச் சான்றுகளுக்கு நாம் ஈண்டு போவதற்கில்லை. திருநாவுக்கரசர் கால அளவிலேயே நிற்போம்.

மேற்குறித்த பழங்கட்டிடச் சான்றுகளோடு, அவ்வக் கோயில்களில் மேற்கண்ட செய்திகள் பலவற்றை உள்ளடக்கி வெட்டியிருந்த கல்வெட்டுக்கள், திருநாவுக்கரசர் செப்புத்தகடுகளிற் பொறித்து வைத்த காலக்குறிப்புக்கள் செப்புப் பட்டயங்களையும் படித்து அறிந்தே, கல்வெட்டுச் சான்று அடிப்படையிலேயே திருநாவுக்கரசர் வரலாறு வரையப்பெற்றுள்ளது கண்கூடாம். திருநாவுக்கரசரைப் பலவகைகளில் துன்புறுத்திய பின் அவரையே ஞானாசிரியனாகப் பெற்றுச் சைவ சமயம் மீண்ட மகேந்திரவர்ம பல்லவன் ஆட்சிப் பகுதியிலும் (கி. பி. 600—630) திருநாவுக்கரசர் வாழ்ந்தார். மகேந்திரவர்மனுக்குரிய விருதுப் பெயராகிய குணபரன் என்ற பெயரில் இவ்வரசன், திருச்சிராப்பள்ளி மலையில் குடைவரைக்கோயில் எடுப்பித்து, அக்கோயிற்றூண் ஒன்றில் ஒரு கல்வெட்டை வெட்டுவித்தான்.* அது வடமொழியில் அமைந்தது.

"குணபர நாமாணி ராஜன்யனேன லிங்கேன லிங்கினிக் ஞானம் ப்ரதாஞ் சிராய லோகே விபக்ஷங்கருத்தே பார்வருத்தம்" என்ற இக்கல்வெட்டடிகள், "இலிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் பெயரோடு கூடிய அரசன் இந்த இலிங்கத்தினால் (பெற்ற) விபக்ஷ விருத்தியிலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலை நிற்பதாக" என்னும் பொருள்படுவன. சமண சமயத்திலிருந்து சைவ சமயம் சார்ந்த சமய மாற்றம் இவனுக்குத் திருநாவுக்கரசரால் நிகழ்ந்தது. அவர் காலத்திலேயே இக்கல்வெட்

---

* S. I. Inscriptions Vol. P. P. 29-30.

டும் நிகழ்ந்தது. அக்கோயில் மற்ருெரு தூணிலும் ஒரு கல் வெட்டு அதே அரசனைக் குறிக்கிறது. மகேந்திரவர்மனுக்குக் குணபரன் என்ற விருதுப்பெயர் உண்டு என்பது வல்லம் என்னும் ஊரில் உள்ள குடைவரைக் கோயில் கல் வெட்டால் வெளியாகின்றது. பகாப்பிடுகு, லளிதாங்குரன், சத்துருமல்லன், குணபரன் மயேந்திரப்போத்தரசரு அடியான் வயந்தப்பிரி அரசரு மகன் கந்தசேனன் செய்வித்த தேவகுலம்" என்பதில் மகேந்திரனுடைய விருதுப் பெயர்களில் 'குணபரன்' என்பதும் காணப்பெறுகின்றது. திருநாவுக்கரசர் பெருமைகண்ட இம்மன்னன் சைவனானபிறகு அச்சமயப்பெருமை நிலை நாட்டத் திருநாவுக்கரசர் குருவருள் பெற்ற திருவதிகையிலேயே குணபர ஈச்சுரம் என்னும் சிவன் கோயில் எடுப்பித்தான். எனவே, இவற்ருல் திருநாவுக்கரசர் காலத்தை ஒருவாறு உய்த்துணரலா மன்ரே. இக்கல்வெட்டுச் சான்றுகளை எல்லாம் அன்றே கண்டறிந்த தனுலன்ரே சேக்கிழாரும் "மகேந்திரவர்மன் செயல்களாகத் திருநாவுக்கரசர் புராணத்தில்,

"பல்லவனும் தன்னுடைய பழவினைப் பாசம்பறிய
அல்லல் ஒழிந்தாங்கெய்தி ஆண்ட அரசினைப்பணிந்து
வல்லமணர் தமைநீத்து மழவிடையோன் தாளடைந்தான்",

என்றும்,

"காடவனும் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்கு
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து குணபரஈச் சுரமெடுத்தான்".

கல்வெட்டுச் சான்றுடன் வரலாறு வகுக்கின்ருர். இன்னும் இக்காலத்துப் பாண்டி நாட்டு மன்னனுய் மகேந்திரவர்மன் போன்றே சமணஞ்சார்ந்து, மீட்டும், பாண்டி மாதேவி மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார்களின் பெரு முயற்சியாலும் திருஞானசம்பந்தரது திருவருளாலும், சைவஞ்சார்ந்த "கூன் நிமிர்ந்த தென்னவனுர்", "நின்ற சீர்நெடுமாறனுர்" என்றெல்லாம் சிறப்பிக்கப்பெறுகின்ற நெடுமாற மன்னன் (கி. பி. 670—710) வேள்விக்குடிச் செப்

பேட்டில் நான்காவது மன்னனுகவும் (அரிகேசரி, அசமச மன் மாறவர்மன்) சின்னமனூர்ச் செப்பேட்டில் முதலாவது மன்னனுகவும் (அரிகேசரிபரங்குசன்) ரெலாற்றுப் பேராசிரியர்களால் உறுதி செய்யப்படுகின்ற நெடுமாறனும் நிலவிய காலம். இம்மன்னனும், தேவியாரும் அமைச்சரும் திருநாவுக்கரசர் ஆலவாய்ப் பெருமானை வணங்கவந்தபோது போற்றிச் சிறப்புச் செய்தனர். எனவே இம்மன்னன் காலத்தும் திருநாவுக்கரசர் வாழ்ந்திருந்தனர் என்பது போதருகின்றது. "அப்பருக்கெண்பத்தொன்று" என்று வழங்கும் நால்வர் வயது கூறும் பழம் பாட்டுப்படி மகேந்திரன் காலத்திலிருந்து நெடுமாறன் காலம் வரை இவர் நீண்டவாழ்வு வாழ்ந்திருந்தார், நாவரசர் என்று கொள்ளலாமன்றே? மேலும் நரசிம்மவர்மன், முதலாம் பரமேஸ்வரவர்மன் (670-685) ஆகிய மன்னர்களுக்குப் படைத்தலைவராய் "மன்னவர்க்குத் தண்டுபோய் வாதாபி தொன்னகரம் துகளாக" வாகை சூடிப் பின் பக்திநெறி நாடி, தம்மூராகிய செங்காட்டங் குடியில் கணபதீச்சுரம் எடுத்து, மூத்த பிள்ளையார் சிலை நிறுவி முதன் முதல் அவர் வழிபாட்டைத் தமிழ் நாட்டில் நிறுவிய பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்டரும் இவர் காலத்தவர். வாதாபிப்போர் பற்றிய** கல்வெட்டுக்கள் புகழ் வாய்ந்தவை மன்னவர் என்று பெயர் கூருது பன்மையில் சேக்கிழார் (கி. பி. 630—668) கூறியதால் நரசிம்ம வர்மன் பரமேஸ்வர வர்மன் ஆகிய இருவர்க்கும் படைத்தலைமை தாங்கிச் சிறுத் தொண்டர் கி.பி. 642இலும் கி.பி. 674இலும் இரு முறை வாதாபியைத் தாக்கினுர் கி. பி. 674இல் தாக்கிமீண்ட பின்னரே திருச்செங்காட்டங்குடிக்குத்

---

**1. Indian Antiquary - Vol. IX. P. 1.

2. Epigraphica Indica Vol. X. No. 22. P. 100—6

3. Pallavas of Kanchi R Gopalan P. 105.

4. Kuram & Velurpalayam records S. I. Inscriptions Vol. I.P. 144 & I52.

5. Udayendram plates of Nandivarman pallamavalla S. I I. Vol. II. P.3

திரும்பி ஓய்வு பெற்ற நிலையில் திருஞானசம்பந்தர் நெடு மாறனைச் சைவனாக்கி மீண்டபோது சந்திக்க நேர்ந்தது.

இனி, மகேந்திரவர்மன் மகன் நரசிம்மவர்மன் (கி. பி. 630 – 660) காலத்தில், இந்தியாவிற்கு வந்து ஹர்ஷ வர்த்தன மன்னனின் கனோஜ் தலைநகரத்தில் தங்கியும், வாதாபித் தலைநகரில் இரண்டாம் புலிகேசி மன்னன் புரப்பில் இருந்தும், காஞ்சித் தலைநகரிலும் நரசிம்மவர்மன் புரப்பத் தங்கியும் நாட்டு வளத்தையெல்லாம் நுனித்தறிந்து குறிப்புக்கள் எழுதிவைத்துச் சென்ற யுவான் சுவாங் என்ற சீனப்பயணி அயலவர் குறிப்புச் சான்றும் (Foreign Testimony) திருநாவுக்கரசர் காலச் சமுதாய சமய நிலைகளுக்குச் சான்று பகரும். காஞ்சியில் புத்தர் பள்ளிகள் நூற்றுக்கு மேல் இருந்தன வென்றும், புத்த சமணத் துறவிகள் ஆயிரக் கணக்கில் இருந்தனர் என்றும் இவர் குறிப்புக் கூறுகிறது. இவருக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வந்த பாஹியான் என்ற சீனப் பயணி காலத்தில் சமண, புத்த சமயங்கள் மேலும் சிறந்திருந்தனவாம். ஆனால், இருநூறு ஆண்டுகட்குப் பின்னர் வந்த யுவான் சுவாங் காலத்தில் இச்சமயங்களின் செல்வாக்குக் குறைந்திருந்ததால், இச் செல்வாக்குக் குறைவதற்குத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் சைவ சமயத் தொண்டே காரணமாகும். திருநாவுக்கரசர் காலச் சமயச் சூழ்நிலையை அறிவதற்கு அயலவர்கள் குறிப்புக்கள் உதவுமாற்றையும் உணர இடமிருக்கின்றதன்றோ?

இனி, சேக்கிழார் தாம் வரலாறு வகுக்கப் புகுந்த அடியார்களின் பாடல்களிருப்பின் அவற்றுள் புகுந்து திளைத்து, அவற்றையும் தாம் எழுதும் அவர் வரலாற்றிற் பயன்படுத்திக் கொள்ளும் ஓர் உயர்ந்த முறையையும் மேற் கொண்டதற்கு ஓரிரு சான்றுகள் தருதும். திருநாவுக்கரசர் தம் மூன்று திருமுறைகளையும் எழுத்தெண்ணிக் கற்றுத் துறை போகி ஏற்ற இடங்களில் அத்தேவார அடிகளை ஒற்றியே வரலாறு வகுத்துப் போகின்றார். இது வரலாற்றுக்கு இலக்

கியச் சான்றைப் பயன்படுத்துவதாகும் அன்ரே. ஓரிரண்டு எடுத்துக்காட்டுகளாகப் பின்வருவனவற்றை இம்முறைக் குக் கொள்ளலாம்:-

(1) சில இடங்களில் பதிக முதற் குறிப்பையே குறித்து வரலாறு கூறல்:-

திருநாவுக்கரசர் "கூற்ருயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்" என்று சூலைநோய் தீரப் பாடியருளிய திருவதிகை பண் கொல்லிப் பதிக முதற் பாடல் முதற்குறிப்பைப் பயன்படுத்தியே சேக்கிழார்,

"நீற்ரு னிறைவா கியமே னியுட
னிறைடன் புறுசிந்தையி னேசமிக
மாற்ருர் புரமாற் றியவே தியரை
மருளும் பிணிமாயை யறுத்திடுவான்
"கூற்ரு யினவா றுவிலக் ககிலீர்"
எனநீ டியகோ திறிருப்பதிகம்
போற்ரு லுலகே ழின்வருந் துயரும்
போமா றெதிர் நின்றுபு கன்றனரால்"

என்று கூறுகின்ருர்.

(2) சில இடங்களில் பதிகத்தின் முதலும் இறுதியும் குறிக்கப் பட்டிருத்தல்:-

சமணர் கற்றூணைப் பூட்டிக்க டலிற் பாய்ச்சக் கற்றூணே சிவனருளால் தெப்பமாய் மிதந்துவரத் திருப்பாதிரிப்புலியூர்ப் பாங்கர் கரையேறி, அவ்வூர்ப் பெருமான் தோன்ருத் துணை யாய்த் தமக்கிருந்த பேரருட்டிறத்தைப் போற்றிப் பாடிய பதிக முதற் பாட்டின் முதற் குறிப்பையும் ஈற்றடிக் குறிப் பையும் சேர்த்துத் தம் வரலாற்றில் வைத்துப் பாடுவது தேவார இலக்கியத்தின் மூலைமுடுக்குகளை எல்லாம் துருவி ஆராய்ந்து சான்றுகளாக்கிக் கொண்ட முறைத் திறத் தையே பறைசாற்றுகின்றது. இதைப் பார்ப்போம்,

"ஈன்ருளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்ரு யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்ரு னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்ருத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே"

(3) இனி, வேற்றிடங்களில் பதிக அடிகளையே தமதாக்கிக் கொண்டு, அவ்வடி நடையையே தம் பிற அடிகட்கும் நடையாயமைத்துக்கொள்ளும் திறமையும் இவ் விலக்கியச் சான்றுக்கு மற்ருேர் எடுத்துக்காட்டாம் திருவாரூர்ப் பழமொழிப் பத்துப் பதிக முதற் பாடலைப் பார்ப்போம்!.

“செய்யமா மணிஒளிசூழ் திருமுன்றின்
முன்தேவா சிரியன்சார்ந்து
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ,
மயிலாலும் ஆரூ ரரைக்
கையினல் தொழா தொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனென்று
எய்தரிய கையறவால் திருப்பதிகம்
அருள்செய்தங் கிருந்தார் அன்றே”

இதில் இடையிரண்டடிகளும் திருநாவுக்கரசர் தேவார அடிகள் முதலும் முடிவும் அதே நடையில் அமைந்த சேக்கிழாரடிகள்.

(4) தேவாரப் பதிகத்தின் கருத்தை வாங்கித் தம்பாடல் களில் விளக்கிப்பாடும் விந்தையும் சேக்கிழார் இலக்கியச் சான்றைக் கையாளும் முறைகளுள் ஒன்ரும். திருநாவுக் கரசர் தில்லையில் திருநேரிசை பாடிப் பரவும்போது கூத்தப் பெருமான் அந்தமிலழகில் ஈடுபட்டுப் பரவசமெய்தி “என்று வந்தாய் என்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே” என்று உருகினர். ‘என்று வந்தாய்’ என்னும் குறிப்பிற்கு விளக்கம் கூறுவார்போல் சேக்கிழார்,

‘இத்தன் மையர்பல முறையுந் தொழுதொழ
என்றெய் தினையென மன்ருடும்
அத்தன் திருவருள் பொழியும் கருணையின்
அருள்பெற்றிடவரு மானந்தம்
மெய்த்தன் மையினில் விருத்தத் திருமொழி
பாடிப்பின்னையு மென்மேலும்
சித்தம் பெருகிய பரிவா லின்புறு
திருநேரிசைமொழி பகர்டனர்”

என்று அமைக்கின்ருர்.

(5) இனி, திருநாவுக்கரசர் ஆங்காங்குப் பாடிய திருப்பதிக வகைகளை அப்படியே தம் பாக்களில் வைத்துப் பாடியுள்ள

பாங்கும் இவர் இலக்கியச் சான்றை இயக்கும் முறைகளில் மற்றொன்றாகும். எடுத்துக்காட்டாக, திருப்பூந்துருத்திப் பதியில் திருநாவுக்கரசர் பாடிய பதிகங்களனைத்தையும் படித்து ஓர்ந்து, தம்புராணத்துள்,

*"பல்வகைத்தாண் டகத்தோடு பரவும்தனித் தாண்டகமும்*
*அல்லலறுப் பவர்தானத் தடைவுதிருத் தாண்டகமும்*
*செல்கதிகாட் டிடப்போற்றுந் திருவங்க மாலையுமுள்ளிட்*
*டெல்லையில்பன் மைத்தொகையும் இயம்பினரேத் தியிருந்தார்"*

என்று கூறினர். ஏன்? திருநாவுக்கரசர் தேவாரத் திருமுறைகள் அத்தனையுமே இவர் வகுத்து வகுத்து

*உளங்கொள்திரு விருத்தங்கள் ஓங்குதிருக் குறுந்தொகைகள்*
*களங்கொள்திரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது*

என்று அப்பாவகைகளைச் சுட்டிக்காட்டவில்லையா?

(6) மேலும் திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்களைக் கவிக் கூற்றாகவே அமைத்துக்கொண்டு வரலாறு கூறும் ஆற்றலும் இவருக்குண்டு.

*ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி*
*நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியு மன்றே*

என்ற திருநாவுக்கரசர் நமிநந்தி யடிகளைத் தம் வாக்கில் வைத்துப் பாராட்டியதைச் சேக்கிழார், நமிநந்தியடிகளைத் தாமும், "நீறு புனைவார் அடியார்க்கு நெடுநாள் நியதியாகவே, வேறு வேறு வேண்டுவன எல்லாம் செய்து மேவுதலால், ஏறு சிறப்பின் மணிப்புற்றில் இருந்தார் தொண்டர்க் காணியெனும், பேறு திருநாவுக்கரசர் விளம்பப்பெற்ற பெருமையினர்" என்று ஏற்றிப் போற்றினர்.

(7) சில இடங்களில் சேக்கிழார் தேவாரப் பதிகங்களின் உட்குறிப்பை எடுத்துக் காட்டிப் பாடுவதும் உண்டு. "அவனியில் விழுந்து எழுந்து அலைப்புறும்மனை வாழ்க்கை சரியும். அதை அறுத்திடவேண்டும்" என்னும் உட் குறிப்பை வைத்தே சுந்தரர் 'தலைக்குத் தலைமாலை அணிவ

தென்னே' என்னும் பதிகத்தைப் பாடியதாகச் சேக்கிழார் கூறும் திறம் என்னே!

(8) இனி, தேவாரத்திற்கு உரைகாண்பதற்கு அதன்வழி வந்த பெரியபுராணம் பல இடங்களில் உற்றுழியுதவுகிறது. காரைக்காலம்மையார் தலையாலே நடந்த திருவாலங் காட்டை மிதித்தற்குமஞ்சி ஊர் எல்லையிலேயே தங்கிவிட்ட திருஞானசம்பந்தர் கனவில் ஆலங்காட்டப்பன் 'நம்மை அயர்த்தனையோ பாடுதற்கு' என்று கேட்டதாகப் பெரிய புராணம் விளக்கித் தந்திராவிட்டால், சம்பந்தர் ஆண்டுப் பாடிய

"துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்"

என்ற அடிகளின் பொருள் விளங்காதன்றோ? இப்படித் தாம் பாட எடுத்த அடியார்களின் இலக்கியங்களிலிருந்து சான்று களைச் சேக்கிழார் பெருமான் எடுத்தாளும் கோலங்கள் பலப்பல.

மேற்கண்ட சில, பல வழிகளைக் கொண்டு திருநாவுக் கரசரின் அரிய வரலாற்றைச் சேக்கிழாரை அடியொற்றி, அகச்சான்றுகளும் ஆங்கே காட்டி, ஒருவாறு காண் போம்.

திருநாவுக்கரசர் வரலாற்றுக்கு முதன்முதல் அடி கோலியவர் சுந்தரமூர்த்தி நாயனர் ஆவர். "திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட, திருநாவுக் கரை யன்றன் னடியார்க்கு மடியேன்" என்று தம் திருத் தொண்டத்தொகையில் அவர் அவ்வரலாற்றைத் தொகுத்துக் கூறினர். இதனை, சிறிது விரித்து, வகுத்து நம்பியாண்டார் நம்பி, தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் கீழ்க்கண்ட இரு கட்டளைக் கலித்துறைப் பாடல்களில் ஓதினர்.

(1) "நற்றவன்; நல்லூரர்ச் சிவன்றிருப் பாதந்தன் சென்னிவைக்கப்
பெற்றவன்; மாற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்குன்
உற்றவன்; உற்றவிட மடையா ரிடமொள் ளமுதாத்
துற்றவன்; ஆமூரில் நாவுக் கரசெனுந் தூமணியே",

(2) " *மணியினை, மாமறைக் காட்டு மருந்தினை, வண்மொழியாற்*
*றிணியன நீள்கத வந்திறப் பித்தன, தெண்கடலிற்*
*பிணியன கல்மிதப் பித்தன, சைவப் பெருநெறிக்கே*
*யணியன நாவுக்கரையர் பிரான்ற னருந்தமிழே*".

இனி மேற்கண்ட தொகைவகைகள், மிகவிரித்தே, இப் பிரிவின் முதலிற் காட்டியாங்கு பல சான்றுகளைப் பயன் படுத்தித் திருநாவுக்கரசர் புராணத்தை அறிவியல் முறை யில், வரலாற்று முறையில் சேக்கிழார் விரித்தோதினர் இதனலேயே,

" *தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி*
*வாக்கி னற்சொல்ல வல்லபிரா னெங்கள்*
*பாக்கி யப்பய னய்ப்பதி குன்றைவாழ்*
*சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்*"

என்று இவர் போற்றப்பெறுவாராயினர். பெரிய புராணத் தில் திருநின்ற சருக்கத்தில் வரும் ஏழு நாயன்மார்கள் வர லாறுகளில் ஒன்ருகப், பெரிதாகத் திகழ்கின்றது திருநாவுக் கரசர் வரலாறு.

திருநாவுக்கரசர் முற்பிறவியில் ஒரு முனிவராக இருந்து சிவபெருமானை யடையத் தவம்புரிந்ததாகச் சிவ பெருமான், திலகவதியார் கனவில் அறிவுறுத்தியதாகப் பெரியபுராணம் (1313ஆம் செய்யுள்) குறிக்கின்றது. இவ் வுண்மையை திருநாவுக்கரசரும் உணர்ந்து, "மறப்படு மென் சிந்தைமருள் நீக்கினன்காண்" என்று திருவாரூர்த் திருத்தாண்டகத் தேவார அடியிலும்,

" *பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே*
*பன்னியநூற் றமிழ்மாலைபாடு வித்தென்*
*சிந்தைமயக் கறுத்தருளி னானை*";

'*நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீக்க,*
*நிறைதவத்தை அடியேற்கு நிறைவித்தென்றும்,*
*செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானை*"

என்னும் திருச்செங்காட்டங்குடித் திருத்தாண்டகப் பாடலடி களிலும், தம் வாக்கிலேயே அமைத்து வைத்திருக்கின்றனர்,

என்று இவற்றை, இவ்வுண்மைக்கு அகச்சான்றுகளாகச் சிவக்கவிமணியவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

பெண்ணை மாநதியின் நீர்வளமும் நிலவளமும் குடி வளமும் கொழிக்கும் திருமுனைப்பாடி நாட்டில் அரசர் தோன்றினர். இவரும், இவருக்குப் பிறப்பும் இளமையும் பிறகு சுந்தரமூர்த்தி நாயனரும் தோன்றியருளியதால் திருமுனைப்பாடி நாடு சிறந்தது. இந்நாட்டின் பெருமையை தம்மாற் கூறமுடியாது. "நம்மளவே பேருலகிற், சிறந்ததிருமுனைப்பாடி திறம்பாடும் சீர்ப்பாடு" என்று சேக்கிழாரே வியந்து கூறுகின்றார். "திருமுனைத்து ஆடும்" பெருமை வாய்ந்த திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில், சைவவேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் அரசர் தோன்றினர். திருஆகும் ஊர் திருஆமூர். தந்தையார் புகழனர். தாயார் மாதினியார். இவர்கள் இருவரும் ஈடும் எடுப்பும் அற்றவர் என்பதை இவர்கள் திருப்பெயர்களே விளக்கிக்கொண்டு நிற்கின்றன என்பர். புகழ் அனர் அதாவது புகழே உருவெடுத்தாற் போன்றவராம் இவர். 'தன் மகனைச் சான்றோன்' எனக் கேட்ட தாயாகிய மாதினியாரும், அரசரைச் "சான்றோனாக்கும்" தந்தைக் கடனாற்றிய புகழனரும் ஒப்பாரும் மிக்காரும் இலர் ஆகாரோ? இவரைத்தவிர, இனி இவ்வாறுயர்ந்த தாயர் உலகில் யார் உளர் என்று கூறத்தக்கவராய், மாது இனி யார், என்றும், பெண்களில் இனியவர் என்னும்படி, மாது இனியார் என்றும் சிறந்தவர் இவர் தாயார்.

இனி, இவருக்கு முன், உடன் பிறந்த தமக்கையாராகிய திலகவதியம்மையாரும் தம்குலத்துக்கும் சைவநெறிக்கும் திலகம் (நெற்றிப்பொட்டு) போன்றவர். இந்தியாவின் தெக்கணத்தை நிலமடந்தையின் பிறைநுதலாகவும், திராவிடநாட்டை (தமிழ்நாட்டை) அதில் விளங்கும் திலகமுமாகப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் இலக்கியக் கற்பனைச் சுவைபட, இதைப் பின்பற்றி அமைத்துள்ளது காண்க.

பெற்ருேர்கள் இவருக்கிட்ட பிள்ளைத்திருநாமம் "மருள் நீக்கியார்" என்பதாகும். "பொருளல்லவற்றைப் பொருளாகக் கொள்ளும்," மருளை நீக்கி அருள்நெறி நடாத்திய திருநாவுக்கரசருக்கு வருமுன் நோக்கி, 'மருள்நீக்கியார்' என்னும் பெயர் சூட்டிய அவர்தம் தாய் தந்தையரின் நுண்மாண் நுழைபுலத்தை என்னென்பது? அளவில்லாத கலைத் துறைகள் தழைக்கவும் தவநெறி வாழவும், உலகிருள் நீக்கி, ஒளிதரும் கதிரவன்போல் மருள்நீக்கியார் தோன்றியருளினுர். உரிய பருவங்களில், மயிர்களைவினை, கலைபயில் தொடக்க விழாபோன்ற உரிய சடங்குகளைச் செய்யப் பெற்றுக் கலைகளின் திறம்பயின்று மறுவொழித்த இளம் பிறைபோல் வளர்ந்து வந்தார் மருள்நீக்கியார்.

ஒத்த குடித்தலைவராய், சிவநெறிச் செல்வராய் அரசரது சேனைக்கடன்பூண்டவராய் விளங்கிய கலிப்பகையாருக்குக் குற்றங்கள் எவையும் அணுகாமற் காப்பவர் என்ற காரணப் பெயரையே இயற்பெயராகத் தாங்கியிருந்தவருக்குத் திலகவதியாரை மணம் பேச, அவர் பெற்ருேரும் இசைந்தனர். ஆனுல், கலிப்பகையார் வேந்தற்குற்றுழி 'வேந்துவினை' மேல் வடபுலத்துப் பகைவரை எதிர்த்துப் போர்புரிய வந்த அரச ஆணைப்படி சென்றுவிட நேர்ந்தது.

இப்பால், புகழனுரும், அவரையடுத்து மாதினியாரும் விண்ணுலகடைந்தனர். கலிப்பகையாரும் போரில் உயிர் கொடுத்துப் புகழ்கொண்டு தம் கடன் கழித்தனர். இது கேட்ட திலகவதியார்,

*" எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க இசைந்தார்கள்;*
*அந்தமுறை யாலவர்க்கே யுரியதுநான் ஆதலினுல்,*
*இந்தவுயிர் அவருயிரோ டிசைவிப்பன்"*

எனத் துணிந்தார். கணவன் உடமையாகவே தம்மைக் கருதினுர். ஆனுல் மருணீக்கியார், தமக்கையாரைப் பார்த்து, "அன்னையு மத்தனும் அகன்ற பின்னையும், நானுமை வணங்கப் பெறுதலினன்ருே உயிர்தரித்திருக்கின்றேன். என்னைத் தனியாக விட்டேகுவீராயின், யானும் முன்னம்

உயிர் துறப்பன்'' எனக் கூற, "தம்பியார் உளராக வேண்டு மென வைத்ததயா உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர் தாங்கி''னார். அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க் கும் அருள்தாங்கி மனைத்தவம் பூண்டு வாழ்ந்து வந்தனர்.

"எம்மை யாரிலை யானுமு ளேனலேன்
எம்மை யாருமிது செய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்
கெம்மை யாரைததந் தாராரூ ரையரே''

என்னும் திருவாரூர்த் திருக்குறுந்தொகையில் எம்மைக் காத்தற்குரிய இருமுது குரவருமிலர் - எம்மையர், எம்மை யார் என ஆயிற்று - யானும தனித்துவாழும் மன உறுதி உள்ளேன் அல்லேன். எனது அன்னையை ஒத்த, உடன் பிறந்த திலகவதியாரும் இதனைச் செய்யும் எனக்குத் துணை யார் நின்றருளவல்லரே! ஆயினும், இவர் இப்போது உயிர் விடத்துணிதலில், தாயாய் உடனிருந்து உதவவல்லார் யார் என்று பன்முறை வாய்விட்டு அரற்றிய எனக்குத் திரு வாரூர் ஐயர் என் உடனபிறந்த அம்மையாரை இருமுது குரவரும், ஆசானுமாகத் தந்தருளினார் என்று திருநாவுக் கரசர் தம் வேண்டுகோளுக்கிணங்கித் திலகவதியார் உயிர் தாங்கியிருந்ததைக் குறித்திருப்பதாக அகச்சான்று காட்டு வர் அறிஞர்.

**மருணீக்கியார் சமணம் சார்தல்.**

மருணீக்கியார் இளம்பருவத்தே இவ்வாறு இல்லத்தில் வாழ்கின்ற நாட்களில் இளமையிலேயே உலகநிலை யாமையை உணர்ந்து, அறச்சாலைகளை யும், தண்ணீர்ப் பந்தர்களையும், சோலை களையும் அமைத்து, குளங்கள் வெட்டி வளம்,பெருக்கி விருந்தோம்பி, நாவலர்க் கும் பிறர்க்கும் நன்கொடைகள் நல்கி, பல்லறங்கள் ஆற்றி வந்தனர். உலக நிலையாமைகண்டு துறவறம் பூண்டு 'மெய்யுணர்வு' ஆராய்ச்சி நடத்தினர். பின்னர் 'நம்பர் அருளாமையினால்' அக்காலத்துத் தமிழ் நாடெங்கணும் பரவியிருந்த சமணசமயம் புக்களர்

பாடலிபுத்திரத்தில் (தற்காலத் திருப்பாதிரிப்புலியூர்) இருந்த சமணப்பள்ளியை அடைந்து, சமணக் குருமார் களைச் சார்ந்து, அவர்கள் பால் சமண

**இறைவர் சூலை நோய் தந்து ஆட்கொள்ள மருணீக்கியார் சைவம் சாரல்**

சமய நெறிகளைக் கற்று, அவற்றில் சிறந்து விளங்கினர். அதுகண்டு, அவர்களும், தங்களுள் மேலாம் 'தருமசேனர்' என்னும் சிறப்புப்பெயரையும் சூட்டி அவரைத் தமது தலைவர் ஆக்கிக் கொண்டார்கள் இனி, "ஈசர் அருள் கூடுதலால்" மருணீக்கியார் மீட்டும் சைவம் சார்ந்தது எவ்வாறு? செந்நெறியின் வைகுந் திலகவதியாரோ திருவதிகை வீரட்டானஞ்சார்ந்து சிவபெருமானுக்குத் தம் கையால் திருப்பணிகள் செய்து வருவாராயினர். வரும் போதே தம் தம்பியார் பரசமயம் புகுந்ததற்கு மனம் வருந்தித் துயருழந்து பரசமயக்குழியிலிருந்து எடுத்தாளவேண்டுமென்று சிவபெருமானிடம் பலமுறையும் விண்ணப்பம் செய்தார். முன்னமே முனியாகி எனையடையத் தவமுயன்றதில் சிறிதளவு பிழைசெய்த மருணீக்கியாரைச் சூலைநோய் மடுத்து ஆள்வம் எனச் சிவபெருமான் கனவின்கண் திலகவதியாருக்கு அருள்புரிந்தவாறே, மருணீக்கியார் வயிற்றில் வடவனலும் கொடுவிடமும் வச்சிரமும் பிறவும் ஒன்றாகிக் குடரைக் குடைந்ததை ஒத்த பெருஞ்சூலைநோய் வந்தடையப் பெருந்துயர் உழந்தார். சமணசமயத்துத் தாம் கற்ற மந்திர முதலிய வகைகளால் இதை அவர் தடுக்க முடியாத நிலையில் மற்ற சமண அறிஞரும் பல வழிகளினாலும் தடுக்க முடியாது, நோய் மேலும் மிக, நாம் என் செய்வோம் "இது நம்மாற் போக்கரிது" என்ற அழிந்த மனத்தினராய் அவரைக் கைவிட்டனர்.

தமக்கையார் உள்ளார் என்ற நினைவு வரவே தருமசேனர், தாமுய்யும்படி கேட்டுவரும்படி, அவர்பால் தம் அடிசில் அமைத்தளிக்கும் "ஊட்டுவானை" அனுப்பினர். தான் அவனுடன் போந்து தருமசேனர் வதியும் "நன்றறியா ரமண்பள்ளி" நண்ணுவதற் கில்லையென்று அவனைத்

திலகவதியார் திருப்பி அனுப்பிவிட, அக்கணத்து, "ஈசர் அருள் கூடுதலால்", திலகவதியார் தாள்சேரத் தீர் மானித்தார் தருமசேனர். சூலைநோய் உடன் தொடரத் திருவதிகையில் திலகவதியார் திருமடத்தைச் சென்றணைந்து "மயங்காது உய்ந்து கரை ஏறு, நெறி உரைத்தருளு" மென அவர் அடிமேல் முடிவைத்து விழுந்துவேண்ட, "எழுந்திரீர்" என மொழிந்த திலகவதியார் "இது கற்றை வேணியர் அருளே காணும்" 'பணிசெய்வீர்' எனப் பணித் தார். பின் சிவபெருமான் திருவருள் நினைந்து திருவாளன் திருநீற்றை ஐந்தெழுத் தோதிக்கொடுக்க, தருமசேனரும் அதைப் பெருவாழ்வு வந்தது எனப் பணிந்து ஏற்று உரு வார அணிந்து "நீறணித்தார் அகத்திருளும், நிறக்கங்குற் புறத்திருளும், மாறவரும் திருப்பள்ளி எழுச்சியினில்" ஆறணிந்த ஈசர் கோயிலினுள் அவரைக் கொண்டுபுகுத்தார். கெடில வீரட்ட வாணரைத் தரைமிசை வீழ்ந்து வணங்கிய பொழுது அவர்தம் திருவருளால் "தமிழ் மாலை சாத்து முணர்வு பெற்றுக் "கூற்றுயினவாறு விலக்ககிலீர்" என்று தொடங்கும் கொல்லிப்பண்ணைச் குருவருள் பெற்ற முதற் பண்ணுகப் பாடிப் பரவச் சூலையும் நீங்கியது. வீரட்டானத் துப் பெருமான் அருளால், "பாவுற் றலர்செந் தமிழின் சொல்வளப் பதிகத் தொடைபாடிய பான்மையினுல் நாவுக்கர சென்றுலகே ழினுநின் னன்னும நயப்புற நண்ணுக" என்று வானொலி எழுந்தது. அன்று முதல் தருமசேனர் என்னும் பெயர் போகத் திருநாவுக்கரசர் என்ற பெரும் பெயரே இவருக்கு வழங்கலுற்றது. சூலை நோய் உற்று வருந்திப் பின் சிவபெருமான் அருள் பெற்று உய்ந்த வரலாற்றைத் தம் தேவாரப் பாடல்களில் ஆங் காங்கே சுட்டியிருப்பதோடு, குருவருள் பெற்ற முதற்பதிகப் பத்துப்பாடல்களிலும் அரசர் குறித்து வைத்துள்ள அகச் சான்றுகள் கருதத்தக்கன. திருவாரூர் காந்தாரப் பதிகத் தில், "அருகுவித்துப் பிணிகாட்டி ஆட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்" என்று தாம் உற்ற பிணியைக் குறித்து வைத் திருக்கின்ருர் என்றும், இதில் முதற் 'பிணி', இவர் உழந்த சூலையாகுமென்றும் அடுத்த 'பிணி' இவர் அறுத்த மும்

மலங்களைக் குறிக்குமென்றும் கொள்ளலாம். உறு பிணி யார் செறலழிந்திட்டோடிப் போனார் என்று இழிவு சிறப்பில் வைத்து மறுமாற்றத் திருத்தாண்டகத்தில், இவர் குறித்துப் போகும் பிணியும் இவருழந்த சூலையையே குறிக் காதோ?

இனி, இவ்வாறே "கூற்றாயினவாறு" பதிகமுழுவதும், (1) தோற்றாதென் வயிற்றி னகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் (2) வயிற்றோடு துடக்கி முடக்கியிட (3) சுடுகின்றது சூலை (4) முனிந்தென்னை நலிந்து முடக்கி யிட (5) வயிற்றோடு துடக்கி முடக்கியிட (6) உடலுள்ளுறு சூலை (7) வலிக்கின்றது சூலை (8) கலித்தே என் வயிற்றின கம்படியே கலக்கி, மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன (9) துன்பே, கவலை, பிணி என்றிவற்றை நணுகாமல் (10) வேர்த்தும், புரண்டும், விழுந்தும் எழுந்தால், என் வேதனையான விலக்கியிடாய் என்றெல்லாம், பலபடத் தாமுழந்த சூலை நோயை இவர் விளக்கியிருத்தல் காண்க.

**சமணர் திருநாவுக்கரசருக் காற்றிய தீமைகள்:- கீற்றறையிலிட்டது.**

திருநாவுக்கரசர் பெற்ற திருவருட்பேறுகளைக் கேட்ட சமணர் அழுக்காறுற்றவராய், நமது சமயம் வீழ்ந்தது என்று மருள்வராய், அரசன் வெகுண்டு தமது விருத்தியினையும் தவிர்ப்பான் என அஞ்சினராய், பொய்ப்பிணி கொண்டு சைவம் சார்ந்து, தமது சமயலங்கனமும், தெய்வநிந்தையும் செய்தனர் என அரசனிடம் சென்று முறையிட, அரசனும் திருநாவுக்கரசரை அழைத்துக்கொண்டு வரும்படி ஆணையிட, வந்தவர்க்கு, "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்" என்று, அஞ்சா நெஞ்சத்துடன், தாமார்க்கும் குடியல்லாச் சங்கரனைச் சார்ந்த அடியார் மறுமாற்றத்தைத் திருத்தாண்டக வழிச்செப்பி அனுப்பினர். கடுமையோடு களவற்றோமாதலால், நாவலந் தீவிற்கு நாதரான காவலரே ஏவி விடுத்தாரேனும் வரக்கடவே மல்லே மென்றார். அவர் வர மறுத்தாலும், வந்தவர்கள் அவரை அடிவணங்கி வேண்

டிக்கொள்ள, வருவினைகளுக்கு எம்பெருமான் உளன் என்று உன்னி அவரும் பின் இசைந்து சென்றனர். அரசனும், சமணர்கள் நீற்றறையிலிடப் புகன்றதை மேற்கொண்டு "நீற்றறையினுள்ளிருத்தி, தாள் கொளுவிச் சேமங்கள் செய்தமைத்தான்". நீற்றறையுள் அரசரும், இறைவனது திருவடி நிழலைத் தலைக்கொண்டு ஈசனடியார்க்கு ஈண்டு வருந்துயரில்லை என்ற உறுதியுடன் "மாசில்வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும், வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்று அத்தண்ணிழற்கீழ் இனிதுறைந்திருந்தனர். ஏழு நாட்கள் கழித்து சமணர் நீற்றறையைத் திறக்க, ஒரு தீங்குமின்றி ஆனந்த வெள்ளத்தினழுந்தி, அம்பலர் திருவடியமுதுண்டு இருந்த அவரைக் கண்டு என்னே அதிசயம் என்று வியந்தனர். "மாசில்" வீணை என்று தொடங்கும் பாடலில் வரும் ஐம்புலன்களுக்கும் விருந்து தரும் இயற்கை இன்பம்—வீணை செவிக்கும்—மதியம் கண்களுக்கும், தென்றல் மூக்குக்கும், பொய்கை வாய்க்கும்—வேனில் மெய்க்கும் இன்பம்—திருவடி நீழலை எண்ணிய அப்பருக்கு எய்தியது என்னும் அருமைப்பாடு உணர்ந்தின்புறுதற்குரியது.

**மேலும் திருநாவுக்கரசருக்கு விடமூட்டல்-யானையினுல் இடறச் செய்தல்-கல்லிற் பூட்டிக்கடலிற் பாய்ச்சுதல்.**

இருப்பினும், முன் அமண் சமயச் சாதகத்தால் இது செய்து பிழைத்திருந்தார் என்று வேந்தனுக்குரைத்து அடுத்து, "வல்விடமூட்டு" மாறு அரசனை ஏவினர். திருநாவுக்கரசுக்கு விடப்பாலங்குடைய பாலடிசிலமுது செயப் பண்ணினுர்கள். "நஞ்சமுதாமெங்க ளுதனடியார்க்கு" என்ற உறுதிப்பாடுடைய அரசர், வெஞ்சமணர் விடுவித்த பாலடிசின்மிசைந்திருந்தார். புனிதற்கு முன்னைவிடம் அமுதானுல் பசுபதியார் தம்முடைய அடியார்க்கு நஞ்சம் அமுதாவது ஓர் அற்புதமாகுமோ? "வஞ்சனைப் பாற்சோறாக்கி, வழக்கிலா அமணர் தந்த, நஞ்சமுதமாக்குவித்தார் நனி பள்ளி

யடிகளாரே" என்ற திருநனிபள்ளித் திருநேரிசை யடிகளில் இந்நிகழ்ச்சியை அரசர் குறித்து வைத்திருத்தல் காண்க.

இதைக் கண்ட அமணர் வெருக்கொண்டு "இவன் பிழைக்கில் எமக்கெல்லாம் இறுதிவருதல் உறுதி" என்று துணிந்து திருநாவுக்கரசரை, யானை முன் இட்டு இடறச் செய்ய ஏவினர். அரசன் ஏவிய கொலைக்களிறு, கூடத்தைக் குத்தி, குன்றமெனப் புறப்பட்டு, மாடத்தைப் பறித்திட்டு, மண்டபங்கள் எடுத்தெறிந்து, தாள்தத்தில் பரிக்காரர் தலை இடறி, கூற்றெனக் கடுகிவந்தது. கடலிற்படு வடவைத் தீயெனச் சென்று வந்தது. இதைக் கண்டு சிவபெருமான் பொற்கழலைத் தெருளுற்ற திருநாவுக்கரசர் வெருளுறவில்லை. "சுண்ணவெண்சாந்தும்" என எடுத்த திருப்பதிகத்தில், இறைவன் அடியார்க்கு அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுதுமில்லை என்று ஓதியருளினார். பத்துப்பாடல்களிலும் பாங்குடன் இக்கருத்தைத் தொடுத்துக் கூறினார். கூறின தொண்டரை முன்வலமாகச் சூழ்ந்தெதிர் தாழ்ந்து நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்தது வேழம் மீட்டும் ஏவிய பாகரையே கொன்று, சமணர் மேல் எதிர்த்து ஓடலுற்றது.

இறுதியாக, இவரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலிற் பாய்ச்சும்படி அறுதியிட்டுக் கூறினர் சமணர். அரசனும் அவ்வாறே செய்யக் கட்டளையிட்டனர். அவ்வாறே கடலுட்பாய்ச்சினர் என்று நேரடியாகக் கூற இவர் வரலாறு எழுதிய சேக்கிழார் அஞ்சி, கூசி, "மன்னவன் சொன்ன படிமுடித் தாரப் பதகர்" என்று குறிப்பாகக் கூறியுள்ளார். "சொற்றுணைவேதியன்" என்று தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தை, அற்றமுன் காக்கும் அஞ்செழுத்து மறைமொழியை அரசர் பாடிய அளவில், கருநெடுங்கடலினுட் கல்லும் மிதந்தது. திருநாவுக்கரசரைத் திரைக்கரங்களால் சிரத்திற்றாங்கிட முன்பு மாதவஞ் செய்தனன் வருணனும். திருப்பாதிரிப்புலியூர்ப் பாங்கினில், கரையேறவிட்ட குப்பத்தில் கரையேறினர். வஞ்சகரிட்ட நீலநிறப் பெருங்கடலைக் கடந்து, திருநாவக்கரசர் "யாரும் நீந்துதற்கரிய ஏழு பிறப்

பெனும் கடலும்" நீந்துவார் என்பதனை நிகுறியாயிற்றன்றோ? இதுபற்றியே சேக்கிழாரும் 'இருவினைப் பாசமும் மலக்கல் லார்த்தலின், வருபவக் கடலில் வீழ்மாக்கள் ஏறிட, அருளு மஞ்செழுத்து அரசையிக்கடல், ஒருகன்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ', என்று கூறியருளினர். நற்றுணை யாவது, நாவினுக்கருங்கலம், உலகினிற் பயின்ற பாவத்தை தண்ணி நின்றறுப்பது, நாமுற்ற நடுக்கத்தைக் கெடுப்பது, நங்களுக்கு அருங்கலமாவது, நலமிகக் கொடுப்பது, நாடி னோரை நாடுவது, நல்லக விளக்கது, நன்னெறியாவது என்றெல்லாம் ஐந்தெழுத்தின் அருமை பெருமைகளை "ஆலைப்படு கரும்பின் சாறுபோல் அண்ணிக்கும் அஞ் செழுத்தின் நாம"ச் சிறப்பைச் செப்பினதால் ஒப்பற்ற பேற் றைப் பெற்றனர். "கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாய்ச் சினும்" என்ற தொடர்களில் சமணர் தம்மைக் கடலுட் பாய்ச்சிய செய்தியைக் குறித்து வைத்தார் அரசர்.

இனி, "பாய்ச்சினும்" என்றிருப்பதால் பாய்ச்சினாலும் என்று ஐயப்பாட்டிலேயே வைத்திருக்கின்றாரே, பாய்ச்சியது உண்மைதானா என்று ஐயுறுவாருக்கும், அறுதியிட்டே அரசர் பிறிதோரிடத்தில் திருநீலக்குடிகுறுந்தொகைப் பாட்டில்,

> " கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
> ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்
> நெல்லு நீள்வயல் நீலக்குடி யரன்
> நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே"

இறந்த காலத்தில் வைத்து கடலிற் பாய்ச்சினர் என்றே செய்தியை உள்ளவாறே உரைத்திருக்கின்றார். இவ்வகச் சான்றை மறுக்கத் துணிவாருண்டோ?

இதற்குப் பிறகும் மன்னவன் மனம் மாறாதிருக்குமோ? பல்லவ மன்னனும், பழவினைப் பாசம் பறிய ஆண்ட அரசி னைப் பணிந்து "மீட்டும் மழவிடை மகேந்திரப் பல்லவ யோன் தாளடைந்தான்." பாடலிபுத் மன்னனும் சமணம் திரத்திலிருந்த அமண் பள்ளியோடு நீத்துச் சைவம் புகல். பாழிகளும் கூட இடித்துக் கொணர்ந்து

இறைவற்குக் "குணபர ஈச்சரம்" என்னும் கோயிலைத் திருவதிகையில் எடுத்தான். இவன் சைவசமயம் மீண்டது, சிவபெருமானுக்குத் தன் பெயரில் குணபர ஈச்சரம் எடுத்தது ஆகிய வரலாற்றுச் சிறப்புறு செய்திகளை, மகேந்திரவர்மனது திருச்சிராப்பள்ளிக் குடை கோயிற் கல்வெட்டுக்களிற் பொறித்து வைத்திருப்பதை முன்னரே கண்டோமன்றோ?

இனி, சமணம் புக்கது, சைவம் மீண்டது ஆகிய திருநாவுக்கரசர் வரலாற்றுச் செய்திகளுக்கு அவர் தம் தேவாரப் பாடல்களில் பலப்பல அகச்சான்றுக் குறிப்புக்கள் உளவேனும் அவற்றுள், தெளிவாயும், விவரமாயும் உள்ள குறிப்புக்கள் ஒரு சிலவற்றை மட்டும் கண்டு மேலே போவோம் :—

தாம் திருவருள் பெற்ற திருவதிகைவீரட்டானத் திருத்தாண்டகப் பதிகத்தில், பத்துப்பாடல்களிலும் "ஏழையேன் நான் பண்டிகழ்ந்தவாறே" என்று கூறுவன, தாம் பண்டு சமணம் புகுந்த நிகழ்ச்சிக்கு இரங்கிக் கூறிய கழிவிரக்கக் கூற்றுக்களாம். அவற்றுள்,

" குண்டராக்க ளொடுகூடிக் கூடி, கையிலுண்டு,
குவிமுலையார் தம்முன்னே நாண மின்றி
உண்டியுகந்து, அமணேநின் றோர்சொற் கேட்டு,
உடலுகி உழிதந்தேன் உணர்வொன் றின்றி
வண்டுலவு கொன்றையங் கண்ணி யானை
வானவர்கள் ஏத்தப்படுவான் தன்னை
எண்டிசைக்கும் மூர்த்தியாய் நின்றான் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே"

என்னும் பாடல் சமண்புகுந்திருந்த நிலையை எவ்வளவு தெளிவாய்க் கூறுகின்றது. நெஞ்சையுருக்கும் நிலையில் சமணத்தினின்று சைவம் புகுந்த செய்தியைத் திருச்செங்காட்டங்குடித் திருத்தாண்டகத்திலும் கூறியிருப்பது காண்க :-

" எத்திக்கு மாய்நின்ற இறைவன் தன்னை
ஏகம்பம் மேயானை இல்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்கும் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான எல்லாம் போக்கித்
தித்தித்தென் மனத்துள்ளே யூறும் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே"

என்பது அப்பாடல். மேலும், திருச்சேறைத் திருநேரிசைப் பதிகத்தில்,

"ஓர்த்துள வாறுநோக்கி உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய்யென்றெண்ணி மயக்கில்வீழ்ந் தழுந்துவேனைப்
பேர்த்தெனை ஆளாக்கொண்டு பிறவிவான் பிணிகளெல்லாம்
தீர்த்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"

என்ற பாடலிலும் திருச்சத்தி முற்றத் திருவிருத்த "தக்கார்வ மெய்திச் சமண் தவிர்ந்துன்றன் சரண் புகுந்தேன்" என்னும் அடியிலும், தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம் போற்றும் திருவாரூர்த்திருவிருத்தப் பதிகம் முழுவதிலும்,

" அருந்தும்போது உரையாடா வமணர்திற மகன்று
வருந்திநினைந் தானே யென்று வாழ்த்துவேற் குண்டுகொலோ
திருந்திய மாமதி லாரூர்த் திருமூலட்டானனுக்குப்
பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே"

என்பது போன்று இரங்கிக் கூறலிலும், திருநாகைக் காரோணத் திருவிருத்தப் பதிகத்தில்,

"பழிவழி யோடிய பாவிப் பறிதலைக் குண்டர் தங்கள் மொழிவழி யோடி முடிவேன் முடியாமைக் காத்துக்கொண்டாய்" என்று சமணரைக் கடிந்து கூற்றிலும் தென்குரங்காடுதுறைக் குறுந்தொகைப்பதத்தில்,

" ஆட்டி னுன்முன் அமணரோ டென்றனைப்
பாட்டி னுற்றன் பொன்னடிக் கின்னிசை

வீட்டி னுன்வினை மெய்யடி யாரொடுங்
கூட்டி னன்குரங் காடுது றையனே''

என்ற பாடலிலும் சமணம் சார்ந்து பின் சைவம் மீண்ட எண்ண அலைகள் எதிர் ஒலிப்பதை நாம் காண்கின்றோம்.

இனி, திருவாரூர்ப் பழமொழிப்பத்தில் ஒவ்வொரு பாடலிலும், சைவ-சமண சமயங்களை மாறுபட்ட உவமைகளால் பெறவைத்து, தம் வாழ்க்கை வரலாற்றை அரசர் குறித்து வைத்திருப்பதாக அறிஞர் கருதுகின்றனர் :—

| பாட்டு எண் | சைவம் | சமணம் |
|---|---|---|
| (1) | கனி (இருப்ப) | காய் (கவர்தல்) |
| (2) | முயல் (அருள்நெறி) விட்டு | காக்கை (சமண்நெறி போதல்) |
| (3) | | |
| (4) | அறம் | மறம் |
| (5) & (6) | | |
| (7) | | பப்போதி (பிரவிர்த்தியை வளர்க்கும் நூல்கள்) கற்று இருட்டறையில் மலடுகறந்து எய்த்தல். |
| (8) | விளக்கு | மின்மினி |
| (9) | | பாழூரில் பயிக்கம் எடுத்தல் பிச்சை (எடுத்தல்) |
| (10) | தவம் | அவம் |
| (11) | கரும்பு | இரும்பு. |

இவ்வாறு இவர் தேவாரத் திருமுறைப் பாடல்களில், இவர், சமணஞ்சார்ந்து சைவம் மீண்ட குறிப்புக்கள் பலப்பல இடங்களில் வருகின்றன.

கடலிற் கற்றூண் தெப்பமாக மாறத் திருப்பாதிரிப் புலியூர்ப் பாங்கர் கரையேறிய திருநாவுக்கரசர் பின் சிவமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டுப் பதிகம் பாடத் தொடங்கினர். திருப்பாதிரிப்புலியூர்ப் பெருமான் தோன்றாத்துணையாய் இருந்து தம்மைக் காத்தருளிய பெருங்கருணைத் திறத்தைப் போற்றிப் பாடினார். "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" என்ற பதிக முதற்பாட்டில் தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடியோங்களுக்கே என்று போற்றினார்.

**சிவதல யாத்திரை-1.**

" புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடியென் மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே"

என்ற இப்பாடல் தமிழ்நாட்டுச் சைவப்பெருமக்கள் ஒவ்வொருவரும் ஏற்றிப்போற்றிப் பாட, அவர் தம் செவியையும் சிந்தையையும் உருக்கும் தன்மையது. புழுவும் திருவடி மறவாத தன்மைப்பேறு பெறத்தக்கது என்னும் சைவ சித்தாந்தக் கொள்கைதான் என்னே!

ஆண்டு நின்றும், திரு மாணிகுழி, திருத்தினை நகர் வழியாகத் திருவதிகை சென்ற அரசருக்குத் திருவதிகை மக்கள் மாபெரும் வரவேற்பளித்தனர். திருவெண்ணெய்நல்லூர் திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலியவற்றை வழிபட்டுத் திருப்பெண்ணாகடமுற்றார். அங்குத் திருத்தூங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்தை, சமணரது தொடக்குண்டு போந்த உடலிற் கழுவாயாக, இறைவனது மூவிலைச் சூலக்குறியும் இடபப் பொறியும் பொறித்துத் தூய்மை செய்ய வேண்டினர். "மின்னாரு மூவிலைச் சூலமென மேற் பொறி மேவு", "திருவடி நீறெனைப் பூசு, "இடபம் பொறித் தென்னை ஏன்று கொள்ளாய்" என்றெல்லாம் வேண்டினர். வேண்டியார், வேண்டியதே ஈவானாகிய இறைவனருளால் அங்ஙனமே அக்குறிகள் இடப்பெற்றனர். பின் அங்கிருந்து

திருநெல்வாயில் அறத்துறை, திருமுதுகுன்றம் வழியாகத் தில்லை நகர் எல்லையை அடைந்தனர். ஊனாலும் உயிராலும் உள்ள பயன்கொள நினைந்து தில்லை வந்தார். இது கருதியே எம்பெருமான் தன் திருக்குறிப்பும் "என்று வந் தாய்" என்று கேட்பதுபோலிருந்ததாம் இவருக்கு. மேற்குக் கோபுரவாயில் (மணிவாயில்) வழியாகக் கோயிலுள்ளே புகுந்தனர். ஐயன் ஆடுங் கழல்புரி யமுதத் திருநடத்தை ஆரா வகைதொழுது ஆர்ந்தார்.

"கையுந் தலைமிசை புனையஞ் சலியன;
  கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன; கரணங் களுமுட
  னுருகும் பரிவின; பேறெய்தும்
மெய்யுந் தவமிசை விழும்; முன் பெழுதரும்;
  மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயர் திருநட மெதிர்கும் பிடுமவர்
  ஆர்வம் பெருகுதல் அளவின்றால்"

என்னும் திருப்பாடலில் திருநாவுக்கரசரின் சிவதரிசன நுகர்வுகளை - அனுபவங்களைச் - சேக்கிழார் சித்திரித்தல் காண்க. "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்று தொடங்கும் அருமைத் திருவாக்கில் இதே திருமுன்பில் சுந்தரமூர்த்தி நாயனாரின் திருஅனுபவங்களைக் கூறுத லோடு, இது ஒப்பிட்டுப் படித்தின்புறற்குரியது. தில்லைப் பெருமான் மீது எல்லையற்ற அன்பினால் அரசர் பாடியருளிய பாமாலைகள் - விருத்தம், திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டக - திருப்பதிகங்கள் பல. இதற்கிடையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கும், அண்ணாமலை நகருக் கும் அணித்து விளங்கும் திருவேட்களம், திருக்கழிப்பாலை முதலிய தலங்களை வணங்கித் தில்லைச் சிற்றம்பல நினைப் பால் உந்தப் பெற்று மீட்டும் தில்லையே சென்று வணங்கி யிருந்தார்.

ஆண்டு, உமையம்மையார் திருமுலைப்பாலோடும் சிவ ஞானத்தையும் குழைத்தூட்ட உண்டருளிய ஆளுடைய

பிள்ளையார் திருவரலாற்றினை அடியார்கள் கூறக்கேட்டு, அவரைக் காணும் அதிசயக் காதல் கூற, அவரை வணங்குவதற்கு மனத்தெழுந்த விருப்பு வாய்ப்பத்

**சீகாழி சென்று திருஞானசம்பந்தரை முதன்முதற்கண்டது.**

திருநாரையூர் வழியாகச் சீர்காழி சார்ந்தார். சிவபெருமான் வெஞ்சூலை மடுத்தருளிய அரசர் வருகின்றார் எனக் கேட்ட காழிப்பிள்ளையாரும், அவரைக் காணும் பெருவிருப்பினோடு அன்பர்கள் புடைசூழ எதிர் வந்தார். தொண்டர்குழாம் ஊடே சென்று திருஞானசம்பந்தரைப் பணிந்த அடிகளாரைத் தமது திருக்கரங்களால் எடுத்தணைத்துப் பிள்ளையார் உலகுக்கு ஞானத்தந்தை என்னும் குறிப்புத்தோன்ற அவரை "அப்பரே" என்று ஆர்வத்துடன் அழைத்தார். அரசரும் 'அடியேன்' என்றார். பிள்ளையார் கழல் வணங்கப் பெற்றேன் என்று அரசரும், பெருஞானவள்ளலார் வாகீசர் தமை வணங்கப் பெற்றதற்குப் பிள்ளையாரும் மகிழ்ச்சி பொங்க, ஒருவருக்கொருவர் உள்ள நிறை காதலினாற் கலந்து ஒன்று கூடி, திருத்தோணிபுர இறைவன் கழல் வணங்கச் சென்றனர். சிவனடியார் வரலாற்றில், தமிழ் இலக்கியத்தில் எங்கும் காணாத, ஈடும் எடுப்பும் அற்ற, சைவசித்தாந்தக் கொள்கை நுட்பங்கள் உள்ளே பொதிந்துள்ள, ஒப்பற்ற ஓர் அருமைத் திருப்பாட்டில், இவர்கள் சென்ற காட்சியை ஓர் அருமைச் சொல் ஓவியமாக தம் காவியத்தில் தீட்டி வைத்துள்ளார் சேக்கிழார்,

"அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புசெறி கடலுமா மெனவும், ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் ணிரண்டெனவும், புவன முய்ய
இருட்கடுவுண் டவரருளும் அகில மெல்லாம்
ஈன்றாள்தன் திருவருளு மெனவுங் கூடித்
தெருட்கலைஞா னக்கன்று மரசுஞ் சென்று
செஞ்சடைவா ணவர்கோயில் சேர்ந்தா ரன்றே"

என்பதே அச்சொல் ஓவியம். இவ்வோவியத்துக்குப் 'புண்ணியக்கண் இரண்டு' என்னும் சொற்றொடர் உயிர் நிலை.

இதன் பொருளாழம் போற்றியுணர்தற்குரியது. கண் ணென்ப வாழுமுயிர்க்கு என்று எண்ணையும் எழுத்தையும் மெய்யுணர்வு நூலாகிய அருட்கல்வியையும் இவ்வுலக நூலாகிய பொருட்கல்வியையும் அமைத்தார் வள்ளுவப் பெருந்தகை. ஞானக் கல்விக் கண்ணும் ஊனக் கல்விக் கண் ணும் இரு கண்களாம். சைவமாகிய தனிப் பெருங்காட்சி யைக் காணும் இருகண்களாக இவ்விருவரையும் உருவகித் தார் சேக்கிழார். கண்ணிரண்டும் ஒரு காட்சியையே— ஒப்பற்ற காட்சியையே-காண்பன. காகத்திருகண்ணிற்கு ஒன்றே மணிகலந்தாங்கு, இரண்டுகண் பாாவையும் கதிர வன் ஒளியொடு பொருந்திக் கலந்த வழி பொருட்காட்சி திகழும். வலக்கண்ணை இறைவனாகவும் இடக்கண்ணை இறைவியாகவும் கொள்ளுதல் மரபென்பர். அருட்கண் உண்டு. அதனை ஈன்ற அன்புக்கண் உண்டு. அருள் என்பது அன்பு ஈன்ற குழவி. அருள் திருஞான சம்பந்தர் (பிள்ளை—சேய்) அன்பு திருநாவுக்கரசர் (அப்பர்—தாய்) புண் ணியக்கண் இரண்டு என்றதனால் 'அபுத்தி', 'புத்தி' பூர்வ மாக—பொது—சிறப்பு—உபாயம், உண்மை என்னும் இரு வகைப் புண்ணியங்களால் அன்பும் அருளும் நிகழப்பெற்று அவற்றின் பயனால் இறைவியின் அருள் (சிவஞானம்) தோன்றப் பெற்று அதனால் இறைவனருள் (திருவடிப்பேறு) கிடைக்கப்பெறும் என்னும் சைவசித்தாந்தப் பொருள் விளக் கும் குறிப்பையும் இதனுள் காண்பர் (பண்டிதர் எஸ் பெரியசாமிப்பிள்ளை).இதனுள் பொதிந்துள்ள பிற கருத்துச் செறிவுகளை, வந்த வழியும், வல்லார் வாய்க் கேட்டும் அறிய வேண்டும். விரிவஞ்சி விடுத்து மேலே செல்வோம். திரு நாவுக்கரசர் தம்பிரானாரைக் கசிந்து பாடிப் பிள்ளையார் தம் திருமடத்தில் எழுந்தருளி யமுது செய்து தம் கேண்மை வளர்ந்தோங்கப் பல நாள் அங்கு வைகினார். பின் சோழ நாட்டுப் பிறதலங்களையும் வணங்கும் ஆர்வத்தால், தம் பயணத்தைத் தொடங்க நினைத்தார் திருநாவுக்கரசர். எனவே, இருவரும், அடுத்துள்ள, திருக்கோலக்கா சென்று இறைஞ்ச ஆண்டு நின்று விடைபெற்று மேற்செல்லுவா ராயினர் அரசர். பிள்ளையார் சீர்காழி மீண்டார். அரசர்

திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக் குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி, திருச்செம்பொன் பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக் குடி, எதிர்கொள்பாடி, கோடிகா, திருஆவடுதுறை முதலிய திருப்பதிகள் சென்று வணங்கிப்பாடினர்.

பிறவி தீர்ந்து, பசுத்தன்மை நீங்கி, பாசம் அறவேண்டு வோர்க்குத் திருஆவடுதுறை சிறந்த தலமாம். ஆவை (பசுத்தன்மையை) அடும் துறையாகும். ஆதலால், இத்தலத்தைப் பாடிய அரசர் ஆவடுதண்துறையை அடைந்து உயர்ந்ததாக அருளிச் செய்தார். சேக்கிழாரும் இதனைச் சிறப்பித்து "ஆவடு தண் துறையாரை அடைந்து உய்ந்தேனென்று, அளவில் திருத்தாண்டக முன்னருளிச் செய்து" என்று கூறினர். திருமூலரும் இத்தலத்தில் "ஊனுடம்பிற பிறவிடந் தீர்ந்துலகத் தோருள்ள" மூவாயிரம் ஆண்டு சிவயோகத் தமர்ந்து திருமந்திரத்தால் சிவாகமப் பொருளைப் பாடியருளிய கருத்து எழ, அதனைப் பின்பற்றித் தாமும் 'அடைந்து' என்று குறித்தார் அரசர். ஆளுடைய நம்பிகளும் பின் இவ்வாறே இவ்வூரைப் புகலிடமாக அடைந்ததை "அன்பொடுமடைந்தேன்" என்றார். பிற்காலத்துப் பட்டினத்துப் பிள்ளையார், திருமாளிகைத்தேவர், நமச்சிவாய தேசிகர் முதலிய ஞானமுனிவர்களும் இங்கு வந்தடைந்தனர். ஞான ராசதானியாக நமச்சிவாய மூர்த்திகள் வழி வந்த திருமடம் நிலவும் பெருமை இன்னும் இத்தலத் திற்குரியது.

தலயாத்திரையில் இரண்டாவது கட்டம்-திருப்பழையாறை வரை.

பின்னர், இங்கிருந்து சென்று திருவிடைமருதூர் பணிந்து, திருநாகேச்சுரம் தொழுது, திருச்சத்திமுற்றம் போற்றி, "கோவாய் முடுகி அடுதிறற் கூற்றம் குமைப்பதன் முன் பூவாரடிச்சுவ டென்மேற் பொறித்து வை", "இம்மை யுன்றாள் என்றன் நெஞ்சத்தெழுதி வை" என்று இறைவன் அடியைத் தம்முடிமேல்—இறைவன் தாளைத் தம்தலைமேல்"- ஆண்டான் அடிமையை ஆண்டுகொண்டதன் அடையாள

மாய், வைத்தருள வேண்டினர். "காலும் தலையும் அறியார் கலதிகள், சிந்தையும் எந்தை, திருவடிக்கமுது" என்பர் திருமூலரும். திருநெல்லூருக்கு வா என்று இறைவன் அருளத் திருநல்லூர் போந்தார். அரன் ஆண்டு, "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம், சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்". திருவடியில் முடிபொருந்தச் சாய்ந்து வணங்கும் தேவர்கள், தம்முடியில் அணிந்த தெய்வப் புதுமலர்கள் முகைவிரிந்து தேன் சொரிதலால் நனைந்த திருவடிகளைத் தன் தலைமேல் சிவபெருமான் வைத்த பெருந்தகைமையை வியந்த அரசர்,

*" சிறந்து வானோர்,*
*இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற*
*வினமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி*
*நனைந்தனையை திருவடியென் றலைமேல் வைத்தார்*
*நல்லூரெம் பெருமானார் நல்லவாறே"*

என்று நயந்து பாடினர். "பேசப் பெரிதும் இனியாய் நீயே," "பிரானாய் அடியென் மேல் வைத்தாய் நீயே" என்று திருவையாற்றிலும் இதை மனங்குளிரப்பாடினர் பின்னர். திருநல்லூரிலிருந்து கொண்டே, திருக்கருகாவூர், திருவாவூர், திருப்பாலைத்துறை முதலிய பதிகளை வணங்கி மீண்டார். இம்மூன்று தலங்களைச் சென்று வணங்கினும் நல்லூரைப் பிரிந்திருக்க ஆற்றாது திரும்பிவிடுவதை வழக்கமாகக் கொண்டார். திருவேட்களம், திருக்கழிப்பாலைத் தலங்களைத் தொழுதுகொண்டு அம்பலக் கூத்தனைத் "தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ" என்று பாடி மீண்டும் தில்லை சார்ந்து வழிபட்டிருந்த நாயனாரது ஒழுக்கம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

**திங்களூரில் அப்பூதி அடிகளாரைக்கண்டு பழகிய பான்மை**

திருநல்லூரினின்றும் சென்ற திருநாவுக்கரசர் நீர்வளமும் நிலவளமும் மிக்க, பழனங்கள் சூழ்ந்த திருப்பழன நகரை அடைந்தார். அங்கிருந்து செப்பருஞ்சீர் அப்பூதியடிகள் ஊராகிய திங்களூரைச் சார்ந்தார். அந்தணரில் மேம்பட்ட அப்பூதியார், திருநாவுக்கரசரின் சிறப்பை உணர்ந்தவராய்த் தம்

மக்களுக்கும், தாம் செய்த சாலைகள், எடுத்த குளம் கூவல்கள், வைத்த தண்ணீர்ப்பந்தல் முதலியவற் றிற்கும் அப்பெயரையே சூட்டியிருந்ததைக் கண்ட திருநாவுக்கரசரை இன்னார் என்று தெரிந்ததும் மனமிக மகிழ்ந்து, தம் மனைவியார், மக்கள், சுற்றத்தார்களுடனே தொழுதார். அமுதுசெய்தருள வேண்டினார். காண்டலைமை யின்றியும் முன்கலந்த பெருங்கேண்மையினராகிய அப்பூதியடிகளார், புணர்ச்சி, பழகுதல் இன்றியும் உணர்ச்சி யால் ஒன்றுபட்ட உத்தமராய், பெருவியப்புடன் போனக மும் கனியமுதும் வேண்டுவனவெவ்வேறு விதங்களில் அமைத்துத் தமது மூத்த மகன் மூத்த திருநாவுக்கரசை, வாழை இலை அறுத்துக்கொண்டு வரும்படி ஏவ, அங்கு அவனை ஒரு தழல்நாகந் தீண்டிவிட்டது. நாகம் தீண்டி னும் நாயனார் உண்பதற்கு இடையூறுயிருத்தல் கூடாது என்று கருதி நச்சரவுகடித்ததையும் மறைத்து இலையை ஓடிக்கொண்டுபோய்க் கொடுத்த இவ்விளைஞனின் தொண்டு மனப்பான்மையையும் தொண்டர்க்குத் தொண்டனும் பெரு மையையும் எனனென்பது! செந்தண்மைபூண்டொழுகும் அந்தணர் குலத்தவரேனும், சிவனடியார் திருக்கூட்டத் தினரிடையில் சாதிகுலப்பிறப்பு வேற்றுமைகள் இல்லை, எல்லோரும் நல்லவரே, ஓரினத்தவரே என்று கண்டு சிவ நெறிச்சீலராய் விளங்கிய அப்பூதியடிகளார், இக்காலத்தில் மக்கள் பணியாற்றும் மன்றங்கள், மக்கள் பணிமன்றங்கள் நடத்தும் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், முதலியவை களுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாவாரன்றோ.

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறம்நினைத்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே''

என்று கூறிய திருநாவுக்கரசரின் இலக்கணத்துக் கிலக்கியமாய்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ,
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்று சீவன் முத்தர்க்குப் புறத்தே அறிவு செயல் இச்சைகள் செல்லுங்கால், அவை எவற்றைப் பற்றும் என்று கூறும் சிவஞானபோத உண்மைக்கு ஏற்ற எடுத்துக் காட்டாய் விளங்கிய அப்பூதியடிகள் சைவசமயத்தின் பொது நோக்கப் போக்கையும், பரந்த நோக்கத்தையும் விரிந்த பார்வையையும் உலகுக்கு எடுத்தோதிக்கொண்டு அன்றும், இன்றும், இனி என்றும் நிற்பவராவர்.

தம் தலைமகன் இறந்தான் என்னும் செய்தி திருநாவுக்கரசர் அமுதுட் கொள்வதற்கு இடையூறாகக் கூடாது என்று கருதிக் கடப்பாடாற்றிய இப்பெற்றோர், பெற்றோர்க்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றனர். திருவருளால் உண்மை உணர்ந்த அரசர் உடலைத் திருக்கோயிலின் முன் கொணர்வித்து, "ஒன்றுகொலாம்" என்ற பதிகத்தில் ஐந்தாவது பாட்டில் 'அவர் ஆடரவின் படம்' என்றும், பத்தாவது பாட்டில் "பாம்பின் கண் பாம்பின் பல்", "பத்து கொலாம் எயிறும் நெரிந்துக்கன" என்றும் பாம்புக்கடிக் குறிப்புக்களை உணர்த்தி வேண்ட, சிவனருளால், சிறுவனும் உயிர்த்தெழுந்தான். பின்னர் அப்பூதியடிகளாரளித்த அறுசுவை யமுதுண்ட அரசர், பழனநகர் சார்ந்து பரமனைப் பாடுங்கால், "அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி, குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே" என்று அவ்வடிகளாரை வாயார வாழ்த்திச் சிறப்பித்தார். இதுபோன்றே அடியார் திறத்தைத் தம் தேவாரப் பாடல்களில் வைத்துச் சிறப்பித்தல் தேவாரம் பாடிய பெருமக்கள் மரபாகும்.

"ஆரூர் நறுமலர்நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியு மன்றே"

என்று நமிநந்தியடிகளாரின் திருத்தொண்டை ஏற்றிப் போற்றி, அரசரே பிருண்டு பாடியிருப்பதையும்,

" செங்காட்டங் குடியதனில் சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே"

என்று சிறுத்தொண்டர் பெருமையைத் திருஞானசம்பந்தர் புகழ்ந்திருப்பதையும், "நாவின்மிசை அரையன்னொடு தமிழ் ஞான சம்பந்தன் ஆயசிவ னடியார்களுக் கடியான் அடித் தொண்டன்" என்று தம்மையே திருநாவுக்கரசருக்கும் திரு ஞான சம்பந்தருக்கும் உற்ற தொண்டராகத் தொகை கூறிய சுந்தரமூர்த்தி நாயனாரின் புகழுரையையும் காண்க.

திருப்பழனத்தி லிருந்துகொண்டே தொண்டு செய்து, திருச்சோற்றுத்துறை முதலிய தலங்களைப் பணிந்து பாடி வந்தார். இப்பல தலங்கள் திருக்கண்டியூர், திருவேதிகுடி, பசுபதிகோயில், திருச்சக்கரப்பள்ளி, திருவாலந்துறை முதலியன. பின் காவிரியாற்றுத் தென்கரையிலேறிச் சென்று திருநல்லூர் குறுகினார். தமக்கு இறைவன் நல்லூரில் திருவடி சூட்டினாராதலின், "தந்தலை மேல்தாள் வைத்த" என்றும் "சேவடிநினைந்து" என்றும் சேக்கிழார் ஈண்டு குறித்தார். அங்கிருந்து திருவாரூர் தொழ நினைத்துச் சென்றார்; திருப்பழையாறையில், ஆறை, ஆறைவடதளி, ஆறைமேற்றளி, என்ற மூன்று தலங்களையும் வணங்கி, திரு வலஞ்சுழி, திருக்குடமூக்குத் தலங்கள், திருநாலூர், திருச் சேறை, திருக்குடவாயில், திருநறையூர், பேணுபெருந் துறை, திருவாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலிய வற்றையும் வணங்கித் திருவாரூர் வந்து சேர்ந்தார். திரு வாரூர் அன்பர் அரசருக்குப் பெருவரவேற்பளித்து, வீதி களில் பொலியத் திருமங்கலம் செய்தார். திருவாரூர் திருமூலட்டானத்தாருக்குத் தமிழ் அருச்சனை முறையில் போற்றித் திருத்தாண்டகம் பாடினார். சமண சமயம் சார்ந்து மீண்ட குறிப்புக்களைப் பழமொழிகளில் வைத்து, பழமொழிப்பத்துப் பாடினர். திருவாரூர் அரனெறியைப் பாடினர். பின் திருப்பள்ளியின் கூடல், திருவிற்குடி, திருப் பனையூர் முதலிய தலங்களை வழிபட்டுத் திருப்புகலூர் வந்து முருக நாயனார் மடத்தில் தங்கியிருந்தார்.

**திருப்புகலூரில் திரு ஞானசம்பந்தரைக் காணல்.**

அந்நாட்களில் சீர்காழியினின்று திருவாரூர் வழிபட வந்த திருஞான சம்பந்தரும் முருகநாயனுர் மடத்தில் எழுந்தருளியிருந்தார். திருஞான சம்பந்தர், திருவாரூரில் நிலவும் சிறப்பினைப் பற்றித் திருநாவுக்கரசரிடம் கேட்க, அப்பர் பெருமானும் திருவாரூரில் ஆதிரைத் திருநாட்பெருவிழாச் சிறப்பை 'முத்து விதானம்' என்று தொடங்கும் திருப்பதிகத்தில் பாடி அறிவுறுத்தினுர். இதுகேட்ட திருஞானசம்பந்தர் திருவாரூரைக் கண்டு வணங்கும் ஆர்வமிக்கு அவ்வூரைநோக்கிப் புறப்பட்டுவிட்டார். திருநாவுக்கரசர் திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, சாத்தமங்கை திருமருகல் ஆகிய தலங்களை வணங்கிப் புகலூர் மீண்டார். சின்னுட்களுக்குப் பின்னரே திருப்புகலூர் மீண்டார் சம்பந்தரும். இப்போதுதான், அக்காலத்து ஒருங்கே வாழ்ந்துவந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் ஆகியோர் ஒருங்கு கூடி உடன் உறைவின் பயன்பெற்று முருகனுர் மடத்தில் இருந்தனர். திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் திருவம்பர் வணங்கித் திருக்கடவூர் சேர்ந்து குங்கிலியக் கலய நாயனுரது திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். திருக்கடவூர் மயானத்தைத் தொழுது ஆக்கூர்த் தான்தோன்றி மாடத்தை வணங்கித் திருவீழிமிழலை சார்ந்தனர். திருவீழிமிழலையில் மாரிவளங்குன்றி, உணவுப் பஞ்சம் நிகழ, இறைவன் இரு குரவர்களுக்கும் படிக்காசு நல்கி அவர்களுடன் வரும் அன்பர்களுக்கு உணவளிக்கும் படி உதவினுர். தாங்கள் தங்கிய இருமடங்களிலும் இரு பொழுதும் அடியார்களை உண்பித்தனர். ஆனுல், கைத்தொண்டாகும் அடிமை கருதி அப்பருக்கு வாசியற்ற காசையும், இமயப் பாவை திருமுலைப்பால் உண்ட திருமகனுர் ஆதலால் சம்பந்தருக்கு வாசியுள்ள காசையும் இறைவன் அருளினுர். சம்பந்தர் வாசி தீரவே பாடி வாசியற்ற காசைப் பின் பெற்றுர். இந்நாட்களில் மீட்டும் மழை பொழிந்து வறுமை மாற இருவரும் திருவீழிமிழலை நீங்கித் திருவாஞ்சி

யும், திருத்தலையாலங்காடு பெருவேளூர் முதலிய ஊர்களை வணங்கித் திருமறைக்காடு போந்தனர்.

**திருமறைக்காட்டில் கதவம் திறக்கவும் அடைக்கவும் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் செய்தல்.**

திருஞானசம்பந்தர் புராணத்தில் திருவாஞ்சியத்துக்கும், திருமறைக்காட்டுக்கும் இடையில் பல ஊர்கள் வரினும், திருநாவுக்கரசர் தேவாரம் திருத்தலை ஆலங்காடு பெருவேளூர் ஆகிய இரண்டுக்கே கிடைத்திருப்பதால் இவர் புராணத்தில் சேக்கிழார் இவற்றைத் தவிரப் பிறவூர்களைக் குறிக்கவில்லை.

திருமறைக்காட்டில் இறைவனை "அகில மறைகள் அருச்சனை செய்து வலிய திருக்கதவம் திருக்காப்புச் செய்த, இந்நாள் வரையில்அடைத்தே நின்றுகொண்டிருந்த, மணி நீள்வாயில் வணங்கிய நாவரசர், இதுவரை இத்திருவாயில் பூட்டியிருப்பதை அகற்றவல்ல அன்பர் அணையவில்லை யாதலால் மருங்கில் ஒரு வாயில் வழியாக அடியார் புகுகின்றனர் என்பதைக் கேட்டறிந்தார். வாயில்கள் பூட்டி மந்திரத் தாழ் இட்ட மந்திர வலிப்பிணைப்பினை அவிழ்க்கத் தக்க, அதனை ஒத்த மந்திரம் ஓதிச் செயல் செய்யும் ஞான வலிமை உடையார் இதுவரை வரவில்லை. திருஞானசம்பந்தர் புராணத்திலும் "அருமறைகள் திருக் காப்புச் செய்து வைத்த அக்கதவம் திறந்திட அம் மறைகளோதும், பெருகிய அன்புடையடியார் அணைந்து நீக்கப் பெருமையினால்" என்று சேக்கிழார் அந்நுட்பத்தை விளக்கியுள்ளார். அம்மறைகள் என்று சுட்டியதால் தேவாரத் தமிழ்மறை திறக்கவும் அடைக்கவும் செய்யக்கண்ட படியாம். இப்பரிசையெல்லாம் உணர்ந்த உடன்வந்த சம்பந்தர் "தேங்காது இருவோம் நேரிறைஞ்சத் திருமுன் திருக்காப்பு, நீங்கப் பாடும் அப்பர் என", திருநாவுக்கரசரும்,

*" பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ*
*மண்ணி னார்வலம் செய்மறைக் காடரோ*
*கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்*
*திண்ண மாகத் திறந்தருள் செய்மினே"*

என்று தொடங்கும் பதிகம் பாடி த்திருக்கதவம் திறக்குமாறு வேண்டினர்.

மேலும், நீண்டமாக்கதவின்வலி நீக்குமே, சட்ட இக் கதவந்திறப் பிம்மினே, பெரியவான்கதவம் பிரிவிக்கவே, தொலேவிலாக் கதவம் துணே நீங்குமே, உமை நோக்கிக் காணக் கதவைத் திறவுமே, இந்தமாக்கதவம்வலி நீக்குமே, திண்ணமாக்கதவந் திறப்பிம்மினே, கண்ணி ஞலுமைக் காணக் கதவினைத் திண்ண மாகத் திறந்தருள் செய்மினே என்றெல்லாம் வேண்டினர். பத்துப்பாடல்கள் பாடினும் திறக்கவில்லே. இறுதியில், திருக்கடைக்காப்பில்,

> " *அரக்கனைவிர லாலடர்த் திட்டநீர்*
> *இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே*
> *சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ*
> *சரக்க இக்கத வந்திறப் பிம்மினே"*

என்று மனம் நொந்து வேண்டினர். திருஞானசம்பந்தர் புராணத்திலும் "பாடிய அப்பதிகப் பாட்டான பத்தும் பாடனிரம்பிய பின்னும் பைம்பொன் வாயில் சேடுயர் பொற் கதவு திருக்காப்பு நீங்காச் செய்கையினுல் வாகீசர் சிந்தை நொந்து நீடுதிருக் கடைக்காப்பிலரிது வேண்டி நின் றெடுக்க" என்று இக்கால நீட்டிப்பையும், வாசீகரின் சிந்தை நோவையும் குறித்துக் காட்டியுள்ளார். இறைவனது திருவுள்ளம் இரங்காததென்னே! இரக்கமொன்றில்லீரோ! என்று புலம்பினர். அரக்கனைவிரலால் அடர்த்தமைக்கும் பதிகம் பாடிப் பத்துப் பாட்டிலும் கதவம் திறக்கும்படி விண்ணப்பம் செய்தும், பொருந்திய உட்குறிப்புக்கொண்டு இரக்கமொன்றில்லீர் என்றிடித்துரைத்தும் வேண்டினர். தேவரீரே திறப்பதற்குத் திருவுள்ளமிரங்காவிடினும், பிறரைக்கொண்டாவது திறப்பித்தருளக் கூடாதா என்பது தோன்றவும் 'கதவந் திறப்பிம்மினே' என்று இறுதியாகப் பிறவினை முடிவாற் கூறினர். வழிப்போக்கர்க்கு நிழலும் மணமும் சுரக்கும் உமது ஊர்ப்புன்னைகள் ஆனலும் நீர் இரங்காததென்ன? என்று கேட்டார். கடைசியாகக் கதவு

முந் திறந்தது. ஆளுடைய அரசும், ஆளுடைய பிள்ளையும் இறைவனை நேரே வணங்கிப் பரவிப் பாமாலைகள் பாடிப் போந்தனர்.

திறந்த கதவும் அடைத்தால்தானே பின் இயல்பாக நாடோறும் கதவம் திறக்கவும் போடவும் செய்யும். ஆதலால் "கதவம் அடைக்கும் வகை நீரும் பாடியருளும்" எனச் சம்பந்தரை வேண்ட, அவரும் பாட, இறைவனருளால், "சதுரம் மறை" என்று தொடங்கும் முதற்பாட்டிலேயே கதவு அடைத்துக் கொண்டது. இருவரும் தத்தம் மடம் ஏகினர்.

இந்நிகழ்ச்சி, அரிதிற்றும்பாடித் திறக்கவும், எளிதிற் பாடிச் சம்பந்தர் அடைக்கவும் ஆன நிகழ்ச்சி திருநாவுக்கரசர் உள்ளத்தில் உறைந்து வருத்தியது. ஏன் தமக்குக் கதவுத் திறக்கக் காலம் நீடிக்க வேண்டும்? என்று எண்ணி வருந்தினர். 'நம்பர் திருவுள்ள மறியாதயர்ந்தேன்' என்று வாய்மை திறம்பா வாகீசர் கவன்றார் பெரிதும் அஞ்சினர். திருமடத்தில் ஒரு பாலணைந்து பேழ்கணித்து, உணர்வு பொருந்திய நிலையில் துயில்கொண்டார். இந் நிலையில் இறைவன், பொன்மேனியில், வெண்ணீறு பொலிய எழுந்தருளி "வாய்மூரில் இருப்போம் தொடர வா" என்றார்.

திருவாய்மூரில். இன்னும் பெரியதொரு சோதனை காத்திருக்கிறது இவர்க்கு. இறைவன் திருவுள்ளத்தை அறிவார் யாரே! திருவாய்மூர் நிகழ்ச்சி திருநாவுக்கரசருக்கு ஒரு பெரிய அனுபவம் ஆகும். சிந்தையும் மொழியும் செல்லா அனுபவமாகும். கடவுள் அடியாரின் காணுதன காணும் ஒப்பற்ற அனுபவமாகும்.(Mystic experience) திருவாய்மூரில் இருப்போம் தொடர வா என்று சொன்னர். இது விளங்கவில்லை. ஈது எம்பெருமான் அருளாகில் யானும் போவேன் என்று போக, முன் காட்டிய உருவத்தோடு இறைவனும் எழுந்தருளிப் போந்தார். திருநாவுக்கரசர், அவரை எட்டிப் பிடித்து ஆரா அன்பில் அமுதுண்ண எய்தா

**திருவாய்மூர் நிகழ்ச்சிகள்.**

வாறு போல, அவரைத் தொடர்ந்தணையப் பெறுவார், எய்தப் பெற்றிலர். பின் அணித்தே காட்சி கொடுப்பார் போல் பொன்னின் கோயில் ஒன்று எதிரே காட்டி அதனுள் புகுந்துவிட்டார். அங்கும் அரசர் தொடர்ந்து சென்றார். அரசர் சென்றதைக் கேட்ட திருஞானசம்பந்தரும் அங்கு வந்தணைந்தார். இந்நிலையில், ஞானசம்பந்தருக்கு எளிதிற் கதவடைத்த நிகழ்ச்சி, தமக்குத் திறக்கக் காலம் நீட்டித்த நிகழ்ச்சி மீட்டும் மனத்துள் மீதூர்ந்தது. தம்மை அழைத்து வந்து ஆசைகாட்டி மோசம் செய்வார் போல், அணியார் போல் காட்டி மறைந்தது நினைத்தும் அயர்ந்தார். "கதவைப் பிழைத்துச் செவ்வி யறியாதே திறப்பித்தேன்' எனக்குக் காட்சி தர வேண்டாம். தொண்டு உறைக்கப்பாடிக் கதவம் அடைப்பித்த தழைத்த மொழிச் சம்பந்தர் இதோ இருக்கின்றார். அவருக்கும் காணாது தேவரீர் எப்பால் மறைவது" என்று வாய்மூர்ப் பெருமானைப் பார்த்துப் புலம்பினார். உமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என்று இடித்துரைத்தார். இந் நிலையில் அடுத்த வியத்தகு மறுமொழியாக, இறைவன் திருப்புகலி மன்னருக்கு "நேரே காட்சி" கொடுத்தருளினார். அதற்கு மேலும் என்ன நிகழ்ந்தது. அக்காட்சி கண்ட பிள்ளையாரும், அரசும் காண அதைக் காட்டியருளத் தாமும் கண்டு "பாடவடியார் பரவக் கண்டேன்" என்று தொடங்கும் திருத்தாண்டகப் பதிகம் பாடித் தாமும் பரவினார். இருவரும் அந்நகரில் உடனுறைந்தனர்.

திருவாய்மூர் வா என்று போனாரே, அதன் பொருள் என்ன என்று திருநாவுக்கரசர் மலைத்து நின்றதற்கு, அவர் பாடிய திருவாய்மூர்ப் பதிகத்திலேயே அகச் சான்றுகள் மிகுந்துள்ளன. அவையாவன. திருவாய்மூர், திருக்குறுந்தொகை.

1 எங்கே என்னை யிருந்திடந் தேடிக்கொண்
டங்கே வந்தடை யாள மருளினார்
தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார தென்கொலோ.

2 கழியக் கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன்
வழியிற் கண்டிலேன்.

3 அஞ்சே லுன்னை அழைக்க வந்தே னென்றார்
வஞ்சே வல்லரே வாய்மூ ரடிகளே.

4 போதே என்றும் புகுந்ததும் பொய்கொலோ.

5 பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பா ரவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயெனா
ஓடிப் போந்திங் கொளித்தவா றெண்கொலோ.

6 திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைக்கப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைகொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.

7 எனக்கே வந்தெதிர் வாய்மூருக் கேயெனாப்
புனற்கே பொற்கோயில் புக்கதும் பொய்கொலோ

**திருப்பழையாறையில் திருநாவுக்கரசர் உண்ணாவிரதம்.**

திருவாய்மூரிலிருந்து சைவத் தகைவர்களிருவரும் திருமறைக்காடு போந்தனர். அந்நாட்களில் பாண்டி நாட்டில் அரசு செலுத்திய நெடுமாறன் கி. பி (670-710) (முன்கண்டாங்கு வேள்விக்குடிச் செப்பேட்டின் நான்காவது மன்னனாகிய அரிகேசரி, அசமசமன், மாறவர்மன் என்பவரோடும், சின்னமனூர்ச் செப்பேட்டின் முதல் மன்னனாகிய அரிகேசரி பராங்குசன் என்பவரோடும் ஒன்றித்துப் பார்க்கப்பெறுபவர்) சமணசமயஞ் சார்ந்திருக்க, அவரைச் சைவ சமயத்திற்கு மீட்கும் பெருந்தொண்டில், பாண்டிமா தேவியார் மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் ஈடுபட்டிருந்தனர். சைவ சமயகுரவராகிய திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருப்பதைக் கேள்விப்பட்ட அவர்கள், அவர்பால் தூதுவர் சிலரை அனுப்பினர். பாண்டி நாடு தீதின்றியுளதோ என்று கேட்ட பிள்ளையார் வைதிக சைவ நெறியை சமணர் அழிக்க முற்பட்ட செயலைக் கேள்விப்பட்டுப் பாண்டி நாட்டில் "அவ்வன்றொழிலோர் செயன்

மாற்றி ஆதி சைவ நெறி விளங்க, தெய்வநீறு நினைந்து'' புறப்பட்டார். சமணரின் மாயை, தமக்கு முன் அவர்கள் செய்த தீவினைகள் முதலியவற்றைச் சுட்டிக்காட்டி அவர் செலவுக்கு அரசர் இசையவில்லை யெனினும், திருநீறு போற்றும் இருவரையும் கண்டு, சமணர் நின்ற நிலை அழி வித்து, சைவ நெறி பாரித்தன்றி ஒன்றும் செய்யேன் உம்மேல் ஆணை'' என்று பிள்ளையார் உறுதிகொண்டு அரசருக்குக் கூற, அரசரும், தாமே போய் சமணர் மாயையைச் சிதைத்து வருவதாகச் சொல்லியும் கேளாமல் பாண்டி நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டார்.

இப்பால், திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் தங்கி யிருந்த காலத்தில், திருநாகைக்காரோணம் வழியாக திருநெல்லிக்காவல், திருநாட்டியத்தான் குடி, திருவாரூர், நன்னிலம், முதலிய 'பிற' பதிகளையும் வணங்கிப் பாடித் திருவீழிமிழலையடைந்தார். வீழிமிழலை விண்ணிழி விமானத் திறைவரைப் போற்றி, அடுத்து, திருஆவடுதுறை நண்ணினர். ஆண்டு இறைவன் திருஞானசம்பந்தருக்கு ஆயிரம் செம்பொன் கிழி அருளிய சிறப்பை "காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலவூரர்க்கம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே'' என்று பாடினர். பின் திருப்பழையாறை போனர். ஆண்டு வடதளியில் மன்னும் சிவனர் சமணர் வஞ்சனையால் மறைத்திருந்தது கண்டு மனம் புழுங்கி, அமணர் திறத்தை மாற்றுமாறு வேண்டி "வண்ணங் கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேன்'' என்று எண்ணம் முடிக்கும் வாகீசர் சத்தியாக்கிர கத்தில் இறங்கி, அமுது செய்யாதே உண்ணு விரதம் மேற் கொண்டார். வன்முறையிலன்றி இன்முறையிலேயே, இது போன்ற விரதங்களினல், பெருங் காரியங்களைச் செய்துமுடிக் கும் முறையைக் காந்தியடிகளார் சங்கராச்சாரியார் போன்ற வர்கள் கையாளுவதற்கும் முன்னேடியாக, வழிகாட்டியாகத் திருநாவுக்கரசர் திகழ்ந்தது குறித்தற் குரியது. மன்னனுக் குக் கனவில் வந்து, "நம்மை அரசு கும்பிடுவான்'' அமணர் அமைத்த மறைப்புக்களை நீக்கிவிடுமாறு அறிவுறுத்தி,

அவையிருக்கும் இட அடையாளங்களையும் கூறியருளினார். அரசனும் அவ்வாறே செய்து வழிபாடு, அர்ச்சனைகளும் நிபந்தங்களும் அமைத்தான். இவ்வரலாற்றுக் குறிப்புக்களை,

"தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே!
அலையி னார்பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே",

என்றும்

"வாயி ருந்தமி ழேபடித் தாளுறு
வாயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்
பாயி ரும்புன லாறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே"

என்றும் அமைத்து ஆறை வடதளிப் பதிகம் பாடினார்.

**சிவதலயாத்திரை— மூன்றாவது மேலைச் சோழநாடு**

பழையாறையிலிருந்து போந்து, காவிரியின் இரு கரைகளிலுமுள்ள தலங்களைப் பணிந்து பாடிச்சென்று திருவானைக்கா வடைந்தார். ஆனால் திருவானைக்கா செல்லுமுன்னர் இரு மருங்கும் உள்ள தலங்களைக் குறிக்காவிடினும், அவை, திருப்பட்டீச்சுரம், ஆறைமேற்றளி, திருவலஞ்சுழி, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, தென்குடித் திட்டை, திருப்புள்ளமங்கை, திருச்சக்கரப்பள்ளி, திருவையாறு, திருநெய்த்தானம், திருஆலம்பொழில், திருப்பெரும்புலியூர், திருப்பாற்றுறை முதலியனவாம். திருவானைக்காவலில் சிலந்திக்கும் யானைக்கும் அருளிய உள்ளூர் வரலாற்றை, யானையே கோச்செங்கட்சோழராகப் பிறந்து மாடக்கோயில்கள் எடுப்பித்த வரலாற்றைத் தேவாரங்களில் பல இடங்களில் தேவார ஆசிரியர்கள் புகழ்ந்துள்ளனர். திருஎறும்பியூர் திருச்சிராப்பள்ளி, கற்குடி, திருப்பராய்த்துறையும் தொழுது, பதிகம் பாடினார். அங்கிருந்து, காவிரி கடந்து திருப்பைஞ்ஞீலி சென்றார். செல்லுங்கால், மிகக் களைத்துப்போய், நீர் வேட்கையும் பசியும் வந்தடையவும், சித்தம் கலங்காது

சென்றார். சிவபெருமான் களைத்து வந்த தொண்டர் வருத்தம் தீர்ப்பாராய், காவும், குளமும், சமைத்து, அந்தணர் வடிவங்கொண்டு பொதி சோறும் கொண்டு, திருநாவுக்கரசர் எதிர் நண்ணி, சோறுண்டு நீருண்டு செல்ல வேண்டினர். திருநாவுக்கரசரும் சோற்றை வாங்கி உட்கொண்டு இனிய நீரருந்தித் தளர்வொழிந்தார். பைஞ்ஞீலிப் பரமர்மீது பாமாலை பாடினர்.

*"சித்தராய்த் திரிவார் வினை தீர்ப்பரால்"*

என்று, தாமுண்ட சோற்றுவிருந்தையும் பசிப்பிணி தீர்த்ததையும் குறித்து வைத்தார்.

அங்கிருந்து பல திருமலைகளையும் நாடுகளையும் பதிகளையும் கடந்து சென்று தற்காலத் திருச்சி—விழுப்புரச் சாலை வழியாக—திருவண்ணுமலையைச் சார்ந்தார். பல மலைகளில் ஈங்கோய்மலை, கொல்லிமலை அறப்பள்ளி, நயினர்மலை, கஞ்சமலை, பச்சை மலை, தீர்த்த மலைகளைக் கொள்ளலாம். நாடுகளில், நடுநாட்டின் உள்நாடுகளாகிய கொங்கு நாடு, திருமுனைப்பாடி நாடுகளைக் கொள்ளலாம். பதிகள் பலவற்றில் புலிவலம், திருத்தலையூர், நெற்குன்றம், தோழூர், ஏழூர் முதலானவற்றைக் கருதலாம். திருவண்ணுமலையானைப் பாடினர். பணியாரைப் பணிந்தார். பணி செய்தார்.

**சிவதல யாத்திரை நான்காவது தொண்டைநாடு**

அங்கிருந்தும் புறப்பட்டு "அணியார் தொண்டைத் திருநாட்டில்" திருவருளால் சென்றணைந்தார். முதலில் திருஓத்தூர் வழிபட்டார். அங்கிருந்து பல பதிகளையும் வணங்கினர். அவை எவையென்று சேக்கிழார் கூருவிடினும், இளையனர் வேலூர், திருவன்பார்த்தான், பனங்காட்டூர், திருமாகறல், திருகுரங்கணில், மூட்டம் முதலியனவாக இருக்கலாம். பின் திருக்கச்சி ஏகம்பம் சார்ந்தார். கல்வியைக் கரையிலாத காஞ்சிமாநகர் பெரியதொரு வரவேற்பு நல்கியது. மாடவீதி

மருங்கெலாம், மணிவாயில்களிற் றோரணங்கள், வாழை கமுகுகள் நிறைத்து, நிறைகுடங்கள், விளக்குகள், மலர் மாலை சூழ்ந்த பந்தர்கள், ஆடுகொடிகள் முதலியவை எடுத்த னர். திருவீதிப் பணிசெய்யும் திருவலகு ஏந்திச்சென்று, அவர் திருத்தொண்டுக் கடையாளமான திருவலகையும் ஏந்திச் சென்று வரவேற்றனர். என்னே இவர் உடலுழைப்புத் தொண்டின் பெருமை! செம்பொன் மலைவல்லி தழுவக் குழைந்த பெருமானைக் 'கரவாடும் வன்னெஞ்சற் கரியானை' என்னும் காந்தாரப் பண்ணில் அவரைத் தம் மனத்துள் வைத் துள்ள மாண்பினை எடுத்தியம்பினர். பின்னும் பாமாலைகள் சாத்தி, கச்சித் திருமயானம், திருக்கச்சித் திருமேற்றளி வணங்கி, திருமாற்பேறு வணங்கி, அதையடுத்த பல பதிகள் (இவர் திருப்பதிகங்கள் கிடைக்காத—திருவூறல், திருவிற் கோலம், இலம்பையங்கோட்டூர்) வணங்கிப் பின்னும் காஞ்சி துன்னி, பாகம் பெண்ணுருவாகிய பரமனை, "ஏகம்பன்காண் என் எண்ணத்தானே" என்றெல்லாம் போற்றினர். அங்கிருந்து திருக்கழுக்குன்றமும், அதனை அடுத்த பல பதி களும் (பல பதிகள் யாவை எனச் சேக்கிழார் கூறவில்லை. பதிகங்களும் கிடைக்கவில்லை. இவை திருவன்பார்த்தான் பனங்காட்டூர், திருமாகறல், திருஇடைச்சுரம், திருக்கச்சூர் ஆலக்கோயில்களாக இருக்கலாம்) வணங்கினர் பின் திருவான்மியூர் மருந்தீசர் மீது பெருவாய்மைத் தமிழ்பாடி, திருமயிலை வந்தணைந்தார். பின் வடசென்னை மாநகரில் நிலவும் திருஒற்றியூர் சென்றார். திருவொற்றியூரன்பரும், திருவீதி விளக்கு, வாழைகள் மாலைகள் நாட்டி, நிறை பொற்குடங்கள், தூபங்கள், தீபங்கள் எடுத்து, எதிர் கொண்டு பெருவரவேற்பளித்தனர். அங்கு எழுத்தறியும் பெருமானைப் பல பதிகங்களால் வழுத்தினர் அங்கிருந்தே அருகிலுள்ள வடதிருமுல்லைவாயில், திருநள்ளிப் புண்ணிய கோடீசர்கோயில், ஞாயிறு முதலிய (பதிகங்கள் இல்லை) பதிகளை வணங்கிப் பின் பாசூர் பணிந்து அயலுளவம்பதி களும் பணிந்து (திருவள்ளூர், திருவெண்பாக்கம்—இவை சேக்கிழாரால் குறிக்கப்பெறவில்லை—இவர் பதிகங்களு மில்லை) மெய்ம்மைநிலை வழுவாத செம்மை நலம் வாய்ந்த

வேளாளர் வாழ் பழையனூர்த் திருவாலங்காடு வந்தார். திருவாலங்காடுறையுஞ் செல்வருக்குப் பெருந்திருத்தாண்டகம் ஓதினார். அங்கிருந்து பல்பதியும் (திருத்தணிகை, வளகுளம் முதலியன, பதிகங்கள் இல்லை) நெடுங்கிரியும் (நகர்மலை, குன்றவர்த்தனம் இராஜிகுண்டாமலை முதலியன) படர்வனமும் கடந்து சென்று திருக்காரிகளரை அடைந்தார். பின் திருக்காளத்தி சென்றார்.

திருவாலங்காடு, திருப்பாசூர் முதலிய பதிகளை வணங்கி ஆளுடைய பிள்ளையாரும் இவ்வாறே திருக்காரிகளரை அடைந்து திருக்காளத்தி சேர்ந்ததாகச் சேக்கிழார் திருஞான சம்பந்தர் வரலாற்றிற் செப்புவார்.

திருக்காளத்தியை அணைத்துக்கொண்டோடும் பொன் முகலியாற்றுப் புனித நீரில் முழுகிக் காளத்திமலை அடிவாரத்திலும் மலை மிசையும் ஏறி வணங்கிக் காளத்தி நாதனை "என் கண்ணுளான்" என்று கருதிப் பாடினார். சிலைத்தடக்கைக் கண்ணப்பர் திருப்பாதமும் சேர்ந்திறைஞ்சிப் போந்தார். திருக்காளத்தி மலைமேல் தாள் பணிந்த குறிப்பினார், "பேணி திருக்கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலம் காணுமது காதலித்தார் கலைவாய்மைக் காவலராகிய நாவரச நாவலர். தென்கயிலை யாதலின் திருக்காளத்தி இவருக்கு வடகயிலையை வணங்கவேண்டும் என்னும் குறிப்பை உணர்த்திற்று.

கயிலைமலையானைச் சென்று காணவேண்டுமென்ற குறிப்புப் பிடித்துந்த வடதிசை நோக்கிச் சென்றார் வாகீசர்.

**சிவதலயாத்திரை ஐந்தாவது திருக்கயிலைச் செலவு**

பெரிய மலைகள், ஆறுகள், நாடுகளைக் கடந்துசென்று நந்தி தேவர் தவஞ் செய்து மலையுருவில் இறைவனைத் தாங்கிய திருப்பருப்பதம் (ஸ்ரீ சைலம்) சார்ந்தார். நந்தியால் ஊரிலிருந்து இம் மலை அடைதற்குரிய வழியும், நந்தியால் என்ற பெயர், வழங்கும் இவ் வரலாற்றை நினைவூட்டுபவையாயுள்ளன இம் மலைமேல் வண்டமிழ் பாடினார். சிவனார் கயிலை மயிலையில்

வைத்த ஆசை தவிர வேறு ஓர் ஆசையுமில்லாதவராய்த் தமது ஆர்வம் கண்டு வியந்து இருமருங்கும் உடன் வந்த அடியார்களோடு மேலும் பல நாடுகளைக் கடக்கலுற்றார். தெலுங்குநாடு கடந்து கன்னட மெய்தினார். கருநடநாட்டின் எல்லை தாண்டி, செறிந்த காடுகள், ஆற்றுத்துறைகள், மலைவழிகள், நல்ல பல நாடுகள் ஆகியவற்றைக் கடந்தார். கிருஷ்ணை, கோதாவரி, மகாநதி முதலியவை ஆறுகள். மாளவ நாட்டை அடுத்து அடைந்தார். அங்கு நின்றும் நீங்கி, அருஞ்சுரங்கள் கடந்து, அறங்கள் நீடும் இலாட நாடு (வேங்கிநாட்டுப் பகுதி) தாண்டி, மத்திமபைதிரம் (மத்தியப்பிரதேசம்) கடந்து, கங்கையாறு சென்று வலமாக வருகின்ற கிழக்கிலிருந்து மேற்கே ஓடும் ஓட்டத்தைக் கங்கையாறு மாற்றி வாரணாசியில் வடக்கு நோக்கி ஓடும் வாரணாசியை வணங்கி வழிபட்டு, வந்தவரை விடுத்து, கங்கைக்கரையை விட்டு மேற்சென்றார். கற்சுரங்கள் பலவற்றை அடைந்தார். வானளாவு காடுகளில், மக்கள் போகக்கூடிய வழிகள் இல்லாதிருந்தும், கயிலை செல்லும் காதலினால், இலை, சருகு, கிழங்கு, பழங்களையும் உண்ணுதலை விடுத்து, தனித்தே கயிலை நோக்கி இரவுபகலாக ஏகினார். கொடிய விலங்குகளும் அடியர்க்கு இன்னல் விளைவிக்க வில்லை. நச்சரவுகளும் இவரை அச்சுறுத்தவில்லை. அதற்கு மாறாகத் தம் முடிகளிலுள்ள மணிகளை ஏந்தி விளக்கெடுத்தன. அக்காட்டினிடத்தே வெய்யவன் கதிர்கள் வந்து பெரும்பிளவுகள் ஏற்பட்டு எரிந்தன. இச் சூழலில் மனத்திண்மையுடைய நாயனார் சென்றார். என்ன கொடுமை! தாள் பரட்டளவும் தசை தேய்ந்தது. கைகள் கொண்டு தாவிச்சென்றார். கைகளில் மணிக்கட்டுகளும் அசைந்து தேய்ந்து சிதைவுற்றன. மார்பால் வருந்தி உந்திச் சென்றனர். மார்புத் தசைகள் தேய, மார்பெலும்புகள் முறிய ஒரே குறிக்கோளுடைய சிந்தையின் நேசம் ஈசனைத்தேட, புரண்டு புரண்டு சென்றனர். அங்கமெங்கும் அரைந்திட சிந்தை கயிலைமலையிற் சென்றுற, மெல்ல உந்தவுமுடியாது, செயலற்றுக் கிடந்தார் தமிழ் ஆளியார். உடற் சோர்வுற்று, முயற்சியின்றிக் கிடப்பினும் உளச்சோர்வுறாது நின்றனர்

நாயனுராதலால் 'தமிழ் ஆளியார்' என்று சேக்கிழார் இவரைச் செருக்குடன் அழைத்தார்.

கயிலைக்காட்சியைத் திருவையாற்றிற் காணல்

இவ்வாறு ஈங்கிவர் கிடக்க, இனிய தமிழ்ப் பாமாலைகள் இன்னும் நாவரசர் பாடவேண்டும் தமிழ்நாட்டில் என்று திருவுள்ளம் கொண்ட இறைவனுர், அவர் எதிர்வந்து நொந்து நோக்க, அவரும் எதிர்நோக்கினுர். நோக்கலும் பேசுதற்குரிய உணர்வுபெற்று, வட கயிலையில் அண்டர் நாயகர் எழுந்தருளியிருக்கும் கோலத்தைக் கண்டு கும்பிடும் விருப்புடன் காதலினடைந்தேன் என்று கூறினுர். காசினிமருங்கில் உள்ள மானிடர் கயிலைமால்வரை எய்துதல் எளிதன்று. அமரரும் அணுகுதற்கரிது. மீளுவதே நல்லது என்ற முனிவர்க்கு,

"ஆளு நாயகன் கயிலையி லிருக்கைகண் டல்லான்
மாளு மிவ்வுடல் கொண்டுமீ ளேனென"

அரசர் மறுக்கவும், காணவுள்ளத்தைக் கண்டு காட்டலின் என்ற சிவஞானபோதங் கூறுமாறு அவர் மனத்துணிவை உலகுயிர்கள் அறியும் பொருட்டுத் தாமறிந்து கொண்டு, "ஓங்கு நாவினுக் கரசனே எழுந்திரு" என அருளினுன் இறைவன். நாவுக்கரசரும்,

"அண்ண லேயெனை யாண்டுகொண் டருளியஅமுதே!
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே!
கண்ணி னுற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்றெழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்."

பணிந்தாருக்கு இப்பொய்கையில் முழுகி கயிலையில் இருந்த முறையைத் திருவையாற்றிற் காணெனப் பணித்தான் இறைவன். அதைத் தலைமேற் கொண்டு, "வேற்றாகி விண்ணுகி நின்றுய் போற்றி" என்ற போற்றித் திருத்தாண்டகம் பாடி, ஆற்றல் பெற்றவராய் அஞ்செழுத்தோதிப் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் ஒரு வாவியில் வந்தெழுந்தனர் வாகீசர்.

"கயிலைமால் வரையாவது காசினிமருங்கு, பயிலு மானுடப்பான்மையோர் அணுகுவதற்கரிது" என்று அன்று, சேக்கிழார், இறைவன் அவருக்கும் அறுநூறு ஆண்டுகட்கு முன்பிருந்த நாவுக்கரசருக்குக் கூறியதாகப் பன்னிரண்டாம் நூற்றுண்டின் பிற்பகுதிக் காலத்திற் கூறினர். அன்றைய நிலை, இமயமலை ஏறும் இன்னல்களை, அருமை பெருமைகளை எடுத்துக் காட்டுகின்றது. இன்றும் அந்நிலைகள் இருப் பினும், மலையேறு பயண வசதிகள், உயிர்க்காற்றுக் குழாய் கள், பனி தடுப்புச் சட்டைகள், பனிசருக்குத் தடுப்புக் காலரண்கள், பனியுடைப்புக் கோடாரிகள், ஊன்று கோல் கள், ஏறுகயிற்று நூலேணிகள், மிக உயரங்களிலும் உண்ணத்தக்க உணவு வகைகள், ஆங்காங்கு தங்கக் கூடா ரங்கள், அடுப்புக்கள் போன்ற பல துணைகள் கொண்டு தென்சிங், ஏட்மண்டு ஹில்லாரி போன்றவர்களும் பிறரும் எவரெஸ்ட்டு போன்ற இமயமலை உச்சிகளைத் தொட்டு நிற் கின்றனர். இவைகள் எல்லாம் இல்லாத ஒரு பழங் காலத்தில் ஒரு தமிழ்ப் பெருமகனர்,

"ஆளு நாயகன் கயிலையி லிருக்கை கண்டல்லால்
மாளுமிவ் வுடல்கொண்டு மீளேன்"

என்ற ஆராக் காதலும் தளராத மன உறுதிப்பாடும் மட்டுமே துணைகொண்டு, முன் வைத்த காலைப் பின் வைக்காது மலை யேறி வழிகாட்டிய மலையப்பரைன்றோ! வருங்கால மலை யேறிகளுக்கு வழி காட்டிய இத்தமிழ் ஆளியாரால் தமிழ் நாடு பொன்றுப் புகழைப் பெற்றுவிட்டது.

இனிக் கயிலைக் காட்சியைத் தமிழ் நாட்டுத் திருவை யாற்றிலேயே கண்டார் திருநாவுக்கரசர். சீவர்களிலேயே சிவத்தைக் காணல்,

"இருநிலனய்த் தீயாகிக் காற்றுமாகி,
இயமானனய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய், ஞாயிருகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்

பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி,
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே''

என்ற இவர் கூற்றுப்படியே, இவ்வுலக இயற்கையிலும் இயற்கைக் கருப் பொருள்களிலும் இறைவனைக் கண்டு கொள்ளலாம். ''எல்லாவுயிருமாய்த் தழைத்துப் பிழைத்து அவையல்லனாய் நிற்பதே,'' உடலகிலோடு உடனாகி நிற்ப தோடு, வேறாகியும் நிற்பதே, இறைவன் கோலம் என்ற உண்மையினையே திருவையாற்றில் சத்தியும் சிவமுமாக ஒன்று இரண்டாக எல்லா உயிர்களையும் கயிலைக் கோல மாகக் கண்டு களித்தார் திருநாவுக்கரசர். திருவையாற்றில் அவர் திருப்பாதம் கண்டதால் கண்டறியாதனவும் கண்ட தாகக் கூறும் இக்கயிலைக் காட்சி உண்மையை, இவ்வுல கிலே அவ்வுலகைக் காணும் அருமையைச் சைவப் பெரு மக்கள் ஒவ்வொருவரும் நினைவு கூர்ந்து, கைக்கொள்ள வேண்டும். இந்த தத்துவத்தால்தான் சிவபெருமானை அம்மையப்பராக, பாகம் பெண்ணுருவானவராகச் சைவ உலகம் கண்டு வைத்தது. ''காமஞ்சான்ற கடைக்கோட் காலை; ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி, அறம்புரி சுற்ற மொடு கிழவனும் கிழத்தியும், சிறந்தது பயிற்றல் இறந்த தன் பயனே'' என்று ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரும்

" சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு''

" பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''

என்றெல்லாம் அனைத்துலகுக்கும் பொதுமறை வகுத்த திருவள்ளுவப் பெருந்தகையும் தொட்டுக் காட்டிய சிறப்பு நெறியைத்தான் திருவையாற்றுக் கயிலைக் காட்சியாகக் காட்டியருளினார் திருநாவுக்கரசர்.

திருவையாற்றில் அவர்கண்ட காட்சி எத்தன்மைத்து? அப்பதியில் நிற்பவும் சரிப்பவுமான நிலை இயல் இயங்கியல்

உயிர்கள் யாவும், தம் துணையொடு பொலிவனவாக — சத்தியும் சிவமுமாக — கண்டார். பொன்மலர்க் கொடியுடனமர் வெள்ளியம் பொருப்பின் தன்மை யாகும்படி சத்தியும் சிவமுமாம் சரிதையை எல்லாவுயிர்களும் பயிலும் பங்கைப் பணிந்தார். இக் காட்சிதான் காணப்பட்ட உலகால் காணப்படாத கடவுளைக் காணும் ஒப்பற்ற காட்சி.

இனி, மன்னுமாதவர், தம்பிரான்கோயில் முன்வர, திருவையாற்றுக்கோயிலும் கயிலைமால் வரையாய்க் காட்சியளித்தது. மால், அயன், இந்திரன் முதற்பெருந் தேவரும் போற்ற, சித்தர், வித்தியாதரர், இயக்கர், மாதவர், முனிவர்களும் நெருங்க கங்கை முதலான கடவுள் மாநதிகள் வணங்க, கணநாதர்களும், பூத வேதாளங்களும் போற்ற, சிவபெருமானுக்கும் வழிபடுவோர்க்கும் இடையே நந்தி எம்பெருமான் சேவகம் செய்து முன்னிற்க,

> " வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்குந்
> தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்
> கொள்ளு மாமலை யாளுடன் கூட வீற்றிருந்த
> வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின் மன்னவர்."

கண்ட பேரின்பக் கடலினைக் கண்களால் முகந்து ஆடிப்பாடி அழுதார் தொண்டனூர்க்கு அங்கு நிகழ்ந்தன யாரே சொல்லவல்லார். பின் அரசர் கயிலை நாதருக்குப் போற்றித் திருத்தாண்டகங்கள் பாடினர் திருக்கயிலைக்கோலம் மாறித் திருவையாற்றுக் கோயிலாக மாறிய அளவில், தாம் கண்ட கயிலைக் கோலத்தைத் திருவையாற்ருேடு இணைத்துக் காந்தாரப் பண்பாடியருளினுர். 'மாதர் பிறைக் கண்ணியானை' என்ற இப்பதிகத்தில்தான் முன்னர்க்காட்டிய உயிர்கள் சத்தியாய்ச் சிவமாகிய கோலத்தைக் காண்கிருேம். இவர் கண்ட சத்தியாய்ச் சிவமாகிய கோலங்கள் கண்டறியாதன கண்ட காட்சிகள் இதோ இருக்கின்றன :—

(1) "காதன் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்

(2) கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்.

(3) வரிக்குயில் பெடை யொடாடி வைகி வருவன கண்டேன்.

(4) சிறையிளம் பெடையொடாடிச் சேவல் வருவன கண்டேன்.
(5) பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்.
(6) வண்ணப் பகன்றிலோ டாடி வைகி வருவன கண்டேன்.
(7) இடிகுர லன்னதோர் ஏனம் இசைந்து வருவன கண்டேன்.
(8) கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்.
(9) நற்றுணை பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்.
(10) பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்
(11) "இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்.
கண்டே னவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்."

பின்னர், அத்திருப்பதியிற்றானே தங்கித் திருத்தாண்டகங்கள், திருக்குறுந்தொகைகள், திருநேரிசைகள் முதலிய பல பதிகங்கள் பாடிப் பரவித் திருத்தொண்டும் புரிந்திருந்தார்.

சிவதல யாத்திரை ஆறாவது சோழநாடு பாண்டிய நாடு

திருவையாற்றினின்றும் போந்து, திருநெய்த்தானம், திருப்பெரும்புலியூர் முதலிய பதிகளைப் பணிந்து, திருமழ பாடி சென்று, திருப்பூந்துருத்தியை அடைந்து, தாண்டகம், குறுந்தொகை, விருத்தம் முதலியன பாடி, தங்கித் திருத்தொண்டு செய்துகொண்டு இருக்கத் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடமும் அங்கொன்று கட்டுவித்தார். சமய பரம ஆசிரியர்கள் தாமே அமைத்து அமர்ந்த மடங்கள் யாண்டும் கேட்கப்படவில்லை. ஆதலின், இது ஓர் ஒப்பற்ற தன்மை வாய்ந்ததாகும். மேலும், இங்கு பல்வகைத் தாண்டகம், தனித் திருத்தாண்டகம், அடைவுத் திருத்தாண்டகம், திருவங்க மாலை முதலிய பதிகங்களும் பாடிப் பரவினார். இத்தாண்டகப் பதிகங்கள் சிறந்த உலகியலறிவும் மெய்யுணர்வியலும் கலந்து மக்கட்குற்ற வினைமருந்தாய் உதவுவனவாய், ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பனவாய் விளங்குகின்றன. எந்தையார் திருமந்திரமாகிய திருவைந்தெழுத்தை விதிப்படி எண்ணுவோர் சிவனடி சேர்வர் என்று எடுத்துரைப்பது பலவகைத் திருத்தாண்டகப் பதிகத்துட்கருத்தென்பர். இவ்வாறே, தனித்திருத்தாண்டகப் பதிகமும் சைவ சமயநெறி

நிற்கும் துறைகளை முறையாக ஓதி, சிவபெருமான் திருக் கருணை இருந்தவாற்றை வியந்தோதுகின்றது. இத்தலத் திற் பாடிய இலிங்கபுராணத் திருக்குறுந் தொகைப் பதிகம் சிவனைச் சாரலுறும் சரியை நெறிச் சிறப்பைக் கூறிச் சிவ லிங்க தத்துவத்தையும் சுட்டிக் காட்டுகின்றது. மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்று மனிதப் பிறவியின் மாண்பையுணர்ந்த இப்பெரியார், மனித உட லின் புற உறுப்புக்களும், அக உறுப்புக்களும் சிவபெரு மானை வழிபட்டு நலமடைவதற்காகவே படைக்கப்பெற்றன என்னும் கருத்தைத் திருவங்கமாலைப் பதிகத்தில், தாம் திருத்தொண்டாற்றிய இத்திருத்தலத்திலேயே பாடியமைத் தார். இதை வியந்த சேக்கிழாரும் "செல்கதிகாட்டிடப் போற்றும் திருவங்கமாலை" என்று இதன் ஏற்றத்தை எடுத் துக் காட்டினர்.

திருப்பூந்துருத்தியில் ஆளுடைய அரசர் இருக்கும் நாட்களில் வல்லமணரை வாதில் வென்று தென்னவர் கூன் நிமிர்த்து, திருநீற்றின் ஒளிகண்ட ஆளுடைய பிள்ளை யாரும், திருநாவுக்கரசர் திருப்பூந்துருத்தியில் இருப்பது கேட்டு, அவரைக் கண்டு அளவளாவ விரைந்து வந்தார். காழிப் பிள்ளையார் வருவது கேட்ட வாகீசரும் எதிர்சென்று, திருக்கூட்டத்தினுள்ளே கூடிச்சேர்ந்து, பிள்ளையார் தம்மைக் காணுதவகையில், தாம் அவரைத் தொழுது, அவரைத் தாங் கும் சிவிகையினைத் தம் திருமேனிகொண்டு தாங்கிச் சென் ருர். என்னே இவர்தம் தொண்டுள்ளம்!

அரசரை இன்னும் காணுது தவித்த பிள்ளையார், பூந் துருத்தியை யணுகியதும் எங்குற்ருர் அப்பர் எனவினவ, "உருகா நின்று உம்மடியேன் உப் மடிகள் தாங்கிவரும், பெருவாழ்வந்தெய்தப் பெற்றிங் குற்றேன்" என்று விடை யிறுத்தார். அதைக் கேட்ட பிள்ளையார் மிக விரைவில் சிவிகையினின்று மிறங்கி "உள்ளம் மிகுபதைப் பெய்தி" உடைய அரசரை வணங்கினர். ஆனல் வாகீசரின் பண் பட்ட உள்ளம், அவர் வணங்காமுன் பிள்ளையாரை வணங்கி யிருந்தது. என்னே இவர் பெருந்தகைமை! வணங்கத்

தக்கார்வரின் எவர்முன் வணங்குவது என்ற கேள்வியை எழுப்பாமல், அவர்தான் முன்னே வணங்கட்டுமே என்று இருந்துவிடாமல், முதலிலேயே வணங்கிவிடுதல் முறை யாகும் என்பதை நம்மனோர்க்கெல்லாம் எடுத்துக்காட்டி வாழ்ந்து சென்ற இப்பெருந்தகையை என்னென்று போற்றுவது! "அவர் வணங்காமுன் வணங்கும்" மனப் பான்மை, பொதுவாக நம்நாட்டு மக்கள் அனைவருக்கும், சிறப்பாக, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளிற் பழகும் பேரா சிரியர்கள் மாணுக்கர்களுக்கும் வருமாயின் நாடு விரைவில் உருப்பட்டுவிடும். எதிர் எதிராக வரும் இருவரில் ஒவ் வொருவரும், ஏன் அவர் தான் முதலில் வணக்கம் தெரிவிக் கட்டுமே, நாம் திரும்ப வணக்கம் தெரிவிப்போமே என்று நினைத்துத் தம்தம் வழியே போவாராயின், மரியாதையும் பண்பாடும், நட்பும், பெட்பும் அவர்களை விட்டே ஓடிவிடும், பண்பாடும், நட்பும், ஒப்புரவும், ஒழுக்கமும் இல்லையெனில் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் படித்துப் பெறும் பயன் தானென்ன? நம் நாட்டு மக்களுக்குள்ளேயே இப்படி யிருந்தால், இனி அயல்நாட்டினர் இங்கு வரும்போதும் அயல்நாடுகளுக்கு நாம் போகும்போதும் இந்த குறை மனப்பான்மையைக் கொண்டு சென்றால் நம் நாட்டின் பண் பாட்டுப் பெருமை என்னுகும்? இதையெல்லாம் நம்மவர் கருதித் திருநாவுக்கரசரிடமிருந்து இப்பெரும் பாடத்தைப் படித்துக் கொள்ளவேண்டும். இருவரும் பின் நாயனரது திருமடத்தில் ஒருங்குறைந்து அளாவளாவியிருந்தனர். பிள்ளையார் பாண்டி நாட்டில் தாம், வல்லமணரை வாதில் வென்றதையும், பாண்டியனுர் கூன் நிமிர்த்தி நின்றசீர் நெடுமாறனுராக்கியதையும், பண்புடைய பாண்டி மாதேவி யார் தம் பரிவும், நண்புடைய குலச்சிறையார் பெருமையும் எடுத்துக் கூற, அரசரும் பாண்டிநாடு போய்க் காண மனங்கொண்டார். திருஞான சம்பந்தரும் தொண்டை நன்னுடு காணப் புறப்பட்டார்.

திருநாவுக்கரசரும், திருப்பூந்துருத்தி நீங்கிப் பாண்டி நாடு நோக்கிப் போகும்போது திருப்புத்தூர் பணிந்து,

மதுரைத் திருஆலவாய் புகுந்தார். மாடமலிமதுரையை நினைக்கும்போது, திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும் இருந்து தமிழாராய்ந்த தமிழ்ச் சங்கமும், அதன் தனிப்பெருஞ்சிறப்பும் மனத்துள்ளே எழுவது இயல்புதானே. இதைக் கருதியே சேக்கிழாரும் "சென்றணைந்து மதுரையினிற் றிருந்திய நூற்சங்கத்துள், அன்றிருந்து தமிழாராய்ந்த அங்கணர் கோயில்" என்று தமிழ்ச்சங்கச் சிறப்பை எடுத்தோதினர். 'செழும் பொருள் நூல்தருவானை' என்று இறையனர் அகப்பொருள் இலக் கண நூல் அருளியதையும் குறித்தார். "நன் பாட்டுப் புலவ ஞய்ச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினன்காண்" என்று திருப்புத்தூர்ப் பெருமான்மேல் பாடினர் நாவுக்கரசரும். மாபாரதம் தமிழ்ப்படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும் பாண்டியர் தமிழ் வளர்த்த பெருமையைச் சின்னமனூர்ச் செப்பேடு விளம்புகின்றது. தமிழ் ஆராய்ந் தருளிய செந்தமிழ்ச் சொக்கரை வணங்கி "முளைத்தானை எல்லார்க்குமுன்னே தோன்றி" என்றெடுத்துத் திருத்தாண் டகம் பாடினர்.

வாகீசர் எழுந்தருளியது கேட்ட நெடுமாறனும், பாண்டிமா தேவியாரும் குலச்சிறையாரும் அவரடி போற்றி வணங்க, அத்தலத்தே தங்கியிருந்தருளினர். ஆலவாய் அவிர்சடைக் கடவுள்மீது, திருநேரிசை, தாண்டகங்கள் முதலியவை பாடி அருளினர். மகேந்திரவர்மப் பல்லவனைச் சைவனுக்கிய நிகழ்ச்சியிலிருந்து திருநாவுக்கரசர் காலத்தை ஆராயக் கல்வெட்டு வரலாற்றுச் சான்றுகள் கிடைத்ததை நாம் கண்டதுபோலவே, பாண்டிய மன்னர் நெடுமாறனர் காலத்தைக்கொண்டு திருநாவுக்கரசர் காலத்தைக் கணிக்க நெடுமாறன் பற்றிய வேள்விக்குடி சின்னமனூர்ச் செப்பேடு களும் சான்று பகர்கின்றன. இதையும் முன்னர் கண் டோம். "அப்பருக்கு எண்பத்தொன்று" என்ற மரபுப் படியே மகேந்திரவர்மன் காலப் பகுதியிலிருந்து (600-630) நெடுமாறன் (670-710) காலப்பகுதிவரை திருநாவுக்கரசர் நீண்டகாலம், எண்பத்தொரு ஆண்டுகள், திருமேனி

தாங்கி வாழ்ந்தருளினுர் என்று கொள்ள இடமிருக்கிற தன்றோ?

திருஆலவாயிலிருந்து சென்று திருப்பூவணம் போந்து பணிந்தார். இறைவன் நேரே அவருக்குக் காட்சிகொடுக்க, அவர் கண்ட திருவுருவக் கோலத்தைக் கண்டவாறே,

"வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் வளர்சடைமேல்
இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும் காதில்வெண்
குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும், எழில்திகழும்
திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழில்திகழும்
பூவணத்தெம் புனிதனுர்க்கே"

என்ற திருத்தாண்டகப் பதிகத்தில் பகர்ந்தார்.

"பாட அடியார் பரவக்கண்டேன் பத்தர்கணம் கண்டேன்
மொய்த்த பூதம்
ஆடல் முழவ மதிரக் கண்டேன் அங்கை யனல்கண்டேன்
கங்கை யாளைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன் கொக்கினிதழ்கண்டேன்
கொன்றை கண்டேன்
வாடல் தலையொன்று கையிற் கண்டேன், வாய்மூர்எம்
அடிகளையான் கண்டவாறே"

என்று திருவாய்மூரில் இறைவன் கோலத்தைக் கண்டுருகித் திருத்தாண்டகப் பதிகத்தில் பகர்ந்துள்ளதைத் திருப்பூவணத்தில் இவர் காட்சி கண்டு கூறியுள்ளதோடு, ஒப்பிட்டுப் பார்த்து இன்புறலாம்.

திருப்பூவனத்திருந்து போய், தென்னிலங்கை இராவணனைச் சிதைத்த மன்னவனும் இராமன் வணங்கிய திரு இராமேச்சுவரம் வணங்கித் திருநேரிசை பாடினுர். அங்கு நின்றும் போந்து, பாண்டி நாட்டுப் பிற பதிகளாகிய, திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலியவற்றை வணங்கிப் பாடினுர். இப்பதிகங்கள் கிடைத்தில.

செந்தமிழ்ப் பாண்டி நாட்டினின்றும் மீட்டும் காவிரி நாடாகிய சோழ நாடுவந்து, வரும் வழியில் முன் அணைந்த திருத்தலங்களை வணங்கி, "பொய்ப் பாசம் போக்குவார்" பிறவிப் புகலாக அடையும் ஊராகிய புகலூர் வந்தடைந்தார். பொய்கை சூழ் பூம்புகலூர்ப் புனிதர் மலர்த்தாள் வணங்கி, கைத் திருத்தொண்டு செய்து வண்டமிழ் மாலைகள் பல மொழிந்தார். நின்ற திருத்தாண்டகம், தனித்தாண்டகம் க்ஷேத்திரக் கோவைப் பொதுத் திருத்தாண்டகம், குறைந்த திருநேரிசை, தனித்திரு நேரிசை, ஆருயிர்ப் பொதுத்திரு விருத்தம், பொதுத் தசபுராணப்பதிகம், பொதுப் பாசநாசப் பதிகம், பொதுச் சரக்கறைத் திருவிருத்தம், பொதுப் பசுபதித் திருவிருத்தம், பொதுத் தனி திருவிருத்தம் பொதுச் சிவனெனும் ஓசை; நினைந்த திருநேரிசை, பொது விறுவிடைத் திருத்தாண்டகம், இப்படிப் பலப்பல பதிகங்களைப் புகலூரில் திருவாய் மலர்ந்தருளினர்.

**சிவதலாத்திரை-ஏழாவது-இறுதி-சோழ நாட்டுப் பூம்புகலூர்**

இந்நிலையில், உலகினர்க்கு இவர் தம் மனத்துக்கண் மாசிலாகிய, பற்றற்ற தூய துறவுள்ளதை உலகினர்க்கு உணர்த்திக் காட்ட வேண்டினர். ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்; ஓட்டில் தமனியத்தில் சமபுத்திபண்ணும் மனநிலையை மன்னுயிர்க்கு உணர்த்திக் காட்ட வேண்டினர் இறைவர். பெண்ணின்ப நாட்டத்தில், சித்த நிலை திரியாத இவர் தம்மனத்திண்மையை மக்களுக்கு விளக்க வேண்டினர். இவர் உழவாரப் படை நுழைந்தவிடத்தில் எல்லாம் பொன்னோடு ஒன்பது மணிகளும் பொலிந்திலங்க, அவற்றையும் புல்லோடும் கல்லோடும் உழவாரப் படையில் ஏந்தி வீசி எறிந்தார். வில்லைப் பழித்த நுதன்மடவார் மயக்கத் தொல்லையில் அகப்படாது, தம் செய்பணியின் தலை நின்றார். இருவினைகளையும் பார்த்து, பொய்ம் மாயப்பெருங் கடலிற் புலம்பும் புண்ணிய பாவங்களைப் பார்த்து வீணாக அலையவேண்டாம் என்று வெருட்டி, ஓட்டினர். இவ்வாறெல்

லாம் நிகழ்ந்தன இவரைச் சோதிப்பதற்காகவல்ல இவர் தம் சித்தநிலை திரியா முத்தி மனப்பான்மையை உலகினர்க் கறிவுறுத்தவேயாம்.

> *"தன்னுடைய சரணை தமியேனைப் புகலூரன்*
> *என்னையினிச் சேவடிக்கீழ் இருத்திடும்"*

என்று எழுகின்ற முன்னுணர்வின் முயற்சியினால் திருவிருத்தம் பாடி, 'புண்ணியம் உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று முத்திவிண்ணப்பம் செய்து சித்திரையிற் சதயமாந்திருநாளில் அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசமர்ந்திருந்தார். இவ்வாறு சேக்கிழார் அறிந்து கூறியபடி திருநாவுக்கரசர் திருவரலாறு சிறந்தது.

மூன்றும் பிரிவு

# திருநாவுக்கரசர் தேவாரத்திறன்

தமிழ் இலக்கிய வரலாற்றில், சைவத் திருமுறைகள் ஒரு சிறந்த இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தேவாரத் திருமுறைகள் முன்னெழுந்தன. அவற்றுள்ளும் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் முதன்முதல் எழுந்தன. தேவார இன்னிசைப் பாடல்களை முதன்முதல் தமிழ் உலகுக்கும், சைவ உலகுக்கும் அருளித் தந்த பெருந்தகை யாவார் திருநாவுக்கரசர். உலகுய்யும் பொருட்டு உவந்தளித்த தேவாரப் பாடல்களை அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழியதனில் திருவாய் மலர்ந்தருளியது தமது நிறை தவத்தின் பயன் எனக் கருதினர். "பன்னிய செந்தமிழறியேன் கவியேன்மாட்டேன், எண்ணோடு பண்ணிறைந்த கலைகளாய, தன்னையுந்தன் நிறத்தறியாப் பொறியிலேனை" என்று தம்மைத்தாமே குறைத்துக் கூறிக்கொள்ளுமிவர், பின்னே தம் நிறை தவத்தினுலும் இறைவன் திருவருளாலும் சிவபெருமானுக்குத் தேவாரப் பாமாலை சூட்டியருளியதை,

> "பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண்டாங்கே
> பன்னியநூற் றமிழ்மாலை பாடுவித்தென்
> சிந்தைமயக் கறுத்தருளி னானை"

என்றும்,

> "பத்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப் பன்னாட்
> பாமாலை பாடப் பயில்வித் தானை"

என்றும்,

> "சலம் பூவொடு தூப மறந்தறியேன்
> தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

என்றும் தம்வாக்குகளிலேயே குறித்து வைத்துப் போந்துள்ளார். திருமுறை கண்ட புராணம்,

"திருநாவுக் கரையரெனுஞ் செம்மையாளர்
தீயமணர் சிறை நீங்க அதிகை மேவும்
குறுநாமப் பரஞ்சுடரைப் பரவிச்சூலை
கொடுங்கூற்று யினவென்ன எடுத்துக் கோதில்
ஒருமானைத் தரிக்குமொரு வரையுங்காறு
மொருநாற்பத் தொன்பதினா யிரமதாகப்
பெருநாமப் புகலூரிற் பதிகங் கூறிப்
பிஞ்ஞகனே ரடியிணைகள் பெற்றுளாரே"

என்று திருநாவுக்கரசர் 49000 பதிகங்கள், 490000 பாடல்கள் பாடினதாகக் குறிக்கின்றது. ஆனால், "பதிகம் ஏழெழு நூறு பகருமா கவியோகி" என்று திரு ஏகாதசமாலைப் பகுதியால் 4900 பதிகங்களே திருவாய்மலர்ந்தருளப்பட்டன என்பது போதருகின்றது. இதில் எது ஏற்றுக்கொள்ளத் தக்கது? 49000 பாடல்கள் என்பதையே மாறுபாடாகப் பதிகம் என்று திருமுறைகண்ட புராணம் கூறியிருக்கலாம். இப்பொழுது கிடைத்துள்ளவை 321 பதிகங்களே. திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண்மணி ஒருத்தியால் தேவாரப் பதிகங்களுக்குப் பண்முறை வகுத்துத் தந்தார் திருமுறைகண்ட இராசராசப் பேரரசர்.

திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் உயிர்க்குறுதி பயக்கும் உண்மைகளை அறுதியிட்டு உரைப்பனவாய், சிவானுபவப் பயன் நிறைந்தனவாய், கற்பாரது உள்ளத்தை உருக்குவதில் ஒப்பற்ற தன்மை வாய்ந்தனவாய், இனிய எளிய சொன்னடையுடையனவாய்த் திகழ்கின்றன. தாழ்மை மிக்க அவரது மனம்போல அவருடைய திருப்பாடல்களும் தண்ணென்று ஒழுக்கமுடையனவாய்த் துள்ளலும் துடிப்புமின்றித் திகழ்கின்றன. இறைவன் இயல்புணர்த்தும் இவர் இன்னிசைப் பாடல்கள் சிந்தைக்கும் செவிக்கும் இனியனவாய், வந்த இருவினைக்கு மாமருந்தாய் விளங்குவன. இறை, உயிர் ஒன்றித்து நுகரும் பேரின்பத் திளைப்புக்கு அடிகோலுவன. காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி ஓது

வார் தமை நன்னெறிக்குய்ப்பன. ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிவன. புன்புலால் யாக்கை புரை புரை கனிய என்பெலாம் உருக்கும் எழில் வாய்ந்தன. தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித்தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து, உவட்டாமல் இனிப்பன மன ஒருமைப்பாட்டை உருவாக்குவதில், உயிராவணமிருந்து, உற்றுநோக்கி, உள்ளக்கிழியில் உருவெழுதி ஒன்றுபடும் யோகத்தில் இவை சிறந்த படிகளாய் அமைவன. "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று இவரே கூறுமாப்போல் ஏழிசையாய், இசைப் பயனாய் விளங்கும் எம்பெருமானைத் தமிழ் இசைப்பாடல் கொண்டே போற்றுவன. சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார் சிவபுரத்திற்குச் செல்வார் என்றபடி பொருளுணர்ந்து தாய்மொழிலேயே பாடி, சமய அனுபவமும், பக்குவமும் எய்துவது என்னும் பேருண்மைகளைத் தமிழுலகுக்கு முதன்முதல் காட்டியன திருநாவுக்கரசர் திருமுறைகள்.

இக்காலத்துச் சிவபெருமான் திருக்கோயில்களில் இறைவழிபாடாற்றுவோர் தமிழில் அருச்சனை புரிவதற்கு ஏற்ற போற்றித் திருத்தாண்டகங்களை இப்போதைக்கு அப்போதே வழங்கிச் சென்றார். இப்பெருந்தகையைத் தலையில் வைத்துக் கொண்டாடவேண்டாமா? "வேறாகி விண்ணாகி நின்றாய் போற்றி" "எல்லாம் சிவனென நின்றாய் போற்றி," "கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி" என்று தொடங்கும், திருக்கயிலை, திருவதிகை வீரட்டானம், திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகங்கள் தமிழில் வழிபாட்டுக்கு ஏற்றவை. கருங்கல் மனமும் கரைந்துக, தொடுமணற்கேணியிற் சுரந்து தீர்பாயச் செய்யும் திருவாசகமருளிய பெருந்தகையாரும் தமிழாளியாரைப் பின்பற்றிப் போற்றித் திருவகவலைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளது போற்றத்தக்கது. "திருநாவுக்கரசர் நாயனார் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்கள் பக்திச் சுவைகொள்வதோடு, வேதோபநிஷத சாரங்களும், வித்தியா சாதுரிய கற்பனைலங்

காரங்களும் பொழிவனவாதலின் அவருடைய செந்தமிழ்ப் புலமையின் அந்தமிலாற்றல் எல்லாம், பிற வழியிலே செல்லாது சிவபக்தியிலும், சிவத்தியானத்திலுமே சென்றன. உலகியல் நெறிநிற்கும் சாமானிய வித்வான்கள் போல, நிலையில்லாத உலக இன்பத்தைப் பெரிதென மதித்து, மயங்கி, பெண்கள் முகத்தைச் சந்திரனுக்கும் கூந்தலை மேகத்துக்கும், பல்லை முத்துக்கும், நுதலைப் பிறைக்குமாக இன்னோரன்ன உபமானங்களாலே புனைந்து மகிழ்கூராது சிவத்தியானமும், சிவதெரிசனமுமன்றி மற்றொன்று முளத்தில் கொண்டிலர்'' என்று இவர் தேவாரச் சிறப்பை முத்துத்தம்பிப்பிள்ளை மொழிந்து சென்றனர்.

தேவாரம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறுகப் பொருள் கொள்ளினும் அத்துணைப் பொருளையும் இவ்வருமைத் திருச்சொல் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது என்பது ஆராய்வாருக்குப் புலனுகாது போகாது

தேவாரம் 1. தே+வாரம் எனப் பிரித்துத் தேவினிடத்து வாரத்தை, அன்பை, விளைவிப்பது என்று கொள்வர் சிலர். சிவபெருமானிடத்து, இதனை ஓதுவாருக்கும் கேட்பாருக்கும் அன்பை, பக்தியை உண்டுபண்ணுவது தேவாரமாம்.

2. இனித் தே+வாரம் என்றே பிரித்துத் தன்னை ஓதுவாருக்கும் கேட்பாருக்கும் இன்பை விளைவிப்பது என்பர் சிலர்.

3. தே+வாரம் என்று பிரித்தே, சிவபெருமானுக்கே உரிமை உடையது; சிவபெருமான் ஒருவரையே பதியெனக் கொண்டு போற்றலின் சிவபெருமானுக்கே உரியது என்னும் பொருளும் சிறந்து நிற்றல் காண்க.

4. இனி வாரம் என்பதையே இசைப்பாடல் எனக் கொண்டு தேவாரம் தெய்வத்தன்மை பொருந்திய இசைப் பாடல்களாம் என்று பொருள் கூறுவாரும் உளர். சொல்

லொழுங்காலும், இசை ஒழுங்காலும், தெய்வமணம் கமழ்த லாலும் தேவாரம் இப்பெயர் பெற்றது.

5. இதையே தே+ஆரம் எனப் பிரித்துச் சிவபெருமா னுக்கு ஆரமாக, தெய்வ மணங்கமழும் பாமாலையாகவும் கொள்வர்.

நூறு பாடல்கள்கொண்ட தொகுப்பைச் சதகம் என்பர். அது போன்றே பத்துப் பாடல்கள்கொண்ட தொகுப்பு, பதிகம் எனப்பெறும். கடைச்சங்க நாட்களிலிருந்தே பதிகத் தொகுப்புச் செய்வது மரபாகிவந்துள்ளது.

திருமுருகாற்றுப்படை முதலாகப் பத்துப்பாடல்கள், ஒன்ருகத் தொகுக்கப்பட்டு 'பத்துப்பாட்டு' தோன்றியது. முதலாம் பத்து, இரண்டாம் பத்து என்று தொகுக்கப் பெற்றுப் பதிற்றுப்பத்து எழுந்தது. ஐங்குறுநூறும் இவ் வாருன தொகுப்பேயாகும். நாலடியும், இரண்டடியும் ஒவ் வோர் அதிகாரத்திலும் பத்துப் பாடல்கள்கொண்டு பதிகத் தொகுப்புகளாக விளங்குகின்றன. இவ்வாறே, திருநாவுக் கரசர் தேவாரங்களும் பதிகங்களும் விளங்குகின்றன ஒரோ வழி பத்துக்குமேற்பட்டுப் பாடல்கள் பதினென்றுகொண்ட பதிகங்களாக விளங்குகின்றன. பின்வந்த தேவார ஆசிரியர் களாகிய திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி ஆகியோரின் பதிகங்கள் யாவும் பதினொரு பாடல்கள் கொண்டுள்ளன.

இனி "பாயிரம் நாந்தி பதிகம் என்ப" என்னும் விதிப் படி திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தி நாயனரும் இறுதி யில் நாந்தி (திருக்கடைக்காப்பு) கூறலாகிய பாயிரம் உரைத் தலால் பதிகம் எனப்பெயர் பெற்றதாகக் கருதுவாரும் உளர். இங்ஙனம், இவர்களுடைய திருமுறைப் பதிகங்கள் பதிகங்களாகவே அந் 'நாந்தி' இல்லாத திருநாவுக்கரசர் தேவாரங்களும் இனம்பற்றி பதிகம் ஆயிற்று என்பர். இது ஒருமுறை. பத்து என்ற தமிழ்முறைக்கு ஏற்ற தன்று.

இன்னும், "சைவ ஆசிரியர்கள் நால்வரும் திருப்பதிகள் தோறும் சென்று பாடியருளினர் என்று நூல்கள் உரைத்தலின், அத்தல எல்லை சமீபித்த இடத்தும், தலம் அடைந்துழியும், தூல லிங்கமாகிய கோபுரம் தரிசனமாகிய விடத்தும், திருவீதிக்கண்ணும் பரமனை நோக்கிப் பாடப் பெற்றனவாதலின் அவை வழிச் செல்வோர் பாசுரங்கள் என்னும் பொருளாகவும் முடிதல் காண்க. அங்ஙனம், வழிச் செல்வோனுக்குப் பதிகன் என்னும் பெயருண்மை நோக்குக. பதிகன் செய்தது பதிகம். ஆரண்ய சம்பந்தமுள்ளன ஆரண்யகம் என்று கொண்டு காட்டுப்பாட்டுக்கள் என அருத்தம் பண்ணலுண்மையும் கண்டுகொள்க" என்பர் சாமிநாதபண்டிதர். இவ்வாறு கொள்வது வடமொழி மரபு பற்றியதாகும். தமிழ் மரபுக்கு ஏற்றதன்று.

**சைவத்திற்குக் கண்.**

திருநாவுக்கரசர் தேவாரங்கள் சைவ சமயக்கொள்கைகளுக்கும் மெய்யுணர்வுக்கும் கண்ணாகும். ஊனக் கண்வழி உலகக் காட்சி காண்பது போல, சிவ ஞானப் பெருந்தகையாகிய ஞானக்கண் கொண்டு சிவப்பெருங் காட்சியைக் காண முடியும். திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தரையும் சேக்கிழார் பெருமான், "ஓங்கும் பொருட் சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியகண் இரண்டென" ஆக்கியுள்ளார். திருநாவுக்கரசர் தேவாரங்களில்—அவற்றுள்ளும் திருத்தாண்டக, திருக்குறுந்தொகை, திருவிருத்தப் பதிகங்களில், அவற்றுள்ளும் தனித் திருக்குறுந்தொகை, தனித்திருவிருத்த தனித்திருத்தாண்டகப் பதிகங்களில்—'எல்லாமாய், உடனாய், வேறாய் நின்ற" சிவபரம்பொருளின் இயல்புகளை, உலக, உயிர் இயல்புகளை, மக்கட்கு அறிவுறுத்தும் சீர்மையைக் காணலாம். திருநாவுக்கரசர் பாடல்கள் இனிய பண்ணடைவும், சொன்னடையும் உள்ளனவாய், பிற்கால இசைவாணர்கள் தம், இசைப் பாடல்களுக்கும், இசை வடிவங்களுக்கும் கருவாய், கருவூலமாய், பணிசெய்து படிந்த அவர் மனம்போல துள்ளலும் துடிப்புமின்றித் தண்ணென்ற ஒழுக்கமுடையனவாய்த் திகழ்கின்றன. "என்னப்பன் என்னைப் பாடினான்" என இறைவனே

பாராட்டினார் என்ற வரலாறும் உள்ளது. சிந்தை தனிலசைவு தோன்றிய முதுமை நிலைகண்டு மட்டுமின்றி, சைவ உலகத்திற்கு எல்லாம் எக்காலத்துக்கும் ஞானத்தந்தை என்ற பொருளையும் உள்ளடக்கியே தாம் முதன்முதலிற்றிரு நாவுக்கரசரைக்கண்டுகளித்தபோது திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை "அப்பர்" என்று பரிந்துரைத்தார். "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்று பாடிய முதற் பதிகத்திலேயே, எடுத்த எடுப்பிலேயே, "பாவுற்ற செந்தமிழின் சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினால், நாவுக்கரசென்று உலகேழினும்" அவர் நன்னாமம் நயப்புற நண்ணிற்று.

இவர் தேவாரப் பதிகங்களில் பார்க்கத்தக்க சைவ சமயக்கொள்கைகளும், குறிகளும் அடையாளமும், கோயிலும், நெறிகளும், சிவன் நின்றதோர் நேர்மையும், பதி, பசு, பாசங்களின் பான்மைகளும் சிவனருளும் அவ்வருள் மாந்தித் துய்க்கும் பேரின்ப நிலைகளும், இன்னோரன்ன பிறவும், அங்கும், இங்கும், எங்கும் பாடல்களில் ஊடுருவிச் செல்வதைப் பார்க்கலாம். அவற்றைப் பல படியாகப் பல கோணங்களிற் பலரும் பார்த்துச் சுவைத்து, அவை தம் திறனாய்ந்து எழுதியுள்ளனர். அவற்றுள் சிலவற்றை நாம் பார்த்தவாறு, அறிந்தசிலவற்றை ஒருவாறு எடுத்து நவில்வோம்.

காணாத கடவுளைக் காணும் உலகில் கண்டுணரும் முறை சிறந்த முறையாகும். இம்முறையைத் திருநாவுக்கரசர் தம் பாடல்களிற் பலவிடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். அருவ நிலையில் உயிருக்குயிராய் எள்ளுக்குள் எண்ணெய்போல், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் இறை, அருவநிலையின்றி, ஐம்பெரும் இயற்கைப் பொருள்களாகிய மண்டிணிந்த நிலம், நிலனேந்திய விசும்பு, விசும்புதைவருவளி, வளித்தலைஇய தீ, தீமுரணிய நீர் என்றாங்கு நின்ற ஐம்பெரும் பூதங்களிலும் காய்கதிரிலும், தண்

1. உருவற்ற நிஷ்கள சிவம் (அருவநிலை) உருத் தாங்கி சகளீகரித்து (அருவ உருவ, உருவத்) திருமேனி கொண்டு தோன்றுதல்.

ணிலவிலும், ஓதிய உடல்களில் எல்லாம் (இயமானனாய்) உயிராய், எட்டுமூர்த்தியாய் இறைவன் தங்கி நிற்பர்.

இனி, அடியவர்க்கு ஆங்காங்கே உருவத்திருமேனி கொண்டு அருளிய திருக்கோலங்களிலும், அன்றி உலகம் யாவையும் தாமுளவாக்கலும், நிலை பெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அளவில்லாத திருவிளையாடல்களைச் செய்துவரும் மும்மூர்த்திகளாகவும் சிவபெருமான் காட்சி தருவார். இவற்றை எல்லாம் சொல்லோவியங்களில் தீட்டித் திருநாவுக்கரசர் காட்டுவதற்கு ஓரிரு சான்றுகள் காண்போம்:-

(அ) அருவம்-பொது-பியந்தைக் காந்தாரம்

*விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத*
*விதியல்லர் விண்ணு நிலனும்*
*திரிதரு வாயுவல்லர் செறுதீயு மல்லர்*
*தெளிநீரு மல்லர் தெரியில்*
*அரிதரு கண்ணி யானை யொருபாக மாக*
*அருள் காரணத்தில் வருவார்*
*எரியர வார மார்ப ரிமையாரு மல்லர்*
*இமைப் பாருமல்ல ரிவரே.*

(ஆ) அட்டமூர்த்தம்

திருவண்ணாமலை - திருநேரிசை

(1) *"இரவியு மதியும் விண்ணும் இருநிலம் புனலும் காற்றும்*
*உரகமார் பவனமெட்டும் திசைஒளி உருவ மானாய்"*

(2) திருக்கச்சி ஏகம்பம் - திருத்தாண்டகம்.

*பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வந் தான்காண்*
*பனிவரைகள் இரவினொடு பகலாய் நின்ற*
*சீரவன்காண் திசையவன்காண் திசைகளெட்டும்*
*செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தை செய்யும்*
*பேரவன்காண் பேரா யிரங்க ளேத்தும்*
*பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த*
*ஏரவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி*
*ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே.*

(3) நின்ற திருத்தாண்டகம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறவுருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே!

(இ) உருவத்திருமேனிகள்

(1) கோயில்-திருவிருத்தம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

(2) கோயில்—திருத்தாண்டகம்

பட்டுடுத்துத் தோல்போர்த்துப் பாம்பொன் றார்த்துப்
பகவனார் பாரிடங்கள் சூழ நட்டம்
சிட்டராய்த் தீயேந்திச் செல்வார் தம்மைத்
தில்லைச் சிற்றம்பலத்தே கண்டோ மிந்நாள்
விட்டிலங்கு சூலமே வெண்ணூ லுண்டே
ஓதுவதும் வேதமே வீணை யுண்டே
கட்டங்கங் கையதே சென்று காணீர்
கறைசேர் மிடற்றெங் கபாலி யார்க்கே.

(3) திருப்பூவணத் திருத்தாண்டகம்

"வடிவேறு திரிசூலந் தோன்றும் தோன்றும் வளர்சடைமேல்
இளமதியம் தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும் காதில்வெண்
குழைதோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும் எழில்திகழும்
திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழில்
திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே."

(4) ஆங்கணைந்த சண்டிக்கும் அருளியன்று தன்முடிமேல்
அலர்மாலை அளித்தல் தோன்றும்
பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளியன்று பலபிறவி
அறுத்தருளும் பரிசும் தோன்றும்
கோங்கணைந்த கூவிளமும் மதமத்தம்முங் குழற்கணிந்த
கொள்கையொடு கோலந் தோன்றும்
பூங்கணைவேள் உருவழித்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே.

(5) திருவாய்மூர் - திருத்தாண்டகம்.

பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கை யாளைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன்
கொக்கி னிதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடற் றலையொன்று கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே.

## மும்மூர்த்திகள்

(1) திருமுண்டீச்சுரம்-திருத்தாண்டகம்

மூவன்காண் மூவர்க்கும் முதலா னான்காண்
முன்னுமாய்ப் பின்னு மாய் முடிவா னான்காண்

(2) திருத்தலையாங்காடு-திருத்தாண்டகம்

சிவனாகித் திசைமுகனாய்த் திருமா லாகிச்
செழுஞ்சுடராய்த் தீயாகி நீரு மாகி

(3) மறுமாற்றத் திருத்தாண்டகம்

மூவுருவின் முதலுருவாய் இருநான் கான
மூர்த்தியே என்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோரும் சிறந்து வாழ்த்தும்
செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும்."

இனி, சிவபெருமான் உலகத்துப் பொருள்களில் உடனாய் நின்றாலும் அவற்றின் வேறாக நிற்பார் என்றும் அறிவுறுத்துகிறார் அரசர்.

### திருநெல்வாயில் அரத்துறை—திருக்குறுந்தொகை

2. சிவம் உலகத்துப் பொருள்களாகி, ஆனால் அவை அல்ல வாகி நிற்றல்

1. அதியொப் பானை யரத்துறை மேவிய
கதியொப் பானைக்கண் டீர்நாந்
தொழுவதே

அதி : உயிர்களின் உணர்வைக் கடந்தவர் என்னும் பொருளது.

"உலகினை இறந்து நின்றது அவனுரு என்பதோரார்"

என்று சிவஞான சித்தியாரும் இந்நிலையை எடுத்தோதும்.

### 2. பொது-பியந்தைக் காந்தாரம்

"விரிகதிர் ஞாயி றல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதரு வாயு வல்லர் செறுதீயு மல்லர்
தெளிநீரு மல்லர் தெரியில்
அரிதரு கண்ணி யாளை யொருபாக மாக
அருள்கா ரணத்தில் வருவார்
எரியர வார மார்ப ரிமையாரு மல்லர்
இமைப்பாரு மல்ல ரிவரே.

### 1. திருவானைக்கா திருத்தாண்டகம்

3. உயிர்களை இயக்கு பவன்-ஆட்டுவிப்பவன் ஆகிச்சிவம் இருத்தல். ஊன்-உயிர்-உணர்வு.

ஊனாகி உயிராகி யதனுள் நின்ற உணர்வாகிப்
பிறவனைத்தும் நீயே ஆனாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்
கேனே.

அனைத்து நீயே ஆயினமை உணரப்படுதலிற் சிலர் உறவும் சிலர் பகையுமாதல் நீங்குதலும், நீயே என் உணர்வுக்கு முதலாதல் உணரப்படுதலின் யான் என்பது நீங்குதலும், ஞானமே (அறிவே) வடிவாய் நிற்றலும் இன்பம் இடையறாது ஈண்டுதலும் உளவாமாகலின் உன் பொற்பாதம் அடையப்பெற்றால்

எனக்கு வரும் துன்பம் யாதுளது? என்று வினவுகிறார் அரசர். இவ்வூனாகி, உயிராகி, உணர்வாகி நின்ற நிலை கூறுவதை நம்மாழ்வாரும்,

"ஊனில் உயிரில் உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே" என்று ஓதுவர். இவற்றைப் பின்பற்றிக் கல்வியிற் பெரிய கம்பரும்,

*"வானின் றிழிந்து வரம்பி கந்தமாபூ தத்தின் வைப்பெங்கும்*
*ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறனும் உளன் என்ப"*

என்று இறைநிலையை அமைப்பர்.

இம்மூன்று நிலைகளில், அண்டத்திலும் பிண்டத்திலும் முறையே, செயல், இச்சை அறிவுகளாகி இறை இயங்கும் மும்முமைசால் இயல்புகள் கூறப்பெறுகின்றன. கல்வியிலும் ஊன், உயிர் உணர்வு ஓம்புநிலைகள் ஒன்றித்து ஒருங்கே வளர்ந்தால்தான் முழுமனிதத்தன்மை வளரும்.

மணிவாசகப் பெருந்தகையும் தம் அணிவாசங்கள் இரண்டில்,

*"ஊனா யுயிரா யுணர்வா யென் னுட்கலந்து*
*தேனாய முதுமு மாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்"*

*"ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டென் னுள்ளமும்போய்*
*நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"*

என்று இவர் கொள்கையை அடியொற்றிப் பாடுதல் காண்க.

*(2) ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே*
*அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே*
*ஒட்டுவித்தால் ஆரொருவர் ஒடா தாரே*
*உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே*
*பாட்டுவித்தால் ஆரொருவர் உருகாதாரே*
*பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே*
*காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே*
*காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே!*

### (3) திருக்காளத்தி-திருத்தாண்டகம்

*மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்*
*வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்*
*இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்*
*ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்*
*புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்*
*பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்*
*கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்*
*காளத்தி யானவனென் கண்ணு ளானே.*

4. சிவன் ஓங்காரத்துட் பொருளாய் நிற்கும்- ஓங்காரமாய் நிற்ற லின் அது உலகத்தை இயக்கும் ஒலியாகவும் சொல்லும் பொருளு மாகவும் நிற்கும்.

உலகை ஆக்கி, அளித்து, அழித்து, மறைத்து, அருளி ஐந்தொழில் நடத்தி, அதை இயக்கி வரும் இறைவனது படைப்பு நுட்பம், ஓசையில் தொடங்குவதால் அவனை 'ஓசை ஒலியெலாம் ஆனவன்' என்று தத்துவ ஆசிரியர்கள் கூறுவர். அந்த ஓசைக்கு முதல் "ஓம்" - பிரணவம் - மூலமந்திரம் என்று கொள்வர். அது சைவ தத்துவத்தில் ஐந்தெழுத்தின் உள்ளீடாய் அமையும். இவற்றையெல்லாம் இணைத்துத் திருநாவுக்கரசர் சிவபெருமானை ஓங்காரத்து உட்பொருள் என்றும், உலகத்தை இயக்கும் ஒலி என்றும், இவ்வொலியை அதனாலாகிய வேத உபநிடத சமயத் தத்துவக் குறிப்புக்களும், இவை அடங்கிய தமிழ் நூல்களும், சொல்லும், அது கூறும் பொருளுமாய் இருப்பவன் என்று கூருநிற்கும், என்று அடிக்கடி சொல்லையும் பொருளையும் இறைவனோடு இணைத்து 'சொல்லும் பொருளும்' என்றே அடிக்கடி பாடுவர்.

சிவம் ஓங்காரத்துட்பொருள் என்பதை உணர்த்தியருளும் தேவாரச் சான்றுகள் ஒருசிலவற்றையும், உலகத்தை இயக்கும் சொல்லும் பொருளுமாய் அதைக் கடந்தும் இருக்கின்றது சிவம் என்பதை உணர்த்தியருளும் தேவாரச் சான்றுகள் ஒரு சிலவற்றையும் பார்ப்போம்.

(1) ஓங்காரம் திருவாரூர்-திருத்தாண்டகம்.

*"ஊனேறு படுதலையி லுண்டி யானைகாண்*
*ஓங்காரன்காண் ஊழிமுத லானான்காண்"*

(2) திருக்கச்சியேகம்பம்-திருத்தாண்டகம்

*"உரித்தவன்காண் உறக்களிற்றை உமையாள் ஒல்க*
*ஓங்காரத் தொருவன்காண் உணர்மெய்ஞ் ஞானம்*
*விரித்தவன் காண்."*

ஓங்காரத்தினால் உணர்த்தப்படுகின்ற தன்போல்வார் ஒருவருமின்றித் தான் ஒருவனேயாய் நிற்பவன். இது பற்றியே சிவபெருமானை 'ஏகன்' என சுவேதாசுவதர உபநிடதம் வழங்கும்.

(3) திருமடிபாடி-திருத்தாண்டகம்.

*"ஒருசுடராய் உலகேழு மானான் கண்டாய்*
*ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்"*

"பிரணவ மந்திரத்தின் உட்பொருள், பொருள்களும் பொருள்களைப் பற்றிய நினைவும் தோன்றி நின்று அழிதலைக் குறிப்பது. அத்தோற்றம் முதலிய மூன்றனையும் நிகழ்விக்கும் தலைவன் இறைவனே யாதலின் அவனே அவ்வுட்பொருளாவான் என்க.

(4) திருகுடந்தைக் கீழ்க் கோட்டத்-திருத்தாண்டகம்

"சொன் மலிந்த மறைநான்கா றங்க மாகிச்
சொற்பொருளும் கடந்தசுடர்ச் சோதி போலும்".

தான் இயல்பாகவே விளங்கும் இயற்கை உணர்வினாய் நின்று நாதத்தைச் செலுத்தி அது வாயிலாக உயிர்களின் அறிவை விளக்கி நிற்பவன் என்று இது பொருள்படுமாறு காண்க.

"உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற மெய்யா" என்னும் திருவாசகம் சமட்டியாய்-தொகுதியாய்-நிற்கும் ஓங்காரம், வியட்டியில்-பகுதியில் —

1 2 3 4 5
அகர, உகர, மகர, விந்து, நாதங்களாய் (ஐந்தாய்) உயிர்களின் அறிவை விளக்கும். இறைவன் ஐவகை நிலையில் இவற்றைச் செலுத்துமாற்றலே.

சிவஞானபோதம் நான்காம் நூற்பா முதல் அதிகரணத்தில்

அகார உகாரம் அகங்காரம் புத்தி
1 2 1 2
மகார மனம் சித்தம் விந்து - பகாதிவற்றை
3 3 4 4
நாதம் உளவடிவா நாடிற் பிரணவமாம்
5
போதம் கடற்றிரையே போன்று

எனவும்

எண்ணில வோங்காரத் தீசர் சதாசிவமாம்
1 2
நண்ணிய விந்துவொடு நாதத்துக்-கண்ணிற்
பகரயன்மா லோடு பரம னதிதெய்வம்
3 4 5
அகர உக ரம்மகரத் தாம்

எனவும் விளங்கும்.

சொல்லும் பொருளும் ஆனதற்குச் சில சான்றுகள்,

(1) திருவையாறு-பழந்தரக்கராகம்

"எண்ணாய் எழுத்தானாய் எழுத்தினுக்கோ ரியல்பானாய்"
(நாதம்) (விந்து) (விந்து காரியங்களில் இயல்பு)

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப' என்றும் திருக்குறள் இவ்வியல்பைக் குறிக்கும்.

(2) திருவையாறு-திருத்தாண்டகம்.

"ஓசை ஒலியெலா மானாய் நீயே"

ஓசை-சத்தம் வெற்றோசை; ஒலி நாதம் பொருளோசை (எழுத்தும்-சொல்லும்) எனப்பொருள்படும்.

(3) திருக்கீழ்வேளூர்-திருத்தாண்டகம்.

"சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கித்
தூங்காதார் மனத்திருளை வாங்கா தானே"

சொல்லும் பொருளும் தெரிந்துணரும் மெய்யுணர்வுக் கல்வி தான்,

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

என்று சிறக்கும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கூட எளிதில், இனிதில், குறைந்த காலத்தில், குறைந்த பணச்செலவில், இயற்கை முறையில், பொருளுணர்ந்து பல கலைகளையும் தாய்மொழிவழிக் கற்கும் கல்வியே சிறக்கும்.

(4) தனித்திருத்தாண்டகம்

நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தி
நலஞ்சுடரே நால்வே தத்தப் பால்நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலவாத புலாலுடம்பே புகுந்து நின்ற
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத் தெங்கடவு ளானே.

(1) கோயில்-திருத்தாண்டகம்.

5. சிவம் உலகத்தை- ஓசையைக் கடந்தது போல, காலங் கடந்து, பிறப்பிறப் பற்று ஆதியந்தமின்றி நிற்பது.

மூதாயர் மூதாதை யில்லர் போலும்
முதலும் இறுதியும் தாமே போலும்"

(2) திருவாரூர் திருத்தாண்டகம்

"பிறவி இறவி யில்லார் போலும்"

"பிறப்பிடும்பை சாக்காடொன் றில்லார் போலும்"

(3) திருவானைக்கா-திருத்தாண்டகம்

"மருந்தானை மந்திரிப்பார் மனத்து ளானை
வளர்மதியம் சடையானை மகிழ்ந்தென் னுள்ளத்
திருந்தானை இறப்பிலியைப் பிறப்பி லானை
இமையவர்தம் பெருமானை.

(4) திருநாரையர்-திருத்தாண்டகம்

"மூவாதி யாவர்க்கும் மூத்தான் தன்னை
முடியாதே முதல்நடுவு முடிவா னானை."

"பிறவாதும் இறவாதும் பெருகினானை."

இனிய பொருள்

(1) நனிபள்ளித் திருநேரிசை

6. இப்படிப்பட்ட சிவம் நினைப்பவர்க்கு இனிய பொருள்-தன் பால் அன்பு கொண் டோர்க்கு அருள்வர்-உள்ளத்தும் எழுந் தருளுவர்

"பண்ணினார் பாடலாகிப்
பழத்தினி லிரமதாகி"

(2) திருவிடைமருதூர்-திருக்குறுந் தொகை

"கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே"

(3) தனித்திருக்குறுந்தொகை

மனிதர்கா ளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே.

(4) தனித்திருக்குறுந்தொகை

தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோர்
உள்ளத் தேறல் அமுத ஒளிவெளி

(5) திருக்கருகாவூர்-திருத்தாண்டகம்

"பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்."

(6) திருவாரூர்-திருத்தாண்டகம்

"திருமணியைத் தித்திக்கும் தேனைப்பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்ததேறல்"

## அன்புகொண்டோர்க்கு அருளல்

1. திருக்கச்சி ஏகம்பம் திருத்தாண்டகம்

"...வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணு ளோர்க்கும்
சேயவன் காண் நினைவார்க்குச் சித்தமாரத்
திருவடியே உள்கி நினைந்தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே"

2. கச்சி ஏகம்பம்-காந்தாரப்பன்

"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக்
கரவார்பால் விரவாடும் பெருமானை."

3. திருநாகேச்சுரம்-திருநேரிசை

"இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலுந் தம்மை
நச்சுவார்க் கினியர் போலும் நாகஈச் சரவனுரே"

4. "சொற்றுணை மாலை கொண்டு
தொழுதெழு வார்கட் கெல்லாம்
நற்றுணை யாவர் போலும் நாகஈச் சரவனுரே"

5. "எம்பிரான் எம்மை யாளும் இறைவனே என்று தம்மை
நம்புவார்க் கன்பர்போலும் நாகஈச் சரவனுரே"

6. திருஇன்னம்பர்-குறுந்தொகை

"என்னிலாரு மெமக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாமொரு வன்னுளன்
என்னு ளேயுயிர் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே"

(ஆன்மார்த்த சிவபூசையில் உள்ளக் கமலத்து வீற்றிருக்கும் இறைவனை வெளியில் மந்திர பூர்வமாக வெளிக் கொணர்ந்து ஆவாகனம்செய்து மீண்டும் தனக்குள் ஒடுக்கு நிலை.)

அப்படிப்பட்ட தொண்டர்க்குத் தொண்டு செய்யவிரும் பலுறும் அரசர் நம்மையும் அத்தொண்டின்பால் ஆற்றுப் படுத்துகின்ருர். ஐம்பெரும் பூதங்களாலியன்ற உலகம் பெரிது. அதை ஆக்கி அளித்தழிக்கும் இறைவன் பெரியன்.

**7. சிவத்தொண்டு செய்ய ஏவல்.**

அவன் தொண்டருள்ளத்துள் அடக்க மென்ருல் அவன் பெருமை பேசொணுது என்று ஔவையார் குறிப்பர். அவர்க்குத் தொண்டாற்றுவது சிவபெருமானுக் காற்றுவது போலேயாம்.

*நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்*
*படமாடுங் கோயில் பரமர்க்கங் காகும்.* — திருமூலர்.

சிவஞான போதமும் 12ஆம் நூற்பா இரண்டாம் மூன்றும் அதிகரணங்களில் சிவனன்பர்களோடு மருவுவதையும், மாலற நேயம் மலிந்தவர் திருவேடத்தையும் அரனெனவே தொழவேண்டுமென்பதனையும் கூறுகின்றது. இத்தொண் டர்க்குத் தொண்டு செய்வதைப் பொதுவாகப் பலவிடங் களிலும், சிறப்பாகத் திருவாரூர்த் திருவிருத்தம் பதிகம் முழுதிலும் "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" என்று பலபடப் பாராட்டுகிருர் நாவரசர். அவ்வடிகளாவன:-

"புலம்பலம் பாவரு தொண்டருக்குத்
தொண்டராம் புண்ணியமே,
"புற்றிடங் கொண்டான்தன் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"பொருவிடை யானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"பூசனைப் பூசுரர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"பொருந்துந் தவமுடைத் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"பூங்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"புண்ணியன் தன்னடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"பொருப்பன் விருப்பமர் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,

"பொய்யன் பிலாஅடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே,
"பொற்கழ லானடித் தொண்டர்க்குத்
தொண்டராம் புண்ணியமே"

இனி, சிவநெறியின் பொதுநோக்கை, சைவத்தின் சமரசத்தை உலகோர்க்கு உணர்த்தும் இவர் பாடல்கள் பல.

8. சிவநெறித் பொதுப்போக்கு- வைதிக-தமிழ்ச் சைவ இணைப்பு.

வேதாந்த, சித்தாந்த சமநெறியையும், சமரச சுத்த சன்மார்க்க நெறியையும் வகுத்த தாயுமானுர், இராமலிங்கஅடிகள் ஆகியோர்க்கு முன்னேடியாக இவர் விளங்குகின்றார். அதோடு, வடமொழி வேதத்தை ஒதுக்கி, தனித்தமிழ்ச் சைவ மெனப் பிரித்துக்காட்ட முயலும் இயல்புக்கு முற்றிலும் மாருக, வடமொழி வேதாகமங்களைத் தமிழோடு இணைத்துச் சிவத்தை - தென்றமிழ்க்கடவுளை - தென்னுடுடைய சிவனை- வைதிக சைவமாகத் திருநாவுக்கரசர் ஒன்றுபட்ட சைவ மாகக் காட்டியிருப்பது போற்றத்தக்கது

முதலில் சைவத்தின் சமரசத்துக்குச் சான்றுகளைப் பார்ப்போம்.

(1) திருப்பெருவேளுர்-திருநேரிசை

"விரிவிலா அறிவினர்கள் வேருெரு சமயஞ் செய்து
எரிவினுற் சொன்னுரேனும் எம்பிராற் கேற்ற தாகும்."

(2) திருமாற்பேறு-திருக்குறுந்தொகை

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திர முங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே."

(3) திருச்சேறை-திருக்குறுந்தொகை

"குலங்க ளென்செய்வ குற்றங்க ளென் செய்வ
துலங்கி நீநின்று சோர்ந்திடல் நெஞ்சமே
இலங்கு சேறையிற் செந்நெறி மேவிய
அலங்க னுருளர் அஞ்சுவ தென்னுக்கே"

(4) திருக்கன்ருப்பூர் - திருத்தாண்டகம்

"எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனும் கண்டால் உள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர் தேவர் அவர்தேவர் என்றுசொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே."

(5) "சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவு ளாரே."

இக்கொள்கையே பிரமசூத்திரம் நான்காம் அத்தியாயம் முதற்பாகம் 12ஆம் அதிகரணத்துள், நீலகண்டபாடியத்துட் காட்டப்பட்டது. "சண்டாளனுயிருப்பினும் சிவ என்று சொல்வானேல், ஒருவர் அவனோடு பேசுக, அவனோடு வசிக்க, அவனோடு இருந்து உண்ணுக" என்று காட்டப் பெற்றது. இம்மந்திரம் இக்காலத்து அவ்வுபநிடதத்துள் காணப்பட்டிலது என்பர்.

எனினும் வடநூற்கடலும் தென்றமிழ்க்கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான போதமாபாடிய முதல்வர், மாதவச் சிவஞான யோகிகள், மேற்காட்டிய உபநிடத மந்திரத்தையே தமது கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதியில்,

"சிவவெனும் மொழியைக் கொடியசண் டாளன்
செப்பிடின் அவனுடன் உறைக
அவனொடு கலந்து பேசுக அவனொடு
அருகிருந் துண்ணுக என்னும்
உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா
ஊமரோ டுடன்பயில் கொடியோன்

இவனெனக் கழிந்தால் ஐயனே கதிவே
றெனக்கிலை கலைசை யாண்டகையே"

எனக் கூறுகின்றார்.

இனிச் சாதிச் சமரசத்தோடு, வடமொழி தென்மொழிப் பிணக்கம் நீக்கி, இணக்கம் செய்தமைக்குச் சில சான்றுகள் தருதும். இது முதற்பிரிவுள் குறிக்கப் பெற்றிருக்கிறது.

திருக்கடம்பந்துறை-திருக்குறுந்தொகை

1. "அரிய நான்மறை யாறங்கமாய்"

(சிக்ஷை, நிருத்தம், கல்பம், வியாகரணம், சந்தோபிசிதம், சோதிடம் என்பன ஆறு அங்கங்கள்.)

2. ஆரியந் தமிழோடிசை யானவர்.

3. திருக்கடவூர்-திரு. மாயனம்-திருக்குறுந்தொகை.

இணங்கு பாகத்தர் ஆரண நான்மறை
கணங்கள் சேர்கட வூரின் மயானத்தார்.

4 திருஓமாம்புலியூர்-திருத்தாண்டகம்.

"ஓதிமிக அந்தணர்கள் எரிமூன் றோம்பும்
உயர்புகழார் ஓமாம் புலியூர் மன்னும்
தீதில் திருவடதளி எம்செல்வன்"

5. திருமீயச்சூர்-திருக்குறுந்தொகை.

"பஞ்ச மந்திரம் ஓதும் பரமனார்"

"ஈசானஸ் ஸர்வ வித்யா நாம்"

எனத்தொடங்கும் ஐந்து மந்திரங்களால் ஓதப்பெறும் முழு முதல்-மேற்குறித்த மந்திரங்கள் வேதத் தெளிவா யுள்ளவை.

6. திருவாஞ்சியம்-திருக்குறுந்தொகை.

"அங்க மாறும் அருமறை நான்குடன்
தங்கும் வேள்வியர் தாம்பயி லுந்நகர்
செங்கண் மாலிட மார்திரு வாஞ்சியம்."

7. திருக்கச்சி ஏகம்பம்-திருத்தாண்டகம்.

"உரித்தவன்காண் உரக்களிற்றை உமையாள் ஒல்க
ஓங்காரத் தொருவன்காண் உணர்மெய்ஞ் ஞானம்
விரித்தவன்காண் விரித்த நால்வேதத் தான்காண்."

8. திருவலஞ்சுழியும் திருக்கொண்டையூர்க் கோடீச்சுரமும் திருத்தாண்டகம்.

"வண்டார்பூஞ் சோலை வலஞ்சுழியான் கண்டாய்
மாதேவன் கண்டாய் மறையோடா றங்கங்
கொண்டாடு வேதியர்வாழ் கோட்டை யூரிற்
கோடீச் சரத்துறையுங் கோமான் தானே."

9. திருத்தலையாலங்காடு-திருத்தாண்டகம்.

"மெய்த்தவத்தை வேதத்தை வேத வித்தை
விளங்கிளமா மதிசூடும் விகிர்தன் தன்னை"

10. திருப்பாசூர்-திருத்தாண்டகம்

"அருமறையோ டாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே"

11. திருச்சிவபுரம்-திருத்தாண்டகம்.

"வானவன் காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்,
ஆனவன் காண்."

12. திருஓமாம்புலியூர்-திருத்தாண்டகம்.

"ஓதமிகு அந்தணர்கள் எரிமூன் றோம்பும்
உயர்புகழார் தரும்ஓமாம் புலியூர் மன்னும்
தீதில்திரு வடதளியெஞ் செல்வன் தன்னைச்
சேரா்தே திகைத்துநாள் செலுத்தினேனே!"

13. திருக்கஞ்சனூர்-திருத்தாண்டகம்.

"நாவலனை நரைவிடை யொன் றேறு வானை
நால்வேதம் ஆறங்க மாயி னானை"

14. "நாரணனும் நான்முகனும் அறியா தானை
நால்வேதத் திருவானை நம்பி தன்னை"

15. திருமறைக்காடு-திருத்தாண்டகம்

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"

16. "முத்தமிழும் நான்மறையும் ஆயினன் காண்",

**9. திருவைந்தெழுத்துச் சிறப்பு.**

சிவபெருமான் திருஐந்தெழுத்துச் சிறப்பை, நமச்சிவாயத்தின் நன்மையை ஏற்ற இடங்களில் வற்புறுத்திச் சைவர்களை அதை ஒல்லும் வாயெல்லாம் ஓதி உய்யுமாறு திருநாவுக்கரசர் வற்புறுத்துவார் :— சிவபெருமான் ஐந்தெழுத்தை ஓதித்தான் கடலில் கற்றூணைத் தெப்பமாகக் கொண்டு கரையேறினர். திருவிளையாடற் புராணக் கருத்துப்படி எழுபிறப்புக் கடலும் நீந்தியதற்கு இது அறிகுறி என்று கொள்ளலாம்.

"அறப்பெரும் செல்வி பாகத் தண்ணல் அஞ்செழுத்தால் அஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா வஞ்சகர் இட்ட நீல
நிறப் பெருங்கடலும் யாரும் நீந்துதற் கரிய ஏழு
பிறப்பெனுங் கடலும் நீந்த பிரானடி வணக்கஞ் செய்வாம்.

என்பது அப்புராணத் துதிப்பாடல்.

(1) இப்பதிகம் நமச்சிவாயப் பதிகம் என்றே பெயர் பெறும் : ஐந்தெழுத்து ஓதுவார் பெறும் பயனை "சொற்றுணை வேதியன்" என்று தொடங்கும் இப்பதிக முழுவதிலும் பரக்கக் காணலாம்.

(1) "நற்றுணை யாவது நமச்சி வாயவே
(2) நாவினுக்கருங்கலம் நமச்சி வாயவே
(3) பண்ணிய உலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே
(4) நாமுற்ற, நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே
(5) நங்களுக் கருங்கல நமச்சிவாயவே
(6) நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே"

(8) "இல்லக விளக்கது இருள்கெடுப்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.
(9) நன்னெறி யாவது நமச்சிவாயவே."

(2) பொதுத்திருநேரிசை

"மந்திரம் நமச்சி வாய வாகநீ றணியப் பெற்ருல்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறகிட் டன்றே".

(3) திருவையாறு-திருக்குறுந்தொகை.

"நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே
வஞ்சமென்பதோர் வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின் ஞமத் திருவெழுத்
தஞ்சுந் தோன்ற அருளுமை யாறரே"

(4) தனித்திருக்குறுந்தொகை நீற்றறைப் பதிகம்

"நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
(பரஞானம்-அபரஞானம்)
நமச்சிவாயவே நாளறி விச்சையும் (மந்திரம்-கலையுணர்வு)
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே"
(வீடுபேறடையும் வழி)

(5) பலவகைத் திருத்தாண்டகம்

"தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வானரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்த் திருவிசும்பி லிருக்கலாமே."

இனி, இவ்வுலக முழுவதையும் சத்தி சிவவடிவிற் கண்டார் இப்பெரியார். நம்மையும், இதில் ஈடுபடுத்து கின்ருர். இவ்வுண்மையை, உலகியல் நுட்பத்தின், மேலேற்றி, இறைவியை, சிவத்தை, உலகத் தாய்தந்தையாக, அம்மையப்பனுக, ஆக்கி இருவரையும் ஒருங்கே சேர்த்துக் கண்டு கருத்தில் வைக்குமாறு நம்மனோர்க்கு அருளுரை வழங்குகின்ருர்.

10. அம்மையப்பர்-சக்தி-சிவ வடிவம் காட்டியருளல்.

இதை, இவர் திருக்கயிலைக் காட்சியாகத் திருவையாற்றிற் கண்டுணர்ந்ததை இந்நூல் இரண்டாம் பிரிவில் கண்டுள்ளோம்.

கடைச்சங்க நாட்களிலேயே இவ்வம்மையப்பர் வடிவத் திருமேனியைச் சங்கத்துச் சான்றோர்கள் அறிந்து, ஏற்றிப் போற்றினர். இம்மரபை, நன்கு விளக்கி, சைவ உலகுக்குப் பெரிதும் எடுத்துப்பாடி, பரப்பின முதற்பெருமை திருநாவுக்கரசருக்குரியதாகும். சங்கப்பனுவல்களிலிருந்து இருசான்றுகள் தருவோம். இரண்டும் பாரதம் பாடிய பெருந்தேவனாரே பாடியனவாம்.

(1) *" கண்ணி கார்நறுங் கொன்றை; காமர்*
*வண்ண மார்பில் தாருங் கொன்றை;*
*ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த*
*சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப;*
*கறைமிடறு அணியலும் அணிந்தன்று; அக்கறை*
*மறைநவில் அந்தணர் நுவலவும்படுமே;*
*பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று; அவ்வுரு*
*தன்னுள் அடக்கிக் காக்கினும் காக்கும்;*
*பிறைநுதல் வண்ணம் ஆகின்று: அப்பிறை*
*பதினெண் கணனும் ஏத்தவும் படுமே;*
*எல்லா உயிர்க்கும் ஏமம் ஆகிய*
*நிர் அறவு அறியாக் காகத்து*
*தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே"*

(புறநானூறு).

(2) " *நீல மேனி வாலிழை பாகத்து*
*ஒருவன் இருதாள் நிழற்கீழ்*
*மூவகை உலகும் முகிழ்த்தன முறையே"* (ஐங்குறுநூறு)

இனி, இவர்தம் தேவாரங்களிலிருந்து சில எடுத்துக் காட்டுக்களை, இவ்வுருவநிலைக்குக் காட்டுவோம்.

### (1) திருச்சேறை-திருநேரிசை

*" பெருந்திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த பின்னை*
*வருந்துவான் தவங்கள் செய்ய மாமணம் புணர்ந்து பின்னும்*

அருந்திரு மேனி தன்பால் ஆங்கொரு பாக மாகத்
திருந்திட வைத்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே."

(2) திருவையாறு-திருநேரிசை

"வடிவுடைமங்கை தன்னை மார்பிலோர் பாகம் வைத்தார்"
"வண்டு சேர்குழலினாளை மருவியோர் பாகம் வைத்தார்."

(3) திருஆக்கூர்-திருத்தாண்டகம்

"மாதூரும் வாள்நெடுங்கண் செவ்வாய் மென்றோள்
மலைமகளை மார்பத் தணைத்தார் போலும்"

(4) திருமழபாடி-திருத்தாண்டகம்

"நெற்றித் தனிக்கண் ணுடையான் கண்டாய்
நேரிழையார் பாகமாய் நின்றான் கண்டாய்"

பற்றற்றவரைத் துறவு மெய்யுணர்வுகளின்பாற் செலுத்தி முத்தி கொடுப்பார் சிவபெருமான். சாவதற்குமுன் அவர்பால் நாட்டத்தைச் செலுத்துங்கள் என்று தாம் கண்ட உண்மையின்பால் நம்மையும் ஆற்றுப்படுத்துகின்றார் நாவரசர். இளமை, யாக்கை, உலகநிலையாமைகளை உலகினர்க்குத் தொல்காப்பியர் காலத்திலிருந்தே - திருக்குறள் நாலடியார் காலத்திருந்தே-அற நூல்களும், தமிழ் இலக்கிய நூல்களும் காப்பியங்களும் ஆங்காங்கே வற்புறுத்திச் சென்றிருக்கின்றன. "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும் நில்லாவுலகம்புல்லிய நிலத்தே" என்ற தொல்காப்பியக் காஞ்சித்திணை உலக நிலையாமை கூறுகின்றது. "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று நிலையாமை காணப்படும்" "நில்லாதவற்றை நிலையினஎன்றுணரும்,புல்லறிவாண்மை கடை" என்று தமிழ்மறை முழங்குகின்றது.

**11. உலக நிலையாமை காட்டி நிலைத்த பொருளை நாடச் செய்தல்**

இம்மெய்யுணர்வு நிலையையே திருநாவுக்கரசர் தாமும் கண்டு உலகினர்க்கும் "யாம் பெற்ற பேறு பெறுக இவ்

வையகம்" என்று ஓதியருளுகின்றார். இதற்குச் சில சான்றுகள் தருவோம் :

(1) திருவானைக்கா-திருத்தாண்டகம்

" எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய் கேனே."

(2) திருக்குன்றப்பூர்-திருத்தாண்டகம்

" ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே."

(3) திருக்காட்டுப்பள்ளி-திருக்குறுந்தொகை

" இன்றுளார் நாளை யில்லை யெனும்பொருள்
ஒன்றும் ஓரா துழிதரு மூமர்காள்
அன்று வானவர்க் காக விடமுண்ட
கண்டனார் காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே".

(4) திருக்கொண்டீச்சரம்-திருக்குறுந்தொகை

" தந்தை தாயொடு தார மெனுந்தளைப்
பந்தம் ஆங்கறுத் துப்பயில் வெய்திய
கொந்த விழ்பொழில் கொண்டீச் சரவனைச்
சிந்தை செய்மின் அவனடி சேரவே."

(5) திருப்புள்ளிருக்கு வேளூர்-திருக்குறுந்தொகை

" கையி னேடுகால் கட்டி யுமரெலாம்
ஐயன் வீடினன் என்பதன் முன்னம்நீர்
பொய்யி லாஅரன் புள்ளிருக்கு வேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே"

அடுத்து ஆசிரியர் ஊன் உடம்பை வைத்துக்கொண்டே உயிர் ஓம்ப வேண்டுமென்றும், உலகினர் உடம்பிடையே மட்டும் உழன்று கொண்டுகிடத்தலியல்பை வற்புறுத்தவும், பல உருவகங்களின் வாயிலாக உடம்பின் விழுப்பத்தை ஆனால் அதிலேயே ஆழ்ந்து விடலின் இழுக்கை விளக்கிக் காட்டுகின்றார். பல உருவகங்கள் வாயிலாக இவ்வுண்மையை உணர்த்துகின்றார்.

12 உடம்பை வளர்த்து உயிர் வளர்த்தல்.

ஆசிரியர் ஊன் உடம்பை வைத்துக்கொண்டே தான் உயிர் ஓம்பவேண்டுமென்று அறிவுறுத்துகின்றதைப் பார்க்கலாம். உடம்பிடையே மட்டும் உலகினர் உழன்று கொண்டு கிடந்து, அதிலேயே மாண்டுவிடுகின்ற உலகியல்பை வெறுத்தும், மறுத்தும், மக்களை உயிரோம்புதற்கே தான் தடங்கருங் கருணைப் பெருங்கடலாகிய சிவபெருமான், இருட்டறையில் கண்ணில் குழவிகள் போலக் கட்டுண்டுகிடக்கும் உயிர்களுக்கு, அறிவுவிளக்கம் பெற்று அருள் பெற்று உய்ய உடம்பு, உட்புறக் கருவிகள், உலகு, நுகர்வுப்பொருள்கள் முதலியவற்றைக் கொடுத்திருக்கின்ருன் ஆதலால், இந் நுட்பங்களை மக்களுக்கு அழகிய பல உருவகங்களால் உடம்பின் விழுப்பத்தை, ஆனால் அதிலேயே ஆழ்ந்துவிட்டால் ஏற்படும் இழுக்கத்தை ஓதியருளுகிருர். இவ்வருளுரைக்கு ஒரு சில எடுத்துக்காட்டுக்கள்:-

(1) திருக்கச்சி ஏகம்பம்-திருநேரிசை

"ஒருமுழ முள்ள குட்டம் ஒன்பது துளையு டைத்தாய்
அருமுழ மதனகலம் அதனில்வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றிக் கிடந்துநான் பிதற்று கின்றேன்
கருமுகில் தவழு மாடக் கச்சியே கம்ப னீரே."

(2) திருவொற்றியூர்-திருநேரிசை

மனமெனுந் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணு
துனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடையகோவே."

(3) தனித்திருநேரிசை

உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகழி யாக
மடம்படு முணர்நெய் யட்டி உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே!"

(4) தனித்திருநேரிசை

காயமே கோயி லாகக் கடிமன மடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய வாட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவி காட்டி னோமே."

(5) திருவாரூர்த்திருத்தாண்டகம்

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன் றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப் பட்டுயிராருங் கடைபோ காரால்.

இவ்வாறே, திருமந்திரமருளிய திருமூலரும்,

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்றும்,

" புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்து"

என்று தம் அணிவாசகத்தில் மணிவாசகரும் கூறிச் சென்றுள்ளனர்

**13. சிவபெருமான் திருவிளையாடல்களும் வீரச்செயல்களும்.**

சிவம் பற்றிய புராணக்கதைகளாக, சிவபெருமான் அருள் விளையாடல்களாக, வீரச்செயல்களாக வருபவற்றை தேவாரப் பனுவல்களில் ஆங்காங்கே வைத்து சைவக் கதைகளில் ஓதுவார்களை ஈடுபடுத்துவர் ஆசிரியர். உள்ளூர் வரலாறுகளும் அவ்வவ்வூர்த் தேவாரங்களில் இடம் பெறுதல் ஒரு சிறப்பு.

### (1) திருக்கைலாயத் திருத்தாண்டகம்

இதில் இராவணனை ஈடழித்தல், காமனைக் காய்தல், காலனை உதைத்தல் போன்ற வீரச்செயல்கள் இடம் பெறுகின்றன.

" மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றி
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையும் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

### (2) திருநள்ளாறு திருத்தாண்டகம் – பிரமன் தலைகொய்தல்

"ஆதிக்கண் நான்முகத்தி லொன்று சென்று
அல்லாத சொல்லுரைக்கத் தன்கை வாளால்
சேதித்த திருவடியைச் செல்ல நல்ல
சிவலோக நெறி வகுத்துக் காட்டுவானை."

(3) திருமறைக்காடு – திருநேரிசைப் பதிகப் பத்துப் பாட்டிலும் இராவணன் திறல் அழித்தது வருகிறது. இன்னும் அவளிவண நல்லூர், திருக்கயிலாயம் ஆகிய திருநேரிசைப் பதிகங்களின் ஒவ்வொரு பாட்டிலும் இராவணனை ஈடழித்துப் பின் அருளின செய்தி சிறப்பிக்கப்படுகிறது.

(4) திருப்புகலூர்-பண்-இந்தளம்
காலனை உதைத்தல்-தக்கன் வேள்வி தகர்த்தல்
கதிரவன் பல் பறித்தல்

"உதைத்தார் மறலி உருளவொர் காலால்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே".

(5) திரு அடைவுத் திருத்தாண்டகத்தில்
இவற்றை எல்லாம் தொகுத்துக் கூறுகின்றார்

"காவிரியின் கரைக்கண்டி (1) வீரட்டானங்
கடவூர்வீ (2) ரட்டானங் காமருசீ ரதிகை (3)
மேவியவீ ரட்டானம் வழுவைவீ (4) ரட்டம்
வியன்பறியல் (5) வீரட்டம் விடையூர் திக் கிடமாம்
கோவல்நகர் (6) வீரட்டம் குறுக்கைவீ (7) ரட்டம்
கோத்திட்டைக் குடிவீரட் (8) டானமிவை கூறி
நாவின்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமரும் சிவன்தமரென் றகல்வர் நன்கே."

இதைப் பின்பற்றி ஒரு பழம்பாடல் சிவபெருமானின் அட்டவீரட்டத்தை நினைவுகொள்ளும் முறையில், கட்டளைக் கலித்துறையாப்பில் தொகுத்துக் கூறுகின்றது.

"பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரம்அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களுஞ் சூடிதன் சேவகமே."

இவர் பாடல்களிற் பயிலும் புராணக் கதைகள் சில வருமாறு:-

(1) தசபுராணப்பாடல் ஒவ்வொன்றிலும் ஒரு திரு விளையாடல் செய்தி வருகிறது.

(1) விடமுண்டது (2) திருமாலும் பிரமனும் அடிமுடி காணாமை (3) தாரகாசுரன் உடல் பிளந்தது (4) திரிபுரம் எரித்தது (5) காலனை வீடு செய்தல் (6) தக்கன் வேள்வி தகர்த்தது (7) சிவன் இருகண்களை உமைமூட ஏழுலகும் இருள்மூட, நெற்றிக்கண் அலர்தரவஞ்சி மற்றை நயனம் கைவிடல் (8) மலர் தொட்ட மதனன் எழில் பொடி வந்து வீழல் (9) மால், ஆயிரமலரால் வழிபட, ஒன்று குறைய, தன் கண்ணால் வழிபாடு செய்ய, அவர்க்குச் சக்கரமருளல் (10) இராவணன் கயிலைமலை எடுக்க முடிதோள் இற்றுவீழ விரலால் நசுக்கியது.

(2) திருக்குறுக்கை வீரட்டத் - திருநேரிசையில் சண்டிகேசுவரர், கோச்செங்கட்சோழர், தம்கண் உள் ளிட்ட ஆயிரம் தாமரையால் அருச்சித்த அரிக்கு ஆழியீந்த வரலாறு, சாக்கியர், கண்ணப்பர், திருமறைக் காட்டெலி, மாவலிவேந்தனது, கணம்புல்லர், இராவணனை ஊன்றி அருளல் ஆகிய அனைத்தையும் ஒரே பதிகத்தில் சேர்த்து வைத்துள்ளார்.

இவற்றுள் உள்ளத்தை உருக்கிக் கொள்ளை கொள்ளும் இரு நிகழ்ச்சிகளை முழுப்பாடல் உருவத்திலேயே பார்ப் போம்.

(அ) *"காப்பதோர் வில்லு மம்பும்*
*கையதோர் இறைச்சிப் பாரம்*
*தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத்*
*தூயவாய்க் கலச மாட்டித்*
*தீப்பெருங் கண்கள் செய்ய*
*குருதிநீ ரொழுகத் தன்கண்*
*கோப்பதும் பற்றிக் கொண்டார்*
*குறுக்கைவீ ரட்ட னரே."*

(ஆ) *"சிலந்தியு மானைக் காவிற்*
*திருநிழற் பந்தர் செய்து*
*உலந்தவ ணிறந்த போதே*
*கோச்செங்க ணானுமாகக்*

கலந்த நீர்க் காவிரிசூழ்
சோணுட்டுச் சோழரி தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட ஞரே."

(3) திருக்கோளிலி-திருக்குறுந்தொகையில்

உபமன்யுவுக்குப் பாற்கடல் அருளல் வருகிறது.

"ஆவின் பால்கண் டளவி லருந்தவப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல்
ஈவி ஞன்குளி ரும்பொழிற் கோளிலி
மேவி ஞனைத்தொ ழவினை வீடுமே."

(6) திருப்பாசூர் திருத்தாண்டகம்

"வேடனய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய ஏனத் தின்பின்
கூடினர் உமையவரும் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி உடன்கோத்துக் கோரப் பூசல்
ஆடினர் பெருங்கூத்துக் காளி காண
அருமறை யோடாறங்கம் ஆய்ந்து கொண்டு
பாடினர் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டிடியேன் உய்ந்த வாறே"

என்று இதில் அருச்சுனனேடு பொருதவரலாற்றைச் சுவை படக் கூறியுள்ளார் இதையே இலக்கியச்சுவை நயத்தோடு வில்லிபுத்தூராரும் தம் பாரதத்தில்—

"ஓரேனம் தனைத்தேட ஒளித்தருளும்
இருபதத் தொகுவ னந்தப்
போரேனந் தனைத் தேடிக் கணங்களுடன்
புறப்பட்டான் புனங்க ளெல்லாம்
சீரேனல் விளைகிரிக்குத் தேவதையாம்
குழவியையும் செங்கை ஏந்திப்
பாரேனை உலகனைத்தும் பணிவுடனே
புகழ்ந்திடத்தன் பதியின் வந்தாள்.

என்று இயம்பியுள்ளார்.

இறையருள் பெற்றோர் 'பணியுமாம் என்றும் பெருமை,' என்றபடி, தம்மைத் தாமே தாழ்த்திக்கொள்ளுவர் என்பது இவர் தேவாரங்களிலிருந்து தெளிவாகும். இவ்வாறு, தம்மைத்தாமே தன்மையில் வைத்து இழித்துக் கூறிக்கொள்வதை ஒருவகை உபதேசமுறையென்று அறிஞர் கருதுவர்.

14. பெருக்கத்து வேண்டும் பெரும் பணிவு.

உபதேசம் அல்லது அறிவுரை கேட்பவர்களை, 'நீ கெட்டவன்' 'அறிவிலி' 'தீவழியில் செல்கின்றாய்' என்றெல்லாம் நேருக்கு நேராக இடித்துரைத்தால் அது நயமாக உறைக்காது. வெறுத்தும் மறுத்தும் மனமுடைந்து அவ்வழியிலேயே மீண்டும் அவர்கள் போகலாம். இடித்து உரைப்பவற்றைத் தன்மேல் ஏற்றியே கூறிக்கொண்டு, போற்றிப் பாடல்கள் பாடுவரேல், பின்வருவோர், அவற்றை ஓதும்போது, நான் பொல்லாதவன் என்றெல்லாம் வருகின்ற வாசகம் அவர் உளச்சான்றைத்தொட்டு அவர் மனத்தை மாற்றினும் மாற்றலாம். இதிலும் ஒரு நயப்பாடும் இருக்கின்றது. பிற சமயாசாரியர்களும் குறிப்பாக மாணிக்கவாசகரும் இம்முறையை மேற்கொண்டுள்ளனர்.

(1) திருவதிகை-திருநேரிசை

"நீதியால் வாழ மாட்டேன் நித்தலுந் தூய னல்லேன்
ஓதியும் உணர மாட்டேன் உன்னையும் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே உன்றன் தூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே அலந்து போனேன் அதிகைவீ ரட்ட னீரே."

(2) திருப்புகலூர்-திருநேரிசை

"பொறியிலா அழுக்கை யோம்பிப்
பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றேன்
நீதனே நீதி ஏதும்
அறிவிலேன் அமரர் கோவே
அமுதினை மனனில் வைக்கும்
செறிவிலேன் செய்வ தென்னே
திருப்புக லூர னீரே"

(3) பொதுத் திருநேரிசை

“வென்றிலேன் புலன்க ளைந்தும்
வென்றவர் வளாகந் தன்னுள்
சென்றிலே னாத லாலே
செந்நெறி யதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றேன்
ஈசனே ஈச னேயோ
இன்றுளே னாளை யில்லே
னென்செய்வான் தோன்றி னேனே.”

(4) திருஎறும்பியூர்-திருத்தாண்டகம்

“பன்னியசெந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணோடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் பொறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நெறியும் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை ஆளாக்கொண்ட

தென்னெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.”

(5) திருக்கொண்டீச்சரம்-திருநேரிசை

“பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோ ளிலாது கெட்டேன்
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சரத்து ளானே.”

(6) தனித்திருத்தாண்டகம்

“குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லேன் நான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன் நடுவே நின்ற
விலங்கலேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவு மிகப் பெரிதும் பேச வல்லேன்
இலம் பொல்லேன் இரப்பதே ஈய மாட்டேன்
என்செய்வான் தோன்றினேன் ஏழை யேனே.”

நடுவேநின்ற விலங்கு என்பது மன உணர்வுடைய மக்கட்கும், அஃதில்லாத பிற உயிர்கட்கும் இடையே நிற்கும் ஒருசார் விலங்குகள். அவை - யானை குரங்கு முதலியன.

மக்கட்கேற்ற மனவுணர்வுடைமையால் 'நடுவே நின்ற' விலங்கலாது ஒழிந்தமையால் "விலங்கலாது ஒழிந்தேனல்லேன்" என்றும் அரசர் அருளினார்.

நடுவே நின்ற என்பது பிறிதின் இயைபு நீக்கிய விசேடணம். இயைபின்மை நீக்கிய விசேடணம் எனக் கொள்ளின் பயன் இன்று.

ஒல்காப்புலமைத் தொல்காப்பியனாரும், முன்பே,

" மாவும் மாக்களும் ஐயறிவினவே
மக்கள் தாமே ஆறறிவுயிரே"
"பிறவு முளவே அக்கிளைப் பிறப்பே"

என்று மக்கள்-மாக்களை விளக்கும் நூற்பாக்கள் வகுத்துப் பின் "ஒரு சார்விலங்கும் உளவென மொழிப" என்றும் கூறினார்.

இளம் பூரணரும் தம் உரையில்-

" அவையாவன கிளியும் குரங்கும் யானையும் முதலாயின"

என்றார்.

15. சிவனருள் பெற்றோரின் செம்மாப்பு.

அடுத்து, சிவனருள் பெற்றோர் செம்மாந் திருப்பர் என்றும் திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து அறியலாம்.

ஊழிபெயரினும் மனங்கலங்கா மன உறுதியும் திண்மையும் உடையராயிருப்பர் இவர்கள். இதற்கு இவரே எடுத்துக்காட்டு. இந்நிலை விளக்கும் சில தேவாரப் பாக்கள் வருமாறு:-

(1) திரு அங்கமாலை

(அ)"இறுமாந்திருப்பன்கொலோ-ஈசன் பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்தி தன்சேவடிக் கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன் கொலோ"

(ஆ) தேடிக் கண்டு கொண்டேன் - திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்."

(2) திருப்பாதிரிப்புலியூர்-திருவிருத்தம்

" மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழு லகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பா திரிப்புலியூர்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே."

(3) பொதுத்திருவிருத்கம்

" வானந் துளங்கிலென், மண்கம்ப மாகிலென், மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென், தண் கடலும்
மீனம் படிலென், விரிசுடர் வீழிலென், வேலைநஞ்சுண்
டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே."

(4) மறுமாற்றத் திருத்தாண்டகம்

" நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரனைச் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே."

(5) " என்றும்நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே."

இனிச் சிவத்தோடு ஒன்றுபட்டுத் துய்க்கும் சில நுகர்வுகளாக, சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்தான சிலவற்றை, இவர்கள் அந்நுகர்வு நிலை கழிந்தபின், உள்ளத்தோர்ந்து, நினைவு கூர்ந்து எடுத்துக் கூறி இன்புறுவர். இக்கூற்றைப் படித்துச் சுவைப்போரையும் ஒரு மெய்சிலிர்க்கும் இன்பநிலைக்கு இது கொண்டுசெல்லும். நில்லாத நீர் சடைமேல் நிற்பித்த இறைவன், நினையாத தன் நெஞ்சை நினைவித்த இறைவன், கல்லாதனவெல்லாம் கற்பித்து, காணாதனவெல்லாம் காட்டி, சொல்லாதனவெல்லாம் சொல்லித் தன்னைத் தொடர்ந்து ஆளாக்கொண்டு, பொல்லாத தன் நோய் தீர்த்த புண்ணியனைப் பூந்துருத்தியிற் கண்டதாக ஓர் அனுபவத்தைத் திருநாவுக்கரசர், திருப்பூந்துருத்தித் திருத்தாண்டகத்திற் கூறுகின்றார். "கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று திருவையாற்றில் திருக்கயிலைக்காட்சியைக் கண்டபோது இவர் கூறுவதை இவர் வரலாற்றுப் பகுதியிற் கண்டோம். மேலும், திருவாய்மூரிலும் இதுபோன்று அநுபவம் ஒன்றைப் பெற்றதாகத் திருநாவுக்கரசர் பாடுகின்றார். திருவாய்மூரில் இருப்போம் தொடரவா என்று வெண்ணீறு பொலிந்த பொன்மேனியோடு முன்செல்ல, அவரை எட்டிப் பிடிக்கத் தொடர்ந்தணையப் பெறுவார் எய்தப் பெற்றிலர். அணித்தே காட்சி கொடுப்பார்போல் பொன்னின்கோயில் ஒன்று எதிரே காட்டி அதனுள் புகுந்துவிட்டார்.

16. எடுத்தியம்பவொண்ணா நுகர்வுகள்-அனுபவங்கள் (Mystic experience)

"எங்கே என்னை இருந்திடம் தேடிக்கொண்டு
அங்கே வந்தடை யாள யருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென்கொலோ"

கழியக்கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன்; வழியிற் கண்டிலேன்" என்றெல்லாம் விளங்காது புலம்புகிறார். இப்படிப்பட்ட அனுபவங்களில் உயிர் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும், கருதிக்கொண்டு, களவு கற்பு

நெறி இன்பத்துறைகள் எல்லாவற்றிலும் வைத்துப்பாடி, சிற்றின்பத்துறைகளைப் பேரின்பத்துறைகளாக மாற்றி யமைக்கும் அனுபவ நிலை கூறுவதும் ஒரு வகையாகும். இதை முதன்முதல் அமைத்துக்காட்டியவர் திருநாவுக்கரசர். பின்னர் இவர் வழிவந்த திருஞான சம்பந்தர், நம்மாழ்வார், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், தாயுமானவர், இராமலிங்க அடிகள், பாரதியார் போன்றவர்களும் இவ்வனுபவநிலைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களுக்கெல்லாம் தலைசிறந்த முறையில் ஒரு பேரின்ப அனுபவநிலைக்காவியமாக வாதவூ ரடிகள் திருக்கோவையாரைத்தந்துள்ளனர். பாரதியார் இன்னொரு படி, புரட்சியாக மேலேபோய்க் கண்ணனைக் காதலியாகக் கண்ணம்மாவாகக் கண்டார்.

தலைவி நிலையில் உயிரை வைத்து, இறைவனைத் தலைவ னாக வைத்து நுகர்ந்த அனுபவப் பாடல்கள் சிலவற்றை இவ்வனுபவநிலைக்கு எடுத்துக்காட்டுகளாகக் காட்ட லாம் :-

(1) திருக்கழிப்பாலை—பண்காந்தாரம் (செவிலி தலைவியைப் பற்றிக் கூறல்-10 பாடல்களும் தலைவி ஈடுபாடு)

"வனபவள வாய்திறந்து வானவர்க்கும்
தானவனே என்கின் றாளால்
சினபவளத் திண்தோள்மேல் சேர்ந்திலங்கு
வெண்ணீற்றன் என்கின் றாளால்
அனபவள மேகலையோ டப்பாலைப்
கப்பாலான் என்கின் றாளால்
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ."

(2) பொதுத் திருநேரிசை

"வெள்ளநீர்ச் சடைய னார்தாம் வினவுவார் போல வந்தென்
னுள்ளமே புகுந்து நின்றார்க் குறங்குநான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீ ரென்னக் கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ள ரோமென்று நின்றார் விளங்கிளம் பிறைய னாரே."

### (3) கோயில்-திருத்தாண்டகம்

காதல் கொண்டவள் வினவும் கண்டோர் கூற்றும்.

" சந்தித்த கோவ ணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரனைக் கண்டீரோ கண்டோ மிந்நாள்
பந்தித்த வெள்ளிடையைப் பாய வேறிப்
படுதலையி லென்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையும் தாமு மெல்லாம்
அணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளக்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே."

### (4) திருவாமாத்தூர்-திருத்தாண்டகம்

இந்நாள் முதல் காதல் கொண்டவள் கூற்று.

(கடவுள் வாழ்த்துப் பாடாண்பகுதியுள் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்துப் பெருந்திணை வாகையாக அருளியது. தேறுதலொழிந்த காமத்திறத்துறை)

ஆமாத்தூர் இறைவன் பிச்சைக்கு வர, பிச்சையிடச் சென்று அவரை எதிர்ப்பட்டு வேட்கை தோன்றி, அவரது நோக்கினைத் தெளிந்து, தனது நோக்கினால் உடன்பட்டு, அவர்க்குரியளாயினாள் ஒருத்தி. பின்பு, அவர் தன்னை வரையாது நீங்குதல் கண்டு, தெளிவு ஒழிந்து பலரொடு முறையிட்டு அவரைக் கூட்டுவிக்குமாறு வேண்டியது இப்பாடல்.

" வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசிக்
கடியதோர் விடையேறிக் காபா லியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே."

"பேதமை காரணமாகப் பொருளல்லவற்றையே (உலகத்தையும் தம்மையுமே) பொருளென்றுணரும் மருள்நிலை, தவங்காரணமாக நீங்கி, அருள்நிலை எய்தியஞான்று இறைவன்

வெளிநின்று அருள் வழங்கப் பெற்று அவ்வருளே கண்ணாக அவனை அறிந்து அன்பு செய்து, உடல் பொருள் ஆவியனைத்தும் அவனுடையனவாக்கி அடியார் தம்மை இழந்து நிற்பர். அவர் பின்னர் பண்டைப் பயிற்சிவயத்தால் அந்நிலையில் நிற்கப் பெறாது, முன்னை மருள்நிலை தோன்றிய வழி, அதனைப் பொறாது வருந்தி அது நீங்குமாறு இறைவனை அருளுவிக்க அடியரை வேண்டுதல்'', இதன் உண்மைப் பொருள் என்பர். இப்பதிகம் முழுவதும் இதே போக்கில் உள்ளது.

## (5) திருவாரூர்-திருத்தாண்டகம்

திருவாரூர்ப் பெருமானது திருப்பெயரைக் கேட்டவுடனே தன்வசமிழந்த தலையன்புடையளாகிய தலைவி ஒருத்தியின் தன்மையைத் தோழி விளங்க உரைத்தது.

> "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
> மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
> பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
> பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
> அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
> அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை
> தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
> தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

தாள்தலை - தனக்கென ஒன்றின்றி அவன் வழியளாய் ஒழிந்தமை.

இதில்,

| | |
|---|---|
| 1. நாமம் கேட்டல் | 1. கேட்டல் |
| 2. மூர்த்தி வண்ணம் கேட்டல் | 2. சிந்தித்தல் |
| 3. ஆரூர் கேட்டல் | 3. தெளிதல் |
| 4. பிச்சியாதல் | 4. நிட்டை கூடல் |

என்ற அநுபவநிலைகளும்

சமயம்
விசேட
நிர்வாண
ஆசாரிய
} தீக்கை வழி - சரியை, கிரியை, யோக ஞானநெறிகளும்

குறிக்கப்பெற்றனவாகவும் பெரியோர் கூறுவர்.

இன்னும், இதில்

1. அன்னை : திரோதானசத்தி
2. அத்தன் : தடத்தசிவன்
3. அகலிடத்தார் ஆசாரம் : தன்முனைப்பில் நின்று வினைகளை யீட்டியும் நுகர்ந்தும், பிறப் பிறப்புக்களில் உழலுதல்
4. தன்னை மறத்தல் : தான் ஒரு பொருள் உண்மையையும், உண்டாகி, அறிந்து, நிற்றலையும் மறத்தல், முதல்வன் ஒருவனையே அறிந்து நிற்றல்
5. தாள் : முதல்வன் உண்மை இயல்பில் ஒன்றுபடல் (இன்பவடிவினது)

என்ற தத்துவப் பொருள்களும் காண்பர் நுண்மாண்
1
நுழைபுலமுடையோர். மேலும், முன்னம் அவனுடைய
2
நாமம் கேட்டல், மூர்த்தியவனிருக்கும் வண்ணம்
3
கேட்டல், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டல்,
4
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆதல், அன்னையும்
5
அத்தனையும் அன்றே நீத்தல், அகலிடத்தார் ஆசா
6 7 8
ரத்தை மறத்தல், தன்னை மறத்தல் தன்னாமம் கெடல்,
9
தலைவன்தாள் தலைப்படல் என்ற இவ்வனுபவங்கள் திருக்குறட் கடவுள் வாழ்த்து பாடல்களில் வரும் கருத்துக்களின் எதிர் ஒலியே என்பர் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவார்கள். முதல் எட்டுத் திருக்குறள்களிலும் நிரலே அமைந்துள்ள கருத்துக்களையே மேற்போந்த முதல் எட்டு

அனுபவங்கள் எதிர் ஒலிக்கின்றன என்று விளக்கம் கூறுகின்றனர் பிள்ளையவர்கள். ஒன்பதாவது இறுதி அனுபவம் நங்கை தலைவன் தாள் தலைப்படல். தாளை வணங்காத்தலை, இறைவனடி சேராதார் என்று இரு குறள்களின் எதிர் ஒலியாகுமாம்.

17. சைவ நன்னெறி முதல்வர்-சரியை தொண்டு-பணி செய்து கிடப்பதே கடன்.

"நாலுபேர் போன வழியில் போ" என்று தமிழ் நாட்டில் அறிவுரை கூறுகின்றார்கள். சைவசமயப் பெருங்குரவர்களாகிய நால்வரும் சென்ற நல்வழிகள் என்று இவற்றைக் கொள்ளலாம் அன்றோ? "நாலுகொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்" என்று நவின்ற நாலு பாதங்கள், சைவ நானெறிகளன்றோ? இவற்றைச் சரியை, கிரியை, யோக, ஞானம் என்பர். "விரும்பு சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி போல் அன்றோ பராபரமே" என்று தாயுமான அடிகள் இவற்றைத் தொகுத்தும், தோற்ற முடிவுகளைக் காட்டியும், பயனை உணர்த்தியும் கூறினர். இவற்றையே தொண்டு (தாச) நன்மகன்மை (சற்புத்திர) தோழ (சக) செம்மை (சன்) நெறிகளாக (மார்க்கங்களாக)வும் பேசுவதுமுண்டு.

இவற்றை வருங்காலத் தலைமுறையினர்க்கு, வாழ்ந்து காட்டியவர் திருநாவுக்கரசரே! இவற்றைப் பொதுவாகவும் சரியை, தொண்டு நெறியைச் சிறப்பாகத் தம் கொள்கையாகவும் குறிக்கோளாகவும் கொண்டு, கற்றோரும் மற்றோரும் எல்லோரும் ஒருங்கே, எளிய, செயல்முறையில் செய்து காட்டி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் வைக்கத்தக்க முறையில், அமைத்துத்தந்த சிறப்பு அரசருக்கே உரியது. இதுவே அன்புநெறியாம். பக்திமார்க்கமாம். சமயக் கிளர்ச்சிக்கால வாழ்க்கைக்கே உயிர்நிலையாய், என்றைக்கும் உயிர்நிலையாய் உள்ள மூல மந்திரம். இவருக்கு ஞான அருள் செய்த ஞான குருவாகிய திலகவதி அம்மையார் இவரைப் "பணி செய்வீர்" என்று

ஆற்றுப்படுத்தினர். அதைப் பின் பற்றியே "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற தொண்டு நெறியை, சரியை நெறியை நிறுவினர் அரசர்.

இம்முறையை இனிது விளக்கும் இவர் தேவாரப் பாடல்கள் ஓரிரண்டைப் பார்ப்போம்:

(1) "குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீரென்கொல் சிந்தை புகாததே."

(2) "பூக்கை கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவிற்றிலார்
ஆக்கைக் கேயிரை தேடி அலமந்து
காக்கை கேயிரை யாகக் கழிவரே."

(3) திருவாரூர்–திருத்தாண்டகம்

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதியென் றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே."

(4) "பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்
உன்னை யல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்ந்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே."

சரியை வழி இணைந்தது, தொண்டு, ஆண்டான் அடிமை, அல்லது தாச வழியாதலின் அதன் அடையாள மாக இறையின் திருவடியைத் தலையில் கொள்ளுதல்—

(தாள்தலை) மரபு. திருவடிநிழலில் சிவப் பேரின்பத் திளைப்பில் இருப்பதை அது குறிக்கும்—தாள்+தலை வைத்தல் (தாடலை). திருவடி தலையில் சூட்டப்பெறல்—(அடிமைக்குச் சான்று) பரதனும் இராமபிரான் பாதுகைகளையே முடியிற் சூடினான்.

திருவடிச் சிறப்பு பெரிதும் இவர்தம் பாடல்களில் பேசப்பெறும் சூலப்பொறியும் இடபக் குறியும் பொறிக்க வேண்டிப் பெற்றுக் கொண்டதும், அடிமை அடையாளமென்பர்.

(1) பெண்ணாகடம் (திருத்தூங்கானை மாடம்)
திருவிருத்தம்.

*" மின்னாரும் மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்*
*துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே"*

(2) *" இடபம் பொறித்து என்னை ஏன்றுகொள்"*
*" திருவடி நீறென்னைப் பூசு."*

(3) திருச்சக்திமுற்றம்—திருவிருத்தம்
திருவடி சூட்டவேண்டல்

*" கோவாய் முடுகி அடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்*
*பூவார் அடிச்சுவடு என்மேற் பொறித்துவை."*

இது நல்லூரிற் கைகூடிற்று.

(4) திருநல்லூர்—திருத்தாண்டகம்

*" நினைந்துருகி மணிமகுடத் தேறத் துற்ற*
*இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி*
*நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்*
*நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே"*

(பத்துப் பாட்டிலும் திருவடியைத் தலையில் வைத்த சிறப்பு பேசப்படுகிறது)

(5) திருமுதுகுன்றம்—திருத்தாண்டகம்

திருவடி தலையில் வைத்த செய்தி, "தான் தெரிந்தங் கடியேனை ஆளாக்கொண்டு, தன்னுடைய திருவடியென் தலைமேல் வைத்த, தீங்கரும்பைத் திருமுதுகுன் றுடையான் தன்னைத் தீவினையேன் அறியாதே திகைத்த வாறே" என்று கூறப்படுகிறது.

(6) திருப்பூந்துருத்தி திருவிருத்தம், திருவையாற் றுத் திருவிருத்தப் பதிகங்கள் இரண்டு, திருஇன்னம்பர் திருவிருத்தம், திருமாற்பேறு திருவிருத்தம் திருவதிகை வீரட்டானத் திருத்தாண்டகம், திருப்புகலூர்த் திருத் தாண்டகம் ஆகிய பதிகங்கள் முழுவதிலும் திருவடிச் சிறப்பே பலபட விவரித்துக் கூறப்பெறுகின்றது.

எடுத்துக் காட்டாக, திருவையாறு—திருவிருத்தம் ஒன்றும், திருஇன்னம்பர் திருவிருத்தம் ஒன்றும், திரு வதிகை வீரட்டான திருத்தாண்டகம் ஒன்றும் காட்டப் பெறுகின்றன.

(7) திருவையாறு—திருவிருத்தம்

" சிந்திப் பரியன சிந்திப்ப வர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந் தாடு மையாற னடித்தலமே."

(8) திருஇன்னம்பர்—திருநேரிசை

" போற்றும் தகையென பொல்லா முயலகன் கோபப் புன்மை
ஆற்றுந் தகையன; ஆறுசமயத் தவர வரைத்
தேற்றுந் தகையன; தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம்ப ரான்றன் இணையடியே."

(9) திருவதிகை வீரட்டானம்—திருத்தாண்டகம்

" அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கும்மடி
அழகெழுத லாகா அருட்சேவடி
சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி
சோமனையும் காமனையும் காய்ந்தவடி

பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி
திருந்துநீர்த் தெண்கெடில நாடனடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன்னடி."

இனிக் கீழ்வரும் இரண்டு பாடல்களும் திருவடி நீழலின்பத்தைக் காட்டுவனவே:

(10) நீற்றறைத் திருக்குறுந்தொகை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

(11) திருப்புகலூர் திருத்தாண்டகம்

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர்களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே."

இனி, சரியை நெறியைச் சிறப்பாக விளக்கினரேனும் தொண்டைச் சிறப்பாக நடத்திக் காட்டினரேனும், சிவ ஞானத் தந்தையாகிய அப்பர் பெருமான், மேலும் உள்ள பிறவழிகளாகிய (அகப்புறப் பூசெய்களாகிய) கிரியை, யோக, ஞான வழிகளையும் மக்கள் உய்யக் காட்டிச் சென்றுள்ளார். இதற்குச் சில சான்றுகள் தருதும்:

(1) திருக்கசியேகம்பம்—காந்தாரம்

"கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
மூப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே."

(2) திருக்கடவூர்—திருநேரிசை

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே."

(3) பொதுத் திருநேரிசை

"தொண்டனேன் பட்டதென்னே தூயகா விரியி னன்னீர்
கொண்டிருக் கோதியாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி
இண்டைகொண் டேறநோக்கி ஈசனை எம்பி ரானைக்
கண்டனைக் கண்டிராதே காலத்தைக் கழித்த வாறே."

(4) திருவாரூர்—திருத்தாண்டகம்

"நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்
இறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே."

(5) தனித்திருக்குறுந்தொகை

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

(6) பொதுத் திருநேரிசை

"விளக்கினார் (1) பெற்றஇன்பம் மெழுக்கினாற் (2) பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்தொ டுத்தாற் (3) தூயவிண் ணேற லாகும்
விளக்கிட்டார் (4) பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞான மாகும்
அளப்பில கீதஞ்சொன்னார்க் (5) கடிகள்தாம் அருளு மாறே."

1. திருவலகிடல்
2. திருமெழுக்கிடல்
3. நல்ல பூக்கள் தொடுத்தல்.
4. திருவிளக்கு இடல்.

"சரியை கிரியை யோகம் ஞானங்களைச் செய்துழி நன்னெறியாகிய மோட்சத்தைக் கொடாவாகலான் ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞானம் நிகழும் என்றது"—சிவஞானபோதம். சூ. 8. அதிக 1.

இதனால் தவநெறியும், தவங்களும், நன்னெறியும், அது ஞானமாவதும், ஞானமாகிய நன்னெறியின் வேறான வீடு பயவாமையும் குறிக்கடபட்டன. இதனைச் சரியை மார்க்கத்தது என்று எள்ளாது மேற்கொண்டு பயனெய்தற் பாலது.

யோக, ஞான முற்றோர்க்கு முன்னிலைகள் வேண்டாம் சாதனங்கள் வேண்டாம் என்பர். இதற்குச் சில சான்றுகள்:

(1) திருமயிலாடுதுறை—திருக்குறுந்தொகை

" கோலும் புல்லுங் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே."

(2) திருஏகம்பம்—திருக்குறுந்தொகை.

" பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றமழு தாயவன் ஏகம்பம்
குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே."

(3) தனித்திருக்குறுந்தொகை

" ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழ வேனுனை நானலேன்;
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாலுனை நானும் தொழுவனே."

(4) திருவாரூர்—திருத்தாண்டகம்

" உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுருவு எழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி

அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே."

திருநாவுக்கரசரை அறிமுகப்படுத்திய முதற்பகுதியில் போற்றி, இன்னிசை, வழிபாட்டுப் பாடல்களாகிய தம் தோத்திரப் பாடல்களிலேயே, சைவ சமய சாத்திரத்திற்கும் அடிகோலிய பெருமையைச் சுட்டிக்காட்டி, இவ்வகையிலும் இவர் ஒரு முன்னோடியாக விளங்கினதைத் தொட்டுவிட்டோம்.

**18. தோத்திரத்தில் சாத்திரம் கண்ட பெருந்தகை.**

'இருள் சேர் இருவினையுஞ் சேரா, இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு' என்ற வள்ளுவப் பெருந்தகை தோத்திர இன்றியமையாமையைக் காட்டிய வழி நின்று, இறைவன் பொருள் சேர்புகழை—இறைவன் எடுத்த அருவ, அருவ-உருவ, உருவத்திருக்கோலங்களை, இறைவனுக்குச் செய்யும் அன்றாடப் பூசெய்களை (நித்தியம்) ஆண்டு இறுதியில் தொட்ட குறை விட்ட குறைகளை நிறைப்பதற்கு எடுக்கும் சிறப்புத் திருவிழாக்களை (நைமித்திகம்) இறைவனுக்கு உடுப்பனவற்றை, அணிவனவற்றை, இறைவன் செய்யும் திருவிளையாடல்களை, இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களின் உள்ளூர் வரலாறு, திருக்கோயில் வரலாறு, திருக்குளவரலாறு, நீர்வள, நில வள, குடிவள, இயற்கைச் சிறப்புக்கள், கோயில் மரங்கள் வரலாறு, பூசெய்து வழிபட்டு அருள் பெற்றோர் வரலாறு, ஆகியவற்றை, சுருங்கக்கூறின் "மூர்த்தி தலம் தீர்த்தங்" களை இன்னிசையால் எடுத்தேத்தி இசைத்துப் பாடி ஊனும் உயிரும் உருகும் தோத்திரப் பாடல்களைப் பாடி, சிவன் புகழைப் பரப்பியதோடு திருநாவுக்கரசர் நிற்கவில்லை.

இத்தோத்திரப் பாக்களில் தாமே, சிவஞான போதம் சிவஞான சித்தியார் போன்ற பதினான்கு சைவ-சித்தாந்த சாத்திரங்கள் உருவானதற்குக் கருக்களாய் (nucleus) கரு ஆலமாய், மெய்யுணர்வுக் கருத்துக்களைக் கட்டி பூசிக் கரு

அருத்துவார்போல, விருந்து முறையிலேயே மருந்து அருந்துவிப்பார் போல, இலைமறை காய்களாய்ப் பொதிந்து வைத்துப் போந்துள்ளார். "ஓர்த்துள்ளம் உள்ளது உணரின், ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என்று செந்நாப் போதாராகிய வள்ளுவப் பெருந்தகை அந்நாளிலேயே சாத்திர இன்றியமையாமையைக் குறித்து வைத்துப் போந்ததைப் பின்பற்றியே, நாவரசாகிய வாகீசப் பெருந்தகையும் இதைச் செயலில் செய்தே காட்டியுள்ளார். எள்ளினின்று எண்ணெய் எடுப்பதுபோல, இலக்கியத்தினின்று இலக்கணத்தை எடுப்பதுபோல, தோத்திரத்திலிருந்து சாத்திரத்தை வடித்து எடுப்பது இயல்புதானே!

திருவாலங்காட்டிறைவனைத் திருத்தாண்டக வழி போற்றிய தாண்டக வேந்தர் "தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே" என்று இரண்டையும் இணைத்து இவ்வுண்மையைக் குறித்துக் காட்டியுள்ளார். சைவசித்தாந்தம் என்று பிற்காலத்தில் சைவதத்துவத்திற்கு, சிவமெய்யுணர்வுக்கு, சிவஞானத்துக்கு வந்த பெயருக்கே அடிகோலி, அப்பெயருக்கும் கருவமைத்தவர் இவரேயன்றோ? கச்சியேகம்பத்துக் கடவுளைப் பாடுங்கால் "நினைவார்க்குச் சித்தமாரத் திருவடியே உள்கி நினைந்து எழுவார் உள்ளம் ஏயவன் காண்" என்றும், "சிந்தாத சித்தத்தார்க்குச் சிவனவன்காண்" என்றும் சிவக்கொள்கை முடிபாகச் சிவபெருமானைக் காட்டுகின்றார்.

பரந்துபட்ட தம் பாடல்களில், ஆங்காங்கே, உற்றுழியெல்லாம் ஒல்லும்வாயெல்லாம், ஓவாது, சைவ மெய்யுணர்வுச் சித்தாந்தச் சாத்திரக் கொள்கைகளை, கடவுள், உலகு உயிர், பதி பசுபாச இலக்கணங்களை, உண்மைகளை, இவற்றின் என்றும் உள்ள, முதலும் முடிவுமற்ற இயல்புகளை, உயிர் வகைகளை, இருவினை, மும்மலங்களை, மலபரிபாகத்தை, இருவினை ஒழிப்பை, நிலையாமை, துறவு, மெய்யுணர்வு அவாவறுத்தல்களை, சத்திநிபாதத்தை, சிவனடிப்பேறு ஆகிய சிவனருள்வெள்ளத்தில் திளைத்தலை, பதிபசுபாசப் பிரமாணங்களை, சாதனங்களை, சாதனைகளை, கேட்டல்,

சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்களை, அருட்கண்ணால் நோக்கப்பெறுதலை இன்னோரன்ன பிற சாத்திரக் கூறுகளை எண்ணிறந்த இடங்களில் பொதிந்து வைத்துள்ளார்.

இவற்றைத் தொகுத்து, வகுத்து, முறைசெய்தே, தெல்லாணைத் துறை போகிய நல்லாசிரியர் பிற்காலத்துப் பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களை உலகுக்களித்தனர்.

இவையனைத்தையும் திரட்டித்தருதல் நம்மனோரால் இயலாத தொன்று. எடுத்துக்காட்டுகளாக ஒருசிலவற்றையே பார்ப்போம். எஞ்சியவற்றை வந்த வழியும் வல்லார் வாய்க்கேட்டும் உணர்வோமாக.

முதல் எடுத்துக் காட்டாக திருவையாற்றுக் காந்தாரப் பண்பயில் பதிகத்தில், திருக்கயிலைக்காட்சி கூறும்போது,

**1. காலதத்துவம்**

களவுபடாததோர் 'காலம் காண்பான் கடைக்கணிக்கின்றேன்' என்ற தொடரில் காலதத்துவத்தைக் குறித்து வைத்துள்ளார் என்ப. "ஞாலமே, விசும்பே, இவை வந்து போம் காலமே" களவுபடும் காலம். பரம்பரை எத்தனையோ காலம் களவுபட்டன. "காலவரையறையே கடந்து, காலத்தினையுந் தோற்றித் தொழிற்படுத்தும் கால காலனாகிய முதல்வனாற் செய்யப்படும் காரியத்திற்குக் காலம் வேண்டா" என்ற மாதவச் சிவஞானயோகிகளின் 2ஆம் சிவஞான போத நூற்பா இரண்டாம் அதிரணப் பகுதிப் பேருரைக்கு இது கருவாகும் என்று கருதுவர்.

இனி, "நன்னெறியாவது நமச்சிவாயவே" என்ற நமச்சிவாயப் பத்துப்பாட்டில் வரும் நன்னெறி, சிவஞானபோத

**2. நமச்சிவாயமே நன்னெறி.**

8-9ஆம் நூற்பாவின் மாபாடியப் பேருரைக் கருத்துக்களுக்குக் கருவாம். "நன்னெறியாவது, நன்மை எனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மை எனப்படுவது.

வீடுபேறென்பது.(Realisation of ultimate reality) அதனைத் தலைப்படுதற்கேதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறி எனப்பட்டது. (சிவஞான போத 8ஆம் நூற்பா-பேருரை). "ஞானம் வேறு, நமச்சிவாய வேறு, ஆயினும், ஞானம் விளக்கி, ஞேயம், காட்சிப்பட்ட இடத்தும், பயிற்சி வயத்தான் முன்னர்த் தான் நோக்கிய பாசத்தை நோக்கும் நோக்கமாகிய வாசனையை நீக்குதற்குரிய சாதகம் ஆகிய திருவைந்தெழுத்தும் ஞானத்திற்கு ஒப்பாதலின், நன்னெறியாயிற்று". (மாபாடியம் நூற்பா ஒன்பது) "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப் பது, வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது, நாதன் நாமம் நமச்சிவாயவே" என்னும் சம்பந்தர் வாக்கும் நோக்குக.

**3-4-5. அம்மையப்ப வடிவம்-நானெறி-தசகாரியம்.**

அடுத்து மூத்த திருநாவுக்கரசின் விடந்தீர்த்த இந்தளப் பதிகத்தில் "சத்தியும் சிவமு மாய தன்மை இவ் வுலக மெல்லாம், ஒத்து ஒவ்வா ஆணும் பெண்ணும் உணர்குண குணியுமாகி, வைத்தனன்" என்னும் சித்தியார் வாக்குக்கு அடிப்படையான அம்மையப்பர் திருக்கோலத்தை "இரண்டுகொ லாமிலங் குங்குழை பெண்ணுண்" என்று அமைத்தார்.

சரியை கிரியை யோக ஞான நெறிகளாகிய சைவ நானெறிகளை நான்கு பாதங்களை, "நாலு கொலாமலர் ஊர்தியின் பாதங்கள்" என்றும் தத்துவரூபம், தத்துவ ரூப தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகிய தச காரிய தத்துவங்களை "பத்து கொலாமடியார் செய்கை" என்று குறித்து வைத்தார்.

கோயில் திருநேரிசைப்பாடலில் 'பரமனே பரமயோகி' என்பது சிவஞானபோத 3-7-8, 10, 11ஆம் நூற்பாக் களுக்கு ஆன்மயோகம் பற்றிய கருத்துக்களுக்கு அடிப்

படை உளது. பரமன் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருள் - பரம்பொருள் - பரம யோகம் சிவானந்தப்பேறு - தன்னுயிர் தானறப் பெறல்' - ஆன்மயோகம். அவனருளே கண்ணாகப் பெற்று அருளாதல் ஞானயோகம். அச்சிவஞானத்தால் சிவனைப் பெறுதல்சிவயோகம் (யோகங்கள் மூன்று).

**6. யோகநெறி பரமன்**

சிவஞான போத எட்டாம் நூற்பாவும், ஆறும் நூற்பாவும் "தானலாது உலகமில்லை சமகமலாது அடிமையில்லை'' என்னும் தேவாரக் கருவினுருக்களாம் என்பர். (திருவையாறு திரு நேரிசை). சகம் தோன்றியழிவது. உலகம் காரியம்; மாயை காரணம். சகக் கடவுள் சகத்தின் உளனாகிய குரவன். (நூற்பா 8). "உடைப்பொருள் அடிமையும், உடைமையும் என இருவகைப்படும். அவற்றுள் உயிர் வருக்கம் எல்லாம் இறைவனுக்கு அடிமை எனவும், மாயை கன்மங்களும் அவற்றின் காரியங்களும் உடைமை எனவும் உணர்ந்து கொள்க''. சிவஞானபோதம் அவையடக்கம். "படிகம் போலச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் ஆன்மா, மலமுழுவதும் நீங்கத் தன்னெறிவியகமாய் விளங்கிய வழியும், தன்னாற் சாரப்பட்ட சிவத்தை மாத்திரம் அறிதலன்றி மற்றொன்றனை அறிதல் செல்லாதென்பதூஉம், இதுபற்றியன்றே சிவனுக்கு அடிமை எனப்பட்டது என்பதூஉம் இன்னோரன்ன பிறவும் அறிந்து கொள்க. (நூ.பா. 6 அதிக. 2. மாபாடியம்) இதில் "வானலாது அருளுமில்லை'' என வருவது சிவஞான முத்திநிலைக் குறிப்பாகும் என்பர்.

**7. சிவபெருமானின் அடிமையும் உடைமையும்.**

இனி,

> " *யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி*
> *மாதொரு பாகனார்தாம் வருவர்*'' (நூ. பா.—1-25)

என்னும் சித்தியார் கருத்துக்கு,

8. சிவமே எச்சமயப் பொருளும்

"சமையமே லாறு மாகித் தாளுெரு சயம்புவாகி
இமையவர் பரவி ஏத்த வினிதினங் கிருந்த வீசன்
கமையினை உடைய ராகிக் கழலடி பரவு வார்க்கு
உமையொரு பாகர் போலும் ஒற்றியூ ருடைய
கோவே"

என்ற திருஒற்றியூர்த் திருநேரிசைப் பாவும்,

"ஆறொன் றியசம யங்களின் அவ்வவர்க் கப்பொருள்கள்
வேறொன் றிலாதன,"

என்ற திரு இன்னம்பர்த் திருவிருத்தப்பாவும், அடியெடுத்துக் கொடுத்துள்ளன. "அறிவினல் மிக்க அறுவகைச் சமயம் அவரவர்க்கங்கே ஆரருள் புரிந்து" என்பர் பிறரும். "புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என்னும் நான்கனுள், அகச்சமயம் ஒழித்து, ஒழிந்த முக்கூற்றுப்புறங்களில் தனித்தனி, அறுவகைப்பட்ட சமயங்களின் நின்றுகொண்டு, அவற்றுள்ளும் பல வேறுவகைபட ஓர்த்து உணர்கின்ற, அவரவர் கொண்ட முதற்பொருளாய், அவரவரின் பாடாணவாதம் முதலிய அகச்சமயத்தார்க்கு இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று அவத்தையின் முறையே சத்தியும், உத்தியோகமும், பிரவிருத்தியும் என்னும் தொழில் வேறுபாடின்றிச் சிவன், சதாசிவன், மகேசன் என்னும் பெயருடைய அருவம், அருவுருவம், உருவம் என்னும் தடத்தக்குறியே குறியாக உடைத்தாய், சித்தாந்த சைவற்கு அத்தடத்தக்குறியே அன்றி வேதாகமக் கருத்துக்களுக்கு அதீதமாய், உயிர்க்குயிராய், உயிர்கட்கெல்லாம் அறிவைப் பிறப்பிக்கும் அம்மையப்பனுமாகி, எங்கணும், எக்காலமும், செறிந்து, வியாபகமாய் நிற்பவன் சிவன் என்னும் உண்மையால் சமயமேலானுமாதல் விளங்கும்." இதை மேற்காட்டிய சித்தியார் உரையிலும கண்டுகொள்க.

திருவொற்றியூர்—திருநேரிசை

9. வசிப்பு வாழ்க்கை.

"வசிப்பெனும் வாழ்க்கை வேண்டா
வானவ ரிறைவனின்று
புசிப்பதோர் பொள்ள லாக்கை
அதனொடும் புணர்வு வேண்டில்

அசிர்ப்பெனு மருந்தவத்தால்
ஆன்மாவின் இடமதாகி
உசிர்ப்பெனும் உணர்வு முள்ளார்
ஒற்றியூ ருடையகோவே"

வசிப்பெனும் வாழ்க்கை—கட்டுநெறியில் (பெத்தத்தில்) உடலில், உலகில், காலதேச வரையறைக்குட்பட்டு வசித்தல் என்னும் குறைவாழ்க்கை வேண்டாம்.

புசித்தலின்றேல் அழியத்தக்க பொத்தலுடம்போடும், தேவாதிதேவன் நின்று பொருந்த வேண்டினல் உள்ளுருகிச் செய்வதாகிய செய்தற்கரிய தவத்தால், ஆன்மாவினிடத்ததாய் உயிர்ப்புடன் கூடியதெனப்படும், உணர்வுமுடையவர் திருவொற்றியூரர். (அசிர்ப்பு-கண்ணீர்ப் பெருக்கு அல்லது அயர்ப்பு; இளைப்பு-தவஞ்செய்து மெய் இளைத்தல்) ஆன்மாவிடம் உசிபபு-உயிர்ப்பு உள்ளார்.

" என்னு ளேஉயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனை"

'உள்ளத்தினுள்ளே நின்ற கரு,"-"ஊனுகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி" என்பனவற்றையும் காண்க. ஊன்-பாசம்; உயிர் - பசு; உணர்வு - பதி எனனும் முப்பொருளும் உணர்த்தபபட்டன. சிவஞான சித்தியார் சுபக்கம் சூ. 4-௨0க்கு கரு.

" அசித்தரு வியாப கம்போல் வியாபக மிருவரின்ருய்,
வசித்திட வரும்வியாபி எனும்வழக் குடையனுகி
நசித்திட ஞானச்செய்தி யநாதியே மறைத்து நிற்கும்
பசுத்துவ முடைய னுகிப் பசுவென நிற்கும் ஆன்மா"

திருவாப்பாடித் திருநேரிசை

" ஆதியு மறிவு மாகி யறிவினுட் செறிவு மாகிச்
சோதியுட் சுடருயாகித் தூநெறிக் கொருவனுகி"

10. ஞானமே பரமுத்தி

"சிந்தையும் தெளிவுமாகித்
தெளிவினும் சிவமுமா
வந்தநற் பயனுமாகி"

என்னும் பாவடிகளில் சிந்தித்தல், தெளிதல், தெளிவினுட்

சிவமாதல் அதாவது தெளிவினுள் விளங்கும் தூய நிலை. அதாவது நிட்டை நிலைகள் குறிக்கப்பெறுகின்றன. இவை யாவன :-

1. கேட்டல் ஞானத்திற் சரியை
2. சிந்தித்தல் ,, கிரியை
3. தெளிதல் ,, யோகம்
4. நிட்டைகூடல் ,, ஞானம்

இனி, உபாயச் சரியையில் சரியை முதல், உபாயஞானத்தில் ஞானம் ஈருகிய பதினாறு வகையும், அவற்றினின்று விரியும் பல்வேறு வகையும், உண்மைச் சரியையில் சரியை முதல் உண்மை யோகத்தின் ஞானம் ஈருகிய பன்னிருவகையும் அவற்றினிற்று விரியும் பல்வேறு வகையும், உண்மை ஞானத்திற் சரியை முதலிய (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) மூவகையும் இவற்றினின்று விரியும் பலவேறு வகையும், ஞானத்தில் ஞானங்களின் பல்வேறு வகையும் கடந்து அவற்றுள் முடிவாகிய ஞானமே பரமுத்தியைத் தருவது. அம்முடிவான ஞானமே தெளிவினுட்சிவம் — அது தரும் பர முத்தியே பயன்.

## பொதுத்திருநேரிசை

(நகைச்சுவையோடு தத்துவம் வருகிறது)

இரண்டு பெண்டாட்டிக்காரன் பட்டபாடு என்பது போல.

1
"வஞ்சப்பெண் ணரங்கு போயிலி
2
11. உறங்கதுறங்கும் சிவயோகநிலை- நகைச்சுவையோடு
வானெயிற் றரவந் துஞ்சா
வஞ்சப்பெண் ணிருந்த சூழல்
3
வான்றவழ் மதியம் தோன்றும்

4
வஞ்சப்பெண் வாழ்க்கை யாளன்
5
வாழ்வினை வாழலுற்று
6
வஞ்சப்பெண் ணுறக்க மானேன்
வஞ்சனேனென் செய்கேனே. ”

(1) வஞ்சப்பெண் - கங்கை (2) அவளிருக்கும் அரங்கைக் கோயிலாகக் கொண்டு வாழ்வது பாம்பு (3) அவ்வாளெயிற்றரவமும் ஒன்றவழ் மதியமும் வாழும் இடம் செஞ்சடைச்சூழல் (4) வஞ்சப்பெண் வாழ்க்கையாளன் - செஞ்சடையோன (5) அவ்வாழ்க்கை வஞ்சப் பெண்வாழ்க்கை: அதாவது கள்ளக் காதலனிடத்த அன்பு கலந்து வைத்தொழுகும் கள்ளக் காரிகை வாழ்க்கை. (6) வஞ்சப்பெண்ணுறக்கம் : பொய்யுறக்கம்- கைபிடித்த நாயகன் தூங்கும் போது அவனை ஏய்த்து, தன்மேற்படும் அவன் கையெடுத்து அப்புறந்தள்ளிப் புறம் போக நினைக்கும கள்ளக் காரிகையின் பொய்த்துயில்.

உள்ளக்கிழவனை விட்டுக் கள்ளக் குழகனைத் தொட்டுக் காதலால் நட்டு வாழும் ஒருத்தி இரவில் அவன் வரவு நோக்கித் தூங்காது கண்மூடியிருக்கும் நிலை.

தத்துவம் (1) மெய்ப்பெருமாட்டியைத் தம் பாதியிலுடைய நம்பரன் வம்பாகத் தலைமேலும், மெய்ப்பாதியாள் அறியாவாறு, துய்ப்பாதியாளாகக் கங்கையை, வஞ்சப்பெண்ணை வைத்துள்ளான். (2) அதனால் அவன்வஞ்சப்பெண் வாழ்க்கையாளன் ஆயினன். (3) செஞ்சடையாளிடம் நெஞ்சம் வைத்து, செம்பாதியாள் கண்மூடுங் காலத்தைநோக்கிக் கொண்டு உறக்கம் சிறிதுமின்றி இருக்கிறான். உமையை ஏய்த்துக் கங்கையைக் கலக்க உறங்காதுள்ளான். (4) அவன் சென்னியில் மன்னிய பாம்பும் திங்களை விழுங்கக் கருதி உறங்காதிருந்தது. அவ்வஞ்சப் பெண் வாழ்க்கையாளன் (சிவபெருமான்) வாழ்வினை வாழ்வதாகத் திருநாவுக்கரசர் கூறுகிறார் அதாவது உயிர்த்துணையாம் தோன்றாத்

துணைக்கு ஓர் துணையாகித் துவாத சாந்தப் பெருவெளியில் துரியம் கடந்த பரநாத மூலத்தலத்து வாழ்வு. அக்குரவர் இருவரும் உற்றிடும் துவாத சாந்தத்து ஒரு பெரு வெளிக்கே விழித்துறங்கும் வாழ்வு – சிவயோகநிலை – சிவோகம் பாவனை நிலையும் ஆகும். முன்னது யோகம் – பின்னது ஞானம்.

(1) வஞ்சப்பெண்ணுகிய கங்கை, அப்பெண் வாழ்க்கையாளனுகிய சிவபெருமானை தழுவ விழைந்து அவன் வரவினை நோககித் தூங்காது தூங்கியலைகிருள்

(2) செஞ்சடை முடியான் செம்பாதியாள் அறியாதவாறு கங்கையைத் தழுவத் துயிலாது துயில்கின்ருன். (3) வாளெயிற்றரவு மதியை விழுங்கக் கருதிக் கண்வளராது வளர்கிறது. (4) இடையில் அவ்வஞ்சப்பெண்ணை மதியம் தோய்கிறது.

திருநாவுக்கரசரும் வேணியப்பரை விரும்பி, வஞ்சப் பெண் போல் உறங்காது உறங்குகின்ருர். அதாவது துவாத சாந்தப் பெருவெளியில் விழித்துறங்கும் சிவயோகநிலை

" ஆங்கா மற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூங்கும் பராபரமே"
"......ஒன்றிற் பற்றும் இன்றி,
சொல்லும் பொருளும் இழந்து சுகானந் தத்தூக் கத்திலே
அல்லும் பகலும் இருப்ப தென்றோ கயிலா யத்தானே"

என்பனவற்றையும் ஈண்டு கருத்துட்கொள்க.

பொதுத்திருநேரிசை

" மெய்ம்மையாம் (1) உழவைச் செய்து (2) விருப்பெனும் (3) வித்தை வித்தி
பொய்ம்மை (3) களையா வாங்கி (4) பொறையெனும் நீரைப்பாய்ச்சி
12\. சிவகதி தம்மையு நோக்கிக் (5) கண்டு (6) தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் (7) நிற்பா ராகில் (8) சிவகதி விளையு மன்றே".

தத்துவம் (1) மெய்ம்மையாம் உழவு - சரியை கிரியை யோகம் ஞானம் ஆன மெய்ந்நெறி நான்கும் சிவகதியாகும். சரியை

கிரியை யோக ஞானங்களைச் செய்துழி, நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடாவாதலின், ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞானம் நிகழும் என்று கூறுவர். சிவஞானபோதம் -சூ 8. அதி. 1.) சரியை, கிரியை, யோகம் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்-சித்தியார் சூ. 8-11.

(2) விருப்பெனும் வித்து. இச்சை மீதூர்தல் (சிவஞான போத மாபாடியம் சூ 11. அதி. 2.) என்னும் சிவபக்தி "அயரா அன்பின் அரன்கழல் செலும்".

(3) களையை வாங்கல். பொய்ம்மையாகிய களையைப் பறித்தல். அதாவது சத்தியத்தைக் கடைப்பிடித்தல்

(4) பொறை யெனும் நீர்பாய்ச்சல். பொறுமை- அஹிம்சை.

(5) தம்மையுணர்ந்து. சிவரூபத்தால் ஆன்ம தரிசனமும் ஆன்ம சுத்தியும், 'தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்' என்பதாம்.

"தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனையறிந்தால், தன்னையும் தானே காணும் தான் அதுவாகி நின்றே— சிவப்பிரகாசம்.

(6) தகவெனும் வேலி. வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்கும் நிலையின் நீங்கி, சாதகங்களும் சிவசாதனங்களும், சைவ பூடணங்களும் ஆகிய திருவைந்தெழுத்து - உருத்திராக்கம், திருநீறு முதலிய சிவவேடங்களும் சிவகதிக்குரிய தகவுவேலி.

(7) செம்மையில் நிற்றல். ("திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரையன்றனடியார்க்கு மடியேன்")

சிவமுத்தியே செம்மை - அதில் நிற்றலாவது ஓங்குணர்வின் உள்ளடங்கி, உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குதல்-

(8) சிவகதி. சிவானுபவம். சிவானு பூதிகமாதல்.

(1) கொல்லாமை (தகவு) (2) ஐம்பொறியடக்கல் (களைவாங்கல்) (3) பொறுமை (நீர்பாய்ச்சல்) (4) இரக்கம் (செம்மையுள் நிற்றல்) (5) அறிவு (சிவகதி விளைதல்) (6) மெய் உழவு. (7) தவம் (தம்மையும் நோக்கிக் காண்டல்) (8) அன்பு (விருப்பெனும் விதை) என்று பொருத்தி ஞானபூசைக்குரிய எண் மலர்களை உணர்த்தியவாறும் உரைப்பர்

## திருநெல்வாயில் அரத்துறை. குறுந்தொகை

"கரும்பொப் பானைக் கரும்பினிற் கட்டியை.
13. கரும்பு, விரும்பொப் பானை விண்ணோரும் அறிகிலா
அரும்பு, அரும்பொப் பானை யரத்துறை மேவிய
சுரும்பு சுரும்பொப்பானைக் கண்டீர்நாம் தொழுவதே."

1. கரும்பு ஒப்பானை. சாதகர்க்குத் கரும்பில் உள்ள சாற்றைப் போல் அவர்தம் சாதனங்களில் மறைந்து நின்று, அவர் சாதித்த வழி அன்பினில் விளைந்த ஆரமுதாய்த் தோன்றுவான் என்னும் சாத்திரக் கருத்துக்கரு

2. கரும்பினிற்கட்டி. மெய்யன்பராகிய சீவன் அவர்தம் அயரா அன்பே இன்பாய் யாண்டும் வெளிப்பட்டு நின்றே அருள்வர் என்ற சாத்திரக் கருத்துக்கரு.

3. விண்ணோரும் அறிகிலா. யான் எனது என்னும் செருக்கரு வழி அவர்க்கு அவன் திருவருள் தோன்ருது என்பது.

4. அரும்புஒப்பான். யான், எனது என்னும் பற்று நீங்கும் வகை, சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என்னும் சாதனங்களைச் செய்து வருவார்க்கு உள்ளத்தே உணர்கின்ற அன்பால் முளைத்துத் தோன்றிப் பின் அரும்பு ஒப்ப விரியும் என்பது.

5. சுரும்பு ஒப்பான். அரும்பும், அதன்பின்னர் உள்ளக்கமலங்களை முதல்வன் தன் அருட்கதிர்களால் அறியாமைச் சுருள் நீக்க மலர்வித்துச் சீவனுக்குள்ளே சிவமணம் பூக்குமாறு வெளிப்படுத்துவன் (சுரும்பு ஒக்க).

6. விரும்பு ஒப்பான். ஒருவர்க்குத் தாம் விரும்பிய பொருளி னும்மேலானது ஒன்றும் இல்லாதவாறு போல், என்ஞான்றும் எல்லார்க்கும் தானே தலையாய பேருய் நிற்பான். திருவருட்பயனும் (31) இக்கருத்துக்களையே வாங்கிச் சுருக்கிச் சாத்திரமாக்கியது காண்க.

" அருளிற் பெரிய தகிலத்தில் வேண்டும்
பொருளிற் றலையிலது போல்"

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்ருர் நாவுக்கரசரும் பிருண்டு.

திருப்புன்கூரும் திருநீடுரும்-திருத்தாண்டகம்

14. சிவன் பிறவான்- பிறப்பிப்பான்

1. " பிறவாதே தோன்றிய பெம்மான் தன்னை
பேணுதார் அவர்தம்மைப் பேணு தானை"
2. " துறவாதே கட்டறுத்த சோதியானை"
3. "தூநெறிக்கும் தூநெறியாய் நின்ருன் தன்னை"

என்ற இவ்வடிகளில் பின்வரும் சாத்திரக் கருத்துக்கள் பொதிந்துள்ளன:-

1. பிறபொருள்கள் முதனிலையாய்க் கூடிநிற்க, அக் கூட்டத்தின் வழித்தோன்றுவது, தானே தனது இச்சையால் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைப் பட்ட வடிவங்களைக் கொண்டு நிற்றல். சிலம்பும் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்று இச்சாத்திரக் கருத்திற்கடி கோலிற்று. இதனுலே, பிறந்து தோன்றுவார் யாவரது பிறப் பிற்கும் தானே காரணன் என்பது போதரும்.

3. பந்தத்தில் என்றும் அகப்பட்டதில்லை. இயல்பாகவே மலமற்ற தூய உணர்வுடைய வாலறிவன். அவ்வுணர்வு தானே வடிவாதலால் துறவாதே கட்டறுத்த சோதி என்ருர்.

3. தூநெறி: குற்றமற்ற நெறி. தூநெறிக்குத் தூநெறி யாய் நிற்றல் நன்னெறிக்குச் சிறந்த பற்றுக் கோடாய் இருத்தல். அதாவது அறந்தன்னேடு (இறைவனேடு)

பொருந்திய வழி சிறந்த பயனாகிய வீடு பேற்றைத் தரும்: பொருந்தா வழி தராதொழியும்.

முரணியவழி தீங்கு பயக்கும். இறைவனொடு முரணியவழி தீங்கு பயத்தல் தக்கன் செயலாலும், இறைவனொடு பொருந்திச் செய்யும் மறச் செயலும் வீடு பேற்றைத் தருதல் சண்டேசுரரது செயலாலும் உணரப்படும்.

*" அரனடிக் கன்பன் செய்யும் பாவமும் அறம தாகும்*
*அரனடிக் கன்பி லார்செய் புண்ணியம் பாவ மாகும்*
*வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி*
*நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே."*

இனி, திருஇடைமருதுத் திருத்தாண்டகப் பாட்டில் பல மெய்யுணர்வுக் குறிப்புகளைத் தொகுத்து வைத்துள்ளார்.

**15. தத்துவக் குறிப்புக்கள் தொகுப்பு.**

பிரியாத (1) குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய (2) குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத (3) குணமொருகால் நான்கே என்பர்
விரிவிலாக் (4) குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவாய (5) குணமஞ்சுஞ் (6) சமிதை யஞ்சும்
(7) பதமஞ்சுங் (8) கதியஞ்சுஞ் செப்பி னாரும்
(9) எரியாய தாமரைமே லியங்கி னாரும்
இடைமருது மேவிய ஈச னாரே.

இதில் 1. பிரியாத குணம் பத்து (உயிர்க்கு):—உயிர் இயற்கைத் தன்மைகள் பத்து அன்று வழக்கில் இருந்திருக்கவேண்டும். கீழ்க்கண்டவற்றைக் கொள்ளலாம். இறைமைக்கு மறுதலையாகிய, தன்வயமின்மை, சார்ந்ததன் வண்ணம், அறிவிக்க அறிதல், ஒவ்வொன்றையே உணர்தல், படிமுறையான் உணர்தல், பெரிதும் சிறிதுமின்றி

இடைநிகர்த்ததாதல்களோடு, தனித்து நில்லாமை, தனித்துணரப்படாமை ஆகியவையுமாம்.

2. பிரிவுடைய குணம் (உயிர்க்கு) பத்தோடொன்று:— மலச்சார்பிஞல்வரும் செயற்கைத் தன்மைகள் பதிஞென்று:- பேதமை, புல்லறிவாண்மை, அமைதி, வெதளி, மடி, இன்ப நுகர்ச்சி, நுகர்ச்சியின்மை, நன்முயற்சி, தீமுயற்சி, ஊக்கமின்மை

3. விரியாதகுணம் இறைவற்கு நான்கு:-உண்மை, அறிவு, இன்பம் (சத்து, சித்து, ஆனந்தம்) அருள்.

4. விரிவிலாக்குணநாட்டம் ஆறு:-(இறைவற்கு)-முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், முடிவிலாற்றல், பேரருள். இவற்ருேடு தூய உடம்பினஞதல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் சேர்த்து எட்டுமாம்.

5. தெரிவாய குணமஞ்சு:- (ஐம்பூதத் தன்மாத்திரை) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

6. சமிதை அஞ்சு:-ஆல், அரசு, அத்தி, மா, வள்ளி.

7. பதமஞ்சு:-(எழுத்து) திருவைந்தெழுத்து மந்திரம்.

8. கதிஐந்து:-மக்கள், விலங்கு, நரகர், தேவர் கதிகள், இவற்ருேடு பரகதி சேர்ந்து ஐந்து.

9. எரியாகிய தாமரை மேல் இயங்கல்:-அன்பர்களது நெஞ்சத் தாமரையில் எழுந்தருளியிருத்தல். உள்ளமாகிய தாமரை மலரின்மேல் இறைவனைச் சுடர் உருவில் தியானிக்கும் தியானமுறை தகரவித்தை என்பர். "மலர் மிசை ஏகிஞன்" என்பர் திருவள்ளுவரும்,

அடுத்து திருவாரூர் திருத்தாண்டகத்தில்,

16. உயிராவண்ணம் உற்றுநோக்கல்.

உயிராவணை மிருத் துற்று நோக்கி
உள்ளக் கிழியி னுரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவா ரோடொட்டி வாழ்தி

அயிரா வணமேறு தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே.

என்ற பாட்டிலும் கிட்டைகூடல் அருள்பெறல்களைக் குறிப்பிடுகிறார்.

உணரப்படுவார்:-உன்னால் சிறப்பு வகையில் உணரப் படுபவர். அதாவது "ஒன்றியிருந்து நினையும் நினைவு நிலையில் யான் என்னும் முனைப்பு நீங்கி, அருள் வழியில் நிற்கப் பழகி, பின்னர் உணர்வு நிலையில் அவ்வாறே நிற்கப் பழகி, பின்னர் உணர்வு நிலையில் அவ்வாறே நிற்கப் பெற்றால், தன்னால் சிறப்பு வகையில் உணரப்படுவாராகிய அவரோடு உடனாய் விளங்கி நிற்பன் இறைவன் என்றருளிச் செய்ததாம்." உடம்பு நின்ற நிலையில் அவர்வழி நிற்பான் போல, "ஒட்டி வாழ்தி என்றார்." உடம்பு நீங்கியபின் தன்னொடு ஒட்டி வாழச்செய்வான்.

உன்கைத்தந்தால். அடிமை ஓலை எழுதிச் சிறிதும் பற்றின்றிக் கைத்தந்தால்-கையாவது அருள்.

" நங்கையினால் நாம் அனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினால் செய்தளிக்கும் நாயகனும்"

என்ற திருக்களிற்றுப்படியார் நங்கையைக் குறிப்பது காண்க.

"உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அணையாய்நீ ஆட்கொண்ட போதே கொண்டிலையோ" "இருந்தேனை ஆண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை" என்பவும் காண்க.

1. மாணிக்கவாசர்

(அ) "ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய்."

16. ஊனும் உயிரும் உணர்வும்.

(ஆ) "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு
உள்ளமும் போய்,"

(இ) "ஊனாய் உயிராய் உணர்வாய்
என்னுட் கலந்து,"

என்று அருளுவனவற்றுக்கும்,

2. நம்மாழ்வார்

"ஊனில் உயிரில் உணர்வில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே."

என்றும்

3. கம்பநாட்டாழ்வார்,

வானின் றிழிந்து வரம்பி கந்த மாபூ தத்தின்
வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும்
புறனும் உளவென்ப"

என்றும் மும்மைசால் இயல்புகளை, அண்டபிண்டங்களில் காண்பதற்கும் பின்வரும்,

"ஊனாகி உயிராகி அதனுள்நின்ற உணர்வாகிப்
பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே யென்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாரும் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாய்உன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே"

என்னும் திருவானைக்காத் திருத்தாண்டகம் அடிகோலிற்று.

அனைத்தும் நீயே ஆயினமை உணரப் படுதலிற் சிலர் உறவும் சிலர் பகையுமாதல் நீங்குதலும், நீயே என் உணர்வுக்கு முதலாதல் உணரப்படுதலின் யான் என்பது நீங்குதலும், ஞானமே வடிவாய் நிற்றலின் இன்பமும் இடையறாது ஈண்டுதலும் உளவாமாதலின் உன்பொற்

பாதம் அடையப் பெற்ருல் எனக்குப் பெரும் துன்பம் யாதுளது என்று என்று கேட்கின்ருர் அரசர்.

தனித்திருத்தாண்டகம்

ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆர்ஒருவர் அடங்கா தாரே
ஒட்டுவித்தால் ஆர்ஒருவர் ஓடா தாரே
17. சித்தாந்தக் கருத்துக் குழு உருகுவித்தால் ஆர்ஒருவர் உருகா தாரே
பாட்டு வித்தால் ஆர்ஒருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆர்ஒருவர் பணியா தாரே
காட்டு வித்தால் ஆர்ஒருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே."

இறைவனுடைய தன்வயம் உடைமையை உணர்த்தும் முகத்தால் உயிர்களுக்குச் செய்யும் கைமாறற்ற உதவியை அருளிச் செய்தது. சித்தாந்தக் கருத்துக்கள் ஒரே கோவை யாய் இதில் அமைந்துள்ளன காண்க :-

ஆட்டுவித்தல் : யான் எனது ஆகிய அகப்புறப்பற்றுக்கள் காரணமாக உடம்பாகிய பாவையை, வினையாகிய கயிற்ருல், கீழ், மேல், நடுவுலக அரங்கினில் வினையை ஈட்டி நுகர்ந்து, சுழலச்செய்யும் கூத்தை ஆடச்செய்தல். "கோணுகி யான் எனதென் றவரவரைக் கூத்தாட்டு, வாணுகி நின்ருயை என் சொல்லி வாழ்த்துவனே"-திருவாசகத் திருச்சதகம்.

ஆட்டுவித்தல், படைத்தல், காத்தல் : ஆகிய தொழில்களால் நிகழும்.

அடக்குவித்தல் :ஆடிவரும் உயிர்கட்கு எய்ப்புத் தோன்ருத வாறு, ஆடலை இடையே சிறிது காலம் நிறுத்தி அமைந் திருக்கச் செய்தல். உலகமுழுவதையும் அழிக்கும முற்றழிப்பி ஞல் அடக்குவித்தல் நிகழும்

ஒட்டுவித்தல் : ஆட்டுவிக்கின்ற தன்னை, உள்நோக்கி யுண ராது உயிர்களைப் பிற பொருள்கள் மேல் ஒட்டுதல் இது. மறைத்தலால் நிகழும்

உருகுவித்தல். பாட்டுவித்தல் - பணிவித்தல்

புறமே ஓடி உவர்ப்பெய்திய உயிர்களைப் பிறகு உள் நோக்கித் தம்மை உணருமாறு செய்து, அன்புகூர்ந்து, மனம் உருகச்செய்தல். உருகிய வழி வாழ்த்துக்களையும், போற்றிப் பாடல்களையும் வாயார எடுத்துப்பாடுமாறு செய்தல் ("வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தான்" என்பது காண்க) பின், தன்முனைப்பு நீங்க, தன்முன்னே பணியச் செய்தல். இம்மூன்றும் அருளால் நிகழ்வன. இம் மூன்றும் மனமொழி மெய்யன).

**காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே**

**காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே.**

உயிர்கள் இறைவனைக் காணாமை அவன் காட்டு விக்காமையால் என்பதும்,

நீ காண்பியாதபொழுது உயிர்கள் காணவல்லன அல்ல என்பதும், முத்திக் காலத்திலும் உயிர்கட்கு இறைவன் உதவி இன்றியமையாதது என்பதும், உடன் பாட்டாலும் எதிர்மறையாலும் வைத்து அறிவுறுத்தியவாறு. கீழ்க்கண்ட திருவாக்குக்களையும் ஓர்க:-

" *அவனருளே கண்ணாகக் காணின்அல்லால்*
*இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்*
*இவன்இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"-*

—**திருவினாத் திருத்தாண்டகம்**

" *அவனருளாலே அவன்தாள் வணங்கி"*

—**திருவாசகம்**

சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய சில அனுபவங்கள், இற்றெனக் கிளக்கலாகா சில நுகர்வுகள் பற்றி முன்பார்த்ததில், சிவன் - சீவன், இறை - உயிர்

கலப்பில், ஒன்றிப்பில் தலைவன் - தலைவி நிகழ்ச்சிகளாக, அகப்பொருள் துறைகளில் அமைத்துப் பாடும் மரபு புலப்பட்டது. அதில் தனித்துக் காட்டக்கூடிய, இலக்கிய கற்பனைச் சுவையோடு கலந்த, அகப்பொருள் சுவை, தத்துவச்சுவைக்கலவை ஒன்றைத் தமக்கு நிகழ்ந்ததாக நாவரசர் கூறும் அனுபவப் பயனை ஈண்டுச் சிறப்பாகக் கருதுவாம். பொதுத் தனித் திருநேரிசையாகிய இப்பாவைப் பார்ப்போம்.

**18. உள்ளம் புகுந்த கள்வன் சிவன்-சீவன் ஒன்றிப்பு.**

"வெள்ளநீர்ச் சடைய னார்தாம் வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு உறங்கும்நான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீர் என்னக் கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோம் என்று நின்றார் விளங்கிளம் பிறையனாரே".

என்பது பாட்டு. இதில், சிவஞானபோதம் ஒன்பதாம் - பதினொன்றாம் நூற்பாப்பொருள்களுக்கு, உயிர் அரனைக் காணுதலுக்கு, கூறும் சாதனங்கள், பயன்களுக்கு, கரு உருவாகியிருக்கின்றது :

"உள்ளந் தனைக்காணா வுள்ளத்தின் கண்ணாய
கள்ளற்றான் உள்ளத்திற் காண்"

(9 ஆம் நூற்பா எடுத்துக்காட்டு)

"உள்ளத்தின் கண்ணானா னுள்குவா ருள்கிற்றை
உள்ளத்தாற் காணானே உற்று"

(11 ஆம் நூற்பா எடுத்துக்காட்டு)

வெண்பாக்களும் இப்பாவின் அடிப்படையில் தோன்றியன என்பர்

தான் உள்ளே புகலாமோ என்று, திருநாவுக்கரசரை இறைவன் இசைவு பெற வினவுவார் போல, ஒரு குறிப்புத் தோன்றிப் பின்னர் புகுந்தது—தமக்கு—அரசருக்குத் தெரியாதவாறு, தாம் உறங்கும்போது இறைவன் புகுந்து நின்றது கள்ளம். தாம் விழித்துப் பார்த்து, அவர்க்குப் புடைபெயர்ந்து, கள்ளரோ புக்கீர் என்றதற்கு, அவரும் தம்

மொடு கலந்து, சிரித்து, தாம் (இறைவன்) கள்ளரல்லேம், வெள்ளரேம் என்று நின்றார். இது நிகழ்ந்தது. இதில்,

உள்ளம் ... அப்பரது இல்லம்
உடையவர் ... அப்பர்
புகுந்த கள்ளர் ... சிவனார்.

'கள்ளரோ புகுந்தீர்' என்று அப்பர் கேட்க "வெள்ளரோம்" என்றார். இதுவே கலப்பு.

" கள்ளரோ டில்லம் உடையார் கலந்திடில்
வெள்ள வெளியாம் என்றுந்தீபற;
வீடும் எளிதாம் என்றுந் தீபற."

என்ற திருவுந்தியாரும்

" கூப்பிடும் ஆற்றிலே வன்காடு இருளாதம்
காப்பிடு கள்ளர் கலந்துநின் றாருளர்
காப்பிடு கள்ளரை வெள்ளர் தொடர்ந்திட்டுக்
கூப்பிட மீண்டதோர் கூறைகொண் டாரே

என்ற திருமந்திரமும் இக்கருத்தைக் கொண்டுள்ளனவாம்.

இனி, பொதுவாக இந்தியத்தத்துவத்திலும், சிறப்பாகச் சைவ சித்தாந்த நெறியிலும், வினை, அவற்றின் தத்துவங்கள், அவை நீங்கி மலபரிபாகம் பெறும் வழி, இருவினை ஒப்பு முதலிய கொள்கை விளக்கங்களுக்கெல்லாம் திருநாவுக்கரசர் தேவாரங்களில் கருக்கள் உருக்கொண்டுள்ளன. "நீர் வழிப்படூஉம் புணைபோல்" ஆருயிர் ஊழ்வழிப்படுவது சங்கநூல்களிலேயே குறிக்கப்பெற்றுள்ளன. அதற்கு முன்னால் முன்னோடியாகத் தொல்காப்பியத்திலேயே

**19. வினையும் வினையினீங்களும்,**

1 2 3 4
காலம், உலகம், உயிரே, உடம்பே
5 6 7
பால்வரை தெய்வம், வினையே, பூதம்,
8 9 10
ஞாயிறு, திங்கள், சொல்லென வரூஉம்
ஆயீரைந்தொடு பிறவு மன்ன
ஆவியின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்புரிந் திசையா வுயர்திணை மேன"

என்னும் சொல்லதிகார நூற்பாவில் வினைபற்றிச் சுட்டப் படுகிறது. இன்னும் "ஒன்றே வேறேயென்றிரு பால்வயின் ஒன்றி உயர்ந்த பால தாணையின்" என்ற ஒன்றே, வேறே, என்ற பால் - ஊழ்வகைகளைத் திருவள்ளுவரும் 'ஊழ்' என்னும் அதிகரத்துள் ஆகூழ், போகூழ் என்று வகுத் துள்ளார். "ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று, சூழினும் தான் முந்துறும்" என்றும், "வகுத்தான் வகுத்த வகை யல்லால் கோடி, தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது", என்றும் இதன் வலிமையைச் சுருக்கமாக வகுத்துப் போந்த னர். "ஊழ்வினை உருத்து வந்தூட்டும்" என்பதும் சிலப் பதிகாரத்தின் உயிர்நிலை கருத்தாகும். வாழ்க்கையின் தத்து வத்திற்கே காரணமாயிருக்கும் இவ்வினையல்புகளைத் திரு நாவுக்கரசர் தம் தேவாரப் பனுவல்களில் தெரித்திருப்பதை ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்களால் விளக்குவோம்.

1· திருவாரூர் - திருவிருத்தத்தில்,

*"வேம்பினைப் பேசி விடக்கினை ஓம்பி வினைபெருக்கித்*
*தூம்பினைத் தூர்த்தங்கோர் சுற்றந் துணையென்*
*றிருத்திர்தொண்டீர்"*

**வினை**

**தொல்வினை-பழவினை** (சஞ்சிதம்) | **உள்வினை-நிகழ்வினை** (பிரார்த்துவம்) | **வருவினை-மேல்வினை** (ஆகாமியம்)

என மூவினைப்படுவது. ஈண்டு, வினை இம்மூன்றனுள் நிகழ் வினையது நுகர்ச்சியினை எய்திப்பெறும் வருவினையைக் குறிக்கும். சஞ்சிதத்தைப் பெருக்குமாறில்லை. ஆகாமியமே சஞ்சிதமாக மாறுகிறது நல்வினை, தீவினை ஆகிய ஆகா மியம் அறமும் மறமுமாகிய சஞ்சிதமாக மாறி, இன்பமும் துன்பமுமாகிய பிராரத்துவமாகும். சிவஞான போதப் பத் தாம் நூற்பாவும், "நாமல்ல இந்திரியம்" "சார்ந்தாரைக் காத்தல்", "இங்குளி வாங்கும்," என்னும் எடுத்துக்காட்டு வெண்பாக்களும் வினை இயல்புகளைக் கூறுவன.

2. பொதுத்திருவிருத்தப்பாவின்,

"பந்தித்த, பாவங்கள் அம்மையிற் செய்தன, இம்மை– வந்து, சந்தித்த பின்னை சமழ்ப்ப தென்னே" என்ற அடிகளும் முற்பிறவியிற் செய்தனவாய், கட்டாயுற்ற தீவினை மறங்கள், இப்பிறவியில் வந்து தாக்கிய பின்னர் நாணி வருந்துவதில் யாதுபயன் என்பர்.

3. இனிக்கோயில் திருக்குறுந்தொகையாகிய

"அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்"

என்றும் வினை இயல்புகளை விதிப்பர்.

இவற்றுள் (1) அல்லல், ஆகாமிய மாகிய எதிர்வினை அல்லது வருவினை அல்லது மேல்வினையைக் குறிக்கும். அருவினை, நுகர்ந்தாலன்றித் தீர்தற்கரிய பிராரத்துவமாகிய, உள்வினை அல்லது நிகழ்வினையைக் குறிக்கும்.

தொல்வினை, பிராரத்துவ வினை அனுபவம் உள்ள அளவும் உள்ளமுயற்சியின் விளைவாய், பருவத்தில் இன்பதுன்பங்களைப் பயக்கத் தக்க இருவினை எனப்படும் சஞ்சிதமாகிய தொல்வினை அல்லது பழவினையாகும். திருவாசகத்துள் ஒரு வாசமாகிய,

" என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உட்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே"

என்ற அடிகளும்,, இவற்றை உயர்த்துகின்றன.

4. திருக்கச்சி ஏகம்பத்திருக்குறுந்தொகை,

" பண்டு செய்த பழவினையின் பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே"

என்று நெஞ்சறிவுறுத்தும்.

5. இனி, இருவினைகளின் உருவினராய்த் திருப்புகலூரில் வந்த அரமங்கையரைப் பார்த்து திருவாரூர் அம்மானுக்கு

ஆளானேன். "நீவிர் வீணே அலைத்தல் வேண்டா" என்று பாடியருளிய பொய்மாயத் திருப்புகலூர்த் திருத்தாண்டகச் செய்யுளில் இருவினை இயல்புகள் எடுத்தியம்பப் பெற்றுள்ளன.

நீரில் எழுத்தும், நிகழ்கனவும், பேய்த்தேரும் போல, நிலையின்றி மாயும் பொருள்களைப் பெருங்கடல் என்றார். இதில், நல்வினை, தீவினை என்னும் இருவகை வினைகள், அவற்றுக்குப் பற்றுக்கோடு உலகமாகலின், உலகின்கட் கிடந்து அலமருவனவாக, புலம்புவனவாக அருளிச் செய்தார். உலகப் பொருள்களும், இயக்கங்களும் இருவினை வழிப் பட்டல்லது நிகழாமையின், தமக்குக் காட்சிப்பட்ட உலகப் பொருள்கள் அனைத்தையும், அவை காணப்பட்டவாறே கண்டு அவற்றின் வீழ்ந்தழியாது அவற்றது முதனிலை ஒன்றையே நோக்கி நீங்குவார், அவைகளை அவ்வினைகளாகவே விளித்தருளினார். மயக்கின் கண்படாது நீங்கினார். சிவஞான போதப் பத்தாம் நூற்பாவும், அதிகரணம் இரண்டில் காட்டிய,

"இங்குளி வாங்கும் கலம்போல் ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும் - பின்செய்வினை
மாயை யுடனில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே
ஆயவத னாலுணரும் அச்சு"

என்ற எடுத்துக்காட்டு வெண்பாவும் இவ்விருவினைத் தத்துவத்தைத் தானே விளக்கியுள்ளன!

மேலே சுட்டிய திருப்புகலூர்த்திருத்தாண்டகம் இதோ இருக்கிறது.

"பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கா
இம்மாயப் பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மானற் றன்னடித்தொடர்வான் உழிதர் கின்றேன்
இடையிலேன் கெடுவிர்காள் இடறேன் மின்னே"

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின், தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம், அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்ற முதல் நூற்பாவில், சிவஞான போதம் ஒடுங்குதற்கு முதற் காரணமாயுள்ள முதற் கடவுளையே இவ்வுலகம் தலைவனாக உடைத்தாயிருப்பதை உணர்த்திற்று. உலகம் முழுவதும் ஒரு காலத்தில் தோன்றி நின்று ஒடுங்குவதால், தனித் தனிப் பொருள்களும் தோன்றி நின்று ஒடுங்கும். இவ்வுண்மைகளைத் திருநாவுக் கரசர் தொகுத்து முன்னரே கூறிச்சென்றார்.

இனித் தனித்திருக்குறுந்தொகைப் பதிகத்துள்,

**20. ஒன்பது ஒத்து ஒடுங்குதல்**

"ஒன்ப தொன்பதி யானை யொளிகளி
றொன்ப தொன்பது பல்கணஞ் சூழவே
ஒன்ப தாமவை தீத்தொழில் இன்னுரை
ஒன்ப தொத்துநின் றென்னுள் ஒடுங்குமே"

என்ற பாடலில், ஒன்பது என்ற எண்ணின்மேல் வைத்துச் சிலவற்றைக் கூறுங்கால், "இன்னுரை ஒன்பது ஒத்து நின்று என்னுள் ஒடுங்கும்' என்று ஒடுக்கத்தைக் குறித்து நின்றார். "என்பேச்சுக்கள் முதலியன எல்லாம் எவ்வளவு விரிந்து சூழினும், முடிவில் நான் என்ற அகங்கார நிலையின வாய் வந்து, என்னையே சுற்றி, என்கைத்தொடுங்கும், ஒன்பது என்னும் எண்ணினைப்போல்" என்று குறித்துப் போந்தார். இதனைச் சிவக்கவிமணி "இஃதெவ்வாறெனின், ஒன்பதை எதனால், எத்தனை பெருக்கினாலும் பெருக்கி வந்த எண்ணில் உள்ள இலக்கங்களைக் கூட்டினால் ஒன்பதே வருவது போல :-

$$9 \times 2 = 18 = 1+8=9.$$
$$9 \times 3 = 27 = 2+7=9.$$
$$9 \times 4 = 36 = 3+6=9.$$
$$9 \times 5 = 45 = 4+5=9.$$
$$9 \times 6 = 54 = 5+4=9.$$
$$9 \times 7 = 63 = 6+3=9.$$
$$9 \times 8 = 72 = 7+2=9.$$
$$9 \times 9 = 81 = 8+1=9.$$

மேலும் $9 \times 144 = 1296 = 1+2+9+6 = 18 = 1+8=9$ என்றிவ்வாறு கண்டுகொள்க.

ஒன்பது என்ற எண், ஒன்று, இரண்டு முதலிய ஏனைய எண்களைப் போலத் தனக்கென்று ஒரு தனிப் பெய ரில்லாமல், பின்வரும் பத்தில் ஒன்று குறைந்தால் எதுவோ அது என்று அறியப்படுமாறு பெயர்கொண்டிருத்தல், பின் வரும் பாகமாகிய உலகமும், முன்னிற்கும் பதியுமல்லாதது என்று அறியப்படுவதும், தனித்து நில்லாது பதியினையோ அன்றிப் பாசத்தையோ சார்ந்து நிற்றலுமான நிலையின் உள்ள உயிரை ஒத்திருக்கின்றதென்பதும், கடிகாரப் பொறி களிலும் ஒன்பதைக் குறிக்க (IX என்ற, X இல் ஒன்றைக் குறைக்க என்ற பொருள்பட) IX என்ற குறியீடு கொள் வதும் பிறவும் இங்கு காணத்தக்கன,'' என்று விளக்கிப் போந்தனர். இவ்வாறு எத்தனை எத்தனையோ சாத்திரக் கருக் கள் திருநாவுக்கரசர் தேவாரங்களிற் பொதிந்துள்ளன. "கற்றது கைம்மண்ணளவு, கல்லாதுலகளவு'' என்றபடி ஒருசிலவே எடுத்துக்காட்டுக்களாகத் தரப்பெற்றுள்ளன. விரிவஞ்சி விடுக்கப்பெற்றன பலப்பல. அவற்றை வந்த வழிக்கண்டு கொள்ளவும் வல்லார் வாய்க்கேட்டுணரவும் வேண்டும்.

## இலக்கியச்சுவை நலம், தொடைநலம், நடைநலம் முதலியன

இதுகாறும் திருநாவுக்கரசர் திருமுறைகளை, சமய, மெய்யுணர்வு, வாழ்க்கை வரலாற்றுக்கண்கொண்டு ஒருவாறு பார்த்தோம். இனி, இலக்கியக் கண்

**20. இலக்கிய நயம்.** கொண்டும் ஒருவாறு இவற்றைப் பார்க்கலாம்.

இலக்கியக்கண்கொண்டும் இவரைப் பார்ப்பவர்கள் பெரும் பயனை எய்தாது போகார். இலக்கியப் பெருஞ்சுவை யில் ஈடுபட்டுத் துய்க்காமலும் போகார் என்பது திண்ணம்.

இலக்கியச் சுவை, இலக்கிய மரபுகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட இலக்கியக் கருவூலமாகவும் புது இலக்கிய வடிவங்களைத் தோற்றுவித்துத் தமிழன்னைக்குத்

தந்த தாய்நூலாகவும் திருநாவுக்கரசர் தேவாரங்கள் விளங்குகின்றன.

" மலங்கினேன்கண்ணின் நீரை
மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன்வினைக் கேட
னேனினி மேல்விளைவ தறிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகளி
ரண்டும்வைப்பிட மின்றியே
கலங்கினேன்கலங் காம
லேவந்து காட்டினாய்கழுக் குன்றிலே.

என்ற பாட்டினடிகளில் முதற்சீர்களாக வரும் மலங்கு, விலங்கு, இலங்கு, கலங்கு என்னும் தன்வினைச் சொற்கள், பிறவினைச் சொற்களாக மாறும்போது மலக்கு, விலக்கு, இலக்கு, கலக்கு எனவரும். இவற்றுள் 'இலங்கு' என்னும் சொல் தன்வினையில் 'விளங்கு' என்றும், பிறவினையில் 'விளக்கு' என்றும் பொருள்படும். தானே அறிந்து, அறிவிக்க அறியும் ஆன்மாவுக்கும் கடவுள் அறிவுறுத்துவார். அதுபோன்றே ஒருமொழியின் உயிர்நிலையாகிய இலக்கியமும் தானும் விளங்கும். அறம் பொருளின்ப வீட்டு - அகப்புற - வாழ்க்கைமுறைகளையும் விளக்கும். இது பற்றியே ஒவ்வொரு நாட்டின் பன்முக வாழ்க்கையில், சமுதாய வரலாற்றில், நாகரிகப் பண்பாட்டு வாழ்க்கையில், இலக்கியம் சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. ஒரு நாட்டில் உள்ள கட்டிடங்கள், கைத்தொழில்கள், ஆறுகள், மலைகள், காடுகள், நகரங்கள், ஊர்கள் முதலிய எவை அழிந்தாலும் அழியலாம். மீட்டும் பெற்று விடலாம். ஆனால் இலக்கியம் அழிந்தால் உய்வே இல்லை. அதை மீட்கவும் முடியாது.

ஒரு நாட்டில், குடிமக்கள் வாழ்க்கையிலும், கல்வி நிறுவனங்களிலும், இலக்கியப் படிப்பறிவு, இலக்கியச் சுவையுணர்வு, வாழ்க்கை முறைகளிற் சிறந்த பயனைச் செய்து ஒரு நாட்டின் பண்பாட்டை உயர்த்தும். ஒவ்வொருவருக்கும் இன்றியமையாது, இவ்விலக்கியப்படிப்பறிவும் சுவையுணர்வும் வேண்டற்பாலனவாம்.

தொடக்க நிலையிலிருந்து, உயர் நிலை, கல்லூரி நிலை முதலிய பல நிலைகளிலும், கல்வித்துறைகளிலும், அவற்றைக் கற்பிக்கும் முறைகளிலும் தாய்மொழிக் கல்வியில் எல்லா நிலைகளிலும், இலக்கிய நோக்கம் (Literary aim) எவ்வாறு தலை சிறந்து விளங்குகிறது என்பதை ஆராய்வது பொதுவாகத் தமிழ் மக்களுக்கும், சிறப்பாகத் தமிழ் மாணுக்கர்களுக்கும், கவர்ச்சி உள்ளதாக இருக்கும்; பயனும் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. மக்கள் முதன் முதலில் நாடோடிகளாக வாழ்ந்து வந்த பின்னர், ஒரு நாட்டில் ஒன்றுகூடி ஒரு மன்பதையாய் (சமுதாயமாய்), வாழத் தலைப் படவே மொழி தோன்றலாயிற்று; வளரலாயிற்று ஒன்று பட்ட மக்களின் பொதுவாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது. பல்வேறுபட்ட, மாறுபட்ட, கொள்கைகள், குறிக்கோள்கள், சமயங்கள், குலங்கள், நிலைகள், தொழில்களால் வேற்றுமையுள்ள மக்களும் தாம் பேசும் மொழியால் ஒன்றுபடுகின்றனர். மொழியினுல் தான் மக்கள் எண்ணும் எண்ணம் வெளிப்படுகின்றது. சிந்தையும் அதை வெளியிடும் மொழியும் ஒன்றை ஒன்று விட்டுப் பிரிக்கமுடியாத நிலையைப் பெற்றிருப்பதால் சிந்தை வளர அதை எடுத்தியம்பும் மொழியும் வளரும். மொழிவளர, எடுத்து மொழிவதற்குரிய சிந்தையும் ஒருங்கே வளரவேண்டும். ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பிரித்தால் ஒன்றும் வளராது. தளரவே செய்யும். எனவே வாழ்ந்தால் இரண்டுக்கும் ஒருங்கே வாழ்வு, தாழ்ந்தால் இரண்டுக்கும் ஒருங்கே தாழ்வு. இப் பழவுண்மையைக் கண்டுணர்ந்ததனுலன்றே புதுமைக் கவிஞர் பாரதிதாசனும் தமிழைப் பார்த்து, "நைந்தாயெனில் நைந்து போகுமென் வாழ்வு, நன்னிலை உனக்கெனில் எனக்குந் தானே'' என்று முழங்குகின்ருர்.

உலகில் பல மொழிகள் தோன்றி, வளர்ந்து, மறைந்து போய்விட்டன. சில அன்று முதல் இன்றுவரை நிலவுவதோடு, என்றும் பொன்ருப் புகழுடன் நின்று நிலவவும் செய்யவல்ல பழமையும் புதுமையும் ஒருங்கே கொண்டு விளங்குகின்றன. நந்தம் செந்தமிழ் மொழி அப்படிப்பட்டது.

நாடுகள் தோறும் மொழிகளும் வேறுயிருப்பினும், ஒரு நாட்டில் பிறந்தது முதல் இறந்ததுவரை அந்நாட்டினர் கேட்டுவரும் மொழியே-வாழையடி வாழையாக, வழி வழியாக, மிகப் பழங்காலம் தொட்டே கேட்டும், பேசியும், படித்தும், எழுதியும், வரும்மொழியே - தாய்மொழி எனப்படும். தாயின் கருவில் இருக்கும்பொழுதே ஒரு சேய் திருவுற்றுத் தன் தாயின் ஊனினும் உள்ளத்திலும் உயிரிலும் ஒன்றுபட்டு, அவள் வழியாக அம்மொழியினரின் நடை, உடை, எண்ணங்கள், பண்பாடு, கலை, நாகரிகம், கடவுட்கொள்கை, அரசியற் கொள்கை, குறிக்கோள், ஆகிய இன்னோரன்னவற்றைத் தன் ஊனிலும் உள்ளத்திலும் உயிரிலும் பெற்றுக்கொண்டு பிறப்பதால் அச்சேயின் மொழி தாய்மொழி எனப்படுவதில் வியப்பொன்றுமில்லை. பின்னர் அச்சேய் பிறந்து மொழி பயிலுங்கால் அதன் தாய் முதற்கண் பாலூட்டித் தாலாட்டிப் பின் சீராட்டிப் பாராட்டும் மொழியே சேய்க்கும் தாய்மொழி ஆயிற்று. அடுத்துச் சேயும் தாயாகித் தன் சேய்க்கும் புகட்டும் மொழியும் அதுவே ஆகும். இச்சிறப்புக் கருதியே நம்மொழி "பால்வாய்ப் பசுந்தமிழ்" என்று போற்றப்படுகிறது.

தாய், சேய்க்கும் முதல் ஆசிரியர் ஆவாள். அவள் பால், மழலை மொழிந்து, பின்னர் அப்பனாலும் பள்ளிக்கூடத்தில் ஆசிரியனாலும் வரிவடிவிற் பயிற்றப் பெற்று அறிவு விரிவெய்தப்பெறும். இவ்வுலகக் கல்வியில் மட்டுமின்றி, மெய்யுணர்வுறுவதற்குரிய அவ்வுலகக் கல்வியிலும், ஒருவர் இறைவனைத் தலைப்பட விழையுங்கால் அங்கும் அருள் உருவாகிய தாயே முதற்கண் அவரைப் பண்படுத்தி, அப்பனாகிய இறைவனை அறிவித்து அவன்பால் உய்ப்பவளாவள். இதனை,

> ". ....மெய்யருளாம்
> தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயை மறந்து
> ஏயுமதே நிட்டை"

என்னும் முற்றத்துறந்த முனிவர் பெருமான் அருள்மொழியாலும் அறியலாம். தாய்வழியாகத் தந்தைக்கு ஆளாதலை

உணர்ந்தே மணிவாசகப் பெருந்தகையாரும், "அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே" என்று தம் அருமைத் திருவாசகத்தில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழ், அமிழ்தினும் இனியதென இமிழ்கடல் வரைப்பில் எல்லோராலும் போற்றப் பெறுவது. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே"யும் "முன்தோன்றி மூத்து"ப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருவது. பழமையும் பெருமையும் வாய்ந்த இது புதுமையும் பொருந்தி, இன்றும் உலக வழக்கழியாது என்றும் நின்று நிலவுவதற்குரிய "உயர்தனிச் செம்மொழி" எனற்பாலது. தமிழ்த் தெய்வ வணக்கம் கூறப் போந்த, பேராசிரியர், சுந்தரம்பிள்ளையவர்கள், தமிழ் மொழிக்குப் பரம்பொருளை உவமை கூறினர். பரம்பொருள், பல்லுலகும் பலவுயிரும் படைத்தளித்துத் துடைக்கினும், யாதொரு மாறுபாடின்றி அக்காலத்தும், இக்காலத்தும், எக்காலத்தும் இருப்பதுபோல், நந்தஞ் செந்தமிழும், முன்னைப் பழமொழிக்கும் முன்னைப் பழமொழியாயும், பின்னைப் புதுமொழிக்குப் பின்னைப் புதுமொழியாயும், பொலிகின்றது.

ஆரியம், எபிரேயம், லத்தீன் போன்ற பல இறந்துபட்ட பழைய மொழிகள் உயர்தனிச் செம்மொழி (Classical Language) கள் என வழங்கப்பெற்று வருவனபோலப் பழமையிலும் பெருமையிலும், இலக்கிய விரிவிலும், இலக்கண அமைதியிலும், அவற்றிற்குப் பின்வாங்காதிருப்பதோடு, இன்னும் "உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையாத சீரிளமைத் திறம்" வாய்ந்த நந்தம் செந்தமிழ்மொழியை ஏனை மொழிநூல் அறிஞரும் உயர்தனிச் செம்மொழியெனப் பேணிப் போற்றவில்லை? "தான் வழங்கும் நாட்டின் கண்ணுள்ள பல மொழிகட்கும் தலைமையும் அவற்றினும் மிகவே தகவுடைமையும்" கொண்ட மொழியே உயர்மொழி. "தான் வழங்கும் நாட்டிற் பயிலும் மற்றைய மொழிகளின் உதவியின்றித் தனித்து இயங்கவல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி" எனப்படும் "திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம்". இம்

மூன்றிலக்கணங்களையும் தன்னகத்தே கொண்ட தமிழ் மொழியும் உயர்தனிச் செம்மொழி ஆகாதோ? இதே மூச்சில் அது தற்காலத்தும் பிற்காலத்தும் நிற்கக் கூடிய புது மொழியுமாகாதோ?

இத்தகைய சிறப்புவாய்ந்த நம் தாய்மொழி, தமிழ்நாட்டில் பள்ளிக்கூடங்களில் முதலிடம் பெற்றும், பிறபாடங்களைக் கற்பிக்கும் வாயிலாகவும் விளங்கினும், கல்லூரிகளில் இன்னும் அந்நிலை முழுவதும் எய்தவில்லை. இவ்விடங்களில் எல்லாம் தாய்மொழி பன்னோக்கங்கொண்டு கற்பிக்கப்பட்டு வருகிறது. சிந்தையை வெளியிடும் வாயிலாக, ஒருவருக்கொருவர் கருத்துக்களை வாய்மொழி, எழுத்து ஆகிய இரு வழிகளிலும் வெளியிட்டு, உட்கொள்ளும் கருவியாக வழங்கப் பயிற்றுதல், (Linguistic aim) கருத்துக்கள் மட்டுமன்றி, உணர்ச்சிகளையும் மனவெழுச்சிகளையும் பண்படுத்தல், (Emotional aim) பன்முக அறிவை மிக உயர்ந்த நிலை வரையில் திரட்டிக் கொள்ளுவதற்குரிய அறிவுவாயிலாக அமைத்துக்கொள்ளல், (Intellectual aim) இலக்கிய நயமுணர்ந்து இன்புறல், (Literary aim) அழகியலுணர்ந்து இன்புறல், (aesthetic aim) படிப்போரின் படைப்பாற்றலுக்குதவல், (Creative aim) நல்ல மனப்பயிற்சியாதல், ஒரு நாட்டு வரலாறு, வாழ்க்கை முறை, அரசியல் முதலிய பன்முகச் சிறப்பை எடுத்துக்காட்டும் இலக்கிய வரலாற்றுச் சான்றுகப் பயன்படுதல், (Cultural aim) மொழிப்பற்றினடியாக மிளிரும் நாட்டுப்பற்று, (Patriotic aim) நல்லொழுக்க, சமய நன்னெறிகளைக் காட்டி ஆற்றுப்படுத்தல், (Moral and Spiritual aim) முதலிய பன்னோக்கங்களும் பயன்களாகக் கைவரப்பெற பெறவேண்டும் என்னும் குறிக்கோளோடுதான் தாய்மொழிப் படிப்புக்குத் தனியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என மொழிமுறை வல்லோரும், கல்வித்துறை வல்லாரும் ஒருங்கே கூறுகின்றனர்.

இந்நன்னோக்கங்கள் பலவற்றுள்ளும் நாட்டுமக்களுக்கும், பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும், பாங்குடன் பயிலும் பல்லாயிர மாணவர்களுக்கும் இலக்கிய நோக்கம்தான்

நோக்கமாக அமையவேண்டும் என்பதைக் காண்பாம். ஒரு மொழியின் இலக்கியத்தில் உரைநடை நூல்கள், கதைகள், கட்டுரைகள், கடிதங்கள், நாடகங்கள், நாடோடிப் பாடல்கள் முதலிய பல வகைகள் இருப்பினும் தனிநிலை, சொல்தொடர் நிலை, பொருள் தொடர்நிலையாகவுள்ள செய்யுட்களே இலக்கியத்தின் உயிர் நிலையாகிய பகுதியாகும். சிறந்த புலவர் பெருமக்களுடைய வாழ்க்கை நுகர்வு களிலிருந்தும் பட்டறிவிலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும், உயர் கருத்துக்களையும், ஓசை இனிமை, சொல்நயம் பொருள் நயங்களோடு வெளிப்படுத்துவது செய்யுளே ஆகும். செய்யுளைச் 'சொல் ஓவியம்' என்னலாம். வியன் கலைகளில் (Fine Arts) செய்யுள் முதலிடம் பெறுகின்றது. "எழுத்து முதலா ஈண்டிய அடியிற் குறித்த பொருளை முடிய நாட்டல், யாப்பென மொழி யாப்பறி புலவ" ராதலின், பாவாணரையும் படைப்புக் கடவுளர் வரிசையில் வைத் தெண்ணுவர் அறிஞர்.

> *" பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல*
> *சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினில்*
> *வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"*

என்று பவணந்தி முனிவர், யாப்புக்கு வரையறை(definition) கூறினும், குமரகுருபரர், மக்கள் முதலிய உயிரினங்களின் யாக்கைகளை நான்கு வழிகளில் (நச்சு உயிர்கள் அழுக்கி னின்று தாமே தோன்றுதல், விதைபோட்டு அல்லது பதி யம், ஒட்டு போட்டுச் செடிகொடிகள் பிறத்தல், முட்டை யிட்டுக் குஞ்சுபொறித்தல், குட்டிபோட்டுப் பால் கொடுத் தல்) படைக்கும் நான்முகக் கடவுளைவிட யாப்பைப் படைக் கும் புலமைக் கடவுளரே சிறந்தவர் என்றனர். மலரவன் படைக்கும் வெற்றுடம்புகள் மாய்வன போல் புலவர்கள் படைக்கும் உடம்புகள் மாயா என்பதனால் சிறந்த புலவர்களின் செய்யுட்கள் சிறந்த வாழ்க்கையின் சிறந்த இயல்புகளை எடுத்துக் கூறுவனவாயுள்ளன. ஒரு புலவர் தம்மைச் சூழ்ந்துள்ள, இயற்கைப் பொருள்களையும், மக்களையும், மக்கள் இயற்கையையும், தம் நுண்மாண் நுழைபுலத்தாற் கூர்ந்து நோக்கி, அவற்றைத் தம் மனத்தி

லேயே நினைவுறுத்திக்கொள்ளுவர். பிறகு, அவற்றைச் சிறந்த செய்யுட்களின் வாயிலாய்ப் புதிய கற்பனையோடு, தாம் கண்டவற்றைப் புதியதான ஒரு கவின்பெறுகாட்சியாக, சொல்லோவியமாக ஆக்குகின்றனர். இவற்றைப் படிப் போருக்கும் வாழ்க்கைச் செயல்களும், நிகழ்ச்சிகளும் ஒரு சிறந்த மனக்காட்சியாகக் காட்சி அளிப்பது கண்கூடு.

மனத்திற்றோன்றி யெழும் உணர்ச்சிகளையும் எண்ணங் களையும் ஏற்ற சொற்களில் நடை நலமும், தொடை நலமும், இசை நலமும் பொருந்தக் காவியப் புலவன் பாடுகின்றான். இவற்றையே ஓவியப் புலவனும் நிறங்களிற் கோல் தோய்த்து, காவியப் புலவனின் சொல்லோவியங்களை, வண்ண உயிர் ஓவியங்களாகத் தீட்டிவிடுகின்றான். இது போன்றே மற்றொரு கலைஞன் கல்லிற் செதுக்கியும் செம்பில் வார்த்தும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் சிலைகளில் வடித்தெடுத்துக் காட்டிவிடுகின்றான். பாடற் (இசைப்) புலவனும் ஆடற் புலவனும் இங்ஙனமே எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தத்தம் கலைகளிற் கவினுறக் காட்டு கின்றனர். எனினும் இவ்வழகுக்கலை களுக்கெல்லாம் இல்லாத ஒரு சிறப்பியல்பு இலக்கியக் கலைக்குண்டு. காலத் தாலும், கருத்தாலும் ஓவியம், சிற்பம், இசை முதலிய கலை கள் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் செய்யுள் இப்ப டிப்பட்ட தடைகளால் கட்டுப்படாமல் தன்னுரிமை பெற்றுள்ளது. மேலும், ஏனையவை, கண்டும் கேட்டும் உணரவிருக்கச் செய்யுளைக் கேள்வி இன்பத்தால் மட்டும் துய்ப்பதோடு செய்யுளில் உள்ளடங்கியிருக்கும் கருத்தும், அதை எடுத்துரைக்கும் சொல்லும், பருந்தும் நிழலும்போல் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது உடன் போவதால், அவற் றின் பொருளையும் நன்குணர்ந்து இன்புற்று இதில் காண லுறும் பல தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் மனக்கண்ணாலும் காணலாம். இன்னும் புலவன் எழுதும் மொழியும், நடை யும், அந்நாட்டிற் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பயின்றுவரும் தாய் மொழியிலேயே அமைந்திருப்பதால், குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை, பாமரர் முதல் புலவர் வரை, எல்லோருக்கும் அவை எளிதில் விளங்கும். சிற்பம், ஓவியம்,

இசை, ஆடல் முதலிய பிற கலைகளை இங்ஙனம் அனைவரும் சுவைத்தின்புறுவது எளிதல்ல.

இத்தகைய இலக்கியச்சுவையை ஊட்டுவதற்கென, பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் விட்டு நீங்கிய பின்னரும் வாழ்நாளில் இலக்கியத்தைச் சுவைத்து இன்புறுவதற்கு வழிகாட்டியாக இருப்பதற்கு தமிழ் இலக்கிய நூல்கள் உறுதுணையாக அமைகின்றன. மொழி அறிவை வளர்ப்பதோடு, இலக்கியச் சுவையுணர் ஆற்றல், இலக்கியத் திறனும் ஆற்றல் முதலியவற்றையும் உண்டுபண்ணி இலக்கியப் பற்று, தாய்மொழிப்பற்றுக்களை விளைவித்துக் கல்விக் கழகங்களை விட்டு நீங்கிய பின்னரும், இவை நிலைத் திருக்குமாறு செய்யவல்லன இந்நூல்கள். இப்படிப்பை ஆழ்ந்த படிப்பு (Intensive reading) அகன்ற படிப்பு (Extensive reading) என இருவகையாகப் பிரிக்கலாம். அகன்ற படிப்பு, பரந்த பொது அறிவை வளர்க்கவும், விரைவாகப் படிக்கவும் வேண்டுவது ஒன்று ஆதலால் இது வாய்க்குள்ளேயே (Silent) விரைவாகப்பொருளுணர்ந்து கொண்டே செல்லும் தன்மைத்து. இதை, நூலகப்படிப்பு, துணைப்பாட நூற் படிப்பு, செய்தித்தாட்படிப்பு, வாரம், பிறை, திங்கள், இதழ்ப் படிப்பு, ஆண்டிருமுறை, ஆண்டு நான் முறை முதலிய பருவ இதழ்ப் படிப்பு, புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கலைக்களஞ்சியங்கள், பொது அறிவுநூல்கள் முதலிய பன்னூற் படிப்பு முதலியவற்றால் வளர்க்கலாம்.

இனி, ஆழ்ந்த படிப்புக்கென நிலைத்து, மெதுவாகப் படித்துக்கொண்டு செல்லுவதற்குச் செய்யுள் உரைநடைப் பகுதிகளைப் பொருளும் சுவையும் உணர்ந்து படிப்பவர், மனப்பாடம் அல்லது நெட்டுருச் செய்து கோடற்குரியவராவர். அவற்றை அவர்கள் நுட்பமாக ஆராய்ந்து படிக்க வேண்டும். பொருள் உணர்தலோடு சொல்நயம் பொருள் நயங்களைச் சுவைத்து இன்புறவேண்டும். நடைநலம், தொடைநலம் முதலியவற்றை வாய்விட்டுப் படித்தும், ஒப்புவித்தும், (recitation) செவி வழியாகச் சென்று சிந்தையில்

தங்கும் கவிச்சுவையாகப் பருகவேண்டும். மேலும், அவற்றுள் வரும் தலைவன், தலைவியர், பிற ஆட்கள் போன்றோர்களின் இயல் செயல்களை அறிதல், நூல் அமைப்பின் ஒழுங்கு, கட்டுக்கோப்புக்களுணர்தல், இலக்கணக் குறிப்புக்கள், அரிய சொல்லாட்சிகளை அறிதல், சொற்றொடர் மரபுத் தொடர்களைப் பொருள் உணர்ந்து, தம் வாக்கிலேயே பலவிடங்களில் வைத்து வழங்கப் பயிலுதல், அவற்றுட் பயிலும் சுவையும் மெய்ப்பாடும் தோன்றச் சுவைத்துணர்தல் ஆகிய இன்னோரன்ன முறைகளில் படித்தின்புறல் இவ்வாழ்ந்த படிப்பின் குறிக்கோளாகும். இது, மேலெழுந்த வாரியாக நுனிப்புல், மேயாமல், ஆழ்ந்து நுட்பமாகக் கவனிக்கும் பழக்கத்தை வளர்க்கும்.

உயர்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள் தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல இன்பமூறும் ஊற்றுக்களாம். இலக்கியம், முன்னோர்களாகிய தெய்வப் புலமைச் சான்றோர்கள் தங்கள் வாழ்நாட்களில் பட்டறிந்து கண்டு வைத்த உண்மைகளாகிய, விலைமதிக்கவொண்ணு மணிகள் நிறைந்த, பொற்பேழைகள் மல்கிய கருவூலங்களாம். நாட்டில் உள்ளோரனைவரும் வேற்றுமையின்றிச் சென்று தண்ணிழற்கீழ் இன்புறத்தகும் பூம்பொழிலாம். இவற்றைப் பெற்று மகிழ்வது அவர்கள் கால்வழியில் வந்த பிற்றை நாள் தலைமுறையாளரின் தலையாயகடனும். இவற்றைப் பயின்று, இவற்றில் இலைமறை காய்களாய்ச் செறிந்து கிடக்கும் பொருள்நயங்களையும் அவற்றின் வெளித்தோற்றங்களாகிய சொல் நயங்களையும் கண்டுணர்ந்து, சுவைத்து, இன்புறுதலே தாய்மொழிப் படிப்பின் தலைசிறந்த நோக்கமாகும்.

“ *தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்*
*இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ*
*நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்*
*தும்பர் உறைவார் பதி*”

என்றும்,

*" நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை*
*விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்*
*உணர்வில ராகிய பேதைய ரில்லார்ப்*
*புணர்தல் நிரயத்து ளொன்று"*

என்றும், இலக்கியச் சுவைஞர் நுகரும் இன்பம் நாலடியாரில் விளக்கப்படுகிறது. இந்நுண்ணுணர்வினரும், தொல் கேள்வித் தன்மையரும, இயற்றிய நூல்களைப் படித்தின் புறலே அன்றோரோடு கூடி மகிழ்தலாகும்.

உலகத்து, நாம், பல்வேறு மக்களோடு பழகும்போதும் வயிற்றுப் பிழைப்புக்காகப் பல துறைகளிலும் கிடந்துழன்று, ஓடியாடித் திரிந்து, உழைத்து, அலுத்துப் போகும்போதும் தோன்றக்கூடிய வெறுப்பை இலக்கியங்களே போக்கவல்லன. சிற்றினஞ் சேர்தல், மடி, வீண்காலப் போக்கு, பயனில்சொல் பாராட்டுதல் முதலிய பல குறைகளை நீக்கி, அவற்றினிடத்தில், பெரியோர் கேண்மை, மடியின்மை, காலத்தைப் பயனுறப் போக்கல், பயனுள் சொல் பாராட்டுதல் முதலிய பல நிறைகளை நிறுவ வல்லது இலக்கியப் படிப்பு. பரந்த நோக்கமும் விரிந்த பார்வையும் நல்கும். கவி இன்பத்தைச் சுவைத்து மகிழ்வதைவிடச் சிறந்த இன்பம் உலகில் வேறில்லை என்பர் ஆன்றோர். வாய் ஆறுக வயிறு களஞக உணரும் வாய்ச்சுவையோ சிறிது நேரமே நிலைத்து நின்று பிறகு மறைந்தொழிவதோடு தெவிட்டுந் தன்மையும் வாய்ந்தது. அளவுக்கு விஞ்சினால் நோய்க்கும் இடம் தரும். செவி யாருகச் சிந்தை களனுக உணரவல்ல கவிச்சுவையோ என்றால் தெவிட்டாத தெள்ளமுதமாய், மேலும் மேலும் வளர்ந்து, நினைக்கும் போதெல்லாம் புத்தின்பம் பயப்பதாய் நமதுள்ளத்தை என்றும் இன்பத்தில் ஆழ்த்தவல்லதாயிருக்கின்றன.

*" கவிப்பா அமுதம் இசையின் கறியொடு*
*கண்ணாற் குண்ணக் குவிப்பான்"*

என்ற அடிகளிற் கம்பர் கவிப்பாவை இன்ப அமிழ்தெனவும் இசையைக் கறியெனவும் உருவகப்படுத்தித் தெரிந்த வாய்ச் சுவை உவமை வாயிலாய்த் தெரியாத கனிச்சுவைக்கு

அழைத்துச் செல்லும் சிறப்பைக் காணலாம். செய்யுள் இன்பத்தில் ஒருவர் எவ்வளவில் ஈடுபட்டு இன்புறுதற்குரிய ரென்பதைக் கவியொடு ஊனும் உயிரும் ஒன்றிக் கலந்து அந்நிலையை எடுத்துரைக்கும் இராமலிங்க அடிகளின் கீழ்க் கண்ட பாவினால் உணரலாம்.

" வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே".

என்பதே அப்பாடல்.

" ஆயுந் தொறுந் தொறு மின்பந்தருங் கல்வி"
என்பர் பிறரும்.

கவி நயத்திலேயே ஆழ்ந்து அமிழ்ந்த திருவள்ளுவரும் "நவில்தொறு நூனயம் போலும்" என்ற சிறந்த உவமை யைப் பண்புடையோர் தொடர்பிற் பயில்தொறும் மிகும் இன்பத்தை விளக்க அமைத்துள்ளார். 'செவியிற்சுவை' யுணராதாரை அவர், மக்கள் வரிசையில் வைக்காமல் 'மாக்கள்' வரிசையில் வைத்தெண்ணுவதையும், செவிக்குண வில்லாதபொழுது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்று கூறுவதையும் தமிழ்மக்கள் பொதுவாகவும், தமிழ் மாணாக்கர் கள் சிறப்பாகவும் கவனித்து இலக்கியச் சுவையில் ஈடுபடல் வேண்டும். சுருங்கக் கூறின் பசி, நீர்வேட்கை, அவலக் கவலை, கையாறு, முதுமை, தளர்ச்சி முதலியவற்றைப் போக்கி, மட்டிலா மகிழ்ச்சியை ஆக்கி என்றும் இளமையை நல்கவல்லது இவ்வின்பம்.

இவ்வின்பத்தை மாணாக்கர்கள் மட்டுமின்றித் தமிழ் மக்கள் அனைவருமே துய்த்தற்குரியர். எத்தொழிலில் எவர் ஈடுபட்டிருந்தாலும் இலக்கியச் சுவையை நுகர்வ திற்றடை யொன்றுமில்லை. அவரவர் தம் தொழிலுக்கிடையே இலக்கியச் சுவையிலும் ஈடுபடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பண்டைப் புலவர்களிற் பலரும் தாம் ஒரு தொழிலை வயிற்றுப்பிழைப்புக்காக மேற்கொண்டிருந்ததோடு, இலக்கிய இன்பங்களையும் நுகர்ந்து, அரிய பெரிய செய்யுட்களையும் காவியங்களையும் எழுதியுள்ளனர். இக்காலத்தும் அங்ஙனமே பலர் இதில் ஈடுபட்டிருக்கின்றனர். மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், வேதநாயகம் பிள்ளை, தாமோதரம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, சுப்பிரமணிய முதலியார், தேசிக விநாயகம் பிள்ளை, சிதம்பரநாத முதலியார் முதலிய பலரைக் காண்க. பண்டைத் தமிழரசர்களிலும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சோழன் நல்லுருத்திரன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் போன்ற பலர் இங்ஙனம் பயின்றுள்ளனர். பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலியவற்றை யாத்த புலவர்களுக்கு நூறாயிரக்கணக்கான பொற்காசுகளையும், முற்றூட்டாகப் பல ஊர்களையும் வழங்கிப் புலவர்களை அரசர்கள் புரந்ததெல்லாம் இவ்விலக்கியச் சுவைகண்டு மகிழ்ந்த திறத்தினாலன்றோ? செங்கோலேந்திய திருக்கரங்கள் அன்று தமிழ்ப்புலவர்களுக்கு வெண்சாமரை வீசியதும் இது பற்றியே யன்றோ?

" கற்பக மனையஇக் கவிஞர் நாட்டிய
சொற்பொருளாம் எனத்தோற்றம் சான்றது"

என்றும்,

" புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறி அளாவி
சவியுறத் தெளிந்து கண்ணென் றொழுக்கமும் தழுவிச்சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்"

என்றும் கல்வியிற் பெரிய கம்பரும், சிறப்பித்துப் பேசுகின்ற இலக்கிய வடிவமாகிய யாப்பு, உதிரியாகவோ, தொகையாகவோ-சொல் தொடர்நிலையாகவோ, பொருள்தொடர்நிலையாகவோ—சொல் தொடர்ந்தும் பொருள் தொடர்ந்தும் சிறு பிரபந்தமாகவோ, காப்பியங்களாகவோ, சிறுகதை கட்டுரை, நாடகம், கடிதம், புதினம், அன்றி, பள்ளு, சிந்து,

குறம், கண்ணி, கும்மி, தென்பாங்கு, திருப்புகழ் போன்ற வண்ணப் பாடல்களில் எந்த வடிவிலே புலவர் கருத்து, வலியும் வருத்தமுமின்றித் தானாகவே (சிந்தை-மொழியாக, கருத்து-கவியாக, தமிழ் - இசையாக) பாடல் - பண்ணுக வெளிப்படினும் அது இலக்கியமாகும்.

இவ்விலக்கியங்களில், "மாத்திரை, எழுத்தியல் அசை வகை எனாஅ" என்று தொடங்கி இழைபு வரை நல்லிசைப் புலவர் செய்யுளுறுப்பென வல்லிதிற் கூறி வகுத்த 34 உறுப்புக்கள் மேற்கூறிய வகையின் உறுப்புக்களாயிருப் பினும், அதற்கு மேலும் இலக்கியத்திறனாய்வாளர், வின் செஸ்டர் கருத்துப்படி (Principles of Litcrary criticism)

(1) கருத்து (Intellectual element) (2) பொருளைப்பொதிந் துள்ள சுவை - மெய்ப்பாடு-மன எழுச்சி (Emotional element) (3) கற்பனை - (Imagintive element (4) இலக்கிய வடிவம் (Formal element) ஆகிய நான்கு கூறுகளும், உடம்புக்குள் உயிர், கண்ணுக்குத் தெரியாது இருப்பினும் அதைப்புறத்தே காட்டுவதற்கு ஊனுடுத்தி ஒன்பது வாயில் வைத்து, ஒள்ளெலும்பு தூணு, உரோமம் வேய்ந்து - இவ்வாறெல் லாம், உடம்பைக் காட்டி உயிரைக் காட்டுவது போல், இலக் கியப் பொருளை கண்ணுக்கும் காதுக்கும்தெரியாக் கருத்தை- கண்ணாலும் காதாலும் காணும்படியான இலக்கிய வடிவங்க ளைத தந்து காட்டுவதில் இன்றியமையாது வேண்டப்படு வன. மலரோன் படைப்பில், ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை நான்கு வழிகளில் (1) தாமாகவே நச்சுயிரிகள் (Bacilli) முதலியவைகள் தோன்றல் (2) விதை, பதியம், ஒட்டுப்போட்டுச் செடிகொடி தோன்றல் (3) முட்டையிட்டுக் குஞ்சுபொறித்தல் (4) குட்டிப்போட்டுப் பால் கொடுத்தல் (வடமொழியில் இவற்றை அண்டசம், சுவேதசம், உற்பிசம், சராயுசம் என்பர்) என்ற நாலு அடிப்படையில் உலக உயிர் களனைத்தும தோன்றுவதுபோல வண்டமிழோர் இலக்கியப் படைப்பில் இந்நான்கு இலக்கியக் கூறுகளின் அடிப்படை யில் எல்லா இலக்கிய வடிவங்களும் பிறக்கும். இந்நானெறி யிலேயே தமிழ் இலக்கியத்தில் சிறந்த சிற்றிலக்கியங்களும்

பேரிலக்கியங்களும் பிறந்துள்ளன. உலக இலக்கியங்களும் பிறந்துள்ளன. ஹோமர், தாந்தே, ஷேக்ஸ்பியர், மில்டன், சேக்ழார், காளிதாசர் காவியங்கள் பிறந்துள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கந்தபுராணம், கலிங்கத்துப்பரணி, பெரியபுராணம், கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம், காஞ்சிப்புராணம், தேம்பாவணி, சீறாப்புராணம், இரட்சண்ய யாத்திரிகம், மனோன்மணீயம், பாஞ்சாலி சபதம், ஆசிய ஜோதி, பாண்டியன் பரிசு, அவனும் அவளும் போன்ற எண்ணிறந்த காவியங்கள் தோன்றி யுள்ளன.

இந்நான்கு அடிப்படைகளோடு, சுருங்கச் சொல்லல் முதலிய பத்து வித அழகுகளும், உவமை உருவகம் போன்ற அணி நலமும், எதுகை மோனை போன்ற தொடை நலமும், ஆற்றொழுக்கு, பால், தேன், நெய், வாழைப்பழம், தெங்கம்பழம் போன்ற பன்முகப்பா நடைநலமும், அம்மை முதலிய வனப்புக்கள் ஆகியவை போன்ற துணை உறுப்புக் களும் இலக்கிய வடிவுக் குதவுகின்றன.

இவ்வாறு உருவெடுத்த இலக்கியங்கள் "தொட்டா லும் கைமணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும்" என்பது போல் செவி வழியாகச் சென்று சிந்தையிலே கவிச்சுவை யாகத் தெவிட்டாத தெள்ளமுதமாக விளங்குவன.

உலகியற்றியோனாகிய நான்குமுகக் கடவுளின் படைப்புகள் - வெற்றுடம்புகள் நில்லாது மாய்ந்தொழிவன. ஆனால், வண்டமிழ் படைப்புக் கடவுளராகிய புலவர்களின் இலக்கியப் படைப்புக்கள் அன்றும் இன்றும் என்றும் நின்று நிலவும் பொன்றாப் புகழுடையன.

" மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்னும் புறநானூற்றடிகள் இவ்விலக்கியப் படைப்பாள ருக்குப் பொருந்தும்.

ஆங்கில இலக்கியத்திறனாய்வாளரும் இலக்கிய இன் பத்தைப் பலபடப் பேசுவர்.

1. Dr. Johnson :- "The Art of writing pleasure with truth, by calling imagination to the help of reason."

2. John Stuart Mill :- "The Thought and words in which emotions spontaneously embodies itself."

3. Leigh Hunt :- "The utterance of a passion for truth, beauty and power, embodying and illustrating its conception by imagination and fancy and modulating its language on the principle of variety in unity."

4. Mathew Arnold :- "It is simply the most delightful and perfect form of utterance that human words can reach. It is nothing less than the most perfect speech of man in which he comes nearest to being able to utter truth. It is a criticism of life under conditions fixed for the laws of poetic truth and poetic beauty."

5. Prof. Courthope :- "The art of producing pleasure by the just expression of imagination, thought and feeling in metrical language."

6. Lamborn :- "It is the charm and glory of poetry, that its high and single purpose is to make glad the heart of man, expresses feelings and attempts to awaken the corresponding emotions in the heart of man."

7. Abercrombic ;

"Poet composes a delightful and exciting music in language in order to make what he has to say peculiarly efficacious in our minds. Not mere music alone but meaning of words too.

எனவே, திருநாவுக்கரசர் தேவாரத்திலும் இவ்விலக் கிய இன்பத்தைப் பொதுவாகச் செய்யுள் உறுப்புக்கள் (34) அனைத்திலும், சிறப்பாக இலக்கிய அடிப்படை நானிலை களிலும் பெரிதும் காணலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல் எடுத்துக்காட்டுகளாக ஒரு சிலவற்றைக் காண்போம்.

(1.) முதற்பொருளில் கருக்கொண்டு தோன்றும் கருப்பொருள்களாகிய "மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம், என்று இனையன" ஆகிய இயற்கைப் பொருள்களின் அழகு, எழில், புனைவுகளுக்கு (Description of nature) ஓரிரண்டு சான்றுகள்.

திருவாரூர் - சீகாமரம்

" ஏறிவண்டொடு தும்பியஞ் சிறகு ஊன்ற விண்டமல ரிதழ்வழி
தேறல்பாய்ந் தொழுகுந் திருவாரூ ரம்மானே."

திருவலம்புரம்- திருநேரிசை

" அருகெலாங் குவளை செந்நெல் அகவிலை ஆம்பல் நெய்தல்
தெருவெலாம் தெங்கு மாவும் பழம்விழும் படப்பை யெல்லாம்
குருகினங் கூடி யாங்கே கும்மலித் திறகு லர்த்தி
மருவலா மிடங்கள் காட்டும் வலம்புரத் தடிக ளாரே."

அடுத்து இலக்கிய அடிப்படை நானெறியில் கருத்தாழத்திற்கு (Intellectual element) ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்கள் தருவாம். இதற்குமேல் உலகத்தில் இல்லையென்ற, ஈடும் எடுப்புமற்ற, தனக்குவமையில்லாத சாத்திரமே போன்ற, தனிப்பெரும் அறிவுக் கருத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

1. " விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே."

2. " உயிரா வணமிருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிராவணமேறு தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே.

(2) சாத்திரத்திலும் இலக்கிய நயம்பொருந்த கற்பனையை ஊட்டிப் படிப்பாரை, இலக்கிய இன்பத்தில் ஈடுபடச் செய்வதற்கு (Imaginative element) ஓர் எடுத்துக்காட்டு.

திருவாரூர் - திருநேரிசை

" நாகத்தை நங்கை அஞ்ச நங்கையை மஞ்ஞை என்று
வேகத்தைத் தவிர நாகம் வேழத்தின் உரிவை போர்த்துப்
பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும் ஆரூரனார்க்கே."

இனி, கருத்தைத் கற்பனையோடு இலக்கியங்கள் கூறுவன போல், நம் அரசரும் கூறியுள்ளதோடு கடுவருத்தக் கட்டி பூசுவதுபோல், உள்ளத்தை, உணர்ச்சியைத் தொட ஒன்பான் சுவைகளை (Emotional Element) இழைத்தும் குழைத்தும் கருத்தை ஊட்டுவர். அதிலும் ஒன்பான், சுவையிலும், கடவுளன்பே, பத்திச் சுவையையேதான் முற்ற முழுவதும் தேவாரம் பெரும்பாலும் மேற்கொண்டுள்ளது.

திருக்கடவூர் - திருநேரிசை

" பெரும்புலர் காலைமூழ்கி பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்டனாரே."

இனி, வெளியுடம்பாகிய இலக்கிய வடிவத்தோற்றங்களும் (Formal element) காவிய இன்பத்திற்குக் கைகொடுத்துதவுவன. அவற்றுள் தொடைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

(1) எதுகை (1) "தெள்ளியர் கள்ளம் தீர்ப்பார்"
(2) "மெய்யவர் பொய்யும் இல்லார்"
(3) "வாய்த்திலேன் அடிமைதன்னுள் வாய்மையால் தூயனல்லேன்"
(4) "அருவரை தாங்கினானும் அருமறை ஆதியானும்

(2) மோனை (1) "உரைமாலை எல்லாம் உடையவ்வடி உரையலா"
(2) "உண்ணா அருநெஞ்சம் உண்டான்தான் காண்"
(3) "கலைஞானம் கல்லாமே கற்பித் தானை"
(4) "கடுநரகம் சாராமே காப்பான் தன்னை"
(5) "ஏற்றானை ஏழுலகம் ஆயினானை"
(6) "மின்னானை மின்னிடையாள் பாகன் தன்னை"

(3) முரண் (1) "செய்யவர் கரிய கண்டர்
(2) "செய்யமேனி வெண்ணீற்றர் செம்பொன் பள்ளி
ஐயர்."

(4) திரிபு
1. முன்னை யாறு முயன்றெழு வீரெலாம்
2. பின்னை யாறு பிரியெனும் பேதைகாள்
3. மன்னை யாறு மருவிய மாதவன்
4. தன்னை யாறு தொழத்தவ மாகுமே.

1. முன்னையாறு - முன் துன்பநெறி.
2. பின் னையாறு பிரி - பின் அத்துன்ப நெறியினின்
றும் பிரித்தருளு வீராக.
3. மன் ஐயாறு - நிலைபெற்ற திருவையாறு.
4. தன்னை ஆறு - தன்னை முறையாக.

1. "ஆனை யாரென ஆடுகின் றுன்முடி
2. வானை யாறு வளாயது காண்மினோ
3. நானை யாறுபுக் கேற்றவன் இன்னருள்
4. தேனை யாறு திறத்தாலே யொக்குமே."

1. ஆன் + ஐ + ஆறு என (பஞ்சகவ்வியமாக)
2. வான் + ஐ + ஆறு - வானில் தோன்றிய கங்கை.
3. நான் + ஐயாறு புக்கு - நான் திருவையாறு புகுந்து
4. தேன் + ஐ + ஆறு = அருவி ஆறுபோல்.

(5) யமகம் — திருவெண்காடு

இரா + வணம் - இல்லாத வண்ணம்.

இராவணஞ்செய மாமதி பற்றவை.

இராவணம் - யானை

இராவ ணம்முடை யான்றனை யுள்குமின்.

இராவணன் (இராவணன்)

இராவ ணன்றனை யன்றி யருள்செய்த

இரா + வணன் - (கருநிறம் - அகோரமுகத்தினர்)

இராவ ணன்திரு வெண்கா டடைமினே.

(6) ஒன்றிரண்டு என்று அடுக்கிப்பாடும் அழகும் கருத்தாழமும்
"ஒன்று கொலாம்" என்று விடந்தீர்த்த பதிகம்.
"ஒன்று வெண்பிறை" எனத்தொடங்கும் தனிக்குறுந்
தொகைப்பதிகம்-

## நகைச்சுவை

### பொது-தனித்திருநேரிசை

வஞ்சப்பெண் ணரங்கு கோயில் வாளெயிற் றரவந் துஞ்சா
வஞ்சப்பெண் இருந்த சூழல் வான்தவழ் மதியம் தோன்றும்
வஞ்சப்பெண் வாழ்க்கை யாளன் வாழ்வினை வாழ லுற்று
வஞ்சப்பெண் ணுறக்க மானேன் வஞ்சனேன் என்செய் கேனே.

வஞ்சப்பெண் - கங்கை.
வஞ்சப்பெண் இருந்த சூழல் - கங்கை உறையும் செஞ்சடைச்சூழல்
வஞ்சப்பெண் வாழ்க்கையாளன் - செஞ்சடையோன்
வஞ்சப்பெண்ணுறக்கம் - பொய்யுறக்கம்.

(7) பின்வருநிலை-குறுந்தொகை-திருவையாறு

சிந்தை வண்ணத்த ராய்த் திறம் பாவணம்
முந்தி வண்ணத்த ராய்முழு நீறணி
சந்தி வண்ணத்த ராய்த் தழல் போல்வதோர்
அந்தி வண்ணமு மாவர்ஐ யாறரே.
(வண்ணம் எனும் சொல் 10 பாடல்களிலும்)

(8) உருவகம் - திருவொற்றியூர் - திருநேரிசை

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறை யெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பா ராகிற்
சிவகதி விளையு மன்றே.

## (9) நடை நலம்

சம நிலத்தில் நிறைந்து பெருமித நடையோடு ஓடும் கோதாவரி, காவிரி, கங்கை ஆறுகளின் நடைபோலக் களிற்று நடைபோலத் திருநாவுக்கரசர் அரிய பெரிய கருத்துக்கள் அமைந்த பாநடையும் நடந்து செல்கின்றது. சொல்லும் பொருளும் ஏற்ற இடத்தில், ஏற்ப அமைத்து, அணிநலமும் தொடை நலமும், செந்தமிழ்ச் சொற்கோவையும் கொண்டு, சிவானந்தப் பேரின்பத்தை எடுத்துக் காட்டும் செம்மாந்த நடையில் செல்கின்றது. "சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான் என்று கூறுவது" போல அவர் பெருமை கூறும் இவர் நடையும் அவ்வாறே ஈடும் எடுப்புமற்று சிறந்து செல்கின்றது. சேக்கிழார்,

> "உளங்கொள் திருவிருத்தம் ஓங்குதிருக் குறுந்தொகை
> களங்கொள் திருநேரிசைகள் பலபாடிக் கைதொழுது"

என்று கூறுமாப் போல. திருவிருத்தம் (கட்டளைக் கலித்துறை) திருக்குறுந்தொகை (கலிவிருத்தம்) திருநேரிசை (ஆசிரிய விருத்த வகைகள்) முதலிய புதிய வடிவங்களைத் தந்தருளினர். பல பாடிய என்பதில் அவர் பாடிய வேறு பண்களும் மற்ரொரு புதிய வடிவமாகிய திருத்தாண்டகமும் (இதுவும் ஒருவகை ஆசிரிய விருத்தத்தி லடங்கும்) அடங்கும். ஒவ்வொரு வகைப் பாட்டு நடைக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டைக் காண்போம்.

### (1) நின்ற திருத்தாண்டகம்

> "இருநிலனய்த் தீயாகி நீரு மாகி
> இயமான னாயெறியுங் காற்று மாகி
> அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
> ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
> பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
> பிறருருவும் தம்முருவுந் தாமே யாகி
> நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
> நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே."

### (2) தனித்திருக் குறுந்தொகை

" மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈச னெனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே"

### (3) கோயில்-திருவிருத்தம்

" குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயித்த மாநிலத்தே."

### (4) தனித்திருநேரிசை

" உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகழி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே".

### (5) திருவையாறு-காந்தாரம்

" மாதர்ப்பிறைக் கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்."

இறுதியாக, ஒரு வரலாற்றாசிரியர் அல்லது புலவர் தாம் வரலாறு எழுதப் போகும் தலைவரைப் பற்றிய குறிப்புக்கள், அவர் எழுதிய பாடல்களிலேயே இருக்கு

**21. சில வரலாற்றுக் குறிப்புக்கள்**

மானால், அவற்றையும் அகச்சான்றுகளாகப் பயன்படுத்திக்கொள்வது கடமையாகும். இது இலக்கியச்சான்று (Literary, internal evidence) என்று கருதப்பெறும். இது போன்றே திருநாவுக்கரசர் தம் தேவாரப்பாடல்களில் தமக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஆங்காங்கு குறித்து வைத்திருப்பவை அவர் வாழ்க்கை வரலாற்றைக் காண்பதற்கு உறுதுணையாயிருந்தமையை, முன்னர்க் கண்டோம். அவற்றை மீட்டும்

கூறவேண்டா. மேலும் தாம் வாழ்ந்த காலத்துத் தாம் கண்ட கேட்ட நிகழ்ச்சிகளையும், வரலாற்றுச்செய்திகளையும் ஏற்ற இடங்களில் குறித்து வைத்துள்ளார். இவை அக் காலச் சமுதாய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உற்ற இலக்கியச் சான்ருய் (Literary) உதவுகின்றன. இவற்றுட் பல அக்காலக் கல்வெட்டுக்களிலும் காணுத அரிய பெரிய செய்திகளாயிருக்கலாம். அப்படிப்பட்ட சில பல வரலாற்றுக் குறிப்புக்கள் (historical reference) திருநாவுக்கரசர் தேவாரங் களில் காணப்பெறுகின்றன. அவற்றுட் சிலவற்றைக் காண்போம்.

தோத்திரப் பாடல்களில், தத்துவக் குறிப்புக்களில், சமயக் கருத்துக்களில், புராண கதைகளில், ஊடே வரலாற் றுக் குறிப்புக்களை உமியைப் புடைத்துக் மணியை எடுப்பது போல் (Wheat from the chaff) எடுத்துப் பயன்படுத்திக் கொள்வர் வரலாற்ருசிரியர். ஆசிரியர் சேக்கிழாரும் இவ் விதமே இக்குறிப்புக்களைப் பயன்படுத்திக்கொண்ட வர லாற்றுப் பேராசிரியரன்ரே?

இனி, திருநாவுக்கரசப் பெருந்தகையார், ஆங்காங்கு வரலாற்றுக் குறிப்புக்களை அமைத்துப் போந்ததோடு, தாம் செல்லும் ஊர்களின் உள்ளூர் வரலாற்றுக் குறிப்புக்களையும் (local history) கோயில் வரலாறு, குள வரலாறு, கோயில் மரங்கள் வரலாறு, அங்கு தொண்டாற்றி வழிபட்டுப் பேறு பெற்ற அடியார்கள், தேவர்கள், வரலாறு, அங்கு நிகழ்ந்த வியத்தகு நிகழ்ச்சிகள் (miracles) அங்கு எடுக்கும் திருவிழாக் கள் முதலியவற்றையும் ஒரோ வழி அமைத்து வைத்திருக் கின்ருர்.

இவ்விருவகைக் குறிப்புக்களும் இணைந்திருப்பன வற்றை ஓரிரண்டு எடுத்துக்காட்டுக்களால் விளக்குதும்.

1. இவர் சமணச் சமயம் சார்ந்து பின் சைவம் சார்ந்த சில உள்ளூர்க் குறிப்புச் சான்றுகளை இவர் வரலாற்றுப் பகுதி யிலேயே சற்று விரிவாகக் கண்டுள்ளோம்.

2 நரிபரியாகிய திருவிளையாடலைக் குறிக்கும் குறிப்புக்கள்.

இவற்றை ஆதாரமாகக் கொண்டு மறைமலையடிகள், க. சு. பிள்ளை முதலியோர், இவை, மணிவாசகருக்குச் சிவபெருமான் ஆற்றிய திருவிளையாடலையே குறிப்பதால், மணிவாசகர் திருநாவுக்கரசருக்கு முந்தியவர், என்று கொள்வர். ஆனால் தஞ்சை சீனிவாசப்பிள்ளை போன்றவர்கள் நரி பரியானது சிவபெருமானது அளவில் ஆற்றலை, (அகடிகதடன சக்தி) அவர் அடியார்களுக்கு ஆற்றும் வியத்தகு செயல்களை விளக்குவதற்கெனக் காட்டிய ஓர் எடுத்துக் காட்டேயாகுமென்றும், மணிவாசகரைச் சிறப்பாகக் குறிக்காதென்றும், அதுபோல் மங்கலவாசகர், குடமுழ நந்தீசனை வாசகனுக்கொள்ளல், வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறம், முதலியவை மாணிக்கவாசகரைக் குறிக்காவென்றும் தக்க காரணங்கள் கூறி மாணிக்கவாசகர், இரண்டாம் வரகுணன் (862-880) காலமாகிய கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராகவே நிறுவியுள்ளனர். இக்கொள்கையே இன்று வரலாற்றாசிரியர்களிடையே நிலவி வருகிறது. இக்குறிப்புக்களாவன :-

(1) "குடமுழ நந்தீசனை வாசகனுக் கொண்டாய்".

(2) "நரியைக் குதிரை செய்வானும்".

(திருவாரூர் - பண் காந்தாரம்)

(3) "குசையும் அங்கையிற் கோசமும் கொண்டவ்
வசையில் மங்கல வாசகர் வாழ்த்தவே"

(திருவிசய மங்கைத் திருக் குறுந்தொகை)

(4) "நிரியினார் பரியாமகிழ் கின்றதோர் பெரியனார்"

(திருவீழிமிழலைத் திருக்குறுந்தொகை)

(5) "மணியார் வைகைத் திருக்கோட்டில்
நின்றதோர் திறமுந் தோன்றும்"

(திருப்பூவணத் திருத்தாண்டகம்)

(3) திருஆனைக்காவில், சிலந்தி - கோச்செங்கணான் வரலாறுகள்.

" சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே கோச்செங்க ணனு மாகக்

*கலந்தநீர்க் காவிரி சூழ்சோ ணாட்டுச் சோழர் தங்கள்*
*குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே"*

(திருக்குறுக்கை வீரட்டானம்-திருநேரிசை)

(4) காலனைத் திருக்கடவூரிற் காய்ந்தது - அவ்வூர்ப் பதிகத்தில் பாடுவது.

*" மாலினைத் தவிர நின்ற மார்க்கண்டற் காக வன்று*
*காலனை உதைப்பர் போலும் கடவூர்வீ ரட்ட னாரே"*

(திருக்கடவூர் - திருநேரிசை)

(5) திருஞானசம்பந்தருக்குத் திருவீழிமிழலையில் ஈசனார் பொற்காசுகள் வழங்கியதைக் குறித்தல்

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரார்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே!!

(திரு ஆவடுதுறை - திருநேரிசை)

(6) இராமபிரான் திரு இராமேச்சுரத்தில் வழிபாடாற்றிய செய்தி

திருஇராமேச்சுரத்திருநேரிசைப் பதிகப் பதினொரு பாடல்களிலும், இராமபிரான் செய்கோயிலும் சிவபெருமான் வழிபாடும் குறிக்கப்பெற்றுள்ளன.

(7) திருவாரூர்-திருவிருத்தத்தில் பங்குனிஉத்திரத் திருவிழா குறிக்கப் பெறுகிறது.

*" ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி*
*நீராற் றிருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே"*

*" ஊனமில்லா அடிகளும் ஆரூர் அகத்தின ராயினும்,*
*அம்தவளப் பொடிகொண் டணிவார்க் கிருளொக்கும்*
*நந்தி புறப்படிலே"*

என்பவற்றில் திருவாரூரில் திரு விளக்குத் தொண்டுசெய்து கொண்டிருந்த நமிநந்தியடிகளின் சிறப்பு பேசப் பெறுகின்றது. "முத்து விதானம்" என்று தொடங்கும் பண்குறிஞ்சிப் பதிகப் பத்துப் பாடல்களிலும் திரு

வாரூரில் எடுத்த திருவாதிரைத் திருவிழாக் கோலக் காட்சியைத் திருஞானசம்பந்தருக்கு எடுத்துக் கூறிய முறையில் கூறுகின்ருர்.

(8) திருப்புத்தூர்த் திருத்தாண்டகப் பதிகத்தில்,

“ நல்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி
நற்கனகக் கிழி தருமிக் கருளி ஞேன் காண்”

என்று மதுரையில் நிலவிய கடைத் தமிழ்ச்சங்கத்தைக் குறிப்பிட்டிருக்கின்ருர்.

(9) திருநாகேச்சுரத் திருநேரிசையில் வரும் சிவபெருமான் திருப்பெயர்க் குறிப்பிஞல் - (“நச்சுவார்க்கினியர் போலும் நாகவீச் சுரவ ஞரே”) - உரையாசிரியர் நச்சிஞர்க்கினியருக்குச் சிவபெருமான் பெயரே சூட்டப்பெற்றது என்பர் ஆராய்ச்சியாளர்.

(10) திருப்பழனப் பழந்தக்கராகப் பதிகதீற்றில் திங்களூரில் திகழ்ந்த அப்பூதியடிகளாரை வைத்துப் பாடிச் சிறப்பித்தது உள்ளூர் வரலாற்றுச் சிறப்புடையதாயிருக்கின்றது.

“ அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.”

(11) திருப்புள்ளிருக்குவேளூர் திருக்குறுந்தொகைப் பதிகப் பாட்டில், சம்பாதி, சடாயு என்ற இரு பறவைகள் பூசித்துப் பேறுபெற்ற, உள்ளூர் வரலாற்றை, ‘புள்ளிஞர்பணி புள்ளிருக்கு வேளூர்” என்று குறிப்பிடுகின்ருர்.

முற்றும்